இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
M.A., L.T., M.O.L., P.HD.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்

59. பிராட்வே - சென்னை-1.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி

டாக்டர் மா. இராசமாணிக்கனார்
M.A., L.T., M.O.L., P.HD.

டாக்டர் இராம. சண்முகம்,
பேராசிரியர்,
தமிழ்த்துறை,
அஞ்சல் வழித்தொடர் கல்வித்துறை,
காமராசர் பல்கலைக்கழகம்,
மதுரை - 625 021.

விற்பனை உரிமை :

பாரி நிலையம்
59. பிராட்வே. சென்னை-1.

முதற் பதிப்பு : அக்டோபர், 1978

விலை : ரூ. 12 - 00

அச்சிட்டோர் :
வெற்றி அச்சகம், 27, கஜபதி லாலா லேன், சென்னை-600005.

அணிந்துரை

தாமரைத்திரு நெ. து. சுந்தரவடிவேலு எம்.ஏ., எல்.டி. அவர்கள்
முன்னாள் துணைவேந்தர், சென்னைப் பல்கலைக் கழகம்.

தித்திக்கும் தீந்தமிழ் தொன்மையான மொழி; வளமான மொழி; வானமளந்ததனைத்தையும் அளந்திடும் வன்மொழி.

நம் தாய்மொழியாம் தமிழ், இடையறாத இலக்கியச் செல்வத்தைப் பெற்றது; ஈராயிரத்து ஐந்நூறு ஆண்டுகளுக்கு முந்திய இலக்கியத்தைக் கொண்டது. தொல்காப்பியம் தொட்டு வானம்பாடிக் கவிதைகள் வரை உயிர்த்துடிப் புடையது, நம் தமிழ் இலக்கியம்.

பண்டைக்காலத்தில் அச்சுப்பொறி இல்லை. ஓலைச்சுவடி களில் எழுத்தாணி கொண்டு எழுத வேண்டியிருந்தது. அப்பணி, எத்தனை அருமைப்பாடானது என்பதை ஊகிக்க லாம். எனவே, சொற்செட்டு பற்றி, பழைய இலக்கியங்கள் கவிதைகளாக உருப்பெற்றன; காலமெல்லாம் கவிதை களாகவே நின்றுவிடவில்லை. உரைநடையிலும் தமிழ் இலக்கி யங்கள் தோன்றின; வளர்ந்தன.

ஏமாற்றத்தால், மூடநம்பிக்கைகளால், பண்டைத் தமிழர்கள் எத்தனையோ ஏடுகளை ஆற்றில் எறிந்துவிட் டார்கள்; சுட்டுப்பொசுக்கி விட்டார்கள். இருப்பினும் பல ஏட்டுச்சுவடிகள் கிடைத்தன. தமிழ் இலக்கியச் செல் வத்தைக் காட்டின.

தமிழ் இலக்கியம் பெருங்கடலென விரிந்தது. அக்கடலின் விரிவையும் ஆழத்தையும் சுருக்கமாகக் காட்டிவிட எவராலும் இயலாது. அக்கடலின் ஒரு பகுதியை — உரைப்பகுதியைக் காட்ட முனைகிறார் டாக்டர் மா. இராசமாணிக்கனார்.

டாக்டர் மா. இராசமாணிக்கனார், முறையாகத் தமிழ் கற்றவர். புலவர் பட்டம் பெற்றதோடு படிப்பிற்கு முற்றுப் புள்ளி வைக்காத நல்லறிஞர். புலவராகப் பூத்து, டாக்ட

ராகக் கனிந்தார். நடுவில் பட்டங்களை அடுக்கிக்கொண்டார். பள்ளிக்கூட தமிழாசிரியராக வாழ்க்கையைத் தொடங்கிய இராசமாணிக்கனார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆசானாகும் அளவு உயர்ந்தார். அவரை அந்நிலைக்கு உயர்த்தியவை எவை? அவரது தணியாத படிப்பார்வம்; இடையறாத முயற்சி; ஓயாத ஆராய்ச்சி ஆகியவை.

கல்வெட்டு ஆய்வில் தனியார்வமும் தமிழ் வளர்ச்சியில் சிறந்த ஈடுபாடும் கொண்டிருந்த டாக்டர் இராசமாணிக்கனார் சென்னைப் பல்கலைக் கழகத்தில் 1966-ஆம் ஆண்டு கல்கி நினைவுச் சொற்பொழிவுகளை ஆற்றும் வாய்ப்பினைப் பெற்றார் மூன்று சொற்பொழிவுகளில், நீண்ட தமிழ் உரை இலக்கிய வரலாற்றினைக் காட்ட முனைந்தார். பெரும் அளவு வெற்றியும் கண்டார்.

அச்சொற்பொழிவுகளின் தொகுப்பு, "இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி" என்னும் தலைப்பில் வெளிவர இருப்பதறிந்து மகிழ்கிறேன். இந்நூல் இலக்கியக் கருவூலமாக, தகவல் களஞ்சியமாக விளங்குகிறது. இந்நூலில் காணும் செய்திகள், தமிழ் ஆய்வாளர்களுக்கு மட்டுமின்றி, தமிழ் வரலாற்றினை ஆய்வோர்க்கும் தூண்டுகோல்களாக அமையும். எனவே, இந்நூல் வரவேற்கத் தக்கதாகும்; போற்றத்தக்கதாகும்.

இருபதாம் நூற்றாண்டின் உரைநடையைச் செழுமை செய்த மனைவை திருமலைசாமி, குத்தூசி குருசாமி, அறிஞர் அண்ணா ஆகியோரின் உரைநடைகளைக் குறிப்பிடாமை அக்காலத்தின் கொடுமை பற்றி என்பதை நாம் அறிவோம். அவ்வுரைகளும் இடம் பெற்றிருந்தால் பாதாம் பாயசத்தில் திராட்சையும் சேர்ந்தது போல் இருக்கும். இருப்பினும் மொத்தத்தில் இது அருமையான நூல். தமிழர் அனைவரும் வாங்கிப் படிக்க வேண்டிய நூலாகும். இதை வெளியிடுதல், தமிழுக்குச் செய்யும் தொண்டாகும்.

29.9.78

நெ. து. சுந்தரவடிவேலு

முகவுரை

சிறந்த எழுத்தாளராகிய பேராசிரியர் கல்கி அவர்களின் நினைவுச் சொற்பொழிவினை இந்த ஆண்டு ஆற்றும் பேறு எனக்குக் கிடைத்தது. இப்பேற்றினை எனக்கு வழங்கிய பல்கலைக் கழகத்தினர்க்கு என் உளமார் நன்றி உரியது.

இருபதாம் நூற்றாண்டு உரைநடை (prose) வளர்ச்சியை அறிவதற்கு முன்பு, தமிழ் உரைநடை தோன்றிக் கி.பி. 19-ஆம் நூற்றாண்டு முடியப் படிப்படியாக வளர்ந்த வரலாற்றை அறிவது இன்றியமையாதது. கல்வெட்டுகள் வாயிலாகவும் இலக்கிய இலக்கண நூல்கள் வாயிலாகவும் தமிழ் உரைநடை எங்ஙனம் வளர்ந்தது என்பது படித்து உணரத்தகும் அரிய செய்தியாகும். வைதிகம், சமணம், பௌத்தம் முதலிய சமயங்களின் நுழைவினாலும் வேற்றரசர் ஆட்சியினாலும் அயல்மொழிச் சொற்கள் எவ்வாறு தமிழில் இடம்பெற்றன என்பதை அறிவது உரைநடை வளர்ச்சிக்குத் தேவையாகும்.

ஆங்கில ஆட்சியால் அச்சுப் பொறிகள் பெருகின. கணிதம், வரலாறு, அறிவியல் முதலிய பல துறைகள் வாயிலாக தமிழ் உரைநடை நூல்கள் பெருகின. அறிவும் ஆராய்ச்சியும் பெருகப் பெருக, மேனாட்டு அறிவியல் நூல்களும் பிறவும் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன; பலநாட்டுச் சிறுகதைகளும் பெருங்கதைகளும் தமிழ் உரைநடையில் வந்துள்ளன.

நாள் தாள்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள் முதலிய செய்தித்தாள்கள் நூற்றுக்கணக்கில் பெருகியுள்ளன. வணிக விளம்பரங்கள், பலவகை அழைப்பிதழ்கள், அரசாங்க அறிக்கைகள் முதலியன தமிழ்த்துறையில் வெளி வருகின்றன.

இவை அனைத்தாலும், இவ்விருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை எவ்வாறு வளர்ச்சி பெற்றுள்ளது — இவ்வனைத்திலும் காணப்பெறும் தமிழ் உரைநடையில் இடம் பெற்றுள்ள நன்மை தீமைகள் யாவை என்பனவற்றை ஒருவாறு ஆராய்வதே இச்சொற்பொழிவுகளின் நோக்கமாகும். இங்ஙனம் ஆராய்ந்து கூறப்பெற்ற செய்திகளே இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

இச்சொற்பொழிவுகளுக்கு உரிய செய்திகளை முன்னே பார்வையிட்டு உதவியும், மூன்றுநாள் சொற்பொழிவுகளுக்குத் தலைமைதாங்கியும் தம் உளமார்ந்த பாராட்டுதலைத் தெரிவித்தருளிய சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வரதராசனார் அவர்கட்கு என் உளமார்ந்த நன்றி உரியது.

இச்சொற்பொழிவுகளுக்கு வந்திருந்த வரலாற்றுப் பேராசிரியர் டாக்டர் கே.கே.பிள்ளை, தொல்பொருள் ஆராய்ச்சித் துறைப் பேராசிரியர் டாக்டர் டி. வி. மகாலிங்கம், தமிழ்ப் பேராசிரியர்கள் அ. மு. பரமசிவானந்தம், பாலூர் கண்ணப்ப முதலியார், ந.சஞ்சீவி முதலிய அறிஞர் அனைவர்க்கும் என் உளம் கனிந்த நன்றி உரியது.

சேக்கிழார் அகம்,
சென்னை-1.

மா. இராசமாணிக்கம்

டாக்டர் மா. ரா.

நன்றியுரை

"இருபதாம் நூற்றூண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி" என்னும் இந்நூல் பேராசிரியர் டாக்டர் மா. இராசமாணிக்கனுர் அவர்கள், கல்கி நினைவுச் சொற் பொழிவுகள் வரிசையில் 1966-ஆம் ஆண்டு நிகழ்த்திய மூன்றுநாள் சொற்பொழிவுகளின் தொகுப்பாகும்.

இச்சொற்பொழிவுகளை நூல் வடிவாக்கிக்கொள்ள அன்புடன் இசைவளித்த சென்னைப் பல்கலைக் கழக ஆட்சிக் குழுவினருக்கு நன்றியுடையேன்.

டாக்டர் மா. இராசமாணிக்கனுரிடம் நீங்காப் பற்றுடைய கல்வி நெறிக் காவலர் பேரறிஞர் நெ. து. சுந்தரவடிவேலு எம். ஏ., எல். டி. அவர்கள், பல்வேறு பொறுப்புக்களுக்கிடையில் இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிச் சிறப்பித்துள்ளார்கள். அப் பெரியார்க்கு நன்றி தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

இந்நூல் விரைந்து வெளிவருதல் வேண்டும் என்று ஆர்வம் காட்டி ஊக்குவித்த சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் டாக்டர் சி. பாலசுப்பிரமணியன், எம்.ஏ., எம்.லிட்., பி.எச்டி. அவர்களுக்கும்,

இந்நூல் வெளிவருவதற்குப் பல்லாற்ருனும் துணைபுரிந்த சென்னைப் பல்கலைக் கழக நூலகர் திரு. P. A. மோகன் ராஜ் எம்.ஏ., பி.லிப்.சயி., அவர்களுக்கும், நூல்பட்டியல் தொகுப்பாளர் (Bibliographer) திரு. P. ராசகோபாலன் எம்.ஏ., பி.லிப்.சயி., அவர்களுக்கும் நன்றி.

இதனைச் சிறப்புற வெளியிட அறிவுரைகள் வழங்கிய பாரி நிலைய உரிமையாளர் திரு. க. அ. செல்லப்பன் அவர் களுக்கும் என் நன்றி உரியது.

கண்ணம்மாள் இராசமாணிக்கனுர்

உள்ளுறை

முதல் நாள் சொற்பொழிவு

1. உரைநடை என்பது யாது? ... 5
2. உரைநடைக்கு வேண்டும் சிறப்பியல்புகள் ... 9
3. தொல்காப்பியர் காலம் ... 28
4. உரைநடை நூல்கள் ... 36
5. நூற்றுண்டு வாரியாக உரைநடை ... 41

இரண்டாம் நாள் சொற்பொழிவு

1. மதுரைத் தமிழ்ச்சங்கம் ... 115
2. அரசாங்கமும் தமிழ்க்கல்வியும் ... 118
3. இதழ்கள் ... 122
4. விளம்பரம், அழைப்பிதழ் ... 151
5. கடிதங்கள் ... 157
6. தமிழ்ப்பாட நூல்கள் ... 171
7. கட்டுரைகள் ... 175

மூன்றும் நாள் சொற்பொழிவு

1. நூல்களின் முகவுரைகள் ... 193
2. சமய நூல்கள் ... 201
3. நாடக நூல்கள் ... 209
4. இலக்கிய நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் ... 215
5. சிறுகதைகள் ... 243
6. பெருங்கதைகள் ... 255

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி

முதல் நாள் சொற்பொழிவு

24 - 2 - 196[illegible]

முன்னுரை

தலைவர் அவர்களே, பெரியோர்களே,

இந்த நூற்றாண்டில் நம்மிடையே வாழ்ந்து மறைந்த அறிஞர் கல்கி அவர்களின் நினைவுச் சொற்பொழிவினை இவ்வாண்டு ஆற்றுமாறு எனக்குச் சென்னைப் பல்கலைக் கழகத்தார் வாய்ப்பு அளித்தமைக்கு என் உளமார்ந்த நன்றி உரியதாகும்.

இச் சொற்பொழிவு இன்று முதல் மூன்று நாட்கள் தொடர்ந்து இங்கு நடைபெறும். சொற்பொழிவுக்குரிய பொருள் '**இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி**' என்பதாகும்.

அப்பொருள் பற்றிப் பேசுமுன்—உரைநடை என்பது யாது?—அவ்வுரைநடைக்கு வேண்டும் சிறப்பியல்புகள் யாவை?—தொல்காப்பியர் காலம் யாது?—தமிழ் உரைநடை நூல்கள் யாவை?—தொல்காப்பியர்க்கு முன்பிருந்து கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு முடிய உரைநடை எங்ஙனம் வளர்ந்து வந்தது? என்பனவற்றை இன்றைய சொற்பொழிவில் அறிவோம்.

இரண்டாம் சொற்பொழிவில் இருபதாம் நூற்றுண்டுச் செய்தித் தாள்கள், அறிக்கைகள், விளம்பரங்கள், கடிதங்கள், கட்டுரைகள், பாடநூல்கள் என்பன எங்ஙனம் தமிழை வளர்த்தன என்பது பேசப் பெறும்.

மூன்ரும் சொற்பொழிவில் சிறுகதை, பெருங்கதை, நாடகம், நூல் முகவுரைகள், சமய நூல்கள், இலக்கிய நூல்கள் முதலிய பல துறை நூல்கள் பற்றிப் பேசப் பெறும்.

இனி, இன்றைய சொற்பொழிவுக்குரிய செய்திகளைக் காண்போம்.

1

உரைநடை என்பது யாது?

உரைநடை என்பதற்கு 'வசனநடை' (Prose style) என்பது பொருள்.[1] ஆதலால் 'வசனம்' என்னும் வட மொழிச் சொல்லுக்கு 'உரை' என்பதே தமிழ்ப் பெயர். தொல்காப்பியரும் 'உரை' என்றே வசனத்தைக் கூறி யுள்ளார். எழுதப் பெறுவது 'எழுத்து' என்றாற் போல உரைக்கப் பெறுவது 'உரை'. இது காலப் போக்கில் உரைத்தாங்கு எழுதப் பெறுதலையும் குறிக்கப் பயன்பட லாயிற்று. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்னும் உறுப்புகளையும், செப்பலோசை, அகவ லோசை, துள்ளலோசை, தூங்கலோசை என்னும் ஓசை களுள் ஒன்றையும் பெற்று வருவது 'பா' அல்லது 'செய்யுள்' எனப்படும். உரைநடை என்பது எழுத்து, சொல் என்னும் இரண்டால் ஆயது; செய்யுட் குரிய கட்டுப்பாடுகள் இல்லாதது; பொருத்தமான சொற் கோவையால் உண்டாகும் ஓசைநயம் உடையது.

---

1. Tamil Lexicon, Vol. I, P. 452.

இனி, மேனாட்டு அறிஞர் உரைநடை பற்றி யாது கூறியுள்ளனர் என்பதைக் காண்பது இங்குப் பொருத்த மாகும்.

"உரைநடை என்பது, செய்யுளுக்குரிய சீர் இல்லா மல் பேசப்பெறும் அல்லது எழுதப்பெறும் மொழியின் எளிய அமைப்பாகும்; உள்ளதை உள்ளவாறு வெளிப் படையாகக் கூறும் தன்மை," என்று ஆக்ஸ்போர்டு ஆங்கில அகராதி விளக்கம் கூறியுள்ளது.[1]

"செய்யுளுக்குரிய சீர் முதலிய அளவைகள் இல்லா மல் பொருள் விளக்கத்திற்குரிய சொற்களின் குழப்பமற்ற நேரான அமைப்பே உரைநடை என்பது; எளிய முறை யில் பேசுவதும் எழுதுவதும் ஆகிய மொழி," என்று சேம்பர் இருபதாம் நூற்றாண்டு அகராதி விளக்கம் தந்துள்ளது.[2]

"செய்யுள் முறையில் அமையப் பெறாத மொழியே உரைநடை என்பது" என்று நடைமுறை ஆங்கில அகராதி விளக்கம் கொடுத்துள்ளது.[3]

---

1. Ordinary non-metrical form of written or spoken language. A plain matter-of-fact quality.
—The concise Oxford Dictionary, (5th Edition) P. 962.

2. The direct, straight forward arrangement of words, free from political measures; ordinary spoken and written language.
—Chamber's Twentieth Century Dictionary, (Revised with supplement), P. 879.

3. The Advanced Learners Dictionary of current English (1963), P. 778.

உரைநடை பற்றி ஆங்கிலக் கலைக் களஞ்சியம் கூறுவது இது :

"செய்யுளுக்குரிய விதிமுறைகளை விலக்கி மனிதன் எளிமையாகப் பேசுவது அல்லது எழுதுவது உரைநடை எனப்படும். செய்யுள் வடிவத்தில் இல்லாத எல்லா வகை இலக்கிய வெளியீடுகளையும் சுருக்கமாகவும் தெளிவாகவும் வெளியிடும் அமைப்பே உரைநடை என்பது. கண்டதையெல்லாம் தொடர்பின்றிச் சொல்லுதல் உரைநடை ஆகாது...உரைநடை என்பது, ஒன்றுக்கொன்று தொடர்பான பல சொற்றொடர்களால் இயைவதாதலால், அச் சொற்றொடர்கள் முறைப்படி பொருள் விளக்கமுற அமைதல் வேண்டும். சொல்லுவோன் கருத்தைக் கேட்போன் எளிதில் புரிந்துகொள்ளும் முறையில் அமைவதே உரைநடையின் சிறப்புத் தன்மையாகும். கருத்தைத் தெளிவுறவுணர்த்தும் சொற்றொடர்கள் சொற்கவர்ச்சியும் அழகும் பெற்றிருத்தல் வேண்டும்.

"ஒரு பொருளையோ செயலையோ ஒரு சொல்லைக் கொண்டே பல இடங்களில் குறிப்பதை விடுத்து, அப் பொருளையோ செயலையோ குறிக்கும் பிறசொற்களையும் கையாளும் முறையில் சொற்றொடர்களை அமைப்பது நல்லது. உரைநடையின் சிறப்புக்குச் சொற்றொடர்களின் ஒருமைப்பாடும் இன்னோசையும் இன்றியமையாதவை. ஆயின், இந்த உரைநடையின் ஒருமைப்பாட்டுக்கும், இன்னோசைக்கும் செய்யுளுக்கென்றே உரிய ஒருமைப்பாட்டுக்கும், இன்னோசைக்கும் தொடர்பிருத்தலாகாது. உரைநடையை அழகுபடுத்த ஆங்காங்குப் பெயர் உரிச் சொற்களைப் பயன்படுத்துதல் நன்று. ஆயின் அவற்றை அடுத்து அடுத்தோ, மிகுதியாகவோ கூறுதல் நடைக்குச் சிறப்பையோ அழகையோ

தராது. பொதுமக்களின் இலக்கண அமைதியற்ற பேச்சுச் சொற்கள் உரைநடையின் சிறப்பைக் குறைக்குமாதலால், அவை உரைநடையுட் புகாதவாறுபாதுகாத்தல் இன்றியமையாததாகும். பகட்டுச் சொற்களும் இழிசொற்களும் புகுத்தாமல், எளிய பொருத்தமான சொற்களைக்கொண்ட நடையே சிறந்தது. கட்டுப்பாடின்றிக் கூறப்படுவதெல்லாம் உரைநடையாகாது. உரைநடை என்பது இலக்கிய வெளிப்பாடாகும். அது செய்யுள் விதிகட்கு உட்பட வேண்டாதது."[1]

இரஸ்கின் (Ruskin), மாண்டெயின் (Montaigne) இராபர்ட்சன் (Robertson), ஹெர்பர்ட்ரீட் (Herbert Read) எஸ். டி. கோலரிட்ஜ் (S. T. Coleridge), W. ஹாஸ்லிட் (Hazlitt), E.A.G. லாம்பார்ன் (E.A.G. Lamborn) முதலிய மேனாட்டு அறிஞர்களும், பரிமேலழகர், வ. சு. செங்கல்வராய பிள்ளை, திருமணம் செல்வகேசவராய முதலியார், அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை ஆகிய தமிழறிஞரும் உரையைப் பற்றியும் உரைநடையைப் பற்றியும் கூறியுள்ளவற்றைச் சுருக்கமாக இங்குக் காண்போம்.

---

1. Encyclopaedia Brittanica, Vol. 18. P. 581–592.

2

உரைநடைக்கு வேண்டும் சிறப்பியல்புகள்

சொற்கள்

கருத்தும் சொல்லும் நூலின் நடைக்கு இரண்டு கூறுகள் ஆகும். கருத்து என்பது சொல்லக் கருதிய பொருள். சொல் என்பது அப்பொருளை உரைக்கும் உரை. உரிய சொற்கள் உரிய இடங்களில் அமைந்து நடப்பதே நடை என்பது. எண்ணிய பொருளைத் தெளிவாகத் தெரிவிக்கும் சொற்களும் அப்பொருளுக்குரிய தொடர்களும் அவற்றிற்கு உரிய இடங்களில் பொருந்தி நடப்பதே முற்றுச் சொற்றொடர் நடையாகும்.

சொல்லக் கருதிய பொருளுக்குரிய சொல் என்பது 'மரபுச் சொல்' ஆகும்.

> **"எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்**
> **செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே"**

என்பது இலக்கணம்.[1]

---

1. நன்னூல், நூற்பா, 388.

சொற்கள் மூன்று வகைப்படும். அவை செஞ்சொல், ஆக்கச் சொல், குறிப்புச் சொல் என்பன.[1] (1) மரம், நாற்காலி, காற்றுடி என்றாற் போல நேராகப் பொருளை உணர்த்தும் சொல் செஞ்சொல் எனப்படும். இடுகுறிப் பெயர், காரணப்பெயர், காரண இடுகுறிப் பெயர் என்பவை செஞ்சொற்களாகும். (2) ஒரு பொருளை உணர்த்துவதற்கு உரிய சொல்லை மற்றொரு பொருளுக்குத் தந்து உரைப்பது ஆக்கச் சொல் எனப்படும். ஆகுபெயர் உருவகம் முதலியன இப்பிரிவில் அடங்கும். (3) ஆசிரியர் உவமையை எடுத்து விளக்கிக் கூறி, உவமேயப் பொருளை உய்த்துணரும்படிச் செய்வது பிறிது மொழிதல் எனப்படும். தான் நினைத்ததைக் கூறாமல் அப்பொருள் தோன்றிப் பிறிதொன்றனைத் திறம்படக் கூறுதல் பரியாயம் எனப்படும். ஒரு பொருளைப் பழிக்கக் கருதியவன் அதனை வெளிப்படையாகக் கூறாது வேறொன்றனைப் புகழ்தல் மாறுபடு புகழ்நிலை எனப்படும். பழித்தல் போல ஒன்றற்கு மேம்பாடு தோன்ற உரைப்பது புகழாப் புகழ்ச்சி எனப்படும். இந்த அணி வகைகள் குறிப்பால் பொருள் தருவனவாகும். ஆகவே இவை குறிப்புச்சொற்கள் எனப்படும். ஆசிரியர் இந்த மூவகைச் சொற்களையும் இடமறிந்து பயன்படுத்துதல் வேண்டும்.[2]

1. உரைநடை, சொற்களால் ஆக்கப்படுவது. ஆதலால் ஆசிரியர் தாம் எழுதும் பொருளுக்கு ஏற்ற சொற்களையும் அவற்றின் ஆட்சியையும் அறிந்திருத்தல் வேண்டும். இதற்கு இலக்கண அறிவோடு மொழிநூல்

---

1. திருக்குறள், 711, பரிமேலழகர் உரை.
2. தி. செல்வகேசவராய முதலியார், தமிழ் வியாசங்கள், பக். 84–85.

அறிவும் இன்றியமையாதது. இடும்பை, பையுள் என்னும் இரு சொற்களின் தோற்றத்தை இங்குக் காண்போம்.

முற்காலத்தில் குற்றவாளிகள் கோணிப்பையிலிட்டுக் கட்டப் பெற்றனர். பின்பு அப்பை, முன் தரையில் உருட்டப்பட்டது. ஆதலால் இடும்பை (இடும் பை), பையுள் (பை உள்) என்பன பையை முதலாகக் கொண்டு, துன்பத்தை உணர்த்தலாயின.[1]

2. ஒரே பொருளைத் தருவன என்று மேலோட்டமாகக் காணப் பெறும் சொற்களுள் சில, மெய்யாகவே பொருள் வேறுபாடு உடையவை. கோபம் என்பது வட சொல். சீற்றம் என்பது அதற்குரிய தமிழ்ச்சொல். சீற்றம் நீட்டித்து நிற்கும் பொழுது சினம் எனப் பெயர் பெறும். பகைமை நெடுங்காலம் நிகழ்வது செற்றம் என்பது. இது நச்சினார்க்கினியர் தரும் விளக்கமாகும்.[2] எச்சம் என்பது மேலோட்டமாக 'மக்கள்' என்னும் பொருளைத் தருவது. ஆயின், தந்தை முதலிய முன்னோர் பண்புகளைப் பெற்று வருங்காரணத்தால் மக்களுக்கு எச்சம் என்ற சொல் காரணப் பெயராய் அமைந்தது. இந் நுண் பொருள், 'மக்கள்' என்னும் சொல்லில் அமையவில்லை.

இவ்வாறே இடத்திற்கு ஏற்பப் பொருத்தமான வினைச் சொற்களையும் ஆளுதல் வேண்டும்.

(1) முடி கவித்தார், முடி புனைந்தார் — என்பதே மரபு.

---

1. V. S.Chengalvaraya Pillai, History of the Tamil Prose, P. 54.
2. திருமுருகாற்றுப்படை, வரி. 134, 132 உரை.

(2) பகை மேலும் மூண்டது—என்பதில் வரும் 'மூண்டது' என்னும் சொல்லின் பொருட்பொருத்தம் நோக்கத்தகும்.

(3) நண்பரது பிரிவு மேன்மேலும் சுட்டது. "நின் பிரிவிலும் சுடுமோ பெருங்காடு"—என்னும் கம்பர் கூற்று இங்கு எண்ணத் தகும்.

(4) பசி முடுகிற்று, சொல் குழறிற்று, நா வரண்டது, கால் ஓய்ந்தது என்பவற்றில் வரும் வினைமுற்றுகளின் பொருட் பொருத்தம் எண்ணத்தகும்.

3. ஒரு பொருளை உணர்த்தப் பல சொற்கள் இருப்பினும், எளிய நடை எழுதும் பொழுது, பழக்கத்தில் இல்லாத சொற்களைப் பயன்படுத்தலாகாது. 'அலவன்' என்ற சொல் நண்டை உணர்த்தும். ஆயினும் எளிய நடையில் அச் சொல்லைப் பயன்படுத்தலாகாது; உயர் வகுப்புப் பாட நூல்களில் பயன்படுத்தலாம். படிக்கும் பொழுதே எளிதில் பொருளை உணர்த்தும் சொற்களையே எழுத்தில் ஆளுதல் வேண்டும். 'அவன் முள் வழியிற் சென்றான்' என்பது எளிதில் பொருள் விளங்கும் சொற்றொடராகும். 'அன்னான் முள்ளதர்ப் படர்ந்தான்' என்பது கடுநடையாகும்.[1]

4. ஒரு காலத்தில் வழக்கிலிருந்து பின்பு வழக்கு வீழ்ந்த சொற்களைக் கையாளுதல் பொருத்தமாகாது.

---

1. V. S. Chengalvaraya Pillai, History of the Tamil Prose, P. 54.

தொல்காப்பியர் காலத்தில் ஆண்குதிரை—குதிரைச் சேவல் எனப்பட்டது. பேராசிரியர், "குதிரையைச் சேவல் என்றல் இக்காலத்து அரிதாயிற்று"[1] என்று குறித்துள்ளார். இத்தகைய சொற்கள் நீக்கத் தகுவனவாகும்.

5. புதிய சொற்களை அமைத்துக் கொள்ளுதல் நமது சொற் செல்வத்தைப் பெருக்குவதாகும். ஆயினும், அங்ஙனம் அமைத்தல் எளிதன்று. புலமை மிக்க சான்றோரே அவற்றை ஆக்கவல்லவர். அவர்களால் ஆக்கப் பெறும் புதிய சொற்களைக் கையாளுதல் மொழி வளர்ச்சியில் நாட்டமுள்ள மற்றவர் கடமையாகும். ஈருருளை வண்டி, மூவுருளை வண்டி. பேருந்து, இன்னியங்கி, பண்டைப் பேருந்து, முகவரி, வளமனை போன்ற புதிய சொற்கள் பொருட் பொருத்தம் உடையவை.

6. "எம் பெருமாட்டி கவல்கின்ற தென்னை கொல்?"—என்பது போன்ற நடிப்புச் சொற்களை விலக்குதல் வேண்டும்.

7. இக்காலத்தில் ஆங்கிலம் கற்ற தமிழ் மக்களில் சிலர் ஆங்கில மரபுத் தொடர்களை நேரடியாக மொழி பெயர்த்துத் தமிழ் வசனத்தில் அமைத்து விடுகிறார்கள்.

'அவர் ஒளி விளங்கும் விவேகம் நிறைந்துள்ளவராயிருந்தார்.'

'தமது அகன்ற கல்விக்கு அஸ்திவாரம் போட்டார்.'

---

1. மரபியல், நூற்பா 68 உரை.

'மாணிக்கவாசகர் ஒன்பதாம் நூற்றுண்டில் கிளம்பினுர்'

'ஒவ்வொருவனும் சேனுபதிக்குரிய அதிகாரக் கோல் தன்தன் பயணப் பொதிக்குள் வைத்திருந்தாலும் இருக்குமென்று எண்ணுவது இயற்கை.'[1]

8. ஒரு பொருளை உணர்த்தத் தமிழில் சொல் இல்லாத பொழுது வடமொழி போன்ற பிறமொழிச் சொற்களைச் சேர்த்துக் கொள்ளுதல் தவறுகாது என்பது தொல்காப்பியர் போன்ற நல்லாசிரியர் கருத்தாகும். ஆயின், அப் பிறமொழிச் சொற்களை அப் பிறமொழி எழுத்துக்களோடு அப்படியே ஆளுதல் தமிழின் எழுந்து அமைதிக்கும் ஓசை அமைதிக்கும் ஊறு விளைவிப்பதாகும். அம்மொழிக்கே உரிய சிறப்பு எழுத்துக்களை நீக்கித் தமிழ் ஒலிக்கு ஏற்ப மாற்றுதல் வேண்டும் என்பது தொல்காப்பியர் கருத்து.

அதனுல் அப்பெரியார்,

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே"[2]

என்று விதி வகுத்தார்.

தொல்காப்பியர்க்குப் பின்பு வந்த இளங்கோ வடிகளும் சாத்தனுரும் இவ்விதியைப் பின்பற்றியே, ஸ்ராகவர் என்பதைச் சாவகர் என்றும், ஸ்ரமணர் என்பதைச் சமணர் என்றும், பிக்ஷு என்பதைப் பிக்கு

1. எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 112.
2. சொல்லதிகாரம், எச்சவியல், நூற்பா 5.

என்றும், பிக்ஷுணி என்பதைப் பிக்குணி என்றும் வட சொற்களைத் தமிழாக்கி வழங்கியிருத்தல் காணத் தகும்.

மேனுட்டில் படிக்கச் சென்ற தம்பி தருமலிங்கம், அந்நாட்டு அழகிய மங்கை ஒருத்தியை மணம் புரிந்து தமிழகம் மீண்டான். அவனுடைய பெற்ரேர் அப் பெண்ணின் நீண்ட சட்டையை அகற்றி நம் மரபுப்படி புடைவை உடுக்கச் செய்தனர்; நெற்றியில் குங்குமம் இடச் செய்தனர்; கூந்தலை வளர்க்கச் செய்தனர்; இங்ஙனம் அவளைத் தமிழ் மகளாகத் தோற்றும்படி செய் தனர். தொல்காப்பியர், பிற மொழிகள் தமிழிற் கலக்கும் போது இத்தகைய மாற்றத்தையே வற்புறுத்தினர்.

தொல்காப்பியருக்கு ஏறத்தாழ 1500 ஆண்டு களுக்குப் பின்பு வந்த கம்பர், முன்பு கூறப் பெற்ற வழியைப் பின்பற்றியே விபீஷணன் என்பதை வீடணன் என்றும், இலக்ஷ்மணன் என்பதை இலக் குவன் என்றும், வில்லிபுத்தூரார்—பீஷ்மன் என்பதை வீடுமன் என்றும், கர்ணன் என்பதைக் கன்னன் என்றும் தமிழ் ஒலிக்கு ஏற்ப வடவெழுத்துகளை மாற்றியமைத்திருத்தல் காணத்தகும்.

ஜ—ஸ—ஷ—க்ஷ—ஹ போன்ற வட எழுத்துகளை அங்ஙனமே தமிழில் ஆளுதல், தமிழின் எழுத் தமைதிக்கும் ஒலி அமைதிக்கும் பொருந்தாது என்பதை அறிந்த தொல்லாசிரியர், புஜம் என்பதைப் புயம் என்றும், புஸ்தகம் என்பதைப் புத்தகம் என்றும், விஷம் என்பதை விடம் என்றும், ஹாரம் என்பதை ஆரம் என்றும் மாற்றிக் கூறினர் என்பது அவர்தம் இலக்கியங்களால் அறியத் தகும்.

காலப் போக்கில் ர, ல, ய என்னும் எழுத்துகளை முதலாகக் கொண்ட வட சொற்கள் தமிழ் மொழியில் இடம் பெறலாயின. ஆதலால் அக்காலப் புலவர் பெருமக்கள் அச் சொற்களைத் தமிழ் ஒலிக்கு ஏற்ப மாற்றி வழங்கலாயினர். கி.பி. பதின்மூன்றும் நூற்றுண்டில் நன்னூல் எழுதிய பவணந்தி முனிவர், இவ்வழக்காற்றை உளங்கொண்டு, இவற்றிற்குத் தனி விதி வகுத்தார். அவர் கூறியவற்றைக் கீழே காண்க:-

(1) ரங்கன் என்பதை அரங்கன் என்றும்,
ராமன் என்பதை இராமன் என்றும், ரோமம் என்பதை உரோமம் என்றும் அ, இ, உ— என்பவற்றுள் ஒன்றை முதலிற் கூட்டி ரகரத்தை ஒலிக்க வேண்டும்.

(2) லாபம் என்பதை இலாபம் என்றும்,
லோகம் என்பதை உலோகம் என்றும், லகரத்திற்கு முன் இகரம் அல்லது உகரம் சேர்த்து வழங்குதல் வேண்டும்.

(3) யமன் என்பதை இயமன் என்றும்,
யக்ஷன் என்பதை இயக்கன் என்றும் கூறுதல் வேண்டும்.

இங்ஙனம் எழுத்துகளையும் சொற்களையும் பற்றிய நெறிமுறையில் தொல்காப்பியர், பவணந்தியார் முதலிய இலக்கண ஆசிரியர்களும், இளங்கோவடிகள், சாத்தனர், திருத்தக்கதேவர், சேக்கிழார், கம்பர் போன்ற பெரும் புலவர்களும் தமிழ் மரபுக்கு இழுக்கு நேராதபடி சென்றுள்ளனர். அது நமக்குச் சிறந்த வழிகாட்டி என்னலாம்.

அவர் மரபில் வந்த நாமும் அத்தமிழ் மரபைப் பாது காத்தல் தலையாய கடமையாகும்.

இக்கடமை உணர்ச்சியுடன் ஔரங்கசீப் என்பதை ஔரங்கசீபு என்றும், வார்ட்—என்பதை வார்டு என்றும் இன்றும் எழுதி வருகின்ற தமிழறிஞர் சிலரேனும் இந் நாட்டில் உள்ளனர் என்பது மகிழ்ச்சிக்குரியது. அச் சிலரைப் பின்பற்றிப் பலரும் எழுதுவாராயின், தொன்று தொட்டு வரும் தமிழ் இலக்கண மரபு தொடர்ந்து வாழும்; நாமும், பண்டைப் பெருமக்கள் கவலை எடுத்துக் கொண்டு பாதுகாத்து வந்த எழுத்தமைதியையும் ஒலி அமைதியையும் தொடர்ந்து பாதுகாத்துப் பின் வரும் மரபினர்க்கு வழிகாட்டிகளாகும் பேறு பெற்றவ ராவோம்.

9. யானை பிளிறுகிறது, அரிமா முழங்குகிறது, நாய் குரைக்கிறது, நரி ஊளையிடுகிறது, காக்கை கரைகிறது, மயில் அகவுகிறது, குயில் கூவுகிறது, ஆந்தை அலறு கிறது—என்பன போன்ற தொடர்களில் வந்துள்ள வினை முற்றுகள் இலக்கிய வழக்காறு பெற்றவை. இத்தகைய மரபுச் சொற்களை இடமறிந்து ஆளுதல் ஆசிரியர் கடமை யாகும்.

சொற்களின் திறம் அறிந்து, அவற்றைப் பெய்ய வேண்டும் இடம் அறிந்து பெய்து பேசிய திறத்தால் இராமனது உள்ளம் கவர்ந்த அநுமன், 'சொல்லின் செல்வன்'[1] எனப் பெயர் பெற்றான். நூல் எழுதுபவரும் அவனைப் போன்ற சொல்லின் செல்வராய் விளங்கி னால், அவர்கள் எழுதும் நூல்கள் நிலைத்து வாழ்ந்து தமிழினத்துக்கு நற்பயன் விளைக்கும்.

---

1. கிட்கிந்தா காண்டம், பயபைப்படலம், செ. 20.

முற்றுச் சொற்றொடர்

சொற்கள் ஒன்றேடொன்று தொடர்ந்து வருதல் தொடர்மொழி எனப்படும். பொருள் முற்றுப் பெற்ற சொற்றொடர் முற்றுச் சொற்றொடர் எனப் பெயர் பெறும்.

1. ஒவ்வொரு முற்றுச் சொற்றொடரிலும் சொற்களின் அமைப்பு, ஒலிநயம், அளவான நீளம் ஆகியவை அமைந்திருத்தல் நலம். பெயரும் வினையுமே முற்றுச் சொற்றொடரில் சிறந்தவை. வினைமுற்றுக்களுள் செயப்படு பொருள் குன்று வினைகளே தெளிவான வினைகள். அவையே செய்பவன், கருவி, நிலம், செயல், காலம், செய்பொருள் என்னும் ஆறினையும் உணர்த்தும். ஷேக்ஸ்பியர், இக்குறிப்பிட்ட வினைகளை நூற்றுக்கணக்காகப் பயன்படுத்தியதாற்ருன், அவரது ஆங்கில நடை மிக்க சிறப்புற்று விளங்குகிறது என்பது ஆங்கில அறிஞர் கருத்தாகும்.[1]

2. ஒவ்வொரு மொழியின் போக்குக்கு ஏற்றவாறு எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்னும் முற்றுச் சொற்றொடரின் உறுப்புகள், ஆசிரியன் சொல்லக் கருதிய கருத்துகளுக்கு ஏற்ப, உரிய இடங்களில் பொருந்தி நிற்பதே—'சொற்களும் தொடர்களும் உரிய இடங்களில் நிற்றல்' என்பதாகும். நமது தமிழ் மொழியில் முற்றுச் சொற்றொடரின் முதலில் எழுவாயும், இடையில் செயப்படு பொருளும், இறுதியில் வினைமுற்ருகிய பயனிலையும் பொருந்தி வருதலே மரபாகும். இராமனது கவலையைப் போக்க, "கண்டனன் கற்பினுக் கணியை"[2] என்று அநுமன் கூறியதுபோல வினைமுற்று ஒரோவழி முதலில் வருதலும் உண்டு.

---

1. Herbert Read, English Prose Style, P. 35.
2. கிட்கிந்தா காண்டம், திருவடி தொழுத படலம், செ. 58

3. முற்றுச் சொற்றொடரில் சொல்லும் பொருளும் மலரும் அதன் மணமும் போன்றவை.

ஆதலால் கருத்தை நேராக உணர்த்தும் சொற்களை மட்டுமே பெய்து எழுதுதல் முற்றுச் சொற்றொடர்க்கு உயிர்ப்பையும் அழகையும் தரும். வல்லெழுத்துகள் மிகுதலான இடங்களில் மிகாமல் எழுதுதலும், மிக வேண்டாத இடங்களில் மிகுத்து எழுதுதலும் சந்திப் பிழைகளாகும். இவை கல் கறிக்கும் படி சமைத்த உணவு போல படிப்பவர்க்கும் கேட்ப வர்க்கும் வெறுப்பைத் தருவனவாகும்.

4. இயலும் வரையில் முற்றுச் சொற்றொடர்கள் சிறியனவாக இருத்தல் நன்று. பொதுவாக நீண்ட தொடர் மொழிகள் படிப்பவர்க்கும் கேட்பவர்க்கும் பொருள் விளக்கத்தை மறைக்கும்; கருத்து மயக்கத் தையும் தரும்; பத்தியிலுள்ள சொற்றொடரின் அமைப்பு முறையைக் கெடுக்கும். சில நீண்ட சொற்றொடர்களில் பொருள் தெளிவாக இருக்கலாம்; ஓசை நயம் தொடர்ந்து செல்லலாம். ஆயினும், அந்நீண்ட சொற்றொடர்கள் படிப்பவர் பொறுமையைச் சோதித்து உணர்ச்சியைக் கெடுக்கும்.

5. பெயரை அல்லது வினையை விளக்கத் தகும் மொழிகள் அடைமொழிகள் எனப்படும். இத்தகைய அடைமொழிகளின் பொருட் சிறப்பை உணர்ந்து சொற்றொடர்களில் ஆள்வதே அறிவுடைமை.

கோபிக்கும் கடல், உறங்கும் கடல், அழகிய கைத் தொழில் என்பவற்றில் வரும் அடைகள் பொருட் பொருத்தம் அற்றவை. ‘கொந்தளிக்கும் கடல்,’ ‘அமைதியுடைய கடல்,’ ‘திறமுடைய கைத்தொழில்’

என்னும் தொடர்களில் அமைந்த அடைகளே பொருட் பொருத்தம் உடையன. ஆதலால் ஆற்றல், தெளிவு, நேரான பொருள் தரும் வன்மை ஆகிய மூன்றையும் உடையன சிறந்த அடைமொழிகள் எனக் கூறலாம்.

'அந்த அழகியைக் கண்டதும் அவன் தலை குனிந்து சென்றான். அவன் பெருந்தன்மை மிக்க இளைஞன் என்று அவ்வழகி எண்ணி மகிழ்ந்தாள்'— இவ்விடத்தில் 'பெருந்தன்மை மிக்க' என்னும் அடைமொழி இடத்திற்கேற்ற பொருட் பொருத்தமுடையது. இத்தகைய அடைமொழிகள் பண்பாடு மிக்க இலக்கிய நூல்களில் இடமறிந்து ஆளப்பட்டுள்ளன. இடத்திற் கேற்ற அடைமொழிகள் படிப்பவர்க்கு மகிழ்ச்சியையும் நடைக்குச் சிறப்பையும் அளிக்கின்றன. மிகுதியான அடைமொழிகள் பொருளின் தெளிவைக் குறைப்பதோடு நடையின் ஓட்டத்தையும் தடுக்கும். ஆதலால் அளவறிந்து அடைமொழிகளைப் பயன்படுத்துதல் நல்லது.[1]

நிறுத்தற்குறிகள்

காற்புள்ளி, அரைப்புள்ளி, முக்காற்புள்ளி, முற்றுப் புள்ளி, கேள்விக்குறி, வியப்புக்குறி முதலிய நிறுத்தற் குறிகளை இடமறிந்து தவறாது பயன்படுத்துதல் பொருள் உணர்ச்சிக்கு இன்றியமையாதது.

அவை கருத்தின் போக்கைக் குறிப்பவை; கூற்றின் பல படிகளுக்கு எல்லை கோலுபவை; பொருள் உணர்வு நலனுக்காகக் கூற்றை ஆங்காங்கு அணை போடுபவை. ஒவ்வொரு நிறுத்தற்குறியும் படிக்கும் விரைவைத் தடுத்து நிறுத்தி, ஒரு குறிப்பிட்ட நேரத்தை அளவு

1. Herbert Read, English Prose Style, pp. 19–20.

படுத்துகின்றது; அஃது, அடுத்து, இன்னோசைக்கும் உதவி புரிகின்றது; இதுகாறும் படித்ததை உணரச் செய்கிறது; பின்வரும் தொடர்களைக் கேட்க அவாவை உண்டாக்குகிறது. தெளிந்த கருத்தைப் புலப்படுத்தல் அதன் சிறந்த குறிக்கோளாகும்.

பனையோலைச் சுவடிகளில் நிறுத்தற் குறிகளும், பத்திப் பிரிவுகளும் இல்லை. ஆதலால் அனைவரும் படிக்கும்போது அல்லலுற்றனர். இப்பொழுது அத்தகைய இடர்ப்பாடு இல்லாதபடி அக்குறிகளும் பத்திப் பிரிவுகளும் அமைந்துள்ளமை வரவேற்கத் தக்கது. ஆற்று நீரை அடைய விரும்பும் ஒருவன் ஒவ்வொரு படியாகக் கடந்து நீரை அடைந்து இன்புறுவது போல, உரைநடையைப் படிப்பவரும் நிறுத்தற் குறிகளையும் பல பத்திகளையும் கடநது, நூல் நுதற் பொருளை அடைந்து இன்புறுகின்றார்.

நடை

நடை தொடர்புடைய பல குறிப்புகளைக் காண்போம். தக்க ஒருவன் உள்ளத்தில் தோன்றிய கருத்து வேறொருவன் உள்ளத்தில் சென்று சேர்வதற்கு உரிய கருவியே நடை என்பது. நடை என்பது நடத்தல் என்று பொருள்படும்.

1. சீர்களால் அமையும் தளையைப் போலச் சொற்களாலும் சொற்றொடர்களாலும் அமைவது நடையாகும். எனவே, தக்க சொற்களால் அமையும் நடை விரும்பத் தக்கதாயும், தக்க சொற்களால் அமையாத நடை தகுதி குறைந்ததாயும் காணப்படும்.

2. உரைநடைப் போக்கு பிழைபடப் பேசும் பேச்சு மொழிப் போக்கிலிருந்து வேறுபட்டதாக இருத்தல் வேண்டும்.

3. சிறந்த உரைநடையின் பெரும்பகுதி அழகு, அதன் தெளிவைப் பொறுத்துள்ளது.

4. வழுவின்மை, சுருங்கக்கூறல், விளங்கவைத்தல் இனிதாதல், விழுப்பயன் தருதல் முதலியவை நடையின் பண்புகள் என்று பரிமேலழகர் கூறுவர்.[1]

5. நடைக்குரிய பண்புகளுள் வழுவின்மை ஒன்றாகும். வழு—சொல் வழு, பொருள் வழு என இரு வகைப்படும். இலக்கணப் பொருத்தம் இல்லாமல் சொற்களை அமைத்தல் சொல்வழுவின் பாற்படும். சந்திப் பிழைகளும் இவ்வகையில் அடங்கும். வழுக்கள்—காலவழு, இடவழு, பால்வழு, திணைவழு எனப் பல வகைப்படும். இவ்வழுக்கள் அமையப் பெறாத சொற்றொடர்களே பிழையற்ற நடையைத் தோற்றுவிக்கும்.

6. வெவ்வேறு சொற்கள், தொடர்கள், மரபுத் தொடர்கள் ஆகியவற்றைப் பெற்றிருக்கும் முற்றுச் சொற்றொடர்கள் ஒரு கட்டுரையில் பரவலாக இடம் பெற்றிருத்தல் நடைக்குச் சிறப்பைத் தரும்.

7. இரட்டைச் சொற்களும் அடுக்குத் தொடர்களும் ஆங்காங்கு இடம் பெறுதல் நடையழகை மிகுதிப்படுத்தும்.

8. இங்ஙனமே உவமைகளையும் பழமொழிகளையும் இடத்திற்கேற்ப ஆளுதலும் நடைக்குச் சிறப்பைத் தரும்.

9. எதுகை மோனை முதலிய தொடைகளைச் செவிக்கினிமை பயக்குமாறு பொருள் பொருத்தமுற இடமறிந்து சேர்ப்பது நடையின் அழகை மிகுவிக்கும்.

---

1. சொல்வன்மை, குறள் 3 உரை.

10. ஒரு கட்டுரையில் மையப் பொருள் ஒன்றுயினும், அதற்குரிய முதல், இடை, கடை என்னும் உறுப்புகள் இருத்தல் இயல்பே. அவ்வுறுப்புகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, ஒவ்வொரு பகுதி பற்றியும் எழுதப்பெறும் முற்றுச் சொற்றொடர்களின் தொகுப்பு ஒரு பத்தியாக (Paragraph) அமையும்.

(1) அஃதாவது, ஒரு கருத்தை விளக்கும் முற்றுச் சொற்றொடர்களின் தொகுப்பே பத்தி என்பதாகும். முற்றுச் சொற்றொடருக்குப் பின்பு நிறுத்தும் நேரத்தைவிடச் சிறிது மிகுதியாக நிறுத்தும் இடமே பத்தியின் முடிவிடம் ஆகும்.

(2) ஒரு கருத்து முடியும் இடமே பத்தி முடிவு. அது எளிமையுடையதாயின் நீண்டும் இருக்கலாம்.

(3) ஓசை ஒழுக்கு வேறுபடுகையில், வேறு பத்தி தொடங்க வேண்டும். முதல் எழுத்தில் தொடங்கும் ஓசை, பத்தியின் இறுதி எழுத்தில் முடிவு பெற வேண்டும். இவ்வாறு கருத்துப் பொருத்தமும், ஓசைப் பொருத்தமும் பொருந்திய ஒன்றே பத்தி என்பது.

(4) பத்திக்குப் பத்தி ஓசை ஒழுக்கு வேறுபடுவதிலும் இன்பம் உண்டு. ஒவ்வொரு பத்திக்கும் சங்கிலித் தொடர் போன்ற பொருள் தொடர்பு அமைந்திருத்தல் இன்றியமையாதது. இத்தகைய பத்திப் பகுப்புக்கள் பொருளுணர்ச்சிக்குத் தேவையானவை.

11. ஒரு பத்தியிலுள்ள எல்லா முற்றுச் சொற்றொடர்களும் ஒத்த ஓசை ஒழுக்கு உடையனவாக இருத்தல் உயர்ந்த நடைக்கு அடையாளமாகும். ஓசை

ஒழுக்கு சொற்றொடருக்குச் சொற்றொடர் மாறுபடின், அவை எல்லைக் கற்களைப்போல அமையுமே அன்றி, ஓசை இனிமை பயவா. ஓசை ஒழுக்கு ஒரு முற்றுச் சொற்றொடருக்கும் அடுத்த முற்றுச் சொற்றொடருக்கும் தொடர்ந்து செல்லுதல் வேண்டும். ஒரு பத்தியில் ஒரு முற்றுச் சொற்றொடரையும் மற்றொரு முற்றுச் சொற்றொடரையும் இணைக்கவல்ல—ஆகவே, ஆதலால், எனவே, அன்றியும்—போன்ற இணைப்புச் சொற்கள் தக்கவாறு பயன்படுத்தப்பெற்ற நடை உயர்வுடைய தாகும்.

12. அத்துயரச் செய்தியைச் செவி வெதும்பக் கேட்டான்

அம் மகிழ்ச்சிச் செய்தியைச் செவிக்கு அமுதெனக் கேட்டான்

பகை முறுகி வளர்ந்தது

இவ்வெடுத்துக் காட்டுகளில் எழுவாய்க்கேற்ற அடைமொழிகள் இடம் பெற்றிருத்தலைக் காணலாம். இவ்வாறு பொருட் பொருத்தமுடைய சொற்களைப் பெய்து எழுதும் நடையே திட்ப நுட்பம் வாய்ந்த நடை என்று அறிஞரால் போற்றப்பெறும்.

ஒளியும் தகுதியும் ஒருமைப்பாடும் வாய்ந்த மணிக் கற்களைப் பதித்துச் செய்யப் பெறும் நகை, கவினுறு காட்சியை நல்குதல் போலப் பொருட் பொருத்தமுடைய சொற்களால் அமைக்கப் பெறும் நடை சிறந்த நடைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

13. ஒரு பத்தியில் முதல் முற்றுச் சொற்றொடரில் அமையும் சொற்கள் எளியவையாயின், அச்சொற்களால்

அமைந்த நடை எளிமையுடையதாகும். இங்ஙனமின்றி முதல் சொற்றொடர் இலக்கிய நடைச் சொற்களால் அமையுமாயின் அச்சொற்றொடர் நடை முன்னதைவிட உயர்ந்து காணப்படும். இங்ஙனம் முதல் முற்றுச் சொற்றொடரில் அமையும் எளிய நடையோ அல்லது உயர்ந்த நடையோ, ஆசிரியர் எழுத எடுத்துக் கொண்ட பொருளை முடிக்கும் அளவும் ஒரே ஒழுக்கு முறையில் அமைவது அழகுடையது. இங்ஙனம் இன்றி, இடையிடையே கொச்சை மொழிகள், இலக்கண அமைதி பெறாத சொற்கள், அருகி வழங்கும் சொற்கள் முதலியவற்றைப் பெய்து எழுதுதல், பொருத்தமற்ற வினை முற்றுக்களைப் பயன்படுத்துதல் முதலியன நடையின் சமநிலையைக் குலைத்துவிடும். எடுத்துக் கொண்ட பொருளைத் திட்ப நுட்பமாக விளக்கத்தகும் சொற்களே ஆளப்படின் அச்சொற்களால் அமைந்த நடையும் திட்ப நுட்பம் வாய்ந்து விளங்கும்.

14. பேராசிரியர் **வையாபுரிப் பிள்ளை** அவர்கள் தமிழ் உரைநடை எவ்வெக் காரணங்களால் வேறுபடுகின்றன என்பதைக் கீழ்வருமாறு கூறியுள்ளமை காணத்தகும்.

(1) வாசகர்களுக்குத் தக்கபடி நடை வேறுபடுகிறது.

(2) சொல்லக் கருதும் விஷயங்களுக்குத் தக்கபடியும் நடை வேறுபடும். சரித்திர நூல் எழுதும்போது கையாளுவது ஒரு நடை. விஞ்ஞான நூற்கருத்துக்களை வெளியிடும்போது கையாளுவது வேறு ஒருவகை நடை; முறையும் வேறு.

(3) சொல்லும் நோக்கத்துக்குத் தக்கபடியும் நடை வேறுபடுதல் இயல்பு.

(4) தன் சொல்வன்மையால் வாசிப்போரை வசீகரித்து அவர்களை ஊக்கப்படுவதற்கு மேற்கொள்ளும் நடை வேறு.

(5) ஏதேனும் ஒன்றை விளக்கஞ் செய்வதற்கு ஆளும் நடை வேறு.

(6) சொல்லும் முறைக்கு ஏற்றபடியும் வசன நடை வேறுபடும்.

(7) சம்பாஷணை ரூபத்தில் எழுதும் நடையும் வேறுபடும்.

(8) கடித ரூபத்தில் எழுதும் நடையும் வேறுபடும்.

(9) ஆசிரியர்களுடைய மன நிலைக்கு ஏற்றபடியாயும் நடை வேறுபடுவதுண்டு.

(அ) அறிவாற்றல் மிக்க ஆசிரியனது நடை ஒரு வண்ணமாயிருக்கும்.

(ஆ) உணர்ச்சி வசத்தனாய் நிற்பவனது நடை வேறு ஒரு வண்ணமாய் இருக்கும்.

ஒவ்வொருவனது மொழியும் மூன்று வகையான இயல்புடையது. (1) ஒரு வகை இயல்பு, அவனது கல்வியறிவு, ஆற்றல் முதலிய தனிப் பண்புகளைச் சார்ந்தது. (2) இரண்டாவது வகை இயல்பு, அவன் எந்த இனத்தைச் சேர்ந்தவனாயுள்ளானோ அந்த இனத்திற்குரிய இயல்புகளைச் சார்ந்தது. (3) மூன்றும் வகை இயல்பு, பொதுமக்கள் பொதுப்பட வழங்கும் சொல், தொடர் முதலியவைகளைப் பற்றியது" என்று எஸ். டி. கோலரிட்ஜ் எழுதியுள்ளார். இவ்வாறாக, வாசகர்

களுக்கும், விஷயங்களுக்கும், நோக்கங்களுக்கும், முறைகளுக்கும், ஆசிரியர் மன நிலைகளுக்கும் ஏற்றபடி வசன நடை வேறுபடும். இயற்கைத் தோற்றங்கள் ஒரு படியாய்க் காணுதல் இல்லை. அவை ஒன்றுக்கொன்று வேறுபட்டுத் தோன்றுகின்றன. வசன நடைகளும் அத்தகையனவே.[1]

இங்ஙனம் பலவகை உரைநடைகளை எடுத்துக் கூறிய பேராசிரியர் பிள்ளையவர்கள் எழுத்தாளர்க்கு இலக்கண அறிவு இன்றியமையாதது என்பதைக் கீழ் வருமாறு உணர்த்தியுள்ளார்.

> "பழங்காலத்திலும், மத்திய காலத்திலும், இக் காலத்திலும் உள்ள சொல் வழக்காறுகளை எல்லாம் தெரிந்து கொள்ளுதல் இன்றியமையாதது. இலக்கணம் என்பது இவ்வழக்காறுகளைத் தொகுத்து அவற்றை ஆளும் நியதிகளைத் தெரிவிக்கும் நூலேயாகும். இதை நாம் மறந்துவிடலாகாது. இலக்கணம் வழக்குணர்ச்சிக்கு அவசியமேயாம். தற்காலத் தமிழ் மக்களுடைய சொல் வழக்கினைப் புலப்படுத்துதல் தற்காலத் தமிழ் இலக்கணத்தின் கடமையாகும். எனவே, சிறந்த வசன நடை எழுதுவதற்கு இலக்கணம் பயன்படமாட்டாது என ஒதுக்குதல் தவறு. வசன நடையும், இலக்கணத்திற்கு உட்பட்டதேயாகும்."[2]

---

1. எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 103-104.
2. எஸ். வையாபுரிப் பிள்ளை, தமிழின் மறுமலர்ச்சி பக். 110-111.

3

தொல்காப்பியர் காலம்

நற்றிணை முதலிய தொகை நூல்கள் எட்டும், மதுரைக் காஞ்சி போன்ற நெடும்பாடல்கள் பத்தும் கி. பி. முதல் மூன்று நூற்றுண்டுகளில் தோன்றியிருத்தல் கூடும் என்பது ஆராய்ச்சியாளர் பலரது கருத்தாகும்.

அகப்பொருள் செய்திகள் கலிப்பாவிலும் பரிபாடல் களிலுமே வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.[1] ஆயின் அவர் கூற்றுக்கு மாருக நற்றிணை முதலியவற்றில் உள்ள அகப்பாடல்கள் அகவற்பாவில் வந்துள்ளன. இன்றுள்ள பரிபாடல்களில் அகப்பொருள்பற்றிய சிலவும் புறப்பொருள்பற்றிய பலவுமே காணப் பெறுகின்றன.

ஆற்றுப்படை, கூத்தர், பாணர், பொருநர், விறலியர் ஆகிய இவர்களைப் பற்றியே வரும் என்று தொல்காப்பியர் கூறியுள்ளார்.[2] கடவுளிடம் அடியவனை ஆற்றுப்படுத்துவதுபற்றி அவர் கூறவில்லை. ஆதலால் பத்துப் பாட்டுள்

1. அகத்திணை இயல், நூற்பா 56.
2. புறத்திணை இயல், நூற்பா 36.

உள்ள திருமுருகாற்றுப்படை தொல்காப்பியர் விதிக்கு மாறுபட்டது. தொல்காப்பியர் இத்தொகை நூற்களுக்குப் பிற்பட்டவராயின், இந்நூற் பாடலுக்கு ஏற்பவே விதிகளை அமைத்திருப்பார். அங்ஙனம் அமைத்திராமையின், அப்பெரியார் கலிப்பாக்களிலும் பரிபாடல்களிலும் அகப்பொருட் செய்திகளே பாடப்பெற்ற காலத்தவர்—பாணாற்றுப்படை, விறலியாற்றுப் படை, கூத்தராற்றுப் படைகளே நிலவிய காலத்தவர் என்பது ஐயமற விளங்குதல் காணலாம். காணவே, அத்தொல்காப்பியர் இன்றுள்ள எட்டுத் தொகைக்கும் பத்துப் பாட்டுக்கும் முற்பட்ட காலத்தவர் என்பது பொருத்தமாகும். இவையன்றி, வேறு பல இலக்கண மாற்றங்களும் தொகை நூல்களில் உண்டு.[1]

"தொல்காப்பியர் செய்யுள் பற்றியும் வழக்குப் பற்றியுங் கூறியுள்ள இலக்கணங்களிற் பலவற்றிற்கு இலக்கியம் காட்டுதல் இப்பொழுது வழங்கும் நூல்களைக் கொண்டு இயலாமையாலும், இவர் கூறிய இலக்கணங்களின் வேருய்ச் சில சொற்களும் கொள்கைகளும் இந்நூற்களிற் காண்டலானும் இவர் இந்நூற்கெல்லாம் முந்தியவர் என்று துணிதல் ஒருதலையாவது,"[2] என்று பெரும்புலவர் ரா. இராகவையங்கார் அவர்கள் கூறியிருத்தலும், பன்மொழிப் புலவர் வே. வேங்கடராசலு ரெட்டியார் அவர்கள் தமது 'பரணர்' என்ற ஆராய்ச்சி நூலில்,

> "இலக்கண ஆசிரியர்கள், தம் காலத்தனவும் முந்தியனவுமான செய்யுட்களைக் கொண்டு இலக்கணம் செய்தல் மரபு. பரணர், கபிலர்,

---

1. க. வெள்ளைவாரணர், தொல்காப்பியம், பக். 90-94, 213
   ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 268–273.
2. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 268.

நக்கீரர் இவர்கட்குப் பிற்பட்டவர் தொல்காப்பியராயின், அவர்தம் பாடல்களுக்கு முரணாக விதிகள் செய்திரார் அல்லவா? தொல்காப்பிய சூத்திர விதிகட்கும் அப்புலவர்களின் செய்யுட்களில் காணப்படும் சொற்களுக்கும் சொற்றொடர்களுக்கும் சிறந்த இலக்கண மாறுபாடுகள் இருத்தல் ஒன்றே தொல்காப்பியர் கடைச்சங்கப் புலவராய பரணர் முதலியோர்க்கும் பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவராவர் என்பது திண்ணம்."[1]

என்று கூறியிருத்தலும், முன்பு கூறப்பெற்ற முடிவுக்கு அரண் செய்வனவாகும்.

தமிழ் மக்களுக்கென்று செய்யப்பெற்ற அவரது இலக்கண நூலில் வடமொழிச் சொற்கள் சிலவும், வேதியர்க்குரிய வேட்டல், வேட்பித்தல் போன்ற செயல்களும், வடசொல் தமிழிற் கலத்தற்கு இலக்கணமும் வருதலைக் காண, அந்நூல் வடமொழியாளர் தமிழகத்தில் வேரூன்றிய பின்னரே—வடமொழிச் சொற்கள் ஓரளவு தமிழிற் கலக்கத் தொடங்கிய பின்னரே—செய்யப் பெற்றது என்பது தெளிவாகிறது. வடமொழியாளர் தமிழகம் போந்த காலம் ஏறத்தாழக் கி. மு. 7-ஆம் நூற்றாண்டாகலாம் என்று பேராசிரியர் அரங்காசாரியார் கூறியுள்ளார்.[2]

அஃதாயின், வடமொழி, தமிழில் வழக்குப் பெற இரண்டு மூன்று நூற்றாண்டுகளேனும் சென்றிருக்கலாம். 'பாண்டிய கபாடம் என்ற முத்துக்களைப் பற்றிச்

---

1. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு, பக். 172–73.
2. Educational Review, October 1928.

சாணக்கியர் தமது பொருள் நூலில் குறித்துள்ளார். ஆயின் சங்கப் பாக்களில் கொற்கை முத்துக்களே பேசப் பட்டுள்ளன. எனவே, கொற்கை சிறப்புற்றதற்கு முன்பு கபாடபுரமே பாண்டியர் துறைமுகமாக இருந்திருத்தல் இயல்பேயாகும்.[1] இத்துறைமுக நகரில்தான் தொல்காப் பியம் அரங்கேற்றப்பட்டது, பின்பு அந்நகரம் கடல் கோளால் அழிந்தது என்று களவியலுரை கூறுகின்றது.[2] ஆதலால், கபாடபுரம் சாணக்கியர் காலத்திலோ அவர்க் குப் பின்போ கடல் கோளால் அழிந்திருக்கலாம்.

தமிழகத்தை அடுத்து இலங்கை இருப்பது நாம் அனைவரும் அறிந்த உண்மை. அங்குக் கி. மு. 306-இல் பெருங்கடல் கோள் நிகழ்ந்ததென்று இலங்கை வரலாறு இயம்புகின்றது.[3] அக் கடல்கோள் கபாடபுரத்தை அழித் திருத்தல் இயல்பே. எனவே, இவை அனைத்தையும் கொண்டு காண்கையில், தொல்காப்பியர், சுமார் கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்தவர் எனக் கூறுதல் பொருத்தமாகும்.

தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல்கள்

தொல்காப்பிய நூற்பாக்கள் ஏறத்தாழ 1600 ஆகும். தொல்காப்பியர் இவற்றுள் நூற்றுக்குப் பதினாறு நூற் பாக்களில் "என்மனார் புலவர்", "என்ப", "என்றி சினோர்", யாப்பென மொழிய யாப்பறி புலவர்", "தோலென மொழிப தொன்னெறிப் புலவர்", "நூலறி புலவர்", புலனன் குணர்ந்த புலமையோரே", "நுவன்ற

1. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு பக். 37–38.
2. பவானந்தர் பதிப்பு, பக். 7.
3. Sir James Emerson Tennent, Ceylon, Vol. I, P. 7. Footnote.

றைந்தனரே" எனப் பலவாறு தம் காலத்திலும் தமக்கு முன்பும் வாழ்ந்த இலக்கண ஆசிரியரைக் குறித்துள்ளார். இவர் காலத்திலும் இவர்க்கு முன்னரும் இலக்கண நூல் வல்லார் பலர் இருந்தனர் என்பதற்கு இது சிறந்த சான்ருகும்.

எள்ளிலிருந்து எண்ணெய் எடுக்கப் பெறுதல்போல இலக்கியத்திலிருந்து எடுக்கப் பெறுவதே இலக்கணம். ஆதலால், தொல்காப்பியர் காலத்திலும் அவர்க்கு முன்னரும் இலக்கண நூல்கள் மிக்கிருந்தமையைக் காண, அவற்றின் ஆய்வுக்குத் துணையாக மிகப் பல இலக்கிய நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறது.

அங்ஙனம் தொல்காப்பியர் காலத்திலும், அவர்க்கு முன்பும் இருந்த பாநூல்களும் உரைநூல்களும் பல வாகும்.

தொல்காப்பியர் செய்யுளியில் நூற்பாக்களைக் கொண்டே இவைபற்றி ஆராய்ச்சி நிகழ்த்திய பெரும் புலவர் ரா. இராகவையங்கார் அவர்கள் கீழ்வருமாறு கூறியுள்ளார் :

> "தொகையும் வகையும் தொகை விரியும் உடன்பட்டவாற்ருல் தொகுத்தற்கு விரித்த நூலும், விரித்தற்குத் தொகுத்த நூலும் தொகுத்து விரித்தற்கு விரித்துத் தொகுத்த நூலும் முதல் நூல்களாகத் தமிழில் இருந்தன என்று ஒருதலையாகத் துணியலாம். மொழி பெயர்ப்பு நூல்களும் இருந்தன. காதல் பற்றியே பாடப்பெற்ற கலிப்பாக்களையும்

பரிபாடல்களையுங்கொண்ட நூல்களும், கூத்தர், பாணர், பொருநர், விறலியரை ஆற்றுப்படுத்திய ஆற்றுப்படை நூல்களும், பழைய கதைகளை ஒரு தொடர் நிலைப்படச் செய்யப்பெற்ற 'தோல்' எனப் பெரிய பெரு நூல்களும், பழைய கதைகளை உரை கலந்த சொற்களால் ஒரு தொடர் நிலையாகச் செய்யப்பெற்ற பெரு நூல்களும் தொல்காப்பியர்க்கு முன்னரே தமிழில் இருந்தன என்பது அவர் நூற்பாக்களால் நன்கு துணியப்பெறும்.

''இவற்றால் தமிழில் நெடுங்காலத்திற்கு முன்பே பல பழங்கதைகள் இருந்தனவென்றும், அக் கதைகளைத் தனியே செய்யுளிலும், உரையும் செய்யுளுமாகிய வகையிலும் வைத்து நூல் செய்தல் வழக்காம் என்பதும் துணியப்படும்.

''அறம், பொருள், இன்பங்களை ஒரு சேரவும் தனித்தனியாகவும் வைத்து அவற்றை அடி பல்காத செய்யுட்களில் பாடிய ''அம்மை'' நூல்கள் பல இவர்க்கு முன்பே உண்டு.

''தாமே ஒரு கதையைப் புதிதாகப் படைத்துக் கொண்டு, அதைச் செய்யுள் நூலில் யாத்து வழங்குவதும் உண்டு. ஞ, ண, ந, ம, ன, ய, ர, ல, வ, ழ, ள என்னும் பதினொரு புள்ளியும் தனித் தனியே ஈற்றில் வைத்து ஒரு பொருள் தொடர்பு இட்டுச் செய்யப்பட்ட சிலப்பதிகாரம், மணிமேகலை போன்ற பல நூல்கள் இவர்க்கு முன்பு இருந்திருத்தல் வேண்டும்.

''இசைச் செய்யுள் நூல்களும் நாடகச் செய்யுள் நூல்களும் வேறு வேறு கட்டளைகள்

உடையனவாய்ப் பகுக்கப்பட்டு இந் நாட்டில் இவர்க்கு முன்னே வழங்கின.

"நாடகம் என்பது வடமொழிப் பெயர். அதற்கு நேரான தமிழ்ச் சொல் 'புலன்' என்பது. புலன் நூல்கள் இத்தென்னாட்டில் மலிந்தன என்பது பாணர், கூத்தர், பொருநர், விறலியரை ஆற்றுப்படுத்தும் நூல்களால் அறியலாம். இவையும் தொல்காப்பியர்க்கு முன்பே இருந்தன.

"எளிதில் பொருள் தோன்றாது சொற்களால் மறையவைத்துக் கூர்ந்து நோக்கின் இன்ன பொருளதென்று அறியக்கூடிய வகையில் இக் காலத்துப் புதிர் (விடுகதை) போன்ற ஒருவகை நூலும் உண்டு. அது 'பிசி' எனப் பெயர் பெற்றது.

"பல நீதிகளையும் ஒழுக்கங்களையும் உலகியல்களையும் நன்கமைத்து நெடுநாள் தொட்டுப் பெரியோரால் வழங்கப்பெற்று வரும் பழமொழிகளை வைத்து அவற்றை விளக்கிக் காட்டிய முதுசொல் நூல்கள் இந்நாட்டில் முன்னரே உண்டு.

"இசையையே முதன்மையாகக் கொண்ட பாட்டைக் கலந்த பொருளவாகிப் பண்ணத்தி எனப் பெயரிய சில நூற்களும் இருந்தன.

"ஒருவனைப் பழித்தே வைத செய்யுள் நூல்களும், மகனைத் தாய் வைவதுபோல அன்பால் பழிகரந்து மொழியும் செய்யுள் நூல்களும் இருந்தன.

"மடல் நூல்களும், உலாப்புறச் செய்யுள் நூல்களும் இருந்தன.

"தொல்காப்பியர் முப்பத்திரண்டு உத்திகளைக் கூறியுள்ளதை நோக்க, உரை செய்யும் முறையும் இவர்க்கு முன்பு உண்டென்று உணரலாம்.

"இவையன்றி அகமும் புறமும் என்னும் பொருட்பாகுபாட்டிற்குரிய இன்பத் துறைகளிலும், கொடை, வீரம் முதலியவற்றிலும், உற்ருர் இறந்த கையறு நிலையிலும், மனமகிழ்தற்குக் காரணமான மங்கலங்களிலும், எல்லாந் துறந்த துறவிலும், இன்னும் மக்கள் வாழ்நாளில் நிகழ்ந்த பல்வகை நிகழ்ச்சியிலும் எத்துணையோ பல நூல்களும் உண்டாகியிருந்தன என்பது, இந்நூலுள் அகத்திணை புறத்திணை பற்றி வரும் சூத்திரங்களால் அறியக் கிடக்கிறது." [1]

1. ரா. இராகவையங்கார், தமிழ் வரலாறு. பக். 303—318.

4

உரைநடை நூல்கள்

பலவகைச் செய்யுள் நூல்களைக் குறிப்பிட்ட தொல்காப்பியர், தமது நூலில் நால்வகை உரையைப் பற்றியும் கூறியுள்ளார்.

(1) அவற்றுள் ஒன்று பாட்டினிடையே வைக்கப்பட்ட பொருட் குறிப்பினுல் வருவது. உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுளாகிய சிலப்பதிகாரத்தில் இடையிடையே வரும் உரைநடை இவ்வகையைச் சார்ந்தது.

(2) பாட்டில்லாமல் உரைமட்டுமே வருவது.

(3) உண்மை நிகழ்ச்சி இல்லாமல் பொய்யே புனைந்துரைக்கும் அளவில் வருவது ஒருவகை உரை. அது, 'ஓர் யானையும் குருவியும் தம்முள் நட்புக்கொண்டு இன்ன இடம் சென்று இன்னவாறு செய்தன என்று அவற்றுக்குப் பொருந்தாத பொருள் படும்படி, தொடர் நிலையால் நீண்ட காலமாக வழங்கப்பட்டு வருவது' என்று பேராசிரியர் கூறியுள்ளார்.

(4) பொய்யெனப் படாது மெய்யெனப் பட்டும், நகைப்பொருள் அளவாய் வருவது நான்காம் வகை. முழுமையும் பொய்யென்று தள்ளப்படும் நிலையில் அமையாது, உலகியலாகிய உண்மை நிலையை ஓரளவு அறிவுறுத்துவனவாய்க் கேட்போர்க்கு நகைச்சுவையை

விளக்கும் பஞ்சதந்திரக் கதைபோலும் உரை இவ்வகை யைச் சேர்ந்தது.

இந்நால்வகை உரை நூல்களும் தொல்காப்பியர் காலத்திலும் அவர்க்கு முன்பும் தமிழில் இருந்தமையால் தான் அவர்,

> " பாட்டிடை வைத்த குறிப்பி னானும்
> பாவின் றெழுந்த கிளவி யானும்
> பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
> பொருளொடு புணர்ந்த நகைமொழி யானு மென்(று)
> உரைவகை நடையே நான்கென மொழிப"[1]

என்று நூற்பாவொன்றினைச் செய்தனர். தொல்காப்பியர் தமக்கு முன்னும் தம் காலத்திலும் இருந்த பலவகைச் செய்யுள் நூல்களையும், உரைநடை நூல்களையும், தமிழ் இலக்கண நூல்களையும் நன்கு பயின்று தமது இலக்கண நூலைச் செய்தார் என்பது இதுகாறும் கூறப்பட்ட செய்தி களால் நடுவுநிலையறிவுடையார்க்கு இனிது புலனாகும்.[2]

தொல்காப்பியர், உரையை இங்ஙனம் நான்குவகைப் படுத்திக் கூறினார் என்பதை நோக்க, அவர்க்கு முன்பே தமிழில் இந்நால் வகைப்பட்ட உரை நூல்கள் நாட்டில் வழங்கி வந்தன என்பது தெளிவாகிறதன்றோ? ஆகவே, கிறிஸ்து பெருமானுக்குப் பல நூற்றாண்டுகட்கு முன்பே, தமிழில் உரைநடை நூல்கள் பல்கியிருந்தமை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெளிவாதல் காணத் தகும்.

---

1. செய்யுளியல், நூற்பா 173.
2. "......Much of Tamil literature and many stages of grammar should have existed before the Tolkappiyam to justify the existance of this perfect grammar."
   —T. R. Sesha Ayyangar, Dravidian India, p. 92.

இத்துணை நூல்கள் எங்ஙனம் மறைந்தன? யாப்பருங்கல விருத்தி உரையிலும், இளம்பூரணர், பேராசிரியர், அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் உரைகளிலும் கூறப்பட்டுள்ள எண்ணிறந்த நூல்கள் இக்காலத்தில் இல்லை. இங்ஙனமே தொல்காப்பியர் காலத்தில் இருந்த நூல்கள் காலப்போக்கில் கடல் கொந்தளிப்பாலும் அரசியல் மாற்றங்களாலும் பிற அழிவுகளாலும் அழிந்துபட்டன போலும்!

தொல்காப்பியர் காலம் ஏறத்தாழக் கி. மு. 4-ஆம் நூற்றாண்டு என்று கொள்வோமாயின், அவர்க்கு முற்பட இருந்த உரை நூல்கள் இரண்டு மூன்று நூற்றாண்டுகள் முற்பட்டனவாதல் வேண்டும் என்று கொள்ளுதல் பொருத்தமாகும்.

கிரேக்க உரைநடை நூல்கள்

கிரேக்க மொழி முதலில் கல்வெட்டுக்களில் தொடங்கியது; பின்பு படிப்படியாக வரலாற்றுக் குறிப்புகளிலும் இட விவரக் குறிப்புகளிலும் வளர்ந்தது. பின்பு தோன்றிய ஹெரோடியஸ் (Herodius) உரை தெளிவாயும் இலக்கணத் தூய்மைபெற்றும் தனித்தன்மையுடன் விளங்கியது. ஹெகாடியஸ், ஹெரொடோரஸ் ஆகியோருக்குப் பின்பு ஹெரலோநிகஸ் என்பவர் பல வரலாற்று நூல்களை எழுதினார். அவருக்குப் பின்பு ஹெரொடோட்டஸ் கி. மு. ஐந்தாம் நூற்றாண்டில் உரை நூல்களை எழுதினார். முன்னவை அழிந்தன. ஹெரொடோட்டஸ் எழுதிய உரை நூல்களே ஐரோப்பிய உரைக்குக் காலத்தால் முற்பட்ட உரை இலக்கியச் சான்றாக விளங்குகிறது.[1]

1. Encyclopaedia Brittanica, Vol. 18, p. 592.

இலத்தின் உரைநடை நூல்கள்

இலத்தின் மொழியில் அழிந்தனபோக கி. மு. 70-க்கும் 60-க்கும்இடையில் சிசெரோ என்பவர் எழுதிய உரையே இன்று பழைமை வாய்ந்ததாகக் கருதப்படுகிறது. அவர் எழுதிய கடிதங்களும் அக்கால உரை நடை வளத்தை உணர்த்துகின்றன.[1]

ஆங்கில உரைநடை நூல்கள்

கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் ஐநே (Ine) என்ற அரசன் செய்த சட்டங்களும், அவை தொடர்பான ஆவணங்கள் பலவும் ஆங்கில இலக்கிய உரை மரபு இருந்த நிலையை உணர்த்தும் முறையில் எழுதப்பட்டன. ஆல்பிரட் அரசன் கி. பி. 887-இல் அறிஞர்களைக் கொண்டு ஆங்கிலத்தில் எழுதிய அவனது கைந்நூலே (Hand-Book) முழுமை பெற்ற ஆங்கில உரை நடைக்குக் காலத்தால் பிற்பட்ட சான்றுகும். அம் மன்னன் காலத்து ஆங்கில நடை எளிமையும் தெளிவும் உடையது.[2]

வடமொழி உரைநடை நூல்கள்

வடமொழியில் வேதங்களுக்குப் பின்பு எழுதப் பெற்றவை பிராமணங்கள் என்பவை. அவை வேத வேள்விகளைச் செய்யும் முறைகளைப்பற்றி விவரித்துக் கூறுவன. அவை முழுமையும் வடமொழி உரையில் எழுதப் பெற்றவை. இந்து ஐரோப்பிய மொழிக் குடும்பத்தில் காணப்படும் மிகப் பழைய உரைநடை அப்பிராமணங்களில் உள்ள உரையேயாகும். அவ்வுரைநடை

---

1. Encyclopaedia Brittanica, Vol. 18, 592.
2. Ibid, p. 592

எளிதில் கையாள முடியாதது (Cumbrous); பொருத்த மில்லாதது; முன்பின் தொடர்பற்றது. ஆயினும், பிற் கால உரை வளர்ச்சிக்கு அஃது அடிப்படையாய் அமைந் தது.[1]

இப்பிராமணங்களின் காலம் ஏறத்தாழக் கி. மு. 800க்கும் 600க்கும் இடைப்பட்டது என்பது அறிஞர் கருத்து.[2]

முடிவுரை

இவ் விவரங்கள் அனைத்தையும் நோக்க, ஏறத்தாழ ஒரே காலத்திலோ அல்லது சிறிது முன் பின்னாகவோ உலகத்துப் பழைய மொழிகளாகிய கிரேக்கத்திலும் வட மொழியிலும் தமிழிலும் உரை நூல்கள் இருந்திருத்தல் வேண்டும் என்று கருதுதல் பொருத்தமாகும்.

1. A. A. Macdonell, History of Sanskrit Literature, pp. 31—32.
2. From, Encyclopaedia of Religions, p. 87;

   They are written in prose throughout, and are in some cases accented, like the vedas themselves. They are thus notable as representing the oldest prose writing of the Indo—European family. Their style is indeed cumbrous, rambling and disjointed but distinct progress, towards greater fecility is observable within this literary period.

5

நூற்றாண்டு வாரியாக உரைநடை

கல்வெட்டுகள்

தொல்காப்பியர் காலத்திலோ அவருக்கு முன்போ எழுதப் பெற்ற உரைநடை நூல்கள் இன்று நாம் காணுமாறில்லை. ஆயினும் தமிழ் உரைநடை வழக்கில் இருந்து வந்தது என்பதைக் கல்வெட்டுத் தொடர்கள் ஏறத்தாழத் தொடர்ந்து உணர்த்தி வருகின்றன. அவை நீண்ட தொடர்களைக் கொண்டவை அல்ல; ஒவ்வொன்றும் ஒரு முற்றுச் சொற்றொடரையே கொண்டது. ஆயினும் அக்காலத்திலும் தமிழ் உரைநடை வழக்கில் இருந்தது என்பதை உணர்த்த அது போதுமானது.

அக் கல்வெட்டுகள் சமணத் துறவிகள் வாழ்ந்த மலை முழைகளில் உள்ள கற்படுக்கைகள் மீதும் பாறைச் சுவர்கள் மீதும் பொறிக்கப்பட்டுள்ளன. சமணத் துறவிகள் வட நாட்டவர் ஆதலாலும், சமண சமயமே வட நாட்டில் தோன்றியது ஆதலாலும், அவர் பெயர்களும் சமயம் பற்றிய சொற்களும் வடமொழிச் சொற்களாகவும் பாலி, அர்த்தமாகதி போன்ற பிற மொழிச் சொற்களாக

வும் அமைந்தமை இயல்பே. அப்பல மொழிச் சொற்களும் இக்கல்வெட்டுகளில் இடம் பெற்றுள்ளன. இங்ஙனமே வேதியராலும், பின்பு வந்த பௌத்த சமயத் துறவிகளாலும் பிறமொழிச் சொற்கள் தமிழிற் புகலாயின.

சித்தன்னவாசல் கல்வெட்டு

கி. மு. 3-ஆம் நூற்றாண்டின் இறுதியில் அல்லது இரண்டாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தோன்றியதெனக் கருதப்படும் கல்வெட்டு ஒன்று, சித்தன்னவாசல் குகைப் படுக்கையின் மீது காணப்படுகிறது. அது தமிழ்க் கல்வெட்டு; பிராமி எழுத்தில் வெட்டப்பட்டுள்ளது. அதனைப் படித்த கல்வெட்டறிஞர் காலஞ்சென்ற திரு. கே. வி. சுப்பிரமணிய அய்யர் என்பவர்,

> "தமிழ் தொடர் ஒன்று அசோக பிராமி எழுத்தில் வெட்டப்பட்டுள்ளது. அது 'எலுமி நாட்டு குமட்டூர் பிறந்தான் காவுதி ஈதெனுக்கு சித்துபோசில் இளயர் செய்த அதிட்டானம்' என் நிற்கிறது,"

என்று கூறியுள்ளார்,[1]

'இளயர் (என்பவர்) சித்து போசில் (குன்றின் மீதுள்ள சித்தர் இல்லம்) ஓய்மா நாட்டுக் குமட்டூர்(க்) காவிதி ஈதெனுக்குச் செய்த உறைவிடம்' என்பது இதன் தெளிந்த பொருள்.

ஓய்மாநாடு என்பது இன்றுள்ள திண்டிவனம் வட்டத்தின் பெரும் பகுதியாகும். அந்நாடு சங்க காலத்தில் சிறப்புற்று இருந்தது என்பதைப் புறநானூற்றுப் பாடலா

---

1. Proceedings and Transactions of the Third oriental conference, Madras, 1924, p. 296.

லும் சிறுபாணாற்றுப் படையாலும் அறியலாம். அதன் தலைநகரான கிடங்கிலுக்கு அருகில் இன்று 'மட்டூர்' என்னும் பெயர்கொண்ட சிற்றூர் ஒன்று உள்ளது. 'குமட்டூர்' என்னும் பெயரில் உள்ள முதலெழுத்துக் காலப் போக்கில் மறைந்து 'மட்டூர்' என்று ஆகியிருக்க லாம் என்று கல்வெட்டறிஞர் திரு. தி. வி. சதாசிவ பண்டாரத்தார் கூறியுள்ளார்.[1] கிடங்கிற் காவிதி கீரன் கண்ணனார், கிடங்கில் காவிதி பெருங் கொற்றனார் என்ற புலவர் இருவர் நற்றிணையில் சில பாக்களைப் பாடியவர் களாகக் காணப்படுகின்றனர்.[2] அவர்களைப் போலவே இக் குமட்டூர்க் காவிதி, ஒய்மானாட்டினர் போலும்! காவிதி என்பது படைத்தலைவர் அல்லாத அமைச்சர் போன்ற அரசியல் உயர் அலுவலர்க்கு அரசன் வழங்கிய பட்ட மாகும். அப்பட்டம் பெற்ற ஒருவர் சமணத் துறவி யானார். இளையர் என்ற ஒருவர் அத்துறவிக்குச் சித்தன்னவாசல் மலைமீது உறைவிடத்தை அமைத்துக் கொடுத்தார் போலும்!

கி. மு. இரண்டு அல்லது
முதல் நூற்றாண்டு உரைநடை

அழகர்மலைக் கல்வெட்டு

அழகர் மலையில் உள்ள ஒரு கல்வெட்டு பிராமி எழுத்துக்களாலான ஒரு தமிழ்த் தொடரைக் கொண் டுள்ளது. 'மதுரைப் பொற்கொல்லன் ஆதன் தானம்'

---

1. பதிற்றுப்பத்து (கழகப் பதிப்பு), பக். 23.
2. செ. 218, 364.

என்பது அத் தொடரின் வாசகம் என்று திரு. ஐராவதம் மகாதேவன் என்பவர் ஆறு திங்களுக்குமுன் (1-8-65) 'இந்து' என்னும் ஆங்கில நாள்தாளில் வெளியிட்டமை நாடறிந்த ஒன்று. இதன் காலம் கி. மு. இரண்டு அல்லது முதல் நூற்றாண்டு என்பது அவர் கருத்து.

கி. பி. இரண்டாம் நூற்றாண்டு
உரைநடை

சிலப்பதிகார உரை

சிலப்பதிகாரம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டில் எழுதப் பெற்றது என்பது ஆராய்ச்சியாளர் பலரது கருத்தாகும். இளங்கோவடிகள் செய்த நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் "உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்" என்று அதன் பதிகமே (வரி 87) பறை சாற்றுகின்றது. 'உரைபெறு கட்டுரை,' 'உரைப்பாட்டு மடை' என்னும் பெயர்களோடு அந்நூலில் இடையிடையே உரைநடை இடம் பெற்றுள்ளது. நூலின் தொடக்கத்தில் 'உரை பெறு கட்டுரை' என்னும் தலைப்பில் நான்கு சிறு பத்திகளாக அமைந்த பதின்று வரிகள் இடம் பெற்றுள்ளன. இப்பகுதியைக் கீழே காண்க:

உரைபெறு கட்டுரை

1. அன்று தொட்டுப் பாண்டியனாடு மழைவளங் கூர்ந்து, வறுமையெய்தி, வெப்பு நோயும் குருவும் தொடரக் கொற்கையிலிருந்த வெற்றிவேற் செழியன் நங்கைக்குப் பொற் கொல்லர் ஆயிரவரைக் கொன்று களவேள்வி

யால் விழவொடு சாந்தி செய்ய, நாடுமலிய, மழைபெய்து, நோயும் துன்பமுநீங்கியது.

2. அது கேட்டுக் கொங்கிளங்கோசர் தங்கள் நாட்டகத்து நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய, மழை தொழில் என்றும் மாறாதாயிற்று.

3. அதுகேட்டுக் கடல்சூழ் இலங்கைக் கயவாகு வென்பான் நங்கைக்கு நாட்பலி பீடிகைக் கோட்டமுந்துறுத்தாங்கு அரந்தை கெடுத்து வரந்தருமிவளென ஆடித் திங்களகவையின் ஆங்கோர் பாடி விழாக்கோள் பன்முறை யெடுப்ப, மழை வீற்றிருந்து வளம் பல பெருகிப் பிழையா விளையுள் நாடாயிற்று.

4. அதுகேட்டுச் சோழன் பெருங்கிள்ளி கோழியகத்து எத்திறத்தாலும் வரந்தருமிவளோர் பத்தினிக் கடவுளாகுமென நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து, நித்தம் விழாவணி நிகழ்வித்தோனே.

இவ்வுரைநடையைப் பலமுறை படிக்கப் படிக்க, நவில்தோறும் நூல் நயம்போல, உள்ளக்கிளர்ச்சி உண்டாகிறது. ஒவ்வொரு பத்தியிலுமுள்ள சொல் அமைப்பும் அச்சொற்கள் உணர்த்தும் பொருளின் சிறப்பும் ஆழ்ந்து நினைந்து இன்புறத்தகும். கி.பி. 2-ஆம் நூற்றாண்டில் இவ்வளவு சிறந்த உரைநடை தோன்றியது எனின், தமிழ் உரைநடை பல நூற்றாண்டுகட்கு முன்பு தோன்றிப் படிப்படியாக ஊர்ந்தும் தளர்நடையிட்டும் வளர்ந்து இச்சீரிய செந்தமிழ் நடையாக மலர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும் என்பது தெளிவாகிறதன்றோ?

ஆறுநாட்டார் மலைக் கல்வெட்டு

திருச்சிராப்பள்ளி மாவட்டத்துக் கருவூர்க்குப் பத்துக் கல் தொலைவில் உள்ள புகலூரை அடுத்த ஆறுநாட்டார் குன்றில் பிராமி எழுத்துக்களைக் கொண்ட தமிழ்க் கல்வெட்டுக்கள் மூன்று உள்ளன. கல்வெட்டுத் துறையினர் இவற்றை 1927—28-இல் பார்வையிட்டனர்.[1] ஆயினும் அவைபற்றிய விளக்கம் தரவில்லை. முன்பு கூறப்பெற்ற திருவாளர் ஐராவதம் மகாதேவன் என்பவர் அவற்றைப் படித்தார்; தாம் அறிந்தவற்றை 'இந்து' என்னும் ஆங்கில நாள் தாளில் (7—3—65) வெளியிட்டார்.

(1) இது யாற்றூர் அமணன் செங்கசபன் உறையுள். கோ ஆதன் (சேரல்) இரும்பொறை மகன் (ஆன) பெருங்கடுங்கோன் மகன் (ஆன) இளங்கோ—கடுங்கோன் இப்படுக்கைகளை (கற்படுக்கைகளை) வெட்டுவித்தான், என்பது முதல் கல்வெட்டின் தொடர்களாகும்.

(2) இரண்டாம் கல்வெட்டும் பொருளில் முன் சொன்னதைப் போன்றதே. அதனில் கடுங்கோன், இளங்கடுங்கோன் என்னும் பெயர்களும் இடம் பெற்றுள்ளன.

(3) மூன்றும் கல்வெட்டில் 'ஆவி என்பவனுக்கு இரும்பொறை என்பவன் முறை மகன்' என்பது கூறப்பட்டுள்ளது.

இம் மூன்று கல்வெட்டுகளையும் முறைப்படுத்திக் காண்கையில், சேரருடைய மூன்று தலைமுறைகளைக் காணலாம் :

---

1. A. R. E. 1927—28, P. 50.

ஆதன் (சேரல்) இரும்பொறை
|
(மகன்)
பெருங்கடுங்கோன்
|
(மகன்)
இளங்கடுங்கோன்

மூன்றும் கல்வெட்டில் மருமகனைக் குறிக்கும் 'முறை மகன்' என்னும் சொல்லாட்சி வந்துள்ளமை கவனிக்கத் தகும். வேள் ஆவி, ஆதன், இரும்பொறை, பெருங் கடுங்கோன், இளங்கடுங்கோன் என்பவை சங்கப்பாக் களில் வந்துள்ள பழைமையான சொற்கள் என்பதை நாம் நன்கு அறிவோம். சேரர் என்ற அரச மரபினர் கி. பி. இரண்டாம் நூற்றுண்டில் வாழ்ந்தனர் என்னும் வரலாற்றுச் செய்தியை முதன் முதலாக உணர்த்தும் கல்வெட்டுகள் இவைதாம். 'இவற்றுல் சேரர் வரலாறு கூறும் பதிற்றுப்பத்து, வரலாற்றுச் சிறப்பை மிகுதியாகப் பெறுகிறது; சங்ககாலம் என்பதும் உறுதி பெறுகிறது' என்று திரு. ஐராவதம் மகாதேவன் அவர்கள் கூறியுள் ளமை குறிப்பிடத்தகும்.

அரிச்சலூர்க் கல்வெட்டு

கோவை மாவட்டத்து ஈரோடு வட்டத்து அரிச்ச லூரை அடுத்த குன்றில் பிராமிக் கல்வெட்டு ஒன்று உள்ளது. ஆராய்ச்சி அறிஞர் மயிலை. சீனி. வேங்கட சாமி அவர்கள் தாம் அதனை முதன்முதல் பார்த்து எழுதியவர்கள்; தாம் பார்த்த விவரத்தைச் செய்தித் தாள்களில் வெளியிட்டவர்கள். பின்பு சென்னைப் பல்கலைக் கழகப் பழம்பொருள் ஆராய்ச்சித்துறைத் தலைவராகவுள்ள டாக்டர் டி. வி. மகாலிங்கம் அவர்கள்

அக்கல்வெட்டை நேரிற் பார்வையிட்டுப் படியெடுத்து ஆராய்ந்து ஒரு கட்டுரை வரைந்தார்கள்.

சித்தம் தீத்தம் பூண தத்தான்
மாமறய வண்ணக்கன் தே (வனுதிரத)ன்

என்பது அக் கல்வெட்டுக் கூற்று.

சித்தம் மாறைய வண்ணக்கன் தேவனுதிரன் எனபவன், சமணத் துறவி ஒருவர் தீர்த்தம் பூண (இக் கற்படும் கையைச் செய்து) தந்தான் என்று இக்கூற்று விரிக்கப் பெறுகிறது. தீத்தம்—தீர்த்தம் (தூய நிலை—முத்தி நிலை); தத்தான்—தந்தான், சித்தம் என்பது வெற்றி மங்கலம் எனப் பொருள்படும்.

இக் கல்வெட்டின் காலம் கி. பி. இரண்டாம் நூற்றுண்டாகலாம் என்பது டாக்டர் அவர்கள் கருத்தாகும்.[1]

சங்க காலத்திற்குப் பின்பு

ஏறத்தாழ கி. பி. 300-இல் பல்லவர் என்ற புதிய மரபினர் காஞ்சியைத் தலைநகராய்க் கொண்டு தொண்டை நாட்டை ஆளத் தொடங்கினர். அவர்கட்கும் சேர, சோழ, பாண்டியர்கட்கும் பலபோர்கள் கி. பி. 6 ஆம் நூற்றுண்டு முடிய நடைபெற்றன, தமிழரசர்க்கும் களப்பிரர்க்கும்,' 'தமிழரசர்க்கும் பல்லவர்க்கும்' பல போர்கள் நடைபெற்ற கி. பி. 4, 5, 6 ஆம் நூற்றுண்டுகளில் கங்க நாட்டில் சமண வெள்ளைக் குளம் என்ற சமணர் ஊரிலிருந்து சமண முனிவர் பலர் தமிழகம்

1. Dr. T. V. Mahalingam, Silver Jubilee Volume, Archaeological Society of South India, 1962, Pp. 125—131.

போந்து தங்கள் சமயத்தைப் பரப்பலாயினர். அவருள் சிம்ம நந்தி, வச்சிர நந்தி, சீவர்த்த தேவர், குமாரசேனர், பூஜ்யபாதர், அகளங்கர் என்பவர் குறிக்கத்தக்கவர். அவர்கள் பௌத்தர்களை வாதில் வென்றனர். அகளங்கர் காலத்தில் வட இந்தியாவிலிருந்து திகம்பர சமணர் பலர் தென்னாட்டிற்கு வந்து ஆனைமலை, மதுரை, சமண வெள்ளைக் குளம் முதலிய இடங்களில் குடியேறினர்; அகளங்கர், சைவர், பாசுபதர், பௌத்தர், காபாலிகர் முதலிய பல சமயத்தவருடன் வாதிட்டர்.[1]

கங்க மரபினர் காலத்தில் வடநாட்டில் தோன்றிய சைவ, வைணவ பக்தி நெறிகள் காலப்போக்கில் தமிழகத்திலும் பரவின. வைணவ பக்தி நெறியைப் பின்பற்றியவர் பாகவதர் எனப் பெயர் பெற்றனர். முற்காலப் பல்லவருள் சிலர் தம்மைப் பரமபாகவதர் என்று தம் பட்டயங்களில் குறித்துக் கொண்டனர். கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த கோச்செங்கணன் எழுபது சிவன் கோயில்களை எடுப்பித்துச் சிறப்புற்றான். வட இந்தியாவிலிருந்து காபாலிகர், பைரவர், பாசுபதர், லகுலீச பாசுபதர், மாவிரதிகள் எனப் பலவகைப்பட்ட சைவ சமயத் துறவிகள் தமிழகத்தில் குடியேறினர்.

வேதவேள்விகள் செய்துவந்த வேதியர் சங்ககால இறுதியிலேயே தமிழகத்தில் செல்வாக்குப் பெற்றனர். பக்திநெறி தமிழகத்தில் பரவிய காரணத்தால் சிவநெறியிலும், மால்நெறியிலும் சமய வேள்விகளும் மந்திரங்களும் புகுந்தன. சமணரும் பௌத்தரும் தத்தம் சமயநூல்களைப் பாலி முதலிய மொழிகளிலிருந்து வடமொழியில் மொழி பெயர்த்தனர். இங்ஙனம் வடமொழி கி. பி. 7-ஆம்

---

1. M. V. Krishna Rao, Gangas of Talkad

நூற்றாண்டுக்கு முன்னரே எல்லாச் சமயங்களிலும் மிக்க செல்வாக்கை அடைந்தது; அதன் செய்யுள் வகைகளும் தமிழில் இடம் பெற்றன. சந்தம், தாண்டகம், விருத்தம் முதலிய பாவகைகள் இச்சேர்க்கையால் உண்டானவையே. வேதங்களை அடிப்படையாகக் கொண்டு சைவமும் வைணவமும் வளர்க்கப்பட்டன. தமிழ்ப் புலவர் சிலரும் வடமொழியைக் கற்று 'வடநூல் வழித் தமிழாசிரியர்' என்று பெயர்பெற்றனர். சங்க காலத்திற்குப் பின்பு இவ்வாறு உண்டான சமயங்களின் வளர்ச்சியால் வடமொழி தமிழகத்தில் மிக்க செல்வாக்குப் பெற்றது. இக்காரணங்களால்தான் சங்க காலத்திற்குப் பின்பு தோன்றிய இலக்கியங்களிலும் கல்வெட்டுகளிலும் வடசொற்கள் படிப்படியாக மிகுந்து வரலாயின.

இந்தச் செய்தி, சங்க காலத்திற்குப் பிற்பட்ட கல்வெட்டுகளிலும் செப்பேடுகளிலும் இலக்கிய நூல்களிலும் உள்ள தமிழ் உரைநடைப் போக்கை அறியப் பெருந் துணை புரியும்.

கி. பி. 4 அல்லது 5-ஆம் நூற்றாண்டு உரை நடை

திருநாதர் குன்றத்துக் கல்வெட்டுகள்

செஞ்சியை அடுத்த சிங்கபுரத்திற்கு அண்மையில் உள்ள திருநாதர் குன்றில் சமண முனிவர் வாழ்ந்திருந்தனர். அங்குத் தொடக்கக் கால வட்டெழுத்துக் கல்வெட்டுகள் இரண்டு காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று கீழ்வருமாறு படிக்கப்படுகின்றது:

(1) முப்பது நாள் அசைன நோற்ற இளைய படாரர் நிச்திகை.

அடுத்தது பின்வருமாறு படிக்கப்படுகின்றது:

(2) ஐம்பத்தேழ் அசைன நோற்ற சந்திர நந்தி ஆசிரிசர் நிச்திகை.

இவை இரண்டும் முறையே,

(1) முப்பது நாள் உண்ணா நோன்பு மேற்கொண்டு (வடக்கிருந்த) இளைய படாரர் (என்ற சமணத் துறவி) காலமான இடம்.

(2) ஐம்பத்தேழு நாள் உண்ணா நோன்பை மேற்கொண்டு (வடக்கிருந்த) சந்திரநந்தி ஆசிரியர் காலமான இடம்—என்று பொருள்படுவன.

இவற்றுள் அசைனம், படாரர், நிச்திகை என்பன வடசொற்கள். நோற்ற என்பது சிறந்த தமிழ் இலக்கியச் சொல். சமண முனிவர் வடவராதலின் வடசொற்கள் இத் தொடரில் புகுந்தமை இயல்பே. இக்கல்வெட்டுகளின் காலம் கி. பி. 4 அல்லது 5-ஆம் நூற்றுண்டு என்று அறிஞர் கூறுவர்.[1] 'நிச்திகா' என்னும் வடசொல் தமிழ் இலக்கண மரபிற்கு ஏற்ப 'நிச்திகை' எனக் கல்வெட்டுகளிலும் உருமாற்றம் பெற்றுள்ளது. கூர்ந்து நோக்கத்தகும்.

கி. பி. ஆறும் நூற்றுண்டு உரைநடை
(பள்ளன் கோவில் செப்பேடுகள்)

ஏறத்தாழக் கி. பி. 200-இல் பல்லவர் என்ற புதிய மரபினர் தொண்டை நாட்டைக் கைப்பற்றினர் என்பது

1. A. R. E. 238 of 1904; S. I. I. 17, 261.

மூன்பு கூறப்பெற்றதன்றோ? அவர் ஆந்திரப் பெரு நாட்டின் தென்பகுதியை ஆண்டு வந்தவர். ஆந்திரப் பேரரசு வீழ்ச்சியுற்ற பின்பு தங்கள் செல்வாக்கைத் தெற்கு நோக்கி விரித்தனர்; தொண்டை நாட்டைக் கைப்பற்றினர்; காஞ்சியைத் தலைநகராய்க் கொண்டு ஆண்டனர். முற்பட்ட பல்லவ அரசருள் சிலர் பிராகிருத மொழியில் செப்பேடுகளை வெளியிட்டனர். ஆயின், அவற்றுள் ஒன்றேனும் தமிழ்நாட்டைப் பற்றிய தன்று.

கி. பி. 6-ஆம் நூற்றாண்டின் இறுதியில் சிம்மவிஷ்ணு என்ற பல்லவன் சோழநாட்டைக் கைப்பற்றினான். அவன் தந்தையான சிம்மவர்மன் ஆட்சிக் காலத்தில் ஒரு செப்பேடு எழுதப்பெற்றது. அதுவே பள்ளன் கோவில் செப்பேடு என்பது, இச்செப்பேடுகளை மிகுந்த ஆராய்ச்சி வன்மையோடு பதிப்பித்துள்ளவர் கல்வெட்டறிஞர் திருவாளர் தி. நா. சுப்பிரமணியன் அவர்கள். காஞ்சியை அடுத்த திருப்பருத்திக்குன்றம் என்னும் சமண காஞ்சியில் கோயில் கொண்ட வர்த்த மான தேவர்க்கு அமண்சேர்க்கை என்னும் சிற்றூர் வரியிலியாக உரிமையாக்கப் பெற்றது; அதுவும் வேறோர் நிலமும் திருப்பருத்திக் குன்றில் வாழ்ந்த சமண ஆசிரிய ரான வச்சிரநந்தி என்பவர் மேற்பார்வையில் விடப் பெற்றன. அந்த ஊரும் நிலமும் தொண்டை நாட்டைச் சேர்ந்தவை. இங்ஙனம் சமண சமயத்தைச் சேர்ந்த கோவிலுக்கோ முனிவர்க்கோ விடப்பெற்ற ஊர் அல்லது நிலம் 'பள்ளிச்சந்தம்' எனப் பெயர்பெற்றது.

அவ்வறத்தைக் குறிக்கும் செப்பேடுகளின் முற்பகுதி வடமொழியில் இருப்பினும், பிற்பகுதி தமிழ் உரையில்

அமைந்துள்ளது. பட்டயத்தில் காணப்பெறும் ஊர் தமிழ்நாட்டைச் சார்ந்ததாதலின், அந்த நாட்டவர் அப்பட்டயச் செய்தியைத் தெரிந்துகொண்டு செயலாற்று வதற்காக இறுதிப்பகுதி தமிழில் அமைக்கப்பட்டது. அத்தமிழ்ப் பகுதியில் அமைந்த உரைநடை பிழையற்ற முறையில் அமைந்துள்ளது. அத்தமிழ்ப் பகுதி உணர்த்தும் அக்கால அரசியல் செய்திகள் பலவாகும். அத் தமிழ் வாசகத்தின் ஒரு பகுதியைக் கீழே காண்க ;

"கோவிசைய சிம்மவர்மற்கு யாண்டாருவது வெண்குன்றக் கோட்டத்துப் பெருநகர நாட்டு நாட்டார் காண்க. தந்நாட் அமண் சேர்க்கை பருத்திக் குன்றில் வச்ரநந்திக் குரவர்க்குப் பள்ளிச் சந்தமாகக் கொடுத்தொந். தாங்களும் படாகை நடந்து கல்லுங் கள்ளியுங் நாட்டி அறையோலை செய்துகொடுத்து விடுதகவென்று நாட்டிர்க்குத் திருமுகம்விட, நாட்டாருந் திரு முகங்கண்டு, தொழுது, தலைக்கு வைத்து. படாகை நடந்து, கல்லுங்கள்ளியு நாட்டி. நாட்டார் விடுத்த அறையோலைப் படிக்கெல்லை கீழ்பாலெல்லை ஏந்தலேரியின் கீழைக்கடற்றின் மேற்கு மோமைக்கெல்லை எல்லை; இன்னும் தென்பாலெல்லை வெள்வடுகன் கேணியின் வடக்கும் கடற்றினெல்லை இன்னுந் நீலபா எல்லை; இன்னும் விலாடன் குற்றேத்தத் தெல்லை; இன்னும் மேல்பாலெல்லை மாவேத் தத்து வதியின் கிழக்கும், மும்மூலை ஏத்தத் தெல்லை, இன்னுமாற்றெல்லை; இன்னும்

"வடபாலெல்லை பெருங்கொல்லையின் றெற்கு இன்னும் பாண்டியன் கயத்தெல்லை இன்னும்

முருக்கங்கேணி எல்லை இவ்விசைத்த பெருநாட் கெல்லையகத்து மகப்பட்ட நிலம்—நீர் நிலமும் புன்செய்யும் களரும் கன்றுமேய் பாழும் காடும் பீடிலிகையும் கிடங்குங் கேணியும் மனையும் மனைப்படம்பும் உடும்போடி ஆமை தவழ்ந்த தெல்லாம் உண்ணில ஞெழுவின்றி கோவும் பொறியும் மாற்றி குடிநீக்கி இவ்வூர் பெற்றக் குரவர்க்கே பள்ளிச் சந்தமாக தாமரிலும் பதிஞ றரைப்பட்டி நிலங்கொடுத்தோம்...வச்ரநந்திக் குரவர்க்கே பள்ளிச்சந்தமாக பரதத்தி சென்றது, நரபயன் ஆணத்தியால்.[1]

(1) அரசனது ஆணை நாட்டார்க்கு அனுப்பப் படும். நாட்டார் அந்த ஆணைப்படி நிலத்தை அளந்து அப்பகுதிக்கு கள்ளிச் செடிகளாலும் கற்களாலும் எல்லைக்கோலி அறையோலை (Royal Order) பிறப்பிப்பர். அந்த இடத்துக்குரிய ஊரவையார் கூறும் விவரங்களை (வரிகள் முதலியன) குறிப்பிட்டுப் பட்டயம் வரையப் பெறும். ஊராட்சி மன்றங்கள் அப்பழைய காலத்தில் பெற்றிருந்த செல்வாக்கை இதிலிருந்து நன்கறியலாம்.

(2) இந்தச் சிம்மவர்மன் என்பவனே பெரிய புராணம் கூறும் ஐயடிகள் காடவர்கோன் ஆகலாம் என்று நான் 1945-இல் எனது எம். ஓ. எல். ஆராய்ச்சி யில் எழுதினேன். இப்பட்டயத்தைப் பதிப்பித்த அறிஞர் தி. நா. சுப்பிரமணியம் அவர்களும் (நான் எழுதிய)

1. Transactions of the Archaeological Society of South India, 1958—59.

18 ஆண்டுகட்குப் பின்பு 1958-இல் அதே முடிவுக்கு வந்துள்ளது நோக்கற்பாலது.[1]

(3) இத் தமிழ்நடை தேவையான சொற்களை மட்டுமே கொண்டது; இன்னோசை உடையது; சொற்செறிவுடையது.

(4) பிற கல்வெட்டுக்களில் குடுத்தோம், குடுத்த—காணப்படும். ஆயின் இதனில் கொடுத்தோம், கொடுத்த என்னும் பிழையற்ற சொற்கள் காணப்படுகின்றன.

(5) சமணர்க்குப் பள்ளிச் சந்தமாக நிலம் விட்டமைக்கு முதல் சான்று இப் பட்டயம்தான். இக் காலத்தில் சமணம் மிக்க செல்வாக்குப் பெற்றிருந்தது என்பது இலக்கியத்தாலும் அறியப்படும். அடுத்த கி. பி. 7-ஆம் நூற்றுண்டில் சைவ, வைணவப் பெரியார்கள் சமண சமயத்தைத் தாக்கியதை அவர்கள் பாடல்கள் உணர்த்துகின்றன.

(6) நான்கு எல்லைகட்கு உட்பட்ட நீர்நிலம் (நன்செய்), புன்செய், களர்நிலம், கன்றுமேய் பாழ்நிலம், காடு, பாடிலிகை (இது எவ்வகை நிலம் என்பது தெரியவில்லை), கிடங்கு (பள்ளம்), கேணி, மனை (வீடு), மனைப் படப்பு (வீட்டுத் தோட்டம்) உடும்போடி ஆமை தவழ்ந்த எல்லாம்.

---

1. We may therefore take that Simhavarman the father of Simhavishnu and Bhimavarman was the person denoted in the above accounts as Aiyadigal Kadavarkon—Transactions of the Archaealogical Society of S. I., 1958—59, pp. 59—60.

(7) கோவும் பொறியும் மாற்றி, நிலம் 'அமண் சேர்க்கை' என்று பெயரைத் தந்து ஊராக்கப்பட்டது.

'கோவும் பொறியும் மாற்றி' என்பதற்கு அரசனிடமிருந்தும் அவன் ஆட்சியிலிருந்தும் ஊர் விலக்கப் பட்டது என்பது பொருள்; தேவதான — பிரம தேச கிராமங்கள் தனித்து இயங்கினாற்போல பள்ளிச் சந்த கிராமங்களும் தனித்து இயங்கின என்பது பொருள். இக் கிராமம் ஊராட்சிக்கோ, நாட்டு ஆட்சிக்கோ, அரசனுக்கோ வரி செலுத்த வேண்டியதில்லை.

(8) பரதத்தி — (தத்தம் செய்தது 'தத்தி'). முன்பு ஒருவன் செய்ததை அரசன் உறுதி செய்து கொடுத்தது என்பது பொருள்.

(சு தேசி; பர தேசி; சு தத்தி; பர தத்தி).

(9) குடிநீக்கி — குடிகளைக் காலி செய்தது. எனவே, ஊரை முதலில் விலைக்கு வாங்கின பின்பே, தானம் செய்வது மரபு என்பது இதனால் தெரிகிறது.

(10) வதி — வழி

(11) அமண் சேர்க்கை என்பது வந்தவாசி வட்டத்தில் வெண்குன்றத்தை அடுத்த அமணம்பாக்கம் ஆகும்.

(12) எல்லைகள் கூறுகையில் 'பாண்டியன் கயம்' குறிக்கப் பட்டுள்ளது. அப் பழங்காலத்தில் பாண்டியன் பெயர் தொண்டை நாட்டுக் கயத்திற்கு எப்படி வந்தது என்பது புரியவில்லை.

(13) தம் நாட்டு — தந் நாட்டு (தங்கள் நாட்டு) — படர்க்கை நாம் — நீம் — தாம்.

படாகை — உட்கிடை கிராமம் (உக்கடை)

அறை ஓலை — அரசன் ஆணையைக் கூறும் ஓலை

வடுகன் கேணி — அக் காலத்திலே தமிழகத்தில் வடுகன் குடியேறி விட்டான் என்பது இதனால் தெரிகிறது.

குற்றேத்தம், மாரத்தம் — இப்பெயர்கள் சுவை பயப்பவை.

திருமுகம் — அரசன் ஆணை.

பல்லாங்குழிக் கா—பல்லாங்குழிகள் அமைக்கப் பெற்ற சோலை. சோலையின் தரையில் பல்லாங்குழிகளை அமைத்து மகளிர் விளையாடியதால், அக் கா அப்பெயர் பெற்றது.

சிலப்பதிகாரத் தமிழ் உரைநடைக்குப் பின்பு இப்பள்ளன் கோவில் செப்பேட்டுத் தமிழ் உரைநடை சிறந்த முறையில் அமைந்திருத்தல் உணரத்தகும்.

கி.பி. ஏழாம் நூற்றாண்டு உரைநடை

இந்த நூற்றாண்டில் உரைநூல் தோன்றவில்லை. இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் பல்லவ மன்னனாக விளங்கிய முதலாம் பரமேசுவர வர்மனுடைய கூரம் செப்பேடுகளில் உள்ள தமிழ் உரைப் பகுதியே இந்த

நூற்ருண்டுத் தமிழ் உரைக்கு எடுத்துக் காட்டாகும். அதனில் ஒரு பகுதியைக் கீழே காண்க :

கூரம் பட்டயம்

"ஊற்றுக் காட்டுக் கோட்டத்து நீர்வேளூர் நாட்டுக் கூரமும் ஞெம்மணம் பாக்கமும்...... விச்சாவிந்தப் பல்லவரசன் விலைக்காணங் கைக் கொடுத்து... ஆயிரத்திருநூற்றுக் குழிப்படியால் விற்றுக்கொண்ட நிலம்.

"தளி எடுப்பதற்கு ஓடு சுடக்கொண்ட நிலம் தலைப்பாடகத்துள் சூளைமேட்டுப் பட்டியும் ஊருள் மணட்கம் எடுத்த நிலத்தோடுங்கூட அயிந்தேகால் பட்டி நிலமும் விற்றுக்கொண்டு விச்சாவிந்தப் பல்லவ பரமேசுவரகரம் எடுத்து ஏரி தோண்டி இத்தளி வழிபாடு செய்வார்க்கு இருக்கும் மனையும் மனைப்படப்பும் வகுத்து இதனுள் மிக்க நிலம் ஒழுக்கவிக்கு விளைநில மாகவும்

"இந் நிலத்துக்கு கீழ்பாலெல்லை முதுகாட்டு வழியின் மேற்கும் தென்பாலெல்லை ஊர்புகு வழி யின் வடக்கும் மேல்பாலெல்லை ஊர்புகு வழி நின்றும் வடக்கு நோக்கி நாட்டுக்காலுக்கே போன வழியின் கிழக்கும் வடபாலெல்லை நாட்டுக் காவின் தெற்கும் — இந் நான்கெல்லை அகத்தும் தளியும் ஏரியும் வழிபாடு செய் வார்க்கு மனையும் மனைபடப்பும் நீக்கி மிக்க நிலமும் சூளைமேட்டுப் பட்டியும் ஒழுக்கவிக்கு விளைநிலமாகக் கொடுத்து இத்தளிக்கு வேண்

டும் தேவகரும நவகருமஞ் செய்வதற்கும் இரு பதின்மர் சதுர்ப்பேதிகளுக்குப் பிரம தேயங் கொடுப்பதற்கும் மணவிற்கோட்டத்துப் பன் மாஞட்டுப் பரமேசுர மங்கலத்துள் அகப்பட்ட வளையில்...... பிரமதேயமாகக் கொடுத்து இவ் வூர் மனையும் மனைபடப்பும் ஊராட்சியும் செக் கும் தறியும் கூலமும் தரகும் கத்திக் கானமும் மற்றும் பொதுவினுலுள்ள உள்ளதெல்லாம் இப்பங்கு இருபத்தைந்தின் வழியாலே பங்கிட் டுண்பாராகவும்."

இக் கல்வெட்டில் சந்திப் பிழைகள் உள; சந்தி பிரிக்கப் பெருத தொடர்கள் உள. ஆயினும், இத னில் பிழையற்ற தமிழ் நடையைக் காணலாம். கோவி லைக் குறிக்க தளி என்னும் சொல் ஆளப்பட்டுள்ளது. தளி எடுத்து, ஏரி தோண்டி, வழிபாடு செய்தல், முது காடு, ஊராட்சி, கூலம் (தானியம்) என்னும் சொற் களும் தொடர்களும் கவனிக்கத் தகும். நான்கு வேதங் களில் வல்லவர் சதுர்வேதிகள் எனப் பெயர் பெற்றனர். அவர்களுக்கு வழங்கப் பெற்ற நிலம் பிரம்மதேயம் எனப் பெயர் பெற்றது.

கி.பி. எட்டாம் நூற்ருண்டு உரைநடை

இறையஞர் அகப்பொருள் உரை

இறையஞரகப் பொருளுரையில் உள்ள மேற்கோள் பாடல்கள் சில கி. பி. 710 முதல் 765 வரையில் ஆட்சி புரிந்த அரிகேசரி பராங்குச மாறவர்மன் என்ற பாண்டிய

னுடைய பெருமையை நன்கு புலப்படுத்துகின்றன. ஆதலால் இப் பாடல்களைத் தன்னகத்தே கொண்டுள்ள இவ்வுரை கி. பி. 8-ஆம் நூற்றுண்டில் செய்யப்பட்ட தென்று கருதுதல் பொருத்தயாகும். இவ்வுரை கல்வி கேள்விகளிற் சிறந்த பெரும்புலவர் ஒருவர் இயற்றியது என்பது, இவ்வுரைநடை, இதன்கண் உள்ள உவமைகள், வருணனைகள், தடைகளை எழுப்பி விடைகளைக் கூறுதல் முதலியவற்றுல் நன்கு விளங்குகிறது.

இவ்வுரையிற்றுன் மூன்று தமிழ்ச் சங்கங்கள் பற்றிய விவரங்கள் முதன் முதலாகக் குறிக்கப் பெற்றுள்ளன.

"குடத்துள் விளக்கும் தடத்துள் வாளும் போல", "விளக்காகிய சுடர் இருந்த இடமும் விளக்கெனப் பட்டதுபோல", "தாரகை நடுவண் தண்மதிபோல" என வரும் பலவகை உவமைகள் இந் நடையை அழகு செய்கின்றன. இவ்வுரையில் சிறிய முற்றுச் சொற்றொடர்களும் உண்டு; மிக நீண்ட சொற்றொடர்களும் உண்டு. இதன் சிறப்பு விரிக்கிற் பெருகும். இவ் வுரை நடைக்கு ஓர் எடுத்துக்காட்டினைக் கீழே காண்க:

"தலைமகற்கு அறிவுநிறை ஓர்ப்புக் கடைப்பிடி என்பன குணம். அறிவென்பது என்னோ வெனின்,

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"

(குறள் – 66 – 5)

என்றுராகலின், எப்பொருளாயினும் அப் பொருட்கண் நின்று அம் மெய்ம்மையை அறி

---

1. தி. வி. சதாசிவ பண்டாரத்தார், பாண்டியர் வரலாறு பக். 48.

வது. நிறையென்பது என்றோவெனின், காப்பன காத்து கடிவன கடிந்து ஒழுகும் ஒழுக்கம். ஓர்ப்பென்பது ஒரு பொருளை ஆராய்ந்து உணர்த லென்பது. கடைப்பிடி யென்பது, கொண்ட பொருண் மறவாமை. இந் நான்மையுந் தலைமகற்கு வேட்கையான் மீதூரப் பட்டுப் புனலால் மீதூரப்பட்ட புற்போலச் சாய்ந்து கிடப்பது.

"இனித் தலைமகட்கு நாண்மடம் அச்சம் பயிர்ப்பென்பன குணம். அவற்றுள், நாணென்பது பெண்டிர்க்கு இயல்பாகவே உளதொரு தன்மை. மடமென்பது கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை. அச்சமென்பது பெண்மையில் தான் காணப்படாததோர் பொருள் காண்டவிடத்து அஞ்சுவது. பயிர்ப்பென்பது பயிலாத பொருட்கண் அருவருத்து நிற்கும் நிலைமை. இந் நான்மையும் புனல் ஓடு வழியிற் புற் சாய்ந்தாற்போல வேட்கையான் மீதூரப் பட்டுச் சாய்ந்து கிடப்பது.

"வேட்கை யென்பது என்றோவெனின், ஒருவரொருவரை இன்றியமையாமை. அவ் வின்றியமையாது நின்ற வேட்கை எல்லா உணர்வினையும் நீக்கித் தானேயாய் நாண்வழிக் காசு போலவும் நீர்வழி மிதவை போலவும் பான்மை வழியோடி இருவருயிரையும் புணர் விக்கும் என்பது." (பக். 41-42)

இவ்வுரைப் பகுதியில் சொற்கள் அமைந்துள்ள முறையும், இப் பகுதியைப் படிக்கும்பொழுது உண்டாகும்

ஓசை ஒருமைப்பாடும் உணர்ந்து மகிழ்தற்குரியவை. இது மிகச் சிறந்த உரைநடையாகும். பழைய உரைப் பகுதிகளுள் இக்களவியலுரைக்கு இணையான உரை இல்லை என்று துணிந்து கூறலாம்.

கசாக்குடிப் பட்டய உரைநடை

பல்லவ மல்லன் என்ற சிறப்புப் பெயரைக்கொண்ட இரண்டாம் நந்திவர்மன் விடுத்த பட்டயங்களுள் இஃது ஒன்று. இவன் கி. பி. 8ஆம் நூற்றாண்டினன்; திருமங்கை ஆழ்வார் காலத்தவன்; சிறந்த வைணவன். வேதியர் ஒருவருக்குப் பிரமதேயமாக நிலம் கொடுத்த விவரத்தைக் கூற எழுந்த இப் பட்டயம், பள்ளன் கோயில் பட்டயத்தைப் போலவே பெரும்பகுதி வடமொழியிலும் இறுதிப் பகுதி தமிழிலும் அமைந்துள்ளது. இதன்கண் கூத்தர் ஆற்றுப்படையில் கூறப்பெற்ற சேயாறும் வெஃகா என்னும் ஆறும் இக் காலத்தில் தென்னேரி என்று வழங்கப் பெறும் திரையன் ஏரி என்னும் ஏரியின் பெயரும் குறிக்கப் பெற்றுள்ளன. செங்கற்பட்டை அடுத்துள்ள பாலூர் இப் பட்டயம் எழுதப்பெற்ற காலத்தில் பாலையூர் எனப் பெயர் பெற்றது என்பதும் இப் பட்டயத்தால் அறியலாம். இப் பட்டயப் பகுதியைக் கீழே காண்க :

> "செட்டி றெங்க ஸோமயாஜிக்குப் பிரமதேயமாகப் பணித்தருளி விடுத்த திருமுகம் கண்டு நாட்டோம் நாட்டிவியவன் சொல்லிய எல்லை போயி படாகை வலஞ் செய்து கல்லுங் கள்ளியும் நாட்டிக் கொடுத்ததற் கெல்லை. கீழ்பாலெல்லை பாலையூரெல்லையின் மேற்கும், தென்பாலெல்லை பாலையூரெல்லையின் வடக்கும், மேல்பா

லெல்லை மணற்பாக்கத் தெல்லை யின்னும் கொள்ளிப்பாக்கத் தெல்லையின் கிழக்கும், வடபா லெல்லை வெளிமா நல்லூரெல்லையின் தெற்கும், இந் நாற்பேரெல்லையுள்ளும் அகப்பட்ட நீர் நிலனும் புன்செயும், உடும்போடி ஆமை தவழ் தெல்லாம் சேயாற்றாலும் வெஃகாவினாலும் திரைய னேரியாலும் நீரியந்தவழி ஆற்றுக் காலும் வெள்ளக் காலும் தோண்டிக் கொண் டுண்ணப் பெறுவா ராகவும்."

கி. பி. ஒன்பதாம் நூற்றாண்டு உரைநடை

கி. பி. 9-ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் பல்ல வன் மூன்றாம் நந்திவர்மன் ஆட்சி புரிந்தான். அவன் "பைந்தமிழை ஆய்கின்ற நந்தி" என்றும், "புலவரைப் போற்றும் புரவலன்" என்றும் நந்திக் கலம்பகத்தில் பாராட்டப் பெற்றவன். அவன் காலத்தில் வாழ்ந்த பெருந்தேவனார் என்ற புலவர் பாரத வெண்பா என்னும் நூலைப் பாடியுள்ளார். அந்நூலின் இடையிலேயே உரை நடை காணப்படுகிறது. அவ்வுரை நடையில் வட மொழிச் சொற்கள் பலவாகத் தலைகாட்டுகின்றன. சான்றாக ஒரு பகுதியைக் கீழே காண்க:

பாரத வெண்பாவில் வரும் உரைநடை

'ஸ்ரீ வாசுதேவன் தூது' என்னும் பகுதியின் செய்யுள் 59க்கும் 60க்கும் இடையிலுள்ள உரைநடை:

"எ-து: ஸ்ரீ வாசுதேவன் எழுந்தருளிப் புகுதக் கண்டு ஸ்ரீ வீஷ்மன் துரோணாசாரிய

னுள்ளிட்ட சர்வ க்ஷத்திரியரும் நமஸ்காரம் பண்ண, சகுனியுங் கன்னனும் துச்சாசன னுள்ளிட்ட தம்பிமாருங் கண்டுங் காணுதாரைப் போல உதாசீனம் பண்ணி யிருந்தாராகக் கருதுவது, இவ்வகை யிருந்தாரையும் ஸர்வ ஞானங்களாற் கழல் பணிந்தாரையும் கண் களாலும் மனங்களாலும் நமஸ்காரம் பண்ணி யிருந்தாரையும் அடைவு குலையாமற் கண்ட ருளி, மற்று அவர் செய்தியெல்லாம் தன் திரு வுள்ளக் கருத்தே கொண்டு இனிதுரைத்திருந் தான் ஸ்ரீ வாசுதேவனென்றவாறு

இவ்வகை யிருந்தவிடத்து ஸ்ரீ வாசுதேவனை நோக்கி யாது சொன்னுன் துரியோதனன்:—"

இப் பகுதியில், சிலப்பதிகார உரையிலும் இறைய ஞர் களவியல் உரையிலும் காணப்பட்டாற் போலவே சந்தி பிரியாத சொற்றெடர்கள் அமைந்துள்ளன.

இந்த மூன்ரும் நந்திவர்மன் மிகச் சிறந்த சிவபக்தன். செங்கற்பட்டு மாவட்டத்துப் பொன்னேரி வட்டத்தில் கடற்கரை ஓரமாகத் திருக்காட்டுப் பள்ளி என்னும் சிற்றூர் ஒன்றுளது. அவ்வூரில் யக்ஞபட்டன் என்ற சிவப்பிராமணன் சிவன்கோவில் ஒன்றை எடுப்பித்தான். நந்திவர்மன் தனது ஆளும் ஆட்சியாண்டில், சோழ மகாராசன் குமாராங்குசன் வேண்டுகோள்படி அக் கோவிலுக்குச் சில வரிகளை ஒதுக்கினுன். அச் செய்தி யைக் குறிக்க எழுந்ததே வேலூர்ப் பாளையப் பட்டயம் என்பது. அதில் காணப்படும் தமிழ் உரைநடையைக் கொண்டு, அக்காலத்து நாட்டில் வழங்கிய பலவகை வரிகளின் பெயர்களைப்பற்றி நன்கறியலாம். சிறப்பாக

இந் நந்திவர்மன் காலத்துச் சோழ மன்னன் பெயரும் அறியப்படுகிறது. அவன் பெயர் குமாராங்குசன் என் பது. சங்க காலத்தில், சோழர் பெயர்கள் பெருநற்கிள்ளி இளங்கிள்ளி என்று தமிழ்ப் பெயர்களாகவே வழங்கின. பல்லவர் காலத்தில் சோழனுக்குக் குமாராங்குசன் என்ற வடமொழிப் பெயர் காணப்படுகிறது. காலப்போக்கில் சோழர் பெயர்களிலும் பாண்டியர் பெயர்களிலும் வட மொழிப் பெயர்கள் ஆட்சி பெற்றதைப் பல கல்வெட் டுகள் செப்புகின்றன. இப் பட்டயத்தில் பல வட மொழிச் சொற்கள் இடம் பெற்றிருத்தலைக் காணலாம். கீழ்வரும் பட்டயப் பகுதி காணத்தகும் :

வேலூர்ப் பாளையச் செப்பேடுகள்

"புழற்கோட்டத்து நாயறு நாட்டுத் திருக் காட்டுப் பள்ளிப் பஞ்சவரம் ஆயிரக்காடி. இது கோவிசைய நந்திவர்மற்கு யாண்டு ஆருவது சோழ மஹாராஜர் விண்ணத்தால் இறையூர் உடையான் நம்பன் ஆணத்தியாகத் திருக்காட் டுப் பள்ளிச் சன்னக்குறி யக்ஞ பட்டரெடுப் பித்த யக்ஞேஸ்வரத்து மஹாதேவர்க்கு நாட்டு நீங்கலாய் உட்புரவாய தேவர்தானமாகப் பெற்ற தற்குப் பெற்ற பரிஹாரம் நாடாட்சியும் ஊராட் சியும் புரவுபொன்னும் திரு முக்காணமும் வட்டி நாழியும் புதாழியும் தட்டுகாயமும் ஈழம் பூட்சி யும் இடைப் பூட்சியும் மன்றுபாடுந் தரகும் தறிக் கூறையும் கூலமும் நல்லாவும் நல்லெரு தும் நல்லாடும் நாடுகாவலும் ஊருபோக்கும் கல்லாணக் காணமும் குசக்காணமும் பாறைக் காணம் பட்டின சேரியும் மற்றுமிவ்வூ ரெல்லை உள்ளகப்பட்டது கோத்தொட்டுண்ணப் பால

தெல்லாம் எவ்வகைப் பட்டதும் கோக்கொள்ளப் பெருதே, இவ் யக்ஞேயக்ஞேஸ்வரத்து மஹா தேவரே கொள்ளப் பெற்றதற்கு பெற்ற வ்யவஸ்தை சுட்டோட்டால் மாடமாளிகை எடுக்கப் பெறுவதாகவும்; தமனகமும் இருவேலியும் செங்கழு நீரும் உள்ளியும் நடப் பெறுவதாகவும்; காவு தெங்கிடப் பெறுவதாகவும்; துரவு கிணறி ழிந்தப் பெறுவதாகவும்; பெருஞ்செக்கிடப் பெறுவதாகவும்; இவ்வூரெல்லை உள்ளிட்ட தெங்கும் மனையும் இவர்கள் மனமின்றி ஈடிவரேறப் பெருதாராகவும்; யக்ஞேஸ்வரத்து மஹாதேவர்க்குத் தேவதானமாய் ஸர்வபரிகாரமாக...சென்றது.''

(1) கோத்தெட்டு உண்ணப்பால வெல்லாம் எவ்வகைப் பட்டதும் கோக்கொள்ளப் பெருதே—

இச் சிற்றூரிலிருந்து அரசன் பெறத்தக்க வரிகள் யாவும் இனி அவன் பெருன்; கோவிலைச் சேரும் என்பது கருத்து.

(2) இதில் உள்ள பலவகை வரிகளின் பெயர்கள், பல்லவ அரசின் வருமானப் பெருக்கத்தை உணர்த்துவன.

கி. பி. பத்தாம் நூற்ருண்டு
உரைநடை

யாப்பருங்கலவுரை

கி. பி. பத்தாம் நூற்ருண்டில் தமிழகத்தில் பல்லவர் செல்வாக்கு ஒடுங்கிச் சோழப் பேரரசு அமைந்தது;

சைவ வைணவ கோவில்கள் வளம்பெறத் தொடங்கின. தமிழ்க் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் மிகுதியாக வெளிப்பட்டன. அக் காலத்தில் சமண முனிவர்கள் சூளாமணி, சிந்தாமணி முதலிய செய்யுள் நூல்களையும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்னும் யாப்பிலக்கண நூல்களையும் இயற்றினர்.[1] இவ் விலக்கண நூல்களின் உரையும் அக் காலத்ததே.[2]

இந் நூல் உரையில், அக்காலத்தில் சிறப்புற்று விளங்கிய பல யாப்பிலக்கண நூல்களின் பெயர்களும் செய்யுள் நூல்களின் பெயர்களும் புதுவகைச் செய்யுட்களின் பெயர்களும் பல்லவ மன்னனைப் பற்றிய தனிப் பாடல்களும் ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன. மயேச்சுரர், அவிநயர், காக்கைபாடினியார், நக்கீரர் முதலிய நல்லிசைப் புலவர் பலர் யாப்பிலக்கண நூல்களைச் செய்தனர். என்று இவ்வுரை கூறுகின்றது. சந்தம், தாண்டம், குரு, லகு, கோமுத்திரை, சந்தச் செய்யுட்களின் வகைகள், பவமத்திமம், பிபீலிகா, மத்திமம், விருத்தம் என்பன புதியவகைச் செய்யுட்களின் பெயர்களாகும்.

> "......இவற்றையெல்லாம் சரணுச்சிரையமும், செயதேவமும், மிச்சாகிருதியும், பிங்கலமும், மாபிங்கலமும், இரணமாமஞ்சுடையும், சந்திர சோழச்சந்தமும், குணகாங்கி என்னும் கருநாடகச் சந்தமும், வாஞ்சியார் செய்த வடுகச் சந்தமும் ஆகியவற்றுள்ளும், மாபுராணம்

---

1. S. Vaiyapuri Pillai, History of Tamil language and literature, p. 165.
2. யாப்பருங்கலம், பவானந்தர் பதிப்பு, (1929), முன்னுரை. பக். 3.

முதலாகிய தமிழ் நூலுள்ளும் தகுதியுடையார் வாய்க் கேட்டுணர்க. இவையெல்லாம் விகற்பித் தீண்டுரைப்பிற் பெருகும்.

> ''ஒரு சார் வடநூல் வழித் தமிழாசிரியர் 'குருவும் இலகுவும் புணர்ந்து முற்றவரினும், முற்றக்குருவே யாயும், முற்ற இலகுவேயாயும் வரினும் சமானம் என்பதாம்; இலகுவுங் குருவும் புணர்ந்து முறைவரிற் பிரமாணம் என்பதாம்; இரண்டு குருவும் இரண்டு லகுவுமாய் முறையானேவரினும், இரண்டு லகுவும் இரண்டு குருவுமாய் முறையானேவரினும் விதானம் என்பதாம்' '' என்பர்.

இந்த யாப்பிலக்கண நூல் செய்யப்பெற்ற காலத்தில் வடமொழி யாப்பும் தமிழிற் புகுந்துவிட்டது என்பதும், வடுகச் சந்தமும் கருநாடகச் சந்தமும் தமிழகத்தில் வாழ்ந்தன என்பதும், வடமொழி நல்ல செல்வாக்குப் பெற்றுவிட்டது என்பதும் இவ்வுரையால் இனிது புலனாகும்.

இனி இவ்வுரையின் வேறொரு பகுதியைக் கீழே காண்க:

> ''காக்கைபாடினியாரும், பாட்டியலுடையாரும், யாப்பியலுடையாரும் முதலாகியவொரு சாராசிரியர் இவற்றையும் இனத்தின் பாற்படுத்தி வழங்குவர். தொல்காப்பியனார் முதலாகிய வொருசாராசிரியர் இவற்றையும் மேற்கூறப் பட்ட பாவினங்களையும் கொச்சகக் கலிப்பாற் படுத்தி வழங்குவர் எனக் கொள்க. இனியொரு சார் வடநூல் வழித் தமிழாசிரியர், 'ஒரு புடை

யொப்புமை நோக்கி இனமெனப்படா; மூவகைப்பட்ட விருத்தங்களுள்ளுஞ் சந்தத் தாண்டகங்களுள்ளுமே பட்டடங்களாகும்' என்பர். இந்நூலுடையர் காக்கைபாடினியார் முதலாகிய வொருசாராசிரியர் மதம்பற்றி யெடுத்தோதி இவையும் உடன்படாரெனக் கொள்க.''

யாப்பிலக்கண நெறியில் மூவகைப்பட்ட புலவர் கூட்டங்கள் இருந்தன என்பது, தொல்காப்பியர் முதலிய ஒருசார் ஆசிரியர், காக்கைபாடினியார் முதலிய ஒருசார் ஆசிரியர், வடநூல் வழித் தமிழாசிரியர்—என்னும் தொடர்களால் நன்கறியலாம்.

கல்வெட்டு உரை

கி. பி. 985-இல் முதல் இராசராசன் அரசு கட்டில் ஏறினன், அவன் முப்பது ஆண்டுகள் சோழ மன்னனாய் விளங்கினன். அப்பெருமகன் தென்னிந்தியா முழுமையையும் தன் ஆட்சிக்கு உட்படுத்தினன்; இலங்கை முதலிய தீவுகளை வென்றான், அவன் பெற்ற வெற்றிகள் எல்லாம் காலமுறைப்படி ஒன்றன்பின் ஒன்றாக அவன் கல்வெட்டுகளில் குறிக்கப் பெற்றன. இங்ஙனம் காலமுறைப்படி இச் செய்திகளைக் கூறிய முதல் மன்னன் இவனேயாவான். இவனைப் பின்பற்றி இவன் மரபினர் இம் முறையைக் கையாண்டனர். இதனால் சோழர் வரலாறு எழுதுவது எளிதாயிற்று.

இப் பெருமகனது (கி. பி. 985—1014) பத்தாம் ஆட்சி ஆண்டுக் (கி. பி. 1004) கல்வெட்டு ஒன்று கீழே தரப்பட்டுள்ளது. அது திருப்புறம்பியம் சிவன் கோவில் கல்வெட்டாகும். படிப்பு மிகுதி இல்லாத கல்வெட்டுத் தச்சன் பொறித்ததால் அக் கல்வெட்டில்

எழுத்துப் பிழைகளும் சந்திப் பிழைகளும் மிகுந்துள்ளன. ஆயினும் தமிழ்நடை நன்கு அமைந்துள்ளது.

"ஸ்வஸ்திஸ்ரீ திருமகள்போலப் பெருநிலச் செல்வியும் தனக்கேயுரிமை பூண்டமை மனக் கொளக் காந்தளூர்ச்சாலைக் கலமறுத்தருளி கங்கைபாடியும் நுளம்பப்பாடியும் தடிகைப் பாடியும் குடமலைநாடும் கொல்லமுங்கலிங்கமும் திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்டதன் னெழில்வளரூழியில் யெல்லா யாண்டுந் தொழு தகை விளங்கும் யாண்டே செழியரைத்தேசு கொள்கோ இராஜகேசரி வம்மற்கு யாண்டு பத்தாவது வடகரை அண்டாட்டுக் கூற்றத்து திருப்புறம்பியத் தாடியாளுகிற கூத்த பெருமா ளுடைய நம்பிராட்டியார் திருப்பள்ளிக் கட்டி லுக்கு இவ்வூர் வளஞ்சியர் வைத்த திருநொந்தா விளக்கு இவைபற்றுக்கு பழைய வானவந் மாதேவி நிலம் வானவன் மாதேவி நதிக்கு கிழக்கு ராஜேந்திரி வாய்க்காலுக்கு மேற்கு நின்று சம்மதித்து கையோலை செய்து கொடுத் தோம் தேவகன்மிகளேம். இவை கோயில் கணக்கு புறம்பியம் உடையான் பிரளயன் புறம்பியன் எழுத்து. இது மஹேசுர சாட்சி.

—(தமிழ்ப்பொழில், 1925—26, பக். 191)

பதினோராம் நூற்றாண்டு உரைநடை.

வீரசோழியம் உரை

சோழப் பேரரசனான வீர ராசேந்திரன் (கி. பி. 1063—1069) பெயரைத் தாங்கியுள்ள "வீரசோழி

யம்'' என்னும் இலக்கண நூல் புத்தமித்திரர் என்ற புத்த சமயப் புலவரால் இயற்றப்பெற்றது. இது ஐந்திலக்கணங்களையும் கொண்ட நூல். தொல்காப்பியர்க்குப் பின்பு சொற்களில் அமைந்த சந்திகளை உற்று நோக்கிய இப்புலவர் அவற்றுக்கெனப் புதிய விதிகளை இந் நூலில் கூறியுள்ளார்.

''இந்நூலின் ழகரமெய்யானது ளகர மெய்போல வல்லெழுத்து வரின் டகர மெய்யாகவும் மெல்லெழுத்து வரின் ணகர மெய்யாகவும் திரிதற்கும், குறில் செறியாத ழகரமெய், குறில் செறியாத ளகரமெய்போலத் தகர நகரங்கள் வரின் கெடுதற்கும், டகரமெய்யின் முன்வரும் நகர தகரங்கள், ளகர மெய்யின் முன்திரிதல்போல முறையே ணகரமாகவும் டகரமாவுந் திரிதற்கும் விதி கூறியது இந்நூற்குத் தனிச் சிறப்பாகும்; இவற்றிற்கு விதிகள் புணர்ச்சி விதிகள் இந்நூலிற் காணப்படுகின்றன. அவற்றுள் ஒன்று, 'இ, ஈ, ஐ என்னும் உயிர்களுக்கு முன் நகரம் ஞகரமாகத் திரியும்,' என்பது. இதனை இந்நூலின் பதினைந்தாம் செய்யுளிற் காண்க.''[1]

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்து இலக்கணங்களையும் ஒன்றாகக் கூறும் இலக்கண நூல்கள் பதினோராம் நூற்றாண்டுக்கு முன்பு இருந்தனவோ, என்னவோ நமக்குத் தெரியவில்லை. இன்றுள்ள இலக்கண நூல்களுள் ஐந்திலக்கணங்களையும் முறையாகக் கூறும் நூல் இதுவேயாகும். இந்நூலிலுள்ள சொல்லதிகாரம் பெரிதும் வடமொழித் தொடர்புடையது என்பது கவனிக்கத் தக்கதாகும். அலங்காரம் என்னும் அணியிலக்கணப் பகுதி, கி. பி. 8-ஆம் நூற்றாண்டின்

---

1. பவானந்தர் பதிப்பு, முகவுரை.

முற்பகுதியில் வாழ்ந்த தண்டி என்ற வடமொழிப் புலவர் செய்த காவியாதர்ஸம் என்னும் வடமொழி இலக்கணத்தைப் பின்பற்றிச் சொல்லப்பட்டது என்று இவ்வாசிரியரே கூறுவதால், வடமொழி இலக்கணத்தின் செல்வாக்குத் தமிழகத்தில் இருந்த நிலையினை நன்கு துணியலாம்.

இந்நூலுக்கு உரை வரைந்தவர் பெருந்தேவனார் என்பவர். இவர் இருமொழிப் புலமையும் வாய்ந்தவர் என்பது இவரது உரையால் நன்கு புலனாகின்றது. இவரும் இந்நூற்றாண்டைச் சேர்ந்தவரே என்று ஆராய்ச்சியாளர் கருதுகின்றனர். ஆதலால் இவரது உரை இந் நூற்றாண்டு உரைநடைக்கு ஓர் எடுத்துக்காட்டாகும். அதனைக் கீழே காணலாம் :

> "தச்ச நூலில் இப்படிப்பட்ட மனிதனை எடுக்கிற் குடி புகல் இன்ன நன்மை தரும் இன்ன தீமை தரும் என்று சொல்லும் என்பது. மற்றும் இப்படிப்பட்ட யானை, குதிரை, ஆயுதம் உடையானுக்குப் பொல்லாங்கைத் தரும், நன்மையைத் தரும் என்று நூலுண்மையான் என்பது. ஆகிற் பகைவராய் உள்ளாரைச் சாவவுங் கெடவும் பாடல் ஆகாதோவெனின், அற்றன்று. பாடினகவி பாட்டுண்டான் கொள்ளின் அல்லது பயன் கொடாது என்பது, என் போலவோ எனின், குதிரை இலக்கண மறிவான் குதிரை கொள்ளுமிடத்து இக் குதிரை கொள்ளில், எனக்குப் பொல்லாதென்று தவிரும், மற்றும் இவ்வியானை கொள்ளிற் பொல்லாது; இவ்வீட்டில் இருக்கிற் பொல்லாது

என்னும் இலக்கணம் அறியான் பயன் கொள்ளான். பாட்டுண்பானும் இலக்கணந்தான் அறிதலின்றேற் பிறரையிட்டாராய்தல் செய்து கைக் கொள்ளும். அறியாதும் ஆராயாதுங் கொள்ளின், பயன் கொடா தென்பது அற்றன்று; ஆராயாது கைக் கொண்டாருஞ் சாவவுங் கெடவும் பழையோர் பாடினுரெனின், அது பாட்டின் பயனுல் வந்ததன்று அவர்கள் சொற் பழுதாகாமையில் எனக் கொள்க''

சேரமாதேவி—கல்வெட்டு

சடையவர்மன் சுந்தர சோழ பாண்டியன் காலம் (கி. பி. 1040)

''எங்களூர் நிலமாய் உடையார் ஸ்ரீசுந்தர சோழ பாண்டிய தேவர் திருவாய் மொழிஞ் சருள முள்ளி நாட்டு நிகரிலி சோழச் சருப்பேதி மங்கலத்து ஸ்ரீகயிலாய முடையாற்குத் தேவ தான இறையிலியாக சிவபாத சேகர நல்லூ ரென்னும் திருநாமத்தால் வரியிலிட்டு நாங்கள் பயிரேற்றி இறையிறுக்க மாட்டாமையில் எங்க ளால் பயிரேற்றவும் இறையிறுக்கவும் (ஒ) உண்ணாது இந்நிலம் நாங்கள் வேண்டா மென்று அதிகாரிகள் நாளுந்து உடையார் சன்னதியிலே நாங்கள் இந்நிலம் விட்டமையில் இந்நிலம் இத்தேவகன்மிகள் தாங்களே குடி காத்துக் குடுத்துப் பயிரேற்று விச்சுக் கொள்ளப் பெறுவாராகவும். இந்நிலம் கொண்டு பயி ரேற்றி இறையிறுக்குங் குடிகளை நாங்களே

மேலைக் காலங்களில் இந் நிலஞ்சுட்டித் துடர்வோமாகிலும், இந்நிலம் எங்களிதென்று அன்று...கொள்வோமாகிலும், உழுவாரை உழாமே விக்கினம் பண்ணுவோமாகினும், பண்ணுவிப் போமாகிலும், மானவீரப் பராந்தகன் மறுத்தார் படுந்தண்டம் படுவதாக ஒட்டி மானவீரப் பராந்தகங்கடைச் செறித்துக் குடுத்தோ மனைவோம் உள்ளிட்ட ஊரோம்.''

இதில் கொச்சைச் சொற்கள் இருப்பினும். அனைவோம்', 'ஊரோம்' என்னும் தன்மைப் பன்மை வினைமுற்றுக்கள் பிழையாமல் ஆளப் பெற்றிருத்தல் கவனிக்கத்தகும்.

பன்னிரண்டாம் நூற்றாண்டு உரைநடை

தமிழ் உரை, கி. பி. 8, 9, 10, 11 ஆகிய நான்கு நூற்றாண்டுகளிலும் நூல்கள் வாயிலாகவும் செப்புப் பட்டயங்கள், கல்வெட்டுகள் வாயிலாகவும் வளர்ச்சி பெற்றதை முன்பு கண்டோம். அவ்வளர்ச்சி 11 அல்லது 12-ஆம் நூற்றாண்டு முதல் 15 அல்லது 16-ஆம் நூற்றாண்டு முடியத் தொடர்ந்து செல்கின்றதென்று கூறலாம். தமிழ் உரை இந்த நூற்றாண்டுகளில் இலக்கண இலக்கிய உரையாசிரியர் பலரால் உயர்ந்த முறையில் வளர்ச்சி பெறலாயிற்று. நம்மாழ்வார் இயற்றிய திருவாய் மொழிக்கு 'ஆறாயிரப்படி', 'ஒன்பதாயிரப்படி', 'பன்னீராயிரப்படி' போன்ற உரை நூல்கள் சிலவும் இந்த நூற்றாண்டில் தோன்றின என்று கூறலாம். அவ்வுரைகளைச் செய்த வைணவ அறிஞர்கள் வடமொழிப் புலமையும் மிக்கவர்கள்; ஆதலால் தங்கள் தமிழ் உரையில் வட

மொழிச் சொற்களையும் தொடர்களையும் மிகுதியாகக் கலந்து எழுதினுர்கள். ஆதலால் இந்நடை மணிப் பிரவாள (முத்தும் பவளமும் கோத்த) நடை எனப் பெயர் பெற்றது. இங்ஙனம் உரை எழுதும் முறை அடுத்த நூற்ருண்டிலும் பின்பற்றப்பட்டது.

சிறப்புப் பாயிரம்

பாயிரத்தின் தேவையை இளம்பூரணர் வற்புறுத்தும் முறையைக் கீழே காண்க.

> ''எந்நூல் உரைப்பினும் அந்நூற்குப் பாயிரம் உரைத்து உரைக்க வென்பது மரபு. என்னை? ''ஆயிர முகத்தா னகன்ற தாயினும், பாயிரமில்லது பனுவ லன்றே'' என்பவாகலின். பாயிரமென்பது புறவுரை. அதுநூற்குப் புறவுரையேல் அதுகேட்டு என்னை பயனெனின், கற்றுவல்ல கணவற்குக் கற்புடையாளி போல இன்றியமையாச் சிறப்பிற்ருயும், திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம்போல அலங்காரமாதற் சிறப்பிற்ருயும் வருதலாலும், பாயிரம் கேளாதே நூல் கேட்குமே யெனில், குறிச்சிபுக்க மான்போல மாணுக்கன் இடர்ப்படுமாகலாலும், பாயிரங் கேட்டல் பயனுடைத்தாயிற்று. அப்பாயிரம் பொதுவும் சிறப்பும் என இருவகைத்து. எல்லா நூன்முகத்தும் பொதுவாக உரைக்கப் படுதலிற் பொதுவெனப் பட்டது. ''ஈவோன்றன்மை'' முதலிய நூலுட் சொல்லும் பொருளல்லாத புறப் பொருளைக் கூறும் பொதுப்பாயிரம் போலாது,

நூலகத்தெல்லாம் பயத்தன் மாத்திரையேயன்றி அந்நூலிற் சொல்லப்படுகின்ற பொருள் முதலிய உணர்த்தலின், அணியிழை மகளிர்க்கு அவ் வணியிற் சிறந்த ஆடைபோல நூற்குச் சிறத்த லாற் சிறப்பெனப் பட்டது.''

இவ்வுரையாசிரியர் இந்த ஒரே பத்தியில் நான்கு உவமைகளை அமைத்து உவமேயப் பொருள்களை விளக்கி யிருத்தல் படித்து இன்புறத்தக்கது. இவரது உரை நடை சொல்லாலும் பொருளாலும் சிறந்து விளங்கு வதைக் காண்மின்.

குலோத்துங்கன் கல்வெட்டு (கி. பி. 1184)

கீழ்வரும் கல்வெட்டு சோழன் மூன்றும் குலோத் துங்கன் காலத்தது; கி. பி. 1184-இல் வெட்டப்பெற்றது. இதில் ஏறத்தாழ நாற்பது வரிகள் ஒரே முற்றுச் சொற் றொடராக அமைந்துள்ளது. சொற் பிழைகள் பல வாகும். இதன்கண் இருபத்து மூன்று வட சொற்கள் உள்ளன. ஆயினும் இவ்வுரைநடை உயர்ந்து காணப் படுகின்றது.

''ஸ்வஸ்திஸ்ரீ புகழ் மாது விளங்க ஜயமாது விரும்ப நிலமகள் வளர மலர்மகள் புணர உரிமை யிற் சிறந்த மணிமுடி சூடித் தென்னவர் நிலை கெட மீனவர் குலதர விக்கலர் சிங்களர் மேல் கடல் பாயத் திக்கனைத் துந்தன் சக்கர நடத்தி வீர ஸிங்காஸநத்து புவன முழுதுடையா ளொடும் வீற்றிருந்தருளிய கோவிராஜ கேசரி

பந்மரான உடையார் ஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது, நாள் இருநூற்றுத் தொண்ணூறு, அதிகாரிகள் ராஜேந்தர சோழ வளநாட்டுப் பனையூர் நாட்டுப் பொய்கை நாட்டு பெரிய பாக்கத்துக் குளமுழார் ஏறன் கூத்தனு ரான ராஜ ராஜ மூவேந்த வேளார் ஜயங் கொண்ட சோழ மண்டலத்துப் புழல் நாட்டு திருவொற்றியூருடையார் கோயிலில் ராஜராஜன் மண்டபத்துக் கோயிற்கருமம் ஆராயாவிருந்து, இத்தேவர் தேவதானமான ஊர்கள் கணக்கு கேட்டுப் புழற் கோட்டத்துப் புழல்நாட்டு மணிக்கங்கைப் பாகுதேவர் கணக்கின்படி முன்பு நிமந்தஞ் செய்தபடி பொன் பன்னிரு கழஞ்சின்மேல் ஏற்றம் இறுத்து, வருகிற பொன்னிரு கழஞ்சேய் ஏழு மஞ்சாடியினுல் பொன் கழஞ்சுக்கு காசு மூன்றே அறுமாவாக காசு நாற்பதும், இந்நாட்டுத் திருவொற்றியூர் நிலத்து யாண்டு ஏழாவது முதலேறின ராஜ ராஜப் பெருந்தெருவில் சாலியர் யாண்டு ஏழாவது முதல் இறுக்க நிச்சயித்த காசு அறு பதும், உடையார் கோயிலில் காலளப்பார் கால ளவு. பாட்டத்து யாண்டு ஏழாவது வரையும் தேவர் பண்டாரத்து வைத்து வாராமையால், காலளவு பாட்டக்கு யாண்டேழாவது முதல் வைக்க நிச்சயித்த காசு இருபத்து அஞ்சும் ஆக காசு நூற்றிருபத்தைஞ்சு, உடையார் திரு வொற்றியூர் உடையார் வீரராசேந்திரன் திருப் பள்ளி எழுச்சிக்கு வேண்டும் நிமந்தங்களுக்கு நிபந்தஞ் செய்து கொடுக்க வென்று அதிகாரி கள் இராஜராஜ மூவேந்த வேளார் ஏவப் புரவு

வரித் திணைக்களத்துக் கணக்கு ஊற்றுக் காட்டுக் கோட்டத்துப் பாலையூர் நாட்டு இராஜேந்திர சோழ நல்லூரி பாலையூர் கிழான் கம்பன் கவியை யனும் ஸ்ரீகாரி சோழ மண்டலத்து க்ஷத்திரிய சிகாமணி வளநாட்டுத் திருநறையூர் நாட்டுக் கொற்றமங்கலத்து கொற்றமங்கல முடையான் சீராளன் கண்டராச்சனை இருமடி சோழ திரு நறையூர் நாட்டு விழுப்பரையனும், மட முடைய சதுராந்ந பண்டிதரும் கணக்கு திரு வொற்றியூர் உடையான் நாராயணசானும் இருந்து நிபந்தஞ் செய்தபடி—

—S. I. I. 5. 1353

கி. பி. பதின்மூன்றும் ஆம் நூற்றாண்டு

உரைநடை

பரிமேலழகர் உரை

இந்த நூற்றாண்டின் பிற்பகுதியைச் சேர்ந்தவர் பரி மேலழகர் என்பவர்[1] இவர் வடநூற் கடலையும், தமிழ் நூற் கடலையும் நிலை கண்டு உணர்ந்தவர். திருக்குற ளுக்கு இவர் எழுதியுள்ள உரையும் விளக்கப் பகுதி களும் இறவாத புகழுடையவை. அவை இவரது இரு மொழிப் புலமைக்குச் சான்றாய் விளங்குபவை. ஒவ் வோர் அதிகாரத் தலைப்பை இவர் விளக்கியிருத்தலும், அவற்றின் முறை வைப்பைப் பற்றி விளக்கியிருத்தலும் இவரது தெளிந்த அறிவுக்குச் சான்றுகளாகும். ஆங் காங்குள்ள இலக்கிய மேற்கோள்களும், இலக்கணக்

---

1. திரு. மு. இராகவையங்கார், சாசனத் தமிழ்க் கவி சரிதம், பக். 125.

குறிப்புகளும், சொற்கள் மூன்று வகைப்படுதல், அவற்றின் தன்மை முதலியன இவரது பெரும் புலமைக்குச் சிறந்த சான்றாகும். இவர் பரிபாடலுக்கும் உரை வரைந்துள்ளார். அவ்வுரை நடை இனிமையாக உள்ளது. இவ்விருவகை உரை நடைகளுள், திருக்குறளில் காணப்படும் உரை நடையே சொல்லழகும், பொருளழகும் நிரம்பியது. இங்கு ஓர் எடுத்துக் காட்டைக் காணலாம்;

கல்வி

"அஃதாவது, அவ்வரசன் தான் கற்றற்குரிய நூல்களைக் கற்றல். அவையாவன— அற நூலும், நீதிநூலும், யானை, குதிரை, தேர், படைக்கலமென்றிவற்றினூல்களும் முதலாயின. அரசன் அறிவுடையனாயகால் தன்னுயிர்க்கேயன்றி மன்னுயிர்க்கும் பயன்படுதனோக்கி, இஃதரசியலுள் வைக்கப்பட்டதாயினும், யாவர்க்கும் உறுதி பயத்தற் சிறப்புடைமையிற் பொதுப் படக் கூறுகின்றார். மேல் 'தூங்காமை கல்வி' எனத் தோற்றுவாய் செய்த மாட்சியை விரித்துக் கூறுகின்றமையின், இஃதிறை மாட்சியின் பின் வைக்கப்பட்டது."

செங்கோன்மை

"கொடியவரென்றது தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கருவியிற் கொல்வார், கள்வர், ஆறலைப்பார், சூறை கொள்வார், பிறனில் விழைவாரென்றிவர் முதலாயினாரை. இவரை வட நூலார் ஆததாயிகளென்ப. இப்பெற்றியாரைக் கண்ணோடிக் கொல்லா வழிப் புற்களைக்கு அஞ்சா நின்ற பைங்கூழ் போன்று நலிவு பல

வெய்தி உலகு இடர்ப்படுதலின் கோறலும் அரசற்குச் சாதிதர்ம மென்பதாயிற்று.''

இவ்வுரையில் ஒரே வகையான சொற்களின் அமைதி காணப்படுகிறது. ஆயினும், சந்தி பிரிக்கப் பெருமல் பல சொற்கள் புணர்ச்சி பெற்றுச் செல்லுதல் படிப்பதற்கு இடர்ப்பாடு விளைக்கின்றது. ஆயினும், இஃது அக்கால உரைநடையின் அமைப்பாகும். உரையாசிரியர் அனைவர் உரைகளிலும் இவ்விடர்ப்பாடு அமைந்துள்ளது.

சேனாவரையர் உரை

தொல்காப்பியரது சொல்லதிகாரத்திற்கு உரை வரைந்த சேனாவரையரும் இந்நூற்றாண்டினரே ஆவர்.[1] இவரும் பரிமேலழகரைப் போலவே வடமொழியிலும் தமிழ் மொழியிலும் பெரும் புலமை வாய்ந்தவர் என்பது இவரது உரை விளக்கத்தால் தெரிகிறது. இவர் தமக்கு முற்பட்ட இளம்பூரணர் எழுதிய உரையைப் பல இடங்களில் மறுத்துள்ளார். இவரது உரைநடை மிடுக்குள்ளது. எடுத்துக் காட்டினைக் கீழே காண்க.

> ''நிறுத்த முறையானே இடைச் சொலுணர்த்திய வெடுத்துக் கொண்டார். அதனான், இவ்வோத்து இடையியலென்னும் பெயர்த்தாயிற்று. மொழிக்கு முன்னும் பின்னும் வருமாயினும் பெரும்பான்மையும் இடைவருதலின் இடைச் சொல்லாயிற்று.''

---

1. திரு. மு. இராகவையங்கார், சாஸனத் தமிழ்க்கவிசரிதம், பக். 1.

''நிறுத்த முறையானே உரிச்சொல்லு ணர்த்திய வெடுத்துக் கொண்டார்; அதனுன் இவ்வோத்து உரியியலென்னும் பெயர்த்தா யிற்று. தமக்கியல்பில்லா விடைச் சொற்போ லாது இசை குறிப்புப் பண்பென்னும் பொருட் குத் தாமேயுரியவாகலின், உரிச் சொல்லா யிற்று. பெரும்பான்மையுஞ் செய்யுட்குரியவாய் வருதலின் உரிச் சொல்லாயிற்றென்பாருமுளர்.''

''கிளவியாக்க முதலாக உரியியலிறுதி யாகக் கிடந்த ஓத்துக்களுள் உணர்த்துதற்கிட மின்மையான் உணர்த்தப்படாது எஞ்சி நின்ற சொல்லிலக்கண மெல்லாந் தொகுத்துணர்த் திய வெடுத்துக் கொண்டார். அதனுன் இவ் வோத்து எச்சவியலென்னும் பெயர்த்தா யிற்று.''

சந்திப் பிரிக்கப் பெருத சொற்ருெடர்கள் இவ்வுரை யில் மிகுதியாகும்.

ஈடு - முப்பத்தாருயிரப்படி
ஆசிரியர் — வடக்குத் திருவீதிப் பிள்ளை

மாறன் என்ற நம்மாழ்வார் ஏறத்தாழக் கி.பி. ஒன்ப தாம் நூற்ருண்டின் முற்பகுதியில் அருளிச் செய்த திரு வாய் மொழிப் பாடல்களுக்கு ஆருயிரப்படி முதலிய பல விருத்தியுரைகள் வெளிவந்தன. இறுதியில் வெளி வந்தது வடக்குத் திருவீதிப் பிள்ளை என்பவர் செய்த முப்பத்தாருயிரப் படி என்பது. வடமொழியில் சிறந்த

புலமை சார்ந்த இவ்வுரையாசிரியர்கள் தமிழில் உரை எழுதியபோது, வடமொழிச் சொற்கள் மிகுதியாகக் கலந்துவிட்டன. அதனுல் அவ்வுரைகள் தமிழ் மக்களால் படித்து உணரப் பெறவில்லை. இவ்வுரைகளின் கருத்துகள் சிதையாத முறையிலும், தமிழ் மக்கள் படிக்கத் தகு முறையிலும் இவற்றைப் புதிய முறையில் வெளிப் படுத்த வேண்டுமென்று சென்னைப் பல்கலைக் கழகத்தார் பெரும்புலவர் திரு. பு. ரா. புருஷோத்தம நாயடு அவர்களை இப்பணியில் ஈடுபடுத்தினர். அப் பெரியார் ஏறத்தாழப் பதினைந்தாண்டுகள் உழைத்துப் பாராட்டத்தகும் முறையில் மணிப்பிரவாள நடைப் பொருளைத் தமிழ் நடைப் பொருளாக ஆக்கியுள்ளார். அந்த அறிஞர்க்குத் தமிழ் மக்கள் நன்றி உரியதாகும். இது நிற்க. முப்பத்தாருயிரப் படியின் உரைநடையை அறிந்து கொள்ளக் கீழ் வரும் எடுத்துக்காட்டினைக் காண்க:

> ''கீழில் திருவாய் மொழியிலே நிரதிசய போகியனென்றுர்; இதில் அவனுடைய ஆர்ஜவகுணம் சொல்லுகிருர். ஸௌலப்யமாவதென்? ஸௌசீல்யமாவதென்? ஆர்ஜவமாவதென்? என்னின்: ஸௌலப்பமாவது, ஸ்ரீவைகுண்டம் தலவிருக்கையாக உடையவ்ன், அங்கு நின்றும் ஸம்ஸாரி சேதர் நின்ற இடத்தே வந்து அவதரித்து எளியனுகை. ஸௌசீல்யமாவது, இப்படி தாழவிட்டால், 'சிறியாரளவில் நம்மைத் தாழ விட்டோமே' என்று தன் திருவுள்ளத்திலு மன்றிக்கேயிருக்கை. இனி, ஆர்ஜவ குணமாவது, இப்படி பொருந்திலுல், நினைவும் சொல்லும் செயலும் ஒரு படிப்பட்டிராதே பல வகைப்பட்ட சேதநரோடு தான் பரிமாலுமிடத்

தில், அவர்கள் போன வழி தனக்கு வழியாம்படி தான் அவர்களுக்குச் செவ்வியனாய்ப் பரி மாறுகை 'குணவான்' என்று ஸௌசீல்ய குணத் தைச் சொல்லாதிற்கச் செய்தே, ''ருஜு'' என்று ஆர்ஜவகுணத்தைப் பிரிய அருளிச் செய்தாரிறே, 'இத் திருவாய் மொழிதான் ஸர் வேச் வரனுடைய ஐச்வர்யத்தைச் சொல்கிறது' என்பாருமுண்டு; 'கீழே, ''பாடியிளைப்பிலம்'' என்றார். 'அப்படியே பாடி அநுபவிக்கிறார்' என்பாரு முண்டு. 'ஆர்ஜவகுணம் சொல்லு கிறது என்று பட்டர் அருளிச் செய்யும்படி. பத்தர் முக்தர் நித்யர் என்று சேதநர்க்கு ஒரு த்ரைவித்ய முண்டிறே; த்ரிவித சேதநரோ டும் பரிமாறு மிடத்தில், அவர்கள் தன் நினை விலே வரும்படி பண்ணுகையன்றிக்கே, நீரேறு மேடுகளிலே விரகாலே நீரேற்றுவாரைப் போலே தன்னை அவர்களுக்கு ஈடாக அமைத் துப் பரிமாறும் என்னும் அவ்வழியாலே இவனு டைய ஆர்ஜவகுணம் சொல்லுகிறார்.''

—எட்டாந் திருவாய்மொழி—ஓடும்புள் : ப்ரவேசம். (பகவத் விஷயம்—1951, முதற்பத்து, பக். 93).

மூன்றும் மாறவர்மன் விக்கிரம பாண்டியனது ஆறும் ஆட்சியாண்டுக் கல்வெட்டு இந்த நூற்றாண்டுக் கல் வெட்டு நடைக்கு ஒரு காட்டாகத் தரப்பட்டுள்ளது. அதன் காலம் கி. பி. 1288. அக் கல்வெட்டில் நல்ல தமிழ்ச் சொற்கள் உள்ளன. 'கொடுத்த' என்பது 'குடுத்த' என்று பொறிக்கப் பெற்றுள்ளது. எழுத்துப்

பிழைகளும் உள்ளன; சந்திப் பிழைகளும் சில உள்ளன; கிரந்த எழுத்துக்கள் இரண்டு இடங்களில் உள்ளன.

மாறவர்மன் விக்கிரம பாண்டியன் கல்வெட்டு (கி. மு. 1288—1289)

"......ஜெயங்கொண்ட சோழ மண்டலத்து மாத்தூர் நாட்டுத் தனியூர் திருவக்கரை உடையார் திருவக்கரை ஆளுடைய நாயனார் கோயிற் தானத்தார்க்கு நம் பேரால் கட்டின விக்ரம பாண்டியன் சந்திக்கும் விக்ரமபாண்டியன் திரு நாளுக்கும் அமுதுபடி சாத்துப்படி உள்ளிட்டு வேண்டும் நித்த நிமந்தங்களுக்கும் திருநாமத் துக் காணி இறையிலியாகக் குடுத்த கன்றியப் பற்றில் ஏர்ப்பாக்கம் நாற்பால் எல்லைக்கும் உட் பட்டது அனைத்தும் ஆயவற்கும் உட்பட ஆரு வது சித்திரை மாதம் முதல் இறையிலி திரு நாமத்துக் காணியாகத் தந்தோம். இப்படிக்கு இவ்வோலை பிடிபாடாகக் கொண்டு கல்லிலுஞ் செம்பிலும் வெட்டிக் கொள்க.

இவை குணமங்கல முடையான் எழுத்து இவை வழுதியதரையன் எழுத்து இது ஸ்ரீமாஹேஸ்வர ரக்ஷை."

—188 of 19C4; S.I.I. 17. 202.

கி. பி. பதினான்காம் நூற்றாண்டு

உரைநடை

பேராசிரியர் உரைநடை

மூன்றாம் குலோத்துங்க சோழன் காலத்தில் (கி. பி. 1178—1218) குவலாளபுரத்தை (கோலாரை)ச் சீயகங்கன் என்பவன் ஆண்டு வந்தான். அவன் கி. பி. 1214-இல் காஞ்சி அருளாளப் பெருமாள் கோவிலில் ஒரு திருப்பணி செய்தான் என்று அக்கோவில் கல்வெட்டுக் கூறுகிறது.[1] அச்சீயகங்கன் காலத்திற்றான் பவணந்தி முனிவர் நன்னூலைச் செய்தார் என்று நன்னூல் சிறப்புப் பாயிரம் செப்புகின்றது. எனவே, பவணந்தியார் காலம் கி. பி. 13-ஆம் நூற்றாண்டின் முற்பகுதி என்னலாம்.

தொல்காப்பியம் பொருள் அதிகாரம் கடைசி நான்கு இயல்களுக்கு உரை வரைந்த பேராசிரியர், நன்னூல் சூத்திரத்தையும் சூத்திரக் கருத்தையும் தமது தொல்காப்பிய உரையில் எடுத்து ஆண்டுள்ளார். ஆதலின் இவர் பவணந்தி முனிவருக்குப் பிற்பட்டவர் என்பது தெளிவு. எனவே, இவர் காலம் ஏறத்தாழக் கி. பி. 14-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம்.

இவர் தெளிவாக உரை கூறுவதில் வல்லவர். பாண்டிய நாட்டின் தென்பகுதி கடலால் கொள்ளப்பட்டது என்பனபோன்ற சில செய்திகள் வரலாற்றுச் சிறப்புடையவை. இப்பொழுது கிடைக்காத பல நூல்கள் இவர் காலத்தில் இருந்தன என்பது இவரது உரையால்

1. A.R.E. 589 of 1919.

தெளிவாகின்றது. இவரது உரை படிக்கப் படிக்க இன்பம் பயப்பது. அதன் ஒரு பகுதியைக் காண்போம்.

பொருளதிகாரம்—செய்யுளியல்

"அல்லதூஉம், அங்ஙனமின்றி வருமாயின் அடிக்கெல்லாம் பொது வகையால் தளையுறுப் பெனப் படாது எழுத்தும் அசையும்போல யாண்டும் வருவன வெல்லாம் உறுப்பெனப் படுவன லென்றற்கு,

"இணைநூன் முடிபு தன்னூன் மேற்றே"

என்பதனாற் காக்கைபாடினியார் ஓதிய தளை யிலக்கணம் ஈண்டுங்கோடல் வேண்டுமெனின், அதுவே கருத்தாயின் அவர்க்கும் இவர் முடிவே பற்றித் தளை களையல் வேண்டும். அல் லதூஉம், இவர்க்கு இளையரான காக்கை பாடினி யார் தளைகொண்டில ரென்பது இதனாற் பெற் றும். தளை வேண்டினூர் பிற்காலத்து ஓராசிரிய ரென்பது. என்னை?

"வடக்குந் தெற்குங் குணக்குங் குடக்கும்
வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்
றின்நான் கெல்லை யகவயிற் கிடந்த
நூலதி னுண்மை வாலிதின் விரிப்பின்"

எனக்கூறி வடவேங்கடந் தென்குமரியெனப் பனம்பாரனுர் கூறியவாற்றனே எல்லை கொண் டார் காக்கைபாடினியார். ஒழிந்த காக்கை பாடினியத்து,

"வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்
தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்"
(தொல்—பொருள்—650)

எனத் தென்றிசையுங் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான். அவர் குமரியாறுள்ள காலத்தாரல்லரென்பதூஉங், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன் றென்பதூஉம் பெற்றும். பெறவே, அவர் இவரோடு ஒரு சாலை மாணாக்கரல்லரென்பது எல்லார்க்கும் உணரல் வேண்டுமென்பது."

அடியார்க்குநல்லார்

இவர் சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதியவர். இவரும் வடமொழியிலும் தென்மொழியிலும் புலமை நிரம்பியவர்; தம் காலத்திலிருந்தே இசை நூல்களையும், பரதசாத்திரம் போன்ற நடன நூல்களையும் நன்கு பயின்றவர் என்பது சிறப்பாக அரங்கேற்றுக் காதையாலும், கானல்வரிப் பகுதியாலும் நன்கு உணரலாம். இப்பொழுது இல்லாத பல நூல்கள் இவர் காலத்தில் இருந்தன என்பது இவரது உரையால் தெரிகின்றது. மரகதம் போன்ற ஒன்பான் மணிகளையும் நால்வகைப் பொன்னையும் பலவகை ஆடைகளையும் இவர் கூறும் திறத்தினை நோக்க, இவரது பல கலையறிவும் உலக நடைமுறை அறிவும் பிறவும் குன்றின்மீது இட்ட விளக்கென ஒளிர்கின்றன. நச்சினார்க்கினியரால் மறுக்கப்படுவனவற்றுள் சில இவருடைய கொள்கைகளாய் இருத்தலால் இவர் நச்சினார்க்கினியருக்கு முற்பட்டவர் என்பது அறியலாம். இவர் காலம் கி. பி. 13 அல்லது 14-ஆம் நூற்றுண்டு என்று சொல்லலாம்.

இவரது உரை படிப்பவர்க்குப் பெரு விருந்தாகும். இவரது உரை சிலப்பதிகாரம் முழுமைக்கும் கிடைக்கவில்லை யென்பது வருந்தற்குரிய செய்தியாகும். இவர்

ஆங்காங்கு எழுதியுள்ள விளக்கங்கள் படித்து இன்புறத் தக்கன. இவரது உரைநடை விரும்பிப் படிக்கத் தகுவது. சான்றாக ஒன்றைக் கீழே காண்க ;

"நெடியோன் குன்றமும் தொடியோள் நதியுமென்றது பௌவமுமென்றது என்னை யெனின், முதலூழியிறு திக்கண் தென்மதுரை யகத்துத் தலைச்சசங்கத்து அகத்தியனாரும் இறை யனாரும் குமரவேளும் முரஞ்சியூர் முடிநாக ராயரும் நிதியின் கிழவனும் என்றிவருள்ளிட்ட நாலாயிரத்து நானூற்று நாற்பத்தொன்பதின்மர் எண்ணிறந்த பரிபாடலும் முதுநாரையும் முது குருகும் களரியாவிரையும் உள்ளிட்டவற்றைப் புனைந்து தெரிந்து நாலாயிரத்து நானூற்று நாற்பதிற்றியாண்டு இரீயினர் காய்சின வழுதி முதற் கடுங்கோனீறாயுள்ளார் எண்பத்தொன் பதின்மர்; அவருட் கவியரங்கேறினர் எழுவர் பாண்டியருள் ஒருவன் சயமா கீர்த்தியனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்து இரீயினான். அக்காலத்து அவர் நாட்டுத் தென்பாலி முகத்திற்கு வடவெல்லை யாகிய பஃறுளியென்னுமாற்றிற்கும் குமரி யென்னுமாற்றிற்குமிடையே எழுநூற்றுக் காவத வாறும் இவற்றின் நீர் மலிவானென மலிந்த ஏழ் தெங்க நாடும் ஏழ் மதுரை நாடும் ஏழ் முன்பாலை நாடும் ஏழ் பின்பாலை நாடும் ஏழ் குன்ற நாடும் ஏழ்குண காரை நாடும் ஏழ் குறும்பனை நாடுமென்னும் இந்த நாற்பத்தொன் பது நாடும் குமரி கொல்ல முதலிய பன்மலை நாடும் காடும் நதியும் பதியும் தடநீர்க் குமரி

வடபெருங் கோட்டின் காறும் கடல் கொண் டொழிதலாற் குமரியாகிய பௌவமென்றுரென் றுணர்க. இ.ஃது என்னை பெறுமாறெனின், வடிவேலெறிந்த வான்பகை பொருது, ப.ஃறுளி யாற்றுடன் பன்மலை யடுக்கத்துக், 'குமரிக் கோடுங் கொடுங்கடல் கொள்ள" என்பத னுலும், கணக்காயனுர் மகனுர் நக்கீரனு ருரைத்த இறையனுர் பொருளுரையானும், உரையாசிரியராகிய இளம்பூரணவடிகள் முக வுரையானும், பிறவாற்ருனும் பெறுதும்."

(காதை 8, வரி 1—2 உரை)

நீலகேசி உரை

நீலகேசி என்பது சமண சமயத்தை உயர்த்திப் பேசும் தருக்க நூல். நீலகேசி என்னும் சமணப் பெண் மணி பௌத்தம், ஆசீவகம் முதலிய பல சமயவாதி களும் வாதம் செய்து சமணமே உயர்ந்தது என்று நிலை நாட்டியதாக இந்நூலின் போக்கு அமைந்துள்ளது. இந் நூலுக்குச் சமயதிவாகர வாமண முனிவர் என்பவர் உரை வரைந்துள்ளார். அவ்வுரை மிகச் சிறந்தது. அவர் காலம் கி. பி. 14-ஆம் நூற்ருண்டு.[1] இந்நூல் உரைக்கு ஒரு சான்றினைக் காண்போம் ;

"பயறு கும்மாயமாய்த் திரிந்தவாறு போல நீருமாவியாய்த் திரிந்தது. என்னை? ஒரு பாத்திரத்து நீர்வார்த்து ஒரு சீரையால் வாய்க் கட்டிக் கீழெரித்தால், சீரை அந்த வாவிப்பட்டு உகைவ தூரவ மச்சீரை மேலிட்டமா வெந்துவிட்

1. நீலகேசி, முன்னுரை, பக். 11.

டாவதுங் காண்கின்றிலையோ? பயறு கையறக் கெட்டுக் கும்மாய மாயதன் வழித் தோன்றிற் றுயி னீர் கையறக் கெட்டாலதன் விழியொன் றுந் தோன்று தொழிந்தது நின் பெருமையாலோ பேதாய், என்றவாறு.'' (பக். 164)

தொல்காப்பிய உரையாசிரியர்களைப் போலவே இவ் வுரையாசிரியர்களும் சந்தி பிரிக்காமல் சொற்றொடர்களை அமைத்துள்ளமை அக்காலத்து வழக்கமாகும்.

கம்பணவுடையார் கல்வெட்டு (கி.பி. 1372)

13-ஆம் நூற்றுண்டின் முற்பகுதியில் மைசூர் நாட்டை ஆண்டுவந்த ஹொய்சலர் செல்வாக்கும் பாண் டியர் செல்வாக்கும் சோழ நாட்டில் பரவின. சோழப் பேரரசு நிலை தளர்ந்தது. இத்துன்ப நிலையில் கி. பி. 1310-இல் வட இந்தியாவிலிருந்து மாலிக்காபூர் என்னும் முஸ்லிம் படைத்தலைவர் பெரும்படையுடன் தக்கணத்தின் மீது படையெடுத்தார்; தேவகிரியை ஆண்ட யாதவரை வென்றார்; ஓரங்கல்லை ஆண்ட காகதீயரை வென்றார்; துவரையை ஆண்ட ஒய்சலரை முறியடித்தார்; இறுதி யில் பாண்டிய நாட்டைக் கைப்பற்றினார். அவருக்குப் பின்பு ஐம்பது ஆண்டுகள் பாண்டிய நாட்டில் சுல் தான்கள் ஆட்சி நிலவியது. இந்து சமயத்தைக் காப்ப தற்காக அந்த நூற்றுண்டில் விசயநகர அரசு அமைக்கப் பெற்றது. முதலாம் புக்கர் மகனான கம்பணவுடையார் என்பவர் பெரும்படையுடன் சென்று சுல்தான்கள் ஆட்சியை ஒழித்து மதுரையைக் கைப்பற்றினார். அவர் காலத்துக் கல்வெட்டு கீழே தரப்பட்டுள்ளது.

"கம்பண உடையாற்குச் செல்லாநின்ற பரிதாபி வரிஷம் கந்நிநாயற்று அபரபக்ஷத்து தசமியும் புதன்கிழமையும் பெற்ற பூசத்து நாள் நாயனுர் தெய்வச்சிலைப் பெருமாள் பொன்பற்றி யில் திருமிழலை நாடன் திருமண்டபத்திலெ எழுந்தருளி இருந்து, இந்த நாட்டிலெ நமக்கு ஒரு ப்ராப்தி (பேறு) வெணும் என்று திருவுள்ள மாகையில், திருவர்த்த சாமச்சந்திக்கு திருப் பள்ளியறை யிலெழுந்துருளியிருந்தமுது செய் வித்துவிட்ட அளவுக்கு சந்திராதித்தவர் செல்ல கல்லிலும் செம்பிலும் வெட்டிக்கொள்ள, நாட்டு மரியாதி கடமை வினியோகம் தூரக்காசு உள்ள தும் மற்றுமுள்ளவை அடங்கலும் பெறநாட்டார் அதுளிச் செயல்படிக்கு — இவை நாட்டுக் கணக்கு உலகு தொழ நின்ருன் எழுத்து."

கி. பி. பதினைந்தாம் நூற்ருண்டு

உரைநடை

நச்சிஞர்க்கினியர்

நச்சிஞர்க்கினியர் மதுரையைச் சேர்ந்தவர்; பாரத் துவாச கோத்திரத்தினர். இவர் வடமொழியிலும் தென் மொழியிலும் புலமை மிக்கவர். இவரது உரை எழுத் ததிகாரத்திற்கும் சொல்லதிகாரத்திற்கும் பொருளதிகாரத் தின் முதல் ஐந்து இயல்களுக்கும் கிடைத்துள்ளது. இவர் தமது உரையில் இளம்பூரணர், சேஞவரையர், பேராசிரியர், பரிமேலழகர், ஆளவந்தபிள்ளை ஆசிரியர் ஆகிய உரையாசிரியர்களைக் குறிப்பிடுவதால் அவர்

களுக்குப் பிற்பட்டவராவர். இவரது காலம் ஏறத்தாழப் பதினைந்து அல்லது பதினாறும் நூற்றாண்டு என்று கூறலாம்.[1]

இவர் குறுந்தொகையில் சில பாக்களுக்கும், கலித் தொகைக்கும், பத்துப் பாட்டுக்கும், சீவக சிந்தாமணிக் கும் உரை எழுதியுள்ளார். இவரது உரை விளக்கம் இன்றேல் பல பகுதிகளுக்குத் தெளிவான உரை காண்பது அருமையாகும். இவரது உரைநடை மிக்க வளம் வாய்ந்தது. காட்டாக ஒன்றைக் கீழே காண்க :

> ''முல்லைக்குக் காரும் மாலையும் உரியவா தற்குக் காரணமென்னை யெனின், பிரிந்து மீளுந் தலைவன் றிறமெல்லாம் பிரிந்திருந்த கிழத்தி கூறுதலே முல்லைப் பொருளாயும், பிரிந்து போகின்றான் திறங்கூறுவனவெல்லாம் பாலையாகவும் வருதலின், அம்முல்லைப் பொரு ளாகிய மீட்சிக்குத் தலைவி இருத்தற்கும் உப காரப்படுவது கார்காலமாம்; என்னை? வினை வயிற் பிரிந்து மீள்வோன், விரை பரித்தேரூர்ந்து பாசறையினிற்று மாலைக் காலத்து ஊர்வயின் வருஉங் காலம் ஆவணியும் புரட்டாதியும் ஆத லின், அவை வெப்பமுந் தட்பமும் மிகாது இடை நிகர்த்தவாகி ஏவல் செய்துவரும் இளை யோர்க்கு நீரும் நிழலும் பயத்தலாலும், ஆர் பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலிற் களி சிறந்து, மாவும் புள்ளுந் துணையோ டின்புற்று விளையாடுவன கண்டு தலைவற்குந் தலைவிக்குங்

---

1. டாக்டர் மா. இராசமாணிக்கனார், தமிழ் மொழி இலக்கிய வரலாறு, பக். 104.

காமக்குறிப்பு மிகுதலாலு மென்பது. புல்லை மேய்ந்து கொல்லேற்றுேடே புனிற்றுக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவுந் தீங்குழ லிசைப்ப வும் பந்தர் முல்லை வநது மணங்கஞற்றவும் வரு கின்ற தலைவர்க்கும் இருந்த தலைவிக்குங் காமக் குறிப்புச் சிறத்தலின், அக் காலத்து மாலைப் பொழுதும் உரித்தாயிற்று.''

—(அகத்திணை இயல், நூற்பா 6 உரை)

அடுத்து, இந் நூற்றுண்டைச் சேர்ந்த வீரமல்லிகார்ச் சுனர் காலத்துக் கல்வெட்டு உரையைக் காண லாம். இக் கல்வெட்டில் வழக்கம்போல வட மொழிச் சொற்களும், கொச்சைச் சொற்கள் பலவும், எழுத்துப் பிழைகளும் சந்திப் பிழைகளும் இடம் பெற் றுள்ளன. ஆயினும், அக்காலப் பொதுமக்களின் தமிழ் உரைநடையை அறிய இக் கல்வெட்டு உதவுகிறது என்னலாம்.

திருவண்ணுமலைக் கல்வெட்டு

வீரமல்லிகார்ச்சுனர் காலம் (கி. பி. 1453)

''......செல்லா நின்ற பரிமுக வருஷம் ஆடி மாதம் 12உ ஸ்ரீ திருவண்ணுமலை.........டும் படை வீட்டில் இருக்கும் செட்டிகளில் கொடிஞ் சென்றி வணிகர் அழகப் பெருமாள் திருமேத் தளி உடையாரும் உண்ணுமலை நாச்சியார் அகரத்து மஹா ஜனங்களுக்கு கல்லுவெட்டி குடுத்தபடி — திருவண்ணுமலை சாளுவன் தோப்புக்கு மேற்கு, குடி இருக்கவிட்ட நாற்பாற்

கெல்லையும் வாண கோப்பாடி நாட்டு அத்திப் பட்டியும் பிரமநயினுர் பெரிய மடத்து முதலி யார் சறுவமான்னியமாக வைக்கையில், மடப் புறக் காணிக்கை இடுகையில், இந்த ஊற்கு பெரிய மடத்து முதலியார் தோப்பு இட்டு பிராமணரைக் காட்டிக்குடுக்கையில், தோப்பின் படி பணம் இருநூற்று அன்பதும் இறுக்க கதி யில்லாமல் திருமெத்தளி உடையார்க்கு விற்று சாதனத்துக் வையந்தொழுதார்...

—S. I. I. 8.161

கி. பி. பதினுரும் நூற்ருண்டு உரைநடை

கி.பி. 14-ஆம் நூற்ருண்டின் இடைப்பகுதியில் தோன்றித் தென்னிந்தியாவை ஒரு குடைக்கீழ் வைத்து ஆண்டு வந்த விசயநகரப் பேரரசின் இணையற்ற பேரரச ரான கிருட்டிண தேவராயர் இப்பதினுரும் நூற்ருண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவராவர். அவர் காலத்தில் அவர் மீது பல பாடல்கள் தமிழில் பாடப்பட்டுள்ளன. மண்டல புருடர் என்ற சமணப் பெரியார் சூளாமணி நிகண்டினைச் செய்தார். இந்த நூற்ருண்டில் சைவ சித்தாந்த உரை யாசிரியர் பலர் திகழ்ந்தனர். சூரியனுர் கோவில் ஆதீனத் தலைவரான சிவாக்கிர யோகிகள் என்பவர் சிவஞான சித்தியார்—சுபக்கம் என்னும் பகுதிக்கு உரை இயற்றி னர். இவரே வடமொழிச் சிவஞான போதத்திற்குப் பேருரை செய்தார். ஞானப்பிரகாசர் என்ற சைவப் பெரியார் சிவஞான சித்தியார்—சுபக்கத்திற்கு உரை இயற்றினுர்.

தெய்வச் சிலையார் உரை

தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரை வகுத்த வருள் தெய்வச்சிலையார் என்பவர் ஒருவராவர். பாண்டிய நாட்டுக் கடற்கரை ஊரான திருப்புல்லாணியில் கோவில் கொண்டுள்ள பெருமாளுக்குத் தெய்வச்சிலை பெருமாள் என்பது பெயர். அப்பெயரைத் தாங்கிய இப்பெரியார், நற்றமிழை நலமுறப் படித்தவர் என்பது இவரது உரை யால் தெளிவாகிறது. இப்பெரியார் செந்தமிழ் நாடு இன்னதென இளம்பூரணரும் சேனாவரையரும் நச்சினார்க் கினியரும் கூறிய கூற்றைக் குறிப்பிட்டு மறுத்து உரைத் தமையால், இவர் அம்மூவர்க்கும் பிற்பட்டவராவர். நச்சினார்க்கினியர் காலம் கி.பி. 15-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளின், இவர் காலம் ஏறத்தாழப் பதினாறும் நூற்றாண்டு என்று கொள்ளலாம். இவரது உரைநடைக்கு ஓர் எடுத்துக் காட்டினைக் கீழே காண்க.

> "பொருளுணர்த்துவன தனி மொழியாத லால், தொடர் மொழியென வகுத்ததனாற் பய னென்னை யெனின், பொருளுணர்த்துதற்குச் சிறப்புடையன தொடர்மொழியென்று கொள்க. என்னை சிறந்தவாறெனின், சாத்தனென்ற வழிப் பொருண்மை மாத்திர முணர்த்துத லல்லது கேட்டார்க்கொரு வயன்படறில்லாமை யின், சாத்தனுண்டானெனப் பயன்பட வருஉந் தொடர்மொழியே பொருள் இனிது விளங் குவதென்க. சொல்லிலக்கணம் அறிந்ததனாற் பயன், தொடர் மொழியாகிய வாக்கியத்தினைப் பிரித்துப் பெயர்ச் சொல் வினைச் சொல் இடைச்

சொல் உரிச் சொல்லெனக் குறிப்பிட வேண்டுத லின் அதன்பின் கூறப்பட்டது.''

(முதல் நூற்பா உரை)

இந்நூற்றுண்டுக் கல்வெட்டு உரைக்குக் காட்டு ஒன்றினைக் கீழே காணலாம் :

நாகலாபுரம் கல்வெட்டு
(கி. பி. 1579)

''ஸ்ரீ வீரபிறதாபராஜ ஸ்ரீரங்க தேவமகாராயர் காரியத்துக்கு கற்தரான செகதுரட்டி கிஷ்ண மனுயக்கரும் நாகலாபுரம் ஸ்தானத்தாரும் ஊர வரும் நாகலாபுரம் பஞ்சாளத்தாற்கு சாஸனம் குடுத்தபடி—தங்களுக்கு பரடை, பரிவட்டம் வேண்டாமென்று கட்டளை பண்ணினேம்—தாங்கள் ஊரில் உண்டான உழவு தொழிலும் திருக்கோயில் ஊழியமும் பண்ணிக் கொண்டு இருக்க கடவராகவும்—தங்களுக்கு பூற்வம் உண்டான மான்னியம் சுதந்திரம் நடத்திவர கடவொமாகவும்—யிந்தபடிக்கு சந்திராதித்த வரையும் நடக்க கடவொமாகவும்—யிதுக்கு அகுதம் யாதொருவர் அகுதம் பண்ணிநாலும் கங்கை கரையிலே காராம் பசுவை கொன்ற தோஷத்திலே போகக் கடவொமாகவும் யிந்த படிக்கு ஸ்தலகணக்கு வெங்கப்பன் எழுத்து. ஸ்தாநம் சிநிவாசன் எழுத்து.''

—S. I. I. 17.676

இக் கல்வெட்டில் எழுத்துப் பிழைகளும் இலக் கணப் பிழைகளும் மலிந்துள்ளன. இது கல்வியறிவு இல்லாத கல்தச்சர் வேலை போலும்!

கி. பி. பதினேழாம் நூற்றாண்டு உரைநடை

கி. பி. 16-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விசய நகரப் பேரரசு சிதைந்தது; தக்கணத்துச் சுல்தான்களின் செல்வாக்கு ஓங்கியது. அதனால் தமிழகத்தில் பல படையெடுப்புகளும் போராட்டங்களும் நிகழ்ந்தன. தமிழகத்தில் கருநாடக நவாபுகளின் ஆட்சி ஏற்பட்டது. நாட்டில் இசுலாம் பரவியது. இவற்றால் அரபிச் சொற்களும், இந்துஸ்தானிச் சொற்களும், பாரசீகச் சொற்களும், உருதுச் சொற்களும் வழக்கிற்கு வந்தன.

கி. பி. 16, 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர் ஆகிய ஐரோப்பிய நாட்டினர் தமிழகத்திற்கு வந்து வாணிகம் செய்யலாயினர். அவர்களுடனும் அவர்க்குப் குப் பின்னும் தமிழகம் வந்த பாதிரிமார் தமிழைக் கற்று, அதன் வாயிலாகத் தமது சமயத்தைப் பொதுமக்களிடையே பரப்பினர். இங்ஙனம் வந்த பாதிரிமார் இருவகையினர். அவருள் ஒருவகையினர் கத்தோலிக்கர்; மற்றொரு பிரிவினர் மார்டின் லூதரைப் பின்பற்றிய பிராட்டெஸ்டெண்டுகள். இவ்விரு திறத்தினரும் தமிழில் செய்யுள் நூல்களையும், அகராதிகளையும், கட்டுரைகளையும், உரை நூல்களையும் இயற்றினர்; திருக்குறளை மேனாட்டு மொழிகளில் மொழி பெயர்த்தனர். இவருள் காலத்தால் முற்பட்டவர் தத்துவ போதக அடிகள் என்பவர்.

தத்துவ போதக அடிகள்

இவர் இத்தாலி நாட்டினர். இவர் 1609-இல் கிறித்தவ சமய குரவராகப் பணியாற்ற மதுரைச் சீமைக்கு

வந்தார்; இந் நாட்டிற்கு ஏற்பத் தமிழ்த் துறவிபோல் வேடம் புனைந்தார்; புலால் உணவை நீக்கினார்; தமிழையும் வடமொழியையும் பயின்றார்; அவ்விரண்டிலும் பேசவும் எழுதவும் வல்லவரானார். இப்பெரியார் ஞானோபதேச காண்டம், ஆத்ம நிர்ணயம், சத்தியவேத லட்சணம், கடவுள் நிருணயம், ஞானதீபிகை, தமிழ் போர்ச்சுகீசிய அகராதி முதலிய பல நூல்களை எழுதினார். இவரது உரைநடை அக்கால வழக்கிற்கு ஏற்றபடி வடமொழிச் சொற்களை மிகுதியாகக் கொண்டுள்ளது. இவர் ஓரே முற்றுச் சொற்றொடரை ஐம்பது வரிகளுக்கு மேலும் நீட்டிச் செல்லும் வலிமையுடையவர் என்பது, இவர் எழுதியுள்ள ஞானோபதேச காண்டம் என்னும் நூலினால் தெளிவாகும். ஆயினும் இவர் சிறு முற்றுச் சொற்றொடர்களை எழுதவும் திறம் படைத்தவர் என்பதற்கும் அந் நூலே சான்றாகும். 'மற்றப்படி அல்ல' என்றாற் போன்ற பேச்சு வழக்குச் சொற்கள் இவர் நூலில் ஆங்காங்குக் காணப்படுகின்றன. இவரது நடைக்குக் காட்டாக ஒன்றைக் கீழே காண்போம் ;

> "இப்படிப்பட்ட காரண காரியவகை தவிர வேறொரு காரண காரிய வகையுண்டு. அதை விசாரிக்குமிடத்தில் காரணத்திலே யிருக்கிற சுபாவமுஞ் சுபாவத்துக்கடுத்த எல்லா நன்மைகளுங் காரியத்திலே யிராமற் காரணத்திலே யிருக்கிற நன்மைகளுக்குள்ளே யாதாமொன்று காரியத்திலேயிருக்கும். அதெப்படியென்றால, சிற்பாசாரியானவனொரு விக்கிரகத்தையுண்டாக்கினான்; குலாலனானவன் கலச பாத்திரத்தை வனைந்தான்; பூமியினுள்ளே விளைகிற மாணிக்கங்களுடைய வொளிவுக்குச் சூரியனானது

காரணமாயிருக்கிறது, இந்த வகையுள்ள காரண காரியத்தைப் பார்க்கும்பொழுது காரணமாகிற சிற்பாசாரியிடத்திலேயிருக்கிற புத்தி பெல முதலான நன்மைகள் காரியமாகிற விக்கிரகத்திலேயிராமற் புத்திக்குள்ளேயிருக்கிற நன்மையாகிற ரூபம் விக்கிரகத்திலே யிருக்கிற தொழியச் சிற்பாசாரிக்குண்டான மற்ற நன்மையெல்லாம் விக்கிரகத்திலேயிராது. குலாலனிடத்திலே யிருக்கிற சாமர்த்திய முதலான நன்மைகள் பாத்திரத்திலே யிராமற் குலாலன் புத்திக்குள்ளே யிருக்கிற பாத்திர ரூபம் கலசத்திலே யிருக்குமொழிய மற்றப்படியல்ல."

—ஞானோபதேசம், முதற்காண்டம்,
4ஆம் பாடம்.

திருப்பராய்த்துறைக் கல்வெட்டு உரை
(கி. பி. 1642)

"இந்த நிலத்தில் உண்டான உதையமும் பாளையம் பகுதியும் சோழன் குமாரத்திக்கு நரிமுகம் தீத்த தேவர்கள் செல்வர் தம்பிரானுற்கும், பசும் பொன்னம்மைக்கும் அபிஷேகம் நெயிவேத்தியம் திருவிளக்கு திங்களத் திருமதித் திருத்தேரான கட்டளைத் திருவுள்ப்படி நடத்தி வரச் சொல்லி, நம்மிட நிருபமும் சண்டெசுவரப் பட்டையமும் குடுத்து, அபிஷேகம் பெரிய ஞயினர் பண்டாரத்தைக் கட்டளையிட்ட படியினுலெ, இந்த தன்மத்தை புத்திரர் புத்திர பாரம்பரையும் சந்திராதித்தவரையும் நடத்தி வரவும்; இந்தத் தன்மத்துக்கு யாதாமொருவன்

விக்கினம் பண்ணின அவன் கெங்கைக் கரையில் காராம் பசுவைக் கொண்ண தோஷத்திலும் தேவப் பிராமணரைக் கொண்ண தோஷத்திலும் போகக் கடவராகவும்.''

இதனிலும் மிகப் பல எழுத்துப் பிழைகளும் சந்திப் பிழைகளும் உள்ளன; கொச்சைச் சொற்களும் பல.

கி. பி. பதினெட்டாம் நூற்றாண்டு உரைநடை

18-ஆம் நூற்றாண்டில்தான் முதல்முதலாகத் தமிழ் நூல்கள் தமிழ் நாட்டில் அச்சிடப்பட்டன. கிறித்தவப் பாதிரிமாரே அச்சுப்பொறியை அமைத்தனர். கிறித்தவ நூல்கள் அச்சிடப் பெற்றன. அதுகாறும் பனை ஓலைகளில் எழுதிவந்த தமிழர், காகிதத்தில் அச்சிடப் பெற்ற நூல்களைக் கண்டு உளம் மகிழ்ந்தனர். இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் இத்தாலி நாட்டைச் சேர்ந்த கான்ஸ்டன்டைன் ஜோசப் பெஸ்கி என்ற பாதிரியார் தமிழகம் வந்தார். சுப்பிரதீபக் கவிராயர் போன்ற பெருமக்களிடம் தமிழ் பயின்றார்; தத்துவ போதகரைப் போலவே தமிழரோடு தமிழராய் வாழ்ந்தார்; அவர் தம் பெயரைத் 'தைரியநாதர்' என்று தமிழ்ப் படுத்தினார். தமிழ் மக்கள் அவரை வீரமா முனிவர் என்று அழைத்தனர். இப் பெயரே நிலைத்து விட்டது. தேம்பாவணி முதலிய செய்யுள் நூல்களைப் பாடினார்; இலக்கண நூல்களை இயற்றினார்; சதுரகராதி என்னும் அகராதியைச் செய்தார். இப் பெரியார் வேதியர் ஒழுக்கம், வேத விளக்கம், பேதகம் அறுத்தல், ஞானம் உணர்த்தல், வாமன் கதை, பரமார்த்த குரு கதை ஆகிய உரை நூல்களை எழுதினார்; எழுத்துத் திருத்தத்தையும் செய்தார்; சில திருக்குறட் செய்யுள்களுக்கு விளக்கவுரை எழுதினார். அவ் விளக்க

வுரையின் நடை உயர்ந்தது. "பரமார்த்த குரு கதை" யின் நடை அதனினும் சிறிது தாழ்ந்தது; பேச்சுத் தமிழில் எழுதப்பட்டது. இவையிரண்டிற்கும் எடுத்துக் காட்டுகளைக் கீழே காண்க :

பரமார்த்த குருவின் கதை

"சொன்ன வெச்சரிக்கையோடு நெடுநாளிருந்த பின்பு சீர்மை வழிபோனுற் சீஷர்கள் கையிற் பணம் பறியுமொழிய மடத்திலது வரவறியாதென்றதைப் பற்றி யூருக்கூர் சுற்றித் திரியப் புறப்பட்டார்கள்.

"ஒரு நாளவர்கள் மடத்துக்குத் திரும்பி வருகையி லசைந்தசைந்து குருக்கள் குதிரை மேல் வரும்போது கீழே தொங்கின வொரு மரக் கொப்புப் படவே, யவர் தலைப்பாகை பிறகே விழுந்ததாம். அதனைச் சீஷர்களெடுத்தார் களென் றெண்ணி சும்மா வனேகந்தூரமவர் சென்ற பின்பு 'தலைப்பா கெங்கே தாருங்கோ ளெ'ன்று கேட்டார். 'அதங்கே விழுந்த விடத்திற் கிடக்கு மெ'ன்றவர்கள் சொல்ல, வவர் கோபித்து, 'விழுந்ததெல்லா மெடுக்கத் தேவையில்லையோ! நான் சொல்ல வேணுமோ' வென்றுர். அப்படியுடனே மடைய னோடிப் போய் விழுந்த பா கெடுத்துக் கொண்டு வருகையில் அன்றி ராத்திரி மழை சொரிந்து பெய்ததினுலே பசும்புற் காட்டிலே மேய்ந்திருந்த குதிரை கழிந்து விட்ட லெத்தியைத் தலைப்பாகிலேந்திக் குருவின் கையில் வைத்தான்."

திருக்குறள் விளக்கம்

"மனத்துக்கண் மாசில னாத லனைத்தற
னாகுல நீர பிற"

"இல்லறம் துறவறமென்ற இவ்விரண்டி னுள்ளும் அடங்கி நிற்கு மெல்லா வறங்களும் மனத்தின் தூய்மையாற் பெறும் பெருமையே தருமமெனவும், மனத்தினுண் மாசுகொண்டவன் செய்யுந் தவமும் தானமும் மற்றை யாவு மறத்தின ரவமாவதன்றி யறத்தின் பயனுள வல்லவெனவுமக்குறளிரு பயனிவை யென விரித்துக் காட்டுதும். விரிப்பவே மெய்யும் பொய்யும் விளக்கி யுட்பயன்றரு மெய்யறத்தின் நன்மையே வெளியாயிஃதொன்றுணர்ந்து நாமதற்கொப்ப நடந்தாலிது வீடெய்தும் வழி யெனக் காணப்படும். பெரும் பொருணேர்ந்து பொய்ம்மணி கொள்வது கேடாயினும் பொருளை நேர்ந்தும் உடலினை வாட்டியும் உயிரை வருத்தியும் மேற்கதி வீட்டிற் செல்லாச் சில பொய் யறங்களை யீட்டுவததிலுங் கேடாமன்றோ? இதனை விலக்கத் தனதுயிராக்கங் காப்பது வேண்டியிக்குறட் பயனாராய்வது நன்றே."

இவை சந்தி பிரிக்கப் பெருத சொற்ருெடர்களால் ஆக்கப் பெற்றிருத்தலால் படிப்பதற்குத் தடை உண்டாகிறது காண்க. இங்ஙனம் எழுதுதல் அக்கால வழக்கம் போலும்!

சிவஞான முனிவர் உரை

சிவஞான முனிவர் திரு ஆவடுதுறை ஆதினத்தைச் சேர்ந்தவர்; கி. பி. 18-ஆம் நூற்ருண்டின் பிற்பகுதி

யினர். இவர் வட நூற்கடலையும் தமிழ் நூற்கடலையும் நிலைகண்டுணர்ந்த பெரியவர். இவர் காஞ்சிப்புராணம் முதலிய செய்யுள் நூல்களையும், தொல்காப்பிய சூத்திர விருத்தி, சிவஞான போதப் பேருரை ஆகிய இரண்டு உரை நூல்களையும் செய்தவர்; பவணந்தியர் இயற்றிய நன்னூலுக்கு விரிவுரை எழுதிப் புகழ் பெற்றவர். இவரது எந்த உரைப் பகுதியும் சொற்செறிவும், பொருட்செறிவும் பொருந்திச் சமநிலைபெற்று விளங்குவதாகும். சான்றாக ஓர் உரைப் பகுதியினைக் காண்க:

"தேர் முதலாயின பலராற் செய்யப் படினும், அப் பலரும் ஒருவன் ஏவல் வழி நின்றே செய்பவாகலானும், வேதத்துட் காரண வாக்கியங்களில் சுட்டுணர்வினராகிய நாராயணன் இரணிய கருப்பன் இந்திரன் அங்கி சூரியன் முதலியோரைக் காரணம் என்றது குயவன்போல் அவாந்தர காரண மாதல் பற்றியே யாகலின், அவை எல்லாம் ஆகு பெயரால் சங்கார காரணனாகிய முதற் கடவுளையே உணர்த்தி நிற்குமாகலானும், செய்தும் செய்வித்தும் எல்லாத் தொழிற்கும் வினை முதலாய் நிற்கும் கடவுள் சங்காரகருத்தா ஒருவனே என்பது கருத்து."

"அரக்கையுருக்கி அதனோடு சேர்த்து அணைத்த கற்பொடி அவ்வரக்கினோடு ஒன்றாய் ஒருங்கியைந்து நீக்கமின்றி நின்றாற்போல, முதல்வன் உயிர்களின் ஒருங்குகூடி நின்று நீக்கமின்றி யுள்ளனாதலால் தானேயாம்; உலகே யாம்; தானே உலகேயாம்."

''கனவு கண்ட சூக்கும வுடம்பே நனவின் கண் அதனை யறியுமாயின் கண்டபடி யறியாது மயங்கி யறிதல் கூடாமையின், உயிர்க்காயின் அதுபோல் ஒரு தன்மைத் தாதலின்றி அகத்துச் சேறலும், புறத்துச் சேறலுமாகிய வேறு பாடுண்மையான், அதுபற்றி மயங்கியறிதல் கூடுமாகலின் அங்ஙனம் அறியும் உயிர் வேறுண்டென்பது கண்டு கொள்க.''

—சிவஞான போதச் சிற்றுரை, பக். 33, 49, 96.

ராங்கியம் (ராஜசிங்க மங்கலம்) கல்வெட்டு (கி. பி. 1705)

''சாலிவாஹன சகாத்தம் 1627 இதன் மேல் செல்லா நின்ற பிங்கள வருஷம் பங்குனி மீ 23 உ சிதம்பரக் கட்டளை தருமம் மறவனி ஏந்தலுக்கும் துறுமாவுக்கும் கால்வாய் விபகார மாய் ராஜ விசைய ரெகுனாராய தொண்டை மானரவர்கள் காரியத்துக் கருத்தராகிய விஸ வனம் பிள்ளையவர்கள் வந்து விபகாரங் கேட்டுத் தேருமல், பாகனேரிப் புல்வாய் நாயகி யம்மன் சன்னதியில் இருவரையுமனுப்பி, மழு விளங்கி மறவனி ஏந்தல் நாகப்பன் வெத்திய ராக வந்தபடியினாலே, யிந்த கால்வாய் சந்திரா தித்த வரைக்கும் நாகப்பனே ஆண்டனு பவித்துக் கொண்டு சுகமேயிருக்கவும்.''

—புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் –875.

இக் கல்வெட்டு உரையிலும் கொச்சைச் சொற் களும் சந்திப் பிழைகளும் அமைந்துள்ளன.

நாட்குறிப்புச் சுவடி

நாட்குறிப்பு எழுதி வைக்கப்பெற்ற இலக்கியம் தமிழில் நெடுங்காலமாக இல்லை. அப்பழக்கம் மேனாட்டாரிடம் மிகுதியாக உண்டு. அப்பழக்கத்தைத் தமிழில் கொண்டு வந்த பெருமை புதுச்சேரியில் வாழ்ந்த ஆனந்தரங்கப் பிள்ளை என்பவருக்கே உரியது. இப்பெரியார் காலம் கி. பி. 18-ஆம் நூற்றாண்டு (1709—1761). இவர் பிரெஞ்சுக் கிழக்கிந்தியக் கம்பெனியார் வாணிகத்தை வளப்படுத்தினவர். இவர் காலத்தில் மகாராட்டிரர், ஆங்கிலேயர், பிரெஞ்சுக்காரர், நவாபுகள் ஆகிய அனைவரும் பல போர்களில் ஈடுபட்டிருந்தனர், பிள்ளையவர்களின் நாட்குறிப்பைக் கொண்டு, அவர் காலத்தில் நிகழ்ந்த போர்களைப் பற்றியும், ஆட்சி முறை பற்றியும், அக்கால மக்கள் பழக்க வழக்கங்கள் பற்றியும் பல சுவையுள்ள செய்திகளை அறியலாம். இவை அனைத்துக்கும் மேலாக, அவரது பேச்சு வழக்கில் அமைந்த தமிழ் நடையைக் காணலாம்; பிரெஞ்சுக்காரர் கூட்டுறவால் அவர்கள் ஆட்சியில் இருந்த தமிழ் நிலப் பகுதிகளில் நுழைந்து இன்றளவும் பேச்சு வழக்கில் உள்ள பிரெஞ்சு மொழிச் சொற்களையும் அறியலாம். அவரது நாட்குறிப்புச் சுவடியிலிருந்து ஒரு பகுதியினை இங்குக் காண்க.

"1746 ஜூலை மீ 16 உ-க்கு அக்ஷய ஆடி மீ 4 உ சனி வாரம். இற்றை நாள் ராத்திரி கேட்ட சேதியினால் தேவனாம்பட்டணம் துறை, வர்த்தகரவரை யழைப்பித்து அவர் தட்டு முட்டுகள், பணங்காசுகள், குஞ்சு குழந்தைகளை எங்கெங்கேயனுப்ப வேணுமோ அந்தப் படிக்கு அனுப்புவித்துக் கொள்ளுங்கோ

ளென்று நிரு உத்தரவு கொடுத்திருந்தபடிக்கு அவரவர் அனுப்பிவித்ததாய், அவரவர் போன தாய், தேவனும்பட்டணம் கடலூரிலேயிருந்து வந்த வீராசெட்டி தம்பி சொன்னதாய் குருவப்ப செட்டி சொன்னான். காலத்தாலே இறந்துபோன சீர்மைக் கப்பல் கப்பித்தானை சாயங்காலம் அடக்கம் செய்யும்போது இரு நூறு சொல்தாதுகள் வரிசை வைத்துக் கொண்டு ராசாவுடைய கொடி, தம்பூர், புல்லாங்குழலுடனே மசே லபோர்தொனே கப்பல் கப்பித்தான்மார் சமஸ்தமான பேரும் போயிருந்து பிரேதத்தையடக்கம் செய்கிற மட்டுக்கும் கூட இந்தச் சம்பிரமத்துடனே புதைக்கும்போது மூன்று வேட்டு சொல் தாது கள் துப்பாக்கிச் சுட்டதின் பிற்பாடு கப்பல்கள் எல்லாம் இருபத்தொரு வேட்டு விழுக்காடு தீர்ந்தார்கள். கோட்டையிலேயும் ஏழு பீரங்கி போட்டார்கள்.''

கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டு உரைநடை

தமிழ் உரை நடை 19-ஆம் நூற்றாண்டில் பல துறை களில் வளர்ச்சி பெற்றது.

இராமலிங்க அடிகள் (1823-1874) மிகப் பல விண்ணப்பங்களையும், அறிவுரைகளையும், கடிதங்களை யும், மநுமுறை கண்ட வாசகம் என்னும் நூலையும் உரைநடையில் எழுதினார்.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர் (1823-1879) பழம்பெரும் நூல்களை உரையுடன் அச்சிட்டார்; சிறுவர்க்காக நான்கு பால பாட நூல்களையும், இரண்டு

சைவ வினு விடைகளையும், இலக்கணச் சுருக்கம் ஒன்றையும் வரைந்தார்; பெரியபுராண வசனம், கந்த புராண வசனம், திருவிளையாடற் புராண வசனம் என்பவற்றை இனிய நடையில் எழுதினுர். வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் இவரை, 'வசன நடை கைவந்த வல்லாளர்' என்று பாராட்டியுள்ளார்.

அஷ்டாவதானம் வீராசாமி செட்டியார் விநோத ரச மஞ்சரி என்னும் உரைநூலை எழுதினுர். மாயூரம் வேதநாயகம் பிள்ளை (1826-1889) பிரதாப முதலியார் சரித்திரம் உரையில் எழுதிப் புகழ் பெற்ருர். தமிழில் முதல் முதலாக எழுதப்பெற்ற பெருங்கதை இதுவே யாகும். வித்துவான் தாண்டவராய முதலியார் மராத்தி மொழியிலிருந்த பஞ்சதந்திரக் கதைகளைத் தமிழ் உரையில் பெயர்த்தெழுதினுர். கால்டுவெல் ஐயர் நற்கருணை முதலிய தலைப்புக்களில் சில கட்டுரைகளைத் தமிழ் உரை நடையில் எழுதியுள்ளார். யாழ்ப்பாணம் சபாபதி நாவலர் (1844-1903) திராவிடப் பிரகாசிகை முதலிய உரை நூல்களை எழுதினுர். விசாகப் பெருமாளையர் யாப்பிலக்கண வினு விடை போன்ற சில உரை நூல்களை எழுதினுர். இந்த நூற்ருண்டில் பள்ளிப் பாட நூல்கள் பலவும் தமிழ் உரை நடையில் வெளிவந்தன.

இராஜமையர் எழுதிய கமலாம்பாள் சரித்திரம், சலசலோசன செட்டியார் வரைந்த சரசாங்கி, அ. மாதவையா எழுதிய பத்மாவதி சரித்திரம் முதலிய பெருங்கதைகளும் இக்காலத்தவையாகும். அரசாங்க அறிக்கைகள் சிலவும் தமிழ் உரைநடையில் வெளியிடப் பெற்றன.

இந்த நூற்றுண்டில்தான் சி. வை. தாமோதரம் பிள்ளையும், டாக்டர் உ. வே. சாமிநாதய்யரும் சங்க நூல்களை முதன் முறையாக அச்சிட்டு வெளிப்படுத்தினர். கர்னல் மெக்கென்ஸி தமிழகத்தில் இருந்த பல உரைச் சுவடிகளைத் திரட்டினர்; பல செய்திகளைக் கேட்டு எழுதினர். சைவ உதய பானு, மகாவிகட தூதன், திரிசிரபுரத் தமிழ்ச்செல்வன், நாகை நீல லோசனி, ஜனவிநோதனி போன்ற கிழமை இதழ்களும் சுதேசமித்திரன், தேசபக்தன் போன்ற நாள் இதழ்களும் தமிழ் உரைநடையை வளர்த்தன.

இங்கு இராமலிங்க அடிகள், ஆறுமுக நாவலர் உரைப் பகுதிகளைக் காட்டாகக் காண்க:

இராமலிங்க அடிகள் உரைநடை

> "காட்டகத்தார், கரவு செய்வார், கொலை செய்வார் முதலியராகப் பிறந்து பிறந்து, பயப்படல், சிறைப்படல், சிதைப்படல் முதலிய அவத்தைகளால் இறந்திறந்து, அந்நரக யோனி வர்க்கங்களெல்லாஞ் சென்று சென்று, உழன்றுழன்று அலுப்படைந்தேம். அங்ஙனம் யாங்கள் அப் பிறவிகள் தோறும், அடைந்த அலுப்பும், அச்சமும், அவலமும், களைப்பும், துன்பமுந் திருவுளத்தடைத்து இரங்கியருளி, அழியாப் பெருவாழ்வைப் பெறுதற்குரிய உயரறிவுடைய இம் மனித தேகத்திற் செலுத்தியருளிய, தேவரீரது பெருங் கருணைக்கு யாங்கள் செய்யும் கைம்மாறு, ஒன்றுந் தெரிந்தோமில்லை. உயிர்களின் அகத்தும், புறத்தும், அகப்புறத்தும், புறப்புறத்தும், நீக்கமின்றி, நிறைந்து, விளங்குகின்ற, அருட்பெருஞ்சோதி ஆண்டவரே! இம்

மனித தேகத்தில் செலுத்திய காலத்தும், தாய் வயிற்றிலும், சிசு பருவத்திலும், குமார பருவத்திலும், பல்வேறு அவத்தைகளால் அறிவின்றியிருந்தோம்.''

ஆறுமுக நாவலர் உரைநடை

பெரியபுராண வசனம்
கண்ணப்ப நாயனர் புராணம்

''பொத்தப்பி நாட்டிலே, உடுப்பூரிலே வேடர்களுக்கு அரசனுகிய நாகன் என்பவன் ஒருவன் இருந்தான். அவன் மனைவி பெயர் தத்தை. அவ்விருவரும் நெடுங்காலம் புத்திர பாக்கியம் இல்லாமையால் அதிதுக்கங் கொண்டு, குறிஞ்சி நிலத்திற்குக் கடவுளாகிய சுப்பிரமணிய சுவாமியுடைய சந்நிதானத்திலே சேவற் கோழிகளையும், மயில்களையும் விட்டு அவரை வழிபட்டு வந்தார்கள். சுப்பிரமணிய சுவாமியுடைய திருவருளினுலே தத்தையானவள் கருப்பவதியாகி, ஒரு புத்திரனைப் பெற்ருள். அப் பிள்ளையை நாகன் தன் கையிலே எடுத்தபொழுது திண்ணெனவாயிருந்தபடியால், அதற்குத் 'திண்ணன்' என்று பெயரிட்டான். அத் திண்ணனர் வளர்ந்து, உரிய பருவத்திலே வில் வித்தை கற்கத் தொடங்கி, அதிலே, மகா சமர்த்தராயினுர். நாகன் வயோதிகனுனபடியால், வேட்டை முயற்சியிலே இளைத்தவனுகி, தன்னதிகாரத்தைத் தன் புத்திரராகிய திண்ணனுருக்குக் கொடுத்தான்.''

தாண்டவராய முதலியார் பஞ்சதந்திரக் கதை

"ஒரு நாள் குளிரால் வருத்தப்படுகிற குரங்கு கூட்ட மின்னும் பூச்சிகளைப் பார்த்தது நெருப்பென்று நினைத்துக் குளிர் காய்வதற்காக வதனருகே போயிற்று. அப்போதங்கேயொரு மரத்தின் மேலிருந்த சுமுகனென்னுமொரு பறவையிதைப் பார்த்துக் குரங்கினருகே வந்து 'இது மின்மினிப் பூச்சி; நெருப்பன்றெ'ன்று சொன்னவுடனே, யந்தக் குரங்குக் கூட்டத்தி லொன்று கோபமாயந்தப் பக்ஷியைப் பிடித் தெனக்கு நீ புத்தி சொல்லுகிறவனோவென்று கல்லிலறைந்து கொன்றது. ஆகையா று(ஷ்ட்)டர்களுக்குபதேசம் பண்ணலாகாது."

இதனில் பிரிக்கப்படாத சொற்றொடர்கள் உள்ளன.

ராசாளிப்பட்டிக் கல்வெட்டு (கி. பி. 1882)

"ஸ்ரீமது ராசா விசயரெகுநாத ராசாபாதர்த் தொண்டை மானுரவர்கள் சீர்மையில் குமார வாடி லெக்கையனுயக்கரவர்கள் எல்லை வியாச் சியஞ் செய்ததுனாலே, ஆனரெபில் கும்பினி யார் தீர்த்த எல்லை."

—புதுக்கோட்டைக் கல்வெட்டுகள் எண். 885.

இதன்கண் ராஜபஹதூர் என்பது ராசாபாதர் எனவும், கம்பெனி என்பது கும்பினி எனவும் எழுதப் பெற்றிருத்தல் காண்க.

உருது என்பது துருக்கி மொழிச் சொல். பாசறை என்பது அதன் பொருள். ஷாஜஹான் காலத்தில், படை தங்கிய இடத்தில், பாசறையில் வீரர் பேசி வந்த மொழி யாதலால் அது 'உருது' எனப் பெயர் பெற்றது.

இந்தியாவில் வழங்கி வந்த இந்திய மொழிகளும், அரபு மொழி, பாரசீக மொழி, துருக்கி மொழி ஆகியவை யும் கலந்து உண்டான மொழியே உருது என்பது. உருதுமொழியின் எழுத்தும் நெடுங்கணக்கும் அரபு மொழியிலும் பாரசீக மொழியிலும் உள்ளனவேயாகும். இந்திய மொழிகளில் மட்டும் காணப்பெறும் சில ஓசை கட்குரிய எழுத்துக்கள் மட்டும் சேர்க்கப்பட்டுள்ளன.[1]

கி. பி. 19-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதி முடிய மொகலாயர் ஆட்சிக்குப் பின்பும் உருது மொழி வட இந்தியாவில் உருது என்றும், தென் இந்தியாவில் இந்தி என்றும் பெயர் பெற்றது. இந்தியைத் தனிமொழியாக்க விரும்பியவர்கள் அதனிடம் இருந்த அரபிச் சொற்களை யும் பாரசீகச் சொற்களையும் நீக்கி, அவற்றுக்குப் பதிலாக வடமொழிச் சொற்களைச் சேர்க்க முனைந்தனர். இந்த நான்கு மொழிகளும் தமிழகத்து முசுலிம்கள் சேர்க்கையால் கி. பி. 17, 18, 19-ஆம் நூற்றாண்டு களில் தமிழ்ப் பேச்சுவாக்கிலும் ஆட்சி ஏடுகளிலும் இடம் பெற்றன. பின்வந்த ஆங்கிலேயர் அச் சொற்களை ஆங்கில எழுத்துக்களில் எழுதி நாட்டில் நிலை பெறச் செய்தனர். இன்று ஆட்சித் துறையில் உள்ள சொற் களுள் பல இம்மொழிச் சொற்களேயாகும்.

---

1. உலகக் களஞ்சியம், தொகுதி 2, பக். 305

முடிவுரை

ஏறத்தாழ கி. மு. நான்காம் நூற்றாண்டினரான தொல்காப்பியர்க்கு முன்பே தமிழில் நான்கு வகை உரை நூல்கள் இருந்தன என்பதும், தொல்காப்பியர்க்கு முன்பே வேதியர் கூட்டுறவினால் வட சொற்களும் பிராக்ருதச் சொற்களும் தமிழிற் கலந்தன என்பதும், அதன் பயனாய் மணிப்பிரவாள நடை தோன்றியது என்பதும், கி. மு. 3-ஆம் நூற்றாண்டு முதல் கி. பி. 19-ஆம் நூற்றாண்டு வரையில் உண்டான கல்வெட்டு களிலும் வடசொற்களைக் காணலாம் என்பதும், பின் நூற்றாண்டுகளில் உண்டான முஸ்லிம்கள் ஆட்சியால் அரபி, பாரசீகம், உருது, இந்துஸ்தானிச் சொற்கள் தமிழிற் கலந்தன என்பதும், இங்ஙனமே மேனாட்டார் கூட்டுறவால் போர்த்துக்கீசியச் சொற்களும் பிரெஞ்சுச் சொற்களும் ஆங்கிலச் சொற்களும் தமிழிற் கலந்தன என்பதும், ஆயினும், தமிழ்ப் புலவர்கள் இப்பல மொழிச் சொற்களையும் தொல்லாணை நல்லாசிரியர் வகுத்த இலக்கணமுறைப்படி தமிழ் எழுத்துக்களால் உருமாற்றித் தமிழ் ஒலி அமைதிக்கேற்ப வழங்கலாயினர் என்பதும், ஆங்கில ஆட்சி வேரூன்றிய பின்பு அச்சிடப் பெற்ற பழைய நூல்களும் அரசாங்க அறிக்கைகளும் தோன்றித் தமிழ் உரைநடையை வளர்த்தன என்பதும் இது வரையிற் கண்ட செய்திகளைக் கொண்டு அறியப்பெறும் உண்மைகள் ஆகும்.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் உரைநடை பற்றி நாளை ஆராயப் பெறும்.

இருபதாம் நூற்றாண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி

இரண்டாம் நாள் சொற்பொழிவு

25 - 2 - 1966

1

மதுரைத் தமிழ்ச் சங்கம்

பாண்டித்துரைத் தேவர்

நாம் வாழ்கின்ற இந்த இருபதாம் நூற்றாண்டு தமிழ் உரைநடை வரலாற்றில் பொன்னெழுத்தால் பொறிக்கத் தக்கதாகும். ஏறத்தாழ ஆயிரத்து எண்ணூறு ஆண்டுகளுக்கு முன் மதுரையில் தமிழ்ச் சங்கம் இருந்து தமிழ்த்தொண்டு செய்ததை வேள்விக்குடிச் செப்பேடு களும் இலக்கிய நூல்களும் இலக்கண நூல்களும் தெரிவிக்கின்றன. பாலவநத்தம் சமீந்தாராகிய பாண்டித் துரைத் தேவர் இந்த நூற்றாண்டின் தொடக்க ஆண்டில் (14-9-1901) மதுரையில் தமிழ்ச் சங்கத்தினை நிறுவினார். அதற்குப் பின்னர், பாஸ்கர சேதுபதியாகிய குறுநில மன்னர் துணையுடன் தோற்றுவிக்கப்பட்ட சங்கத் திறப்பு விழாவில் தமிழ்ப் பெரும் புலவர்களாய் விளங்கிய பேராசிரியர் உ. வே. சாமிநாத அய்யர், சேது அரசவைப் பெரும் புலவராய் விளங்கிய ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், வை. மு. சடகோப ராமானுசாசாரியார், வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார்

அரசஞ்சண்முகனார், பின்னத்தூர் நாராயணசாமி அய்யர், திருமயிலை சண்முகம்பிள்ளை, நாகை வேதாசலம் பிள்ளை முதலியோர் கலந்து கொண்டனர்.

நல்ல தொடக்கம்

சேதுபதி செந்தமிழ்க் கலாசாலை, பாண்டியன் புத்தக சாலை, நூலாராய்ச்சிச் சாலை என்னும் மூன்று நிறுவனங்களும் அன்று தொடங்கப் பெற்றன. "செந்தமிழ்" என்னும் திங்கள் இதழ் பெரும் புலவர்களின் ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி 1903 முதல் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் வெளியீடாகத் தமிழகத்தில் உலாக் கொண்டது. பரண்களில் கவனிப்பாரற்றுக் கிடந்த பனையோலை ஏடுகள் தமிழ்ச் சங்க நூல் நிலையத்தை அணி செய்யலாயின. படிக்கப் புலவர் கல்லூரி இல்லாது இடர்ப்பட்ட தமிழ் மாணவர், சேதுபதி செந்தமிழ்க் கலாசாலையில் சேர்ந்து, பிரவேச பண்டிதம், பால பண்டிதம், பண்டிதம் என்னும் தேர்வுகளுக்குப் படிக்கலாயினர். பாண்டித்துரைத் தேவர் தமக்குச் சொந்தமான மாளிகை ஒன்றைச் சங்கத்திற்கு உதவினர். இங்ஙனம் இந்த இருபதாம் நூற்றாண்டின் தொடக்கமே தமிழ் வளர்ச்சிக்கு நல்ல தொடக்கமாக அமைந்தது என்பது குறிப்பிடத் தகும்.

இடர் நீங்கியது

இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் வட இந்தியாவிலும் தென்னிந்தியாவிலும் இருந்த வடமொழிவாணர் ஒன்றுகூடிக் 'கல்லூரிப் பாடப்பகுதிகளிலிருந்து மாநில மொழிப் பாடங்களை நீக்குதல் வேண்டும்' என்னும் கருத்தைத் தில்லிப் பாராளுமன்றத்தில் வற்புறுத்தினர்.

அப்பொழுது கர்ஸன் பிரபு இந்திய அரசப் பிரதிநிதியாய் இருந்தார். அவர் அக் கருத்தினைப்பற்றிச் சென்னைப் பல்கலைக் கழகத்திற்குச் செய்தி அனுப்பினர். பல்கலைக் கழகம் சென்னை ஆசிரியர் சங்கக் கருத்தினைக் கேட்டது.

அவ்வமயம் எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்கள் எஸ். பாட்பீல்டு என்னும் புனைபெயரில் இது பற்றிக் கண்டித்துப் பல கட்டுரைகள் எழுதினர். வட மொழிப் பெரியார்கள் பல இடங்களில் கூட்டங்களைக் கூட்டித் தம் விருப்பத்தைச் சட்டமாக்கப் பெரும்பாடு பட்டனர். அப்பொழுது வி. கோ. சூரிய நாராயண சாத்திரியார், எம். எஸ். பூரணலிங்கம் பிள்ளையவர்களுடன் கூடி, ஆசிரியர் சங்கத்தின் ஒவ்வோர் உறுப்பினரையும் நேரிற் கண்டு, 'மாநில மொழிகள் கல்லூரிப் பாடத் திட்டத்திலிருந்து நீக்கப்படல் ஆகாது' என்பதனை விளக்கினர். அதனுல் ஆசிரியர் சங்கத்தினர் வடமொழிவாணர்க்கு எதிராகத் தீர்மானித்தனர். சாத்திரியாரும் பிள்ளையவர்களும் மதுரைக்குச் சென்று பாண்டித்துரைத் தேவரைக் கண்டு இதுபற்றிப் பேசினர். அப்பெரியார் மதுரைத் தமிழ்ச் சங்கத்தின் சார்பில் ஒரு தீர்மானம் நிறைவேற்றி அதனைத் தந்தி வாயிலாக அரசப் பிரதிநிதிக்கு அனுப்பினர். தக்க காலத்தில் மேற்கொண்ட இம் முயற்சியின் பயனுக, வடமொழிவாணர் முயற்சி பலனளிக்கவில்லை; தமிழ் போன்ற மாநில மொழிகள் கல்லூரியில் இடம் பெற்றன. அங்ஙனம் இடம் பெற்றமையாற்றுன் இந்த நூற்றுண்டில் தமிழ் உரைநடை வளர்ச்சி மதிக்கத் தக்க அளவு காணப்படுகிறது.[1]

---

1. டாக்டர் ந. சுப்பிரமணியன், வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியார், பக். 102–104.

2

அரசாங்கமும் தமிழ்க் கல்வியும்

தமிழின் நிலை

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் தொடக்கப் பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும், உயர்நிலைப் பள்ளிகளிலுமே தமிழ் ஒரு பாடமாகக் கற்பிக்கப்பட்டது, கல்லூரிகளில் ஆழ்ந்த பாடம் இல்லை; அகன்ற பாடமே (துணைப் பாடமே) தமிழ்ல் கற்பிக்கப்பட்டது. கட்டுரையும் மொழி பெயர்ப்புமே வற்புறுத்தப்பட்டன. எம். ஏ. படித்த மாணவர்கள் ஆங்கிலத்தில் ஓர் ஆராய்ச்சிக் கட்டுரை எழுதவேண்டும் என்ற வற்புறுத்தல் இருந்தது.

டாக்டர் சோமசுந்தர பாரதியார், திரு. வ. சு. செங்கல்வராய பிள்ளை போன்றவர் அக் காலத்து மாணவர். திரு. பிள்ளையவர்கள் "தமிழ் உரைநடை வரலாறு" என்னும் ஆராய்ச்சிக் கட்டுரையை 1904-இல் ஆங்கிலத்தில் எழுதிச் சிறப்புற்றார். இக் காலத்தில் உள்ளவை போன்ற ஆராய்ச்சி வசதிகள் இல்லாத அக் காலத்தில் பிள்ளை அவர்கள் எழுதிய

ஆராய்ச்சிக் கட்டுரை படிப்பவர்க்கு இன்றும் மிக்க பயனைத் தருகின்றது.

பழைய மெட்ரிகுலேஷன் வகுப்பு முறை இருந்த வரையில் ஏறத்தாழ 1920 வரையில் 6ஆம் வகுப்பு முதல் பத்தாம் வகுப்பு வரையில் தமிழ் ஒழிந்த பிற பாடங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலேயே கற்பிக்கப் பட்டன. தம்மாட்சிக் கிளர்ச்சியின் பயனாய் மாநில மொழிகள் சிறப்புறத் தொடங்கின. அக்கிளர்ச்சியின் வற்புறுத்தலால் பள்ளியிறுதித் தேர்வு முறை வந்ததும், முதல் மூன்று படிவங்களில் ஆங்கிலம் தவிரப் பிற பாடங்கள் அனைத்தும் தாய் மொழியில் கற்க வாய்ப்பு உண்டாயிற்று. அதனால், கணக்கு நூல், நில நூல், இயற்கைப் பாடநூல், வரலாற்று நூல் முதலிய எல்லாப் பாட நூல்களும் தமிழில் எழுதப் பெற்றன. பள்ளி களில் படிக்கின்ற தமிழ் மாணவர் அனைவரும் அச்சிட்ட நூல்களை வாங்கிப் படிக்கலாயினர்.

ஏறத்தாழ 1947 வரையில் 4, 5, 6ஆம் படிவங் களில் தமிழைத் தவிர பிற பாடங்கள் அனைத்தும் ஆங்கிலத்திலே கற்பிக்கப் பெற்றன. நாடு உரிமை பெற்ற பின்பே உயர் வகுப்புகளில் ஆங்கிலம் ஒன்று தவிர பிற பாடங்கள் அனைத்தும் தாய் மொழியிலே கற்பிக்கப் பெறலாயின. இதனால் பல்கலை நூல்கள் தமிழ் உரை நடையில் எழுதப் பெற்றன; தமிழ் உரைநடை வளரத் தொடங்கியது.

இங்ஙனம் உயர்நிலைப் பள்ளிகளில் தமிழ் வளர்ச்சி உண்டாயதன் பயனாகக் கல்லூரிப் பாடத் திட்டத்திலும் மாற்றம் உண்டானது. கல்லூரி இடைநிலை வகுப்பிலும் இளங்கலை வகுப்பிலும் ஆழ்ந்த பாடமாகச் செய்யுள்

நூற்பகுதிகளும் தனித்தனி உரைநடை நூல்களும் படிக்க வசதி உண்டாயிற்று. இதனால் புலவர் பெருமக்கள் பலர் பாடநூல்களை எழுதலாயினர்.

வித்துவான் தேர்வு

சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் தேர்வுகள் அமைக்கப் பெற்றன. புலவர் கல்லூரிகள் இல்லாமலே பலர் தாமே பயின்று தேர்வுகளை எழுதி வெற்றி பெற்றனர். மதுரைத் தமிழ்ச் சங்கத் தேர்வுகள் வாயிலாக வெளிவந்த புலவர் பலராவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வித்துவான் தேர்வு எழுதுபவர்க்குச் சிறிது வடமொழிப் பயிற்சி வற்புறுத்தப் பட்டது. அத்தேர்வில் தேறியவர் 'பி பிரிவு வித்துவான்கள்' என்று அழைக்கப் பெற்றனர். இம்முறையால் வடமொழிப் பயிற்சியில்லாதவர் தேர்வுக்குச் செல்ல இயலாது துன்புற்றனர்.

பேராசிரியர் கா. நமசிவாய முதலியார் போன்ற பெருமக்கள் முயற்சியால் தனித் தமிழ் வித்துவான் தேர்வுகள் தோன்றின. 1930-இல் தனித் தமிழில் பலர் முதன் முறையாகத் தேர்வு எழுதி வித்துவான் பட்டம் பெற்றனர். இதே முறை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திலும் அமைந்தது. அங்கும் கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளாகப் புலவர் வகுப்புகள் நடத்தப் பெறுகின்றன.

தமிழ்க் கல்லூரிகள்

திருவையாற்று அரசர் கல்லூரி, மயிலம் கல்லூரி, மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ்க் கல்லூரி,

திருப்பனந்தாள் கல்லூரி, தருமபுரம் கல்லூரி, கரந்தைத் தமிழ்ச் சங்கக் கல்லூரி ஆகியவை பல ஆண்டுகளாகப் புலவர் வகுப்புகளை நடத்தி வருகின்றன. கலைக் கல்லூரிகளிலும் முதுகலை (எம்.ஏ) வகுப்புகள் பல ஆண்டுகளாக நடைபெறுகின்றன. தமிழ் எம்.ஏ. பட்டம் பெற்ற பலர் வெளி வந்துள்ளனர்; இன்றும் வெளி வருகின்றனர்.

இவ்வாறு முதல் வகுப்பு முதல் முதுகலை வகுப்பு முடியத் தமிழ் படிப்பவர் தொகை பெருகியதனால், இப்பல வகுப்பு மாணவர்க்கும் ஏற்ற உரைநடை நூல்கள் வளர்பிறை போல வளர்ந்து வரலாயின; இன்றும் வளர்ந்து வருகின்றன.

3

இதழ்கள்

அறிமுகம்

நாள்தோறும் உலகத்தில் நடைபெறும் நிகழ்ச்சிகளையும் செய்திகளையும் தொகுத்து வெளியிடும் செய்தித்தாள் நாளிதழ் எனப்படும். கிழமைக்கு ஒரு முறை அல்லது திங்களுக்கு ஒருமுறை பலவகையான பொருள்கள் பற்றிய கட்டுரைகளையும் செய்யுட்களையும் படங்களையும் பிற வற்றையும் பெற்று வருவது 'இதழ்' என்று பெயர் பெறும். சென்ற நூற்றாண்டில் தொடங்கப் பெற்ற நாளிதழ் 'சுதேசமித்திரன்' என்பது. அதன் பின்பு இந்தியா, தேசபக்தன், தமிழ்நாடு, திராவிடன், விடுதலை போன்ற நாளிதழ்கள் தோன்றின.

இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் தமிழகத்திலும் இலங்கையிலும் தோன்றிய நாளிதழ்கள் சில; கிழமை இதழ்கள் பல; திங்கள் இதழ்கள் மிகப் பல வாரம் இருமுறை இதழ்களும், மாதம் இருமுறை இதழ்களும் காலாண்டிதழ்களும் சிலவாகும். அவை அனைத்தின் எண்ணிக்கை ஏறத்தாழ நானூறு

ஆகும். அவற்றுள் 350 தாள்கள் மறைந்தன என்பது வருந்தத்தக்க செய்தியாகும்.

நாளிதழ்கள்—சுதேசமித்திரன்

நாளிதழ்களில் காலத்தால் பழைமை பெற்றது சுதேசமித்திரன் ஒன்றே. 'இந்து' என்னும் ஆங்கிலத் தாள் ஒவ்வொரு நாளும் நிகழும் உலக நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருதல் போலச் சுதேசமித்திரனும் உலக அரசியல் செய்திகள், வணிக நிலவரம், நம்நாட்டு நிகழ்ச்சிகள் முதலியவற்றைத் தாங்கி வெளிவருவது. இவற்றுடன் அந் நாள்தாள் ஆசிரியர், ஒவ்வொரு நாளும் தம் செய்தித்தாளில் தலைப்புக் கட்டுரை வெளியிடுதல் வழக்கம். அது மிக்க பயனுடையது. அரசினர் அல்லது நகரவைகளின் முடிவுகள், நாட்டு நிலைமை முதலியன பற்றி நன்கு ஆராய்ந்து ஆசிரியர் எழுதும் கருத்துகள் மக்கட்கு மிகுந்த பயனைத் தருவதாகும். இத்தகைய பல செய்திகளைத் தாங்கி வரும் நாளிதழ்கள் மக்களுக்கு அன்றாட உலக நிகழ்ச்சிகளை அறிவிக்கும் சிறப்பு பெற்றவை.

1906-ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் ஒன்பதாம் நாள் வெளிவந்த சுதேசமித்திரன் நாளிதழில், சென்னையில் குடிநீர் வசதி பற்றிச் சென்னை நகரவை மேற்கொண்ட முயற்சியைப் பற்றிய தலைப்புக் கட்டுரை ஒன்று வெளி வந்தது. அதன் ஒரு பகுதியைக் கீழே காண்க. இச் செய்தி எவ்வளவு பயனுடையது என்பது நன்கு விளங்கும்.

> "இச்சென்னை நகரின் சுகாதாரநிலைக்கு
> புழலேரியிலிருந்து கொண்டு வரப்படும் ஜலம்

அசுத்தமில்லாதிருக்க வேண்டுமென்பதை யாரும் ஒப்புக் கொள்வார்களாதலால் சென்னைக் கார்ப்பரேஷன் அதிகாரிகள் அந்த ஜலத்தைக் கூடிய வரையில் அசுத்தம் கலவாமல் காப்பதற்கு என்ன உபாயங்கள் செய்யப்படலாமென்று ஆலோசனை செய்து சொல்ல, சென்ற மே மாதத்தில் ஒரு கமிட்டியை நியமித்தார்கள். அக் கமிட்டியில் கார்ப்பரேஷன் ஆக்டிங்கு பிரஸிடெண்ட் மிஸ்டர் லாய்டும், டாக்டர் நாயரும், மிஸ்டர் தியாகராஜ செட்டியாரும் மிஸ்டர் சாவேஜும், ஆனரெபில் ஸர் தேசிகாச்சாரியாரும் மெம்பராயிருந்தார்கள். அவர்கள் அவ் விஷயத்தைப் பற்றி ஆலோசனை செய்ய இருமுறை கூடினார்கள். அவர்கள் முதல் தரம் கூடியபோது, ஜலவசதி சம்பந்தமான பிரேரேபணைகளைச் செய்த மிஸ்டர் நௌரோஜியே வந்திருந்து தம்முடைய பிரேரேபணைகளைக் கமிட்டியாருக்கு எடுத்து விளக்க, அக்கமிட்டியார் அவருடைய பிரேரேபணைகளை அங்கீகரித்து அவைகளை ஆதாரமாக வைத்துத் தங்களுடைய ரிப்போர்ட்டையும் எழுதி அனுப்பினார்கள்."

—சுதேசமித்திரன், ஆகஸ்டு, 1906

இத் தலைப்புக் கட்டுரைப் பகுதியில் தமிழ்ச் சொற்களோடு ஆங்கிலச் சொற்களும் பிறமொழிச் சொற்களும் கலந்திருத்தலைக் காணலாம். இதே நாளிதழில் காலப் போக்கில் தமிழ்நடை படிப்படியாக மாறி வந்துள்ளது. கீழ்வரும் செய்தியிலுள்ள தமிழ்நடை இந்த வேறுபாட்டை நன்குணர்த்தும்.

"அற்புத சாதனை

பனிரெண்டு தினங்களாக விண்வெளியில் சுற்றிக் கொண்டிருக்கும் ஒரு அமெரிக்க விண் வெளிக் கப்பலை இன்னொரு அமெரிக்க விண் வெளிக் கப்பல் சந்தித்தது ஒரு அற்புதமான சாதனை. மணிக்கு 17,500 மைல் வேகத்தில் சீறும் இரு பெட்டகங்கள் இவ்வாறு ஒன்றை யொன்று 120 அடி தூரத்திற்குள் நெருங்கி, இரண்டிலுமுள்ள விண்வெளி வீரர்கள் ஒருவரை யொருவர் பார்த்துப் பேசிக்கொண்டது சில ஆண்டுகளுக்கு முன் கற்பனைக்கும் எட்ட முடியாத ஒரு காட்சி. அடுத்தபடி ஒரு கப்பலி லுள்ளவர்கள் இன்னொரு கப்பலுக்கு மாறுவதும் அச் சந்திப்பு ஸ்தலத்தை ஒரு விண்வெளி நிலைய மாகக் கொண்டு அங்கிருந்து சந்திர மண்ட லத்தை நோக்கிப் பாய்வதும் சாத்தியமாகலாம். இத் துறையில் இப்போதைக்கு அமெரிக்கா ரஷ்யாவை முந்திக் கொண்டு விட்டதெனச் சொல்லலாம். எனினும் இதில் அவ்விரு நாடு களும் ஒத்துழைப்பது இன்னும் பிரமிக்கத் தக்க சாதனைகளுக்கும் அவற்றால் மனிதகுலம் ஏற்றம் காணவும் வழி வகுக்கக் கூடும்."

—சுதேசமித்திரன், டிசம்பர் 16, 1965.

இந்தியா என்ற நாளிதழில் பாரதியார் சில காலம் தொடர்பு கொண்டிருந்தார்; சமத்துவம், சொந்தம் ஸகாயம் முதலிய சொற்களில் உள்ள முதலெழுத்தை வடமொழி 'ஸ'கரமாகவே அமைத்து எழுதினர் என்பது குறிப்பிடத்தக்கது.

தேசபக்தன்

திரு. வி. கலியாண சுந்தரனாரை ஆசிரியராகக் கொண்ட தேசபக்தன் என்ற நாளிதழில் அவருக்கே உரிய சிறிய முற்றுச் சொற்றொடர்கள் அமைந்துள்ளன. திரு. வி. க. சிறிய முற்றுச் சொற்றொடர்களை எழுதுவதில் வல்லவர். 'பிரயாணம்' என்பதைச் 'செலவு' என்னும் சொல்லால் குறிப்பது அவர் வழக்கம். அக்காலத் தேச பக்தனில் அவர் கைவண்ணத்தைக் காணலாம். ஓர் எடுத்துக் காட்டினைக் காண்க.

> "சென்னை மாகாணத்தில் சென்ற ஆண்டு பல காரியங்கள் நடந்தேறின. அவைகளுள் லார்ட்பெண்ட்லண்ட் செலவும், லார்ட் விலிங்கடன் வரவும் கவனிக்கத்தக்கவை. மிஸ்டர் இல்மன் மரணம் குறிப்பிடத்தக்கது. டாக்டர் நாயர் இங்கிலாந்தில் மரணமடைந் தனர். திலகர், காந்தி, தாகூர் முதலிய பெரி யோர்கள் சென்னைக்கு விஜயம் செய்தார்கள். "தேசபக்தன்" விரும்பியவாறு சிற்சில இடங் களில் 'தேசபக்தன் சமாஜங்கள்' ஏற்பட்டன. உறிந்து, சுதேசமித்திரன், ஹிந்துநேசன் முதலிய பழைய பத்திரிகைகளுக்கு ஜாமீன் வாங்கப்பட்டது ஈண்டுக் குறிப்பிடத்தக்கது."
>
> —தேசபக்தன், 1920.

தமிழ்நாடு

1927-இல் 'தமிழ்நாடு' என்ற நாளிதழ் தோன்றி யது. அதன் ஆசிரியர் ஜி. இராமச்சந்திர நாயடு என்ப

இவ்விதழ் முன்னவற்றைப் போலவே நாட்டு விடுதலையை நோக்கமாகக் கொண்டு பணியாற்றியது; உலகில் நிகழ்ந்த நாள் செய்திகளையும் அரசியல் தொடர்பாக நிகழ்ந்த செய்திகளையும் நம்நாட்டு அரசியல் தலைவர்களின் பேச்சுக்களையும் இது வெளியிட்டது. தேவைப்படின், தமிழில் பிறமொழிச் சொற்களைச் சேர்ப்பது நல்லது என்று அக்காலத்திலேயே ஒரு அறிஞர் பேசிய பேச்சினை இந்நாள்தாள் ஆசிரியர் 'கண்ணோட்டம்' என்னும் தலைப்பில் ஒட்டி எழுதினார். அதனைக் காணலாம்.

" கண்ணோட்டம்

தமிழின் குறைகள்

கோவில்பட்டி ஆரம்ப ஆசிரியர் மகாநாட்டில் தலைமை வகித்த ஸ்ரீமான் டி. கே. சிதம்பரநாத முதலியார், தமிழ் மொழியில் உள்ள சில குறைகளைப் பற்றிச் சொல்லியிருக்கிறார். தமிழ் மொழியின் வளர்ச்சியில் அக்கறை கொண்ட ஒவ்வொருவராலும் அவை கவனிக்கப்பட வேண்டியவையாகும். தமிழ் தனித்தியங்கும் மொழியா அல்லவா என்பதைப் பற்றி இப்பொழுது சண்டை போட்டுக் கொண்டிருப்பது நமக்கு வேண்டியதில்லை. தமிழ் மொழியைத் தற்கால உலகத்தில் பயன்படும்படியாகவும் சிறந்ததாகவும் செய்ய வேண்டுமானால் அதிலுள்ள குறைகள் என்ன என்பதை கண்டுபிடித்து நீக்க முயற்சிக்க வேண்டும். தமிழ் மொழியைக் கட்டாயம் சீர்திருத்தியே ஆக வேண்டும். பிற பாஷைகளிலுள்ள

பதங்களை அவசியமானால் தமிழில் சேர்க்கப் பின்வாங்கக் கூடாது என்று ஸ்ரீமான் முதலியார் கூறுவதை நாம் முழுமனதுடன் ஆதரிக்கிறோம்."

—தமிழ்நாடு, ஏப்ரல் 27, 1927

டாக்டர் பி. வரதராசலு நாயடு அவர்கள் பின்பு பல ஆண்டுகள் இந் நாளிதழைத் தொடர்ந்து நடத்தினார். திராவிடன், ஜெயபாரதி, தினசரி முதலிய நாளிதழ்களும் சில ஆண்டுகள் வாழ்ந்து மறைந்தன.

கிழமை இதழ்கள்

கிழமை இதழ்கள் பல இந்த நூற்றாண்டில் தோன்றி மறைந்தன. இலங்கையிலிருந்து வெளியான உதயதாரகை, விவேகானந்தன், கோலாலம்பூரிலிருந்து வெளியான தமிழ் நேசன், தமிழகத்து இதழ்களான பிரபஞ்ச மித்திரன், கிராம பரிபாலனம், நவசக்தி, ஊழியன், குடியரசு, கலாநிலையம், சிவநேசன், தமிழரசி, தமிழ்நாடு, விநோத விகடன், தாருல் இஸ்லாம், புரட்சி, லோகோபகாரி, தமிழன், யதார்த்த வசனி, தமிழ் அரிஜன், தமிழ்க்கலை, போர்வாள், திராவிட நாடு, தென்றல், மன்றம், குயில், மணிக்கொடி முதலிய கிழமை இதழ்கள் பல இந்த நூற்றாண்டில் பலதுறைப் பொருள்களை வெளிப்படுத்தித் தமிழ் உரைநடையை வளர்த்தன. இவை ஒவ்வொன்றன் தமிழ் உரைநடையையும் எடுத்துக் கூறப்புகின் இடம் போதாது; நேரமும் இடந்தராது.

கலாநிலையம் தமிழ் இலக்கண இலக்கிய வளர்ச்சிக்காகவே பாடுபட்ட கிழமை இதழாகும். வழக்கறிஞர்

திரு டி. என். சேஷாசலமையர் அதன் ஆசிரியர். அவர் அதனில் கம்ப ராமாயணம் பற்றி வரைந்த கட்டுரைகள் மிகப் பல. அவரைப் போன்றே சிறந்த வழக்கறிஞர்களும் பிறரும் வரைந்த இலக்கியக் கட்டுரைகளும் மொழி பெயர்ப்புச் செய்திகளும் பலவாகும். மன இயல் கலை தொடர்பாக டாக்டர் தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் 'மானத சாஸ்திரம்' என்னும் தலைப்பில் எழுதிய தொடர் கட்டுரை. கலாநிலையத்தின் வாயிலாக வெளிவந்த தொடர் கட்டுரைகளில் மிகச் சிறந்ததாகும்.

நவசக்தியில் திரு. வி. கலியாணசுந்தரனார் அவர்கள், ஒவ்வொரு திருக்குறளையும் விளக்கிக் கட்டுரை வரைந்து வந்தார். அவர் வெளியிட்ட இக்கிழமை இதழ் சீரிய செந்தமிழ் நடையை வெளிப்படுத்தியது; இருபதாண்டு காலமாக வாழ்ந்தது.

பெரியார் ஈ. வெ. இராமசாமி அவர்கள் நடத்திய **குடியரசு** மக்களுக்கு உலக அறிவையும் சமுதாய அறிவையும் நாட்டு அறிவையும் நன்கு ஊட்டியது. சமய சீர்திருத்தம் பற்றிப் பல கட்டுரைகள் அதனில் வெளி வந்தன. அவற்றை எதிர்த்துப் பல கட்டுரைகள் பல இதழ்களில் வெளி வந்தன. இவ்விவாதக் கட்டுரைகள் தமிழ் உரைநடையை வளர்த்தன.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. அ. மு. பரமசிவானந்தம் அவர்கள் **'தமிழ்க் கலை'** என்னும் கிழமை இதழை நடத்தினர். தமிழறிஞர் பலர் தமிழ் இலக்கண இலக்கியக் கட்டுரைகளை அதனில் எழுதினர்; பிறதுறை அறிஞர்களும் பலதுறைக் கட்

டுரைகளை வரைந்தனர். அவை அனைத்தும் நல்ல தமிழில் வெளிவந்தமை குறிப்பிடத்தகும்.

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் நடத்திய 'குயில்' புதுவையிலிருந்து வெளி வந்தது. அதுவும் நல்ல தமிழ்க் கட்டுரைகளையும் சிறு நாடகங்களையும் வெளியிட்டது.

கிழமை மும்முறை இதழ்கள்

டாக்டர் பி. வரதராசுலு நாயுடு அவர்கள் நடத்தி வந்த "தமிழ் நாடு" நாளிதழில் பொறுப்புள்ள ஆசிரியப் பணி ஆற்றி வந்த திரு. டி. எஸ். சொக்கலிங்கம் அவர்கள், இற்றைக்கு முப்பதாண்டுகட்கு முன்பு **"காந்தி"** என்னும் பெயர்கொண்ட கிழமை — மும்முறை இதழை நடத்தினர்.

திருவாளர் சங்கு — சுப்பிரமணியம் அவர்கள் **"சுதந்திரச் சங்கு"** என்னும் பெயருடன் கிழமை — மும்முறை இதழை நடத்தினர். 25-5-1933-இல் சுவை மிக்க செய்தி ஒன்று சுதந்திரச் சங்கு இதழில் வெளியாயிற்று. அதனைக் கீழே காண்க. அதனைப் படித்து ஆசிரியரின் தமிழ் உரைநடையையும் உணரலாம்.

" மீசைக்குப் பூசை போடல்

உலகத்தில் மீசைக்கு இவ்வளவு பெருமை வரும் என்று எவரும் நினைக்கவில்லை. ஜெர்மனியில் இன்று அட்டகாசம் செய்யும் இட்லரின் உதட்டில் ஈ உட்கார்ந்ததுபோல சின்ன மீசை இருந்து வருகிறது. அதைப்பற்றி பிர

மாதமாக வர்ணிக்கிறார்கள். கிழக்கே ஜப்பானில் ஜெனரல் 'நாகாவோகா' என்பவர் சமீபத்தில் காலமானார். அவருக்கும் அவர் மீசை பெருமை தந்தது.

ஜெனரல் நாகாவோகா ஆகாயவிமானப் படையின் தலைவராயிருந்தவர். அவருடைய உத்தியோகத்தைவிட அவருடைய மீசை உலகெங்கும் பிரசித்தியாயிருந்தது. அவர் மீசையை ஒரு கோடியினின்று இன்னொரு கோடிக்கு அளந்தால் 19 1/2 அங்குல நீளம் இருந்ததாம்.

அவர் சாகும்போது தமது மீசை உலகிலிருக்க வேண்டும் என்று உயில் எழுதி வைத்துச் சென்றாராம். அவர் மகன் அவர் சவச் சடங்கு அன்று மீசையைச் சிரைத்தெடுத்து கண்ணாடிப் பெட்டியில் வைத்துப் பூசை போட்டானாம். என்னே மீசைக்குப் பூசை!

—சுதந்திரச் சங்கு, பக். 397.

திங்கள் இதழ்கள்

நாளிதழ்கள், உலகத்தில் ஒவ்வொரு நாளும் நடைபெறும் நிகழ்ச்சிகளையே சிறப்பாகக் குறிப்பவை. ஆதலால் அவற்றில் பல கலைகளைப் பற்றிய கட்டுரைகள், மொழி பெயர்ப்புக் கட்டுரைகள் முதலியன அருகியே இடம் பெறும். திங்களுக்கு ஒரு முறை வெளிவரும் இதழில் பல கலைகளைப்பற்றிய கட்டுரைகளும், பிறமொழிகளில் உள்ள பொருள்களைத் தழுவி எழுதப்பெறும் கட்டுரைகளும், மொழி பெயர்ப்புக் கட்டுரைகளும், பிற

அரிய செய்திகளும் பல பக்கங்களில் வெளியிடப் பெறு தல் இயல்பு. இந்த முறையில் திங்கள் இதழ்கள் தமிழ் உரைநடைக்கு நிலைத்த பயன் விளைப்பனவாகும்.

செய்தித்தாள்களிலும், இதழ்களிலும் வெளியாகும் கட்டுரைகள் பலரால் எழுதப்பட்டன. கட்டுரை ஆசிரியர் அமைதியாக எண்ணிப் பிழையின்றி எழுத வாய்ப்பு நிரம்ப உண்டு. கட்டுரைப்பொருளும் உரை நடையும் அவருடையன ஆதலால் அவர் மிக்க விழிப் புணர்ச்சியுடன் அவ்விரண்டிலும் கருத்தைச் செலுத்து வார். இதனுற்ருன் நாளேடுகளிலும் திங்கள் இதழ் களிலும் வரும் கட்டுரைகளும் அவற்றை வெளிப்படுத்திய உரைநடையும் மிக்க பயன் விளைப்பனவாகும்.

இந்த நூற்ருண்டுத் திங்கள் இதழ்களுள் அறிவு விளக்கம், ஞானபோதினி, ஞான சாகரம், விவேகபாநு, கர்மயோகி, விவேக போதினி, ஜனுபிமானி, தமிழர் நேசன், பாலபாரதி, செந்தமிழ்ச் செல்வி, நச்சினுர்க் கினியன், சிந்தாமணி, சைவம், ஸ்ரீவைஷ்ணவன், கமருஸ்ஸமான், நல்லறம், சமரச மார்க்கம், செல்வக் களஞ்சியம், விவேகானந்தன், மருத்துவன், விமோசனம், இந்தியர் ஒளி, தனவணிகன், தமிழ்க்கடல், சந்தி ரோதயம், சித்தர் களஞ்சியம், பாரதி, கொங்குமலர், திரு விளக்கு, சித்தன், கிராமதூதன், டைலர், தமிழர் நாடு, தமிழ்த் தென்றல், செல்வம் என்பன குறிப்பிடத்தக்க சிலவாகும்.

இவை பல துறைக் கட்டுரைகளைத் தாங்கி மக்கள் அறிவை வளர்த்தன. இவற்றுள் சைவம், வைணவம் போன்ற சமய இதழ்களும் இருந்தன. மருத்துவன், டைலர் போன்ற திங்கள் இதழ்கள் ஒவ்வொரு கலையைச்

சிறப்பாக வளர்க்கத் தோன்றியவை என்பதை அவற்றின் பெயர்களால் அறியலாம். பயனுள்ள இத் திங்களிதழ்கள் இந்த நூற்றுண்டில் தமிழ் உரைநடையை வளர்த்த சிறப்புடையவை.

ஞானபோதினி என்ற திங்கள் இதழ் சென்ற நூற்றுண்டின் இறுதியில் தோற்றுவிக்கப் பெற்றது. பேராசிரியர் வி. கோ. சூரியநாராயண சாத்திரியார் அவர்களும் திரு மு. சி. பூர்ணலிங்கம் பிள்ளை அவர்களும் கூட்டு ஆசிரியராக இருந்து இதனை நடத்தி வந்தனர். அவ்விருவரும், சாத்திரியார் மாணவர்களான ந. பலராம ஐயர், சலசலோசன செட்டியார் போன்ற அறிஞர்களும் அதனில் கட்டுரைகளும், நாடகங்களும் எழுதினர்.

பிற்காலத்தில் மறைமலையடிகள் எனப் பெயர்பெற்ற நாகை வேதாசலம் பிள்ளையவர்கள் நடத்திய திங்கள் இதழே **ஞானசாகரம்** என்பது. இப் பெரியார் தொடக்கத்தில் பிறமொழிச் சொற்களைக் கலந்தே தம் உரைநடையில் எழுதி வந்தார் என்பதற்கு 'ஞானசாகரம்' என்னும் இதழின் பெயரும் கடிதங்கள் சிலவும் கட்டுரைகள் சிலவும் ஏற்ற சான்ருகும்.

திரு. மு. ரா. கந்தசாமிக் கவிராயரும், திரு. எஸ். சாமிநாத ஐயர் என்பவரும் சேர்ந்து மதுரையில் **'விவேகபாநு'** என்னும் இதழை நடத்தினர். கவியரசர் பாரதியார் புதுவையிலிருந்து **'கர்மயோகி'** என்ற இதழை நடத்தினுர். வி. குப்புசாமி ஐயர் என்பவர் **'விவேகபோதினி'** என்ற இதழைச் சென்னையிலிருந்து வெளியிட்டார். பேராசிரியர் திருமணம். செல்வ கேசவராய முதலியார் அவ்விதழில் இலக்கணப் பாடங்களை எழுதி வந்தார். **'ஜனாபிமானி'** என்ற இதழ் ஜி. எச். வைத்ய

ஸ்ராமன் என்பவரால் நடத்தப் பெற்றது. அதனில் பல துறைக் கட்டுரைகள் இடம் பெற்றன.

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டத்தை உருவாக்கிய இருக்கம் ஆதிமூல முதலியார் என்பவர் 1915-இல் **'சைவம்'** என்னும் இதழைத் தோற்றுவித்தார். **ஸ்ரீ வைணவன்** என்பது வைணவ சமய வளர்ச்சிக்காகத் தோன்றிய இதழ். **'கமருஸ்ஸமான்'** என்பது திருநெல்வேலியிலிருந்து வெளியான முஸ்லிம் இதழ். **'ஸ்ரீ காளிதாசர்'** என்பது குடந்தையிலிருந்து வெளிவந்தது. இதனில் காளிதாசருடைய நூல்கள் தமிழில் மொழி பெயர்க்கப் பெற்றன. இ..து அம்முறையில் மிக்க பயனுடைய இதழாய் விளங்கியது.

'தமிழர் நேசன்' என்ற இதழில் அறிவியல் பாடங்கள் தொடர்ந்து வெளியாயின. திரு. கே. பி. யக்ஞேஸ்வர சர்மா என்பவர் அவற்றை எழுதினர். அவர் அறிவியல் செய்திகளைத் தமிழில் எடுத்துக் கூறுவதில் வல்லவர் என்பதை அக்கட்டுரைகள் வெளிப்படுத்தின. திருக்குறளை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து அழியாப் புகழ் பெற்ற திரு. வ. வே. சு. ஐயர் அவர்கள் **'பாலபாரதி'** என்ற திங்கள் இதழை நடத்தினர். அதனில் பல அரிய கட்டுரைகள் வெளிவந்தன.

திருநெல்வேலி சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 1923-இல் **'செந்தமிழ்ச் செல்வி'** என்னும் திங்களிதழைத் தோற்றுவித்து இன்றளவும் நடத்தி வருகின்றனர். புலவர் பெருமக்களும், தமிழ்—ஆங்கிலம் வல்லாரும் இதனில் இலக்கியம், ஆராய்ச்சி, அறிவியல், மொழி பெயர்ப்பு பற்றிய கட்டுரைகள் பலவும் எழுதி வருகின்றனர்.

கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் நடத்தி வரும் **தமிழ்ப் பொழில்'** என்னும் இதழும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளைத் தாங்கி உலவுகின்றது.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் அறுபது ஆண்டு களுக்கு மேலாக நடத்தி வரும் **'செந்தமிழ்'** என்னும் இதழில் தொடக்ககாலத்தில் அரிய ஆராய்ச்சிக் கட்டுரை கள் பல வெளிவந்தன.

'நச்சினார்க்கினியன்' என்ற திங்களிதழ் திருச்சிராப் பள்ளியில் 1923-இல் வெளியிடப் பெற்றது. சகோதரி வி. பாலம்மாள் என்பவர் அக்காலத்தில் பெயர் பெற்று விளங்கிய பெண்மணியார். அவா மகளிர் முன்னேற் றத்தைக் கருதி **'சிந்தாமணி'** என்னும் இதழை நடத்தி னார்.

சென்னையில் சித்த மருத்துவராயிருந்த பண்டிதர் எஸ். எஸ். ஆனந்தம் அவர்கள் **'மருத்துவன்'** என்ற திங்கள் இதழை 1928-ஆம் ஆண்டு தொடங்கி நடத்தி னார். சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார் அவர்கள் 1929-இல் திருச்செங்கோட்டிலிருந்து **'விமோசனம்'** என்னும் இதழைத் தொடங்கி நடத்தினார். நகரத்தார் நலத்தை முன்னிட்டுத் **'தனவணிகன்'** என்ற இதழ் 1931-இல் தொடங்கப் பெற்றது.

தென் ஆப்பிரிக்காவில் ஜி. ராமசாமி என்பவர் **'இந்தியர் ஒளி'** என்னும் இதழை 1930-இல் தொடங் கினார்.

பேராசிரியர் கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் **'தமிழ்க் கடல்'** என்ற இதழைத் தோற்றுவித்தார். அவ் விதழ் தமிழ்மொழி வளர்ச்சிக்கும், தமிழாசிரியர் முன்

னேற்றத்திற்கும் தொண்டு புரிந்தது. 'பாரதி' என்ற திங்கள் இதழ் 1932-இல் உத்தம பாளையத்திலிருந்து வெளி வந்தது. அதன்கண் அக்கால உலகச் செய்திகள் மிகுதியாக இடம் பெற்றன. 'சித்தர் களஞ்சியம்' என்ற இதழ் உடல்நலம் பற்றிய செய்திகளையும், மருத்துவச் செய்திகளையும் வெளியிட்டு வந்தது.

பெரும்புலவர் திரு. கி. வா. ஜகந்நாத ஐயர் அவர் களை ஆசிரியராகக் கொண்ட 'கலைமகள்' என்னும் இதழ் கடந்த 33 ஆண்டுகளாக நடைபெறுகின்றது. அதனில் டாக்டர் உ. வே. சாமிநாத ஐயர் அவர்கள், பெரும்புலவர் மு. இராகவ ஐயங்கார் அவர்கள், பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை அவர்கள் முதலிய அறிஞர்கள் அரிய கட்டுரைகளை எழுதினர். இன்றும் பலதுறை வல்லுநர் கவிதை, கட்டுரை, சிறுகதை, பெருங் கதை முதலியவற்றை அதில் எழுதி வருகின்றனர்.

விருதுநகர் வே. வ. இராமசாமி அவர்கள் 'தமிழ்த் தென்றல்' என்னும் திங்கள் இதழினை நடத்தினர். அதனில் தமிழ்ப் புலவர்களும், பலதுறை அறிஞர் களும் கட்டுரைகள் பல வரைந்தனர். பொருளாதார அறிவை நாட்டு மக்களுக்கு அறிவுறுத்த விரும்பிச் சென்னையில் 1960-இல் ஒரு திங்கள் தாள் தொடங்கப் பட்டது. அதன் பெயர் செல்வம்' என்பது. பொருளா தாரக் கலை பற்றிய கட்டுரைகள் அவ்விதழை அணி செய்தன.

இங்குக் கூறப் பெற்ற ஒவ்வொரு இதழிலிருந்தும் எடுத்துக் காட்டுத் தர நேரமில்லை. ஆதலால் ஞான போதினி, தமிழர் நேசன், செல்வம் என்னும் மூன்று இதழ்களிலிருந்து மட்டும் எடுத்துக் காட்டுகள் தரப் படுகின்றன. அவற்றைக் காண்க.

பேராசிரியர் பரிதிமாற் கலைஞர்

பேராசிரியர் வி. கோ. சூரியநாராயண சாத்திரி யார் என்ற பரிதிமாற் கலைஞர் (1970-1903) 33 ஆண்டுகளே இந்நிலவுலகில் வாழ்ந்தார். சாத்திரி யார் சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராய்ப் பணியாற்றிய போது, சில நாடக நூல்களையும், ஆராய்ச்சி நூல்களையும், தனிப்பாசுரத் தொகை என்னும் செய்யுள் நூலையும் இயற்றி நிலை யான புகழைப் பெற்றார். அவ்வளவு சிறு வயதில் புகழ் பெற்ற அவரைக் கண்டு, அக்காலப் புலவர் சிலர் பொறுமை கொண்டனர்; அவர்மீது பலவகைக் குறை களைக் கூறினர். சாத்திரியார் அப் பொறுமையாளரைப் பற்றி 1902-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் இரு பதாம் நாள் **ஞானபோதினியில்** வெளியான ஆசிரியர் பகுதியில் கீழ்வருமாறு எழுதினார். அவர் எழுதிய பகுதி உயர்ந்த செந்தமிழ் நடையில் அமைந்திருப் பதைக் காணலாம்.

> "பிறரது ஆக்கம் கண்டு பொறுமைப் படுவது இறப்பப் பெரியதோர் தீக்குணமாக, நூல்கள் முழங்குமாற்றை நன்கு படித்தறிந் தவரெனச் சொல்லிக் கொள்ளும் தமிழ்ப் புலவர் களே தமக்குள் அழுக்காறுடையரா யொழுகுதல் எவ்வாறு நேரிதாகும்?......ஒரு தமிழ்ப் புலவர் ஏதேனுமொன்றனாற் புகழ் நலம் பொலிந்து சிறந்துழி, அது கண்டு மகிழ்ச்சியடைதலே ஏனைய புலவர்கள் யாவர்க்கும் எய்தியதோர் கடப்பாடாகவும், அதனை மறந்து, பொறுமைப் பேய்க்காளாகி, அவரொடு மாறுபட்டு, அவ ரடைந்த நன்மையின் பயனைத் தாமும் நுகர

நீவேண்டி, அவருக்கு இடுக்கண் விளையத் தக்க வாறு ஏதேனுமொன்று செய்தல் எவ்வாறு ஏற்புடைத்தாகுமோ?....... ஒருவனுண்பதைத் தடுப்பது தவறுடைத்தன்றோ? வேண்டு மெனின், நன்னெறியானுணவு கிடைக்கு மாற்றை யுய்த்துணர்த்து ஒழுகாது பிறிதுபட வொழுகுதல் பைத்தியமே என்க.''

(வி. கோ. சூ. வரலாறு—பக். 109-110)

அசலாம்பிகை அம்மையார்

அக்காலத்தில் பெண்களை இளம் பருவத்திலே திருமணம் செய்வித்தல் பெரு வழக்காயிருந்தது. அறிஞர் பலர் இதனைக் கடிந்து சொற்பொழிவுகள் ஆற்றினர்; கண்டித்துக் கட்டுரைகள் எழுதினர். அங்ஙனம் எழுதியவருள் பண்டிதை அசலாம்பிகை அம்மையார் ஒருவராவர்.

அவ்வம்மையார் திருப்பாதிரிப்புலியூர் ஞானி யாரடிகளின் மாணவியார்; தமிழாசிரியர்; காந்தி புராணம் பாடிய சிறப்புடையவர். அவர், இளமைப் பருவத்துத் திருமணக் கொடுமை பற்றி ஞான போதினியில் வரைந்த கட்டுரையின் ஒரு பகுதி அவரது தமிழ் உரைநடைக்குச் சான்றாகும். அதனைக் கீழே காண்க.

"பால்ய விவாகக் கொடுமை

விவாகத்தின் பொறுப்பும் கருத்தும் இன்ன தென்பதே யறிந்து கொள்ள வயது வராத இளஞ் சிறுமிகளைப் பெற்றோர், தங்களிச்

சையின் வழி முன்பின் யோசியாமல் எவ்வகைப் பொருத்தத்தையும் எதிர்பாராது வயதேறப் பெற்ற ஒரு கிழமகற்கோ, அல்லது குணக் கேடற்கோ, அங்கவீனற்கோ கட்டித் தொலைப்பதாகிய பால விவாகமென்னும் பாதக விவாகத்தைக் காட்டிலும், வயது வந்தவர்களாய் விவாக பந்தத்தின் பொறுப்புத் தன்மையாவன வுய்த்துணர்ந்தவர்களாய்ப் பலவகையான பேரெண்ணங்களை ஊமர் கண்ட கனுப் போல் உட்கொண்டவர்களாய் விளங்கும் பெதும்பைப் பருவம் பெற்று முதிர்ந்த தகுந்த கன்னிகைகளை அக்கன்னிகைகளின் கருத்திற்கு நேர் முரணுகத் தகாத பேதைமைப் புதல்வர்க்கு மணம் புரிந்தளித்தல் அறக் கொடிது காண்! அறக் கொடிது காண்!!

(ஞானபோதினி, பக். 193)

தமிழர் நேசன்

கலைகள்

குளத்தில் ஒரு கல்லைப் போட்டால், கல் விழுந்த இடத்திலிருந்து அதைச் சுற்றி வட்டமான அலைகள் பரவுவதைக் காண்கிறோம். கல் விழுவதனுல் ஜலத்தில் உண்டாகும் கலக்கம் கரையை நோக்கி நாலா பக்கங்களில் பரவுகிறது. அப்படிப் பரவும் பொழுது குளத்தில் மிதக்கும் இலைகள், துரும்புகள் முதலியவை மேல்கீழாய் அசைகின்றனவே ஒழிய கரையை நோக்கிச் செல்வதில்லை. இதிலிருந்து அக்

கலக்கத்திஞல் பாதிக்கப்பட்ட நீர்த் துளிகள் கரையை நோக்கி ஓடவில்லையென்றும், அலை ரூபமே முன்னேறுகிறதென்றும் விளங்குகிறது. காற்றடிக்கும் போது வயலில் நெற்பயிர்களில் அலையோடுவதைப் பார்க்கலாம். பயிர் முனைகள் தம் இருப்பிடங்களை விட்டு பெயர்ந்தோடு கின்றனவா? அலையுருவம் மட்டுமே காற்று முகமாக முன்னேறிச் செல்லுகிறது. ஒரு நீண்டு கனத்த கயிற்றின் ஒரு முனையை ஓரிடத்தில் கட்டி மறுமுனையைக் கையில் இழுத்துப் பிடித்துக் கொண்டு கையை மேல் கீழாய்ச் சுண்டிஞல், கயிற்றில் அலையோடும் ஒரு ரூல்தடியின் மேல் ஓர் இரும்புக் கம்பியைச் சுருள்கள் ஒன்ருெடொன்று தொட்டுக் கொண் டிருக்கும்படி சுற்றித் தடியை உருவி விட்டால் ஒரு ஸ்பைரல் உண்டாகும். அதன் ஒரு முனையை ஓரிடத்தில் கட்டி மறுமுனையை இலேசாய் இழுத்துக் கையில் பிடித்துக் கொண்டு, ஒரு கத்தியால் முதல் மூன்று நான்கு சுருள்களை நீட்டு முகமாகத் தேய்த் தால், அதஞல் உண்டாகும் சுருள் நெருக்கமும் அதன் பிறகுண்டாகும் சுருள் விலாசமும் ஸ்பைரலில் பரவும்.''

—தமிழர்நேசன், 1921.

செல்வம்

'' எமது லட்சியம்

'செல்வம் எத்தனை யுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு'

என்று பாரதியார் பாடினார். அதற்குச் சான்று களாக விளங்குகின்றன நெய்வேலி பழுப்பு நிலக்கரியும், சேலம் இரும்புக் கனியும். இவ் விரண்டையும் பயன்படுத்தி இரும்பு உற் பத்தித் தொழிற் சாலையை நிறுவ முடியும் என்பது ஆராய்ச்சி நிபுணர்களின் தீர்ப்பு. இரும்பு, நிலக்கரி தவிர பெரும் தொழில் வளர்ச்சிக்கு அடிப்படைத் தேவை போதிய மின்சாரம். மின்சாரப் பற்றுக் குறையைப் போக்க அணுசக்தி உலை ஒன்றும் அமைக்கப் பட்டு விட்டால், பிறகு தமிழ் நாடெங்கும் தொழில் புரட்சியே!

"தனியார் துறையிலும், பொதுத் துறை யிலும் புதுப்புது தொழில்கள் வளர வளர, வாணிபம் பெருகி, நாம் பொருளாதார முன் னேற்றம் காண்போம். எல்லாவற்றுக்கும் நாட்டிலுள்ள எல்லோருமாகச் சேர்ந்து உழைக்க வேண்டும். உழைப்பால் உயர்ந் தோம் என்கிற பெருமைக்கு ஈடுதான் உண்டா?"

—செல்வம், மலர் 6, இதழ் 1.

கலைக்கதிர்

கலைக்கதிர் என்னும் திங்கள் இதழ் கோவை யிலிருந்து வெளிவருகிறது. இது அறிவியல், தமிழ் முதலிய பலதுறை வளர்ச்சிக்குப் பாடுபடுவது. அறிவி யற் கலை அறிஞர் பலர் எளிய தமிழ் நடையில் விளக்க மாக இதில் எழுதுதல் குறிப்பிடத்தகும்.

மாதம் இருமுறை இதழ்கள்

அக்காலத்தில் மாதம் இருமுறை இதழ்களும் வாழ்ந்து மறைந்தன. திரு. செல்வதுரைப் பிள்ளை என்பவரை ஆசிரியராகக் கொண்டு யாழ்ப்பாணத்திலிருந்து **"சூர சந்திரோதயம்"** என்னும் இதழ் 1909-இல் வெளிவந்தது. **'பிறருக்கு உதவி புரிதல்' 'சன்மார்க்கம்'** போன்ற அறவுரைத் தலைப்புகளைக் கொண்ட கட்டுரைகள் பல இதில் இடம் பெற்றன.

கந்தசாமித் தம்பிரான் என்ற பெரியார் **"சைவ பரிபாலனம்"** என்ற பெயருடன் ஓர் இதழை நடத்தி வந்தார். **"சன்மார்க்கம்"** என்ற பெயருடன் ஆங்கிலமும் தமிழும் கலந்த ஒரு இதழ் 1949-இல் நடைபெற்றது. அதில் சன்மார்க்கக் கட்டுரைகள் பல வெளிவந்தன. டாக்டர் சி. இலக்குவனார் அவர்கள் **"இலக்கியம்"** என்ற பெயருடன் 1947-இல் ஒரு இதழைத் தொடங்கினார்.

சிலம்புச் செல்வர்

அறிஞர் ம. பொ. சிவஞானம் அவர்களை அறியாதார் இரார். அப்பெரியார் தமிழ் இலக்கிய அறிவு சிறக்கப் பெற்றவர்; சிறந்த பேச்சாளர். அவர் பல உரை நடை நூல்களை எழுதியுள்ளார். அந்த அறிஞர் **"தமிழ் முரசு"** என்னும் திங்கள் இருமுறை இதழை நடத்தினார். இப்போது **'செங்கோல்'** என்னும் வார இதழினை நடத்தி வருகின்றார். இவ்விதழ்களின் வழி அவர் ஆற்றிவரும் தமிழ்த் தொண்டு தமிழ் உள்ளளவும் அழியாத பெருமையுடையது.

காலாண்டு இதழ்கள்

"சித்திரம்" என்ற பெயர் கொண்ட இதழ், மூன்று திங்களுக்கு ஒரு முறை ஈழ நாட்டிலிருந்து வெளிவந்தது. இதனில் கொழும்புச் சைவர்களின் நிலை, ஊன், உடை, ஆன்மபோதம், பத்தினிப் பெண்டிர் முதலிய தலைப்புக் களில் பயனுள்ள கட்டுரைகள் வெளியாயின.

சென்னை அரசாங்கக் கல்வித் துறையினர் 'மஹாராணி' என்னும் காலாண்டிதழை வெளியிட் டனர். இவ்விதழ் கல்வி பயிலும் பெண்களுக்கே உரியது என்னும் குறிப்புடன் வெளிவந்தது. அரிய பல கட்டுரைகள் இதில் இடம் பெற்றன.

அரசின் செய்தி இதழ் (Gazette)

வாரத்திற்கு ஒரு முறை வெளிவரும் அரசின் செய்தி இதழில் அரசின் விளம்பரங்கள், ஆணைகள், அவ்வப் போது மாற்றப் பெறும் சட்டங்கள், சட்டங்களின் உட் பிரிவுகள், கிராமக் கணக்குகள், பிற வெளியீடுகள் ஆகி யவை வெளிவருகின்றன. அவற்றுள் சில பொதுவாக வும் சில சிறப்பான ஒன்றைப் பற்றியனவாகவும் அமைந்துள்ளன. கடற் செலவு, உப்பு, அப்காரி, அபினி, ஏலம் முதலிய பல பொருள் பற்றிய விளம்பரங் களும் அடிக்கடி மாறும் சட்ட திட்டங்களும் பற்றிய அறிக்கைகட்குச் சில சான்றுகளை இங்குக் காணலாம். இவற்றில் வடசொற்கள், உருதுச் சொற்கள், பாரசீகச் சொற்கள் ஆகியவை இடம் பெற்றுள்ளன.

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட் ஸப்ளிமென்ட், மதராஸ்: செவ்வாய்க் கிழமை, மாலை 1931-ம் ஞு ஜூன் மீ 30 உ (30-6-1931)

1931—32 ம் ஞுத்திய மதராஸ் டவுன் கள்ளுக் கடைகளின் ஏல விளம்பரம்

1931-32 ம் ஞுத்திற்காக அடியில் குறிக்கப் பட்டிருக்கிற ஷெட்யூலில் கண்ட கள்ளுக் கடைகள் நாளது ஜூலை மீ 30 உ வியாழக்கிழமையன்று பகல் 12 மணிக்கு ஏலம் போடப்படும்.

ஷெட்யூல்

புது வண்ணாரப் பேட்டை - திருவத்தியூர் ஐரோட்டில், வடக்கே திருவத்தியூர் டோல் கேட்டுக்கும், தெற்கே பழனியப்ப செட்டி அரிசி மில்லுக்கும் இடையில், கடையை, கூடுமாகுல் திருவத்தியூர் ஐரோட்டுக்கு கிழக்கேயாவது மேற்கேயாவது 70 அடி தூரத்தில் வைக்க வேண்டியது.

பழைய வண்ணாரப் பேட்டை-திருவத்தியூர் ஐரோட்டில் வடக்கே மின்ட் சுப்பராயலு நாயுடு தெருவுக்கும், தெற்கே எல்லம்மன் கோவில் தெருவுக்கும் இடையில் கடைக்கு வழி திருவத்தியூர் ஐரோட்டில் இருக்கக் கூடாது......

குறிப்பு: இந்த குறிப்பிட்ட கடைகளை வேலை நாள்களில் காலை 11-30 முதல் மாலை 1 மணி வரையிலும், சம்பளம் பட்டுவாடா செய்யும் தினங்களில் காலை 11-30 முதல் மாலை 1 மணி

வரையிலும், சாயரட்சை 4 மணி முதல் 8 மணி வரையிலும், ஞாயிற்று கிழமை தினங்களி லும், பிரம்பூர் மில் விடுமுறை தினங்களிலும் காலே 11-30 முதல் மாலே 4 மணி வரை யிலுள்ள நேரத்தை தவிர பாக்கி காலங்களிலும் மூடிவிட வேண்டியது.

*   *   *

The Fort St. George Gazette,
Supplement to Part II
Madras, Tuesday Evening, Jan. 31, 1911.
(31 - 1 - 1911)
Salt, Abkari and customs Department

உப்பு, அப்காரி, அபினி சுதந்தரங்களே விற்பனே பண்ணுவதைப் பற்றிய நோட்டிஸ்.

இதனுல் தெரிவிப்பது என்னவென்ருல் 1911-ம் ௵ ஏப்ரல் ௴ 12 முதல் 1912-ம் ௵ மார்ச்சி ௴ 31 ௳ வரையிலுள்ள பன்னிரண்டு மாத காலத்திற்கு மதுவையும், அபினி கஞ்சா முதலிய லாகிரி வஸ்துக் களேயும் விற்பனே பண்ணுவதற்காக ஏற் படுத்திய சுயாதீனக் கடைகள் இத்தனே என்பதையும், அவைகளுக்கு ஏறபடுத்தப் பட்ட பிரதேச எல்லேகளேயும் கலெக்டர்கள் தங்கள் தங்களுடைய டிஸ்ட்ரிக்கு கெஜட்டு களில் பிரசித்தஞ் செய்வார்கள். மேலும் அந்தப் பிரதேசங்களில் விற்பனே பண்ணும்

சுதந்தரமானது எந்தத் தேதியில் எந்த இடத்திலே எந்த உத்தியோகஸ்தர்களால் ஏலம் போடப்படும் என்று மேற்படி கலெக்டர்களால் தெரிவிக்கப் படுகிறதோ, அந்தப்படி அடியிற் கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு பயிரங்கமாய் ஏலம் போடப்படும்.

* * *

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் (19-8-1941)
1-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்
மதராஸ், செவ்வாய்க் கிழமை மாலை, 1941-ம் ஹூ ஆகஸ்ட் மீ 19உ—ஹோம் டிபார்ட்மெண்ட்

மோட்டார் வண்டிகளைக் குறித்த 1940-ம் ஹூத்திய சென்னபட்டணத்து விதிகள்.

... ... 14 ஆ ஆக்டின் 7-வது பிரிவில் கண்ட (7) உட்பிரிவுக்குட் பட்டு, விண்ணத்தாரரானவர் அவருடைய விண்ணப்பம் எந்த வகையைச் சேர்ந்த வண்டியைக் குறிப்பிடுகிறதோ, அந்த வகையைச் சேர்ந்ததாயும் உபயோகிக்கக் கூடியதாயுமுள்ள ஒரு வண்டியைச் சவதரித்து, லைஸென்ஸ் கொடுக்கும் அதிகாரியாலாவது பரீட்சிக்கும் உத்தியோகஸ்தராலாவது குறிப்பிடக் கூடிய காலத்திலும் இடத்திலும் டிஷ பரிட்சைக்காக ஹாஜராக வேண்டும்.

* * *

Fort St. George Gazette — Part I A, 27, 1901
(27 – 8 – 1901)

விளம்பரம்

உதகமண்டலம்: 1901-ம் ௵ மே ீ 10௳

வெளியே போக நிச்சயித்திருக்கும் மரக்கலங்களைப் பெருவாரி வியாதிகளைக் குறித்த 1897-ம் ௵த்து ஆக்டின்படி பார்வையிடுவதைப் பற்றிய ரெகுலேஷன்கள்.

நீ. 71 : பெருவாரி வியாதிகளைக் குறித்த (1897-ம் ௵ த்து 3-வது) 1897-ம் ௵த்து ஆக்டின் 2-வது பிரிவைச் சேர்ந்த (3) குறிப்பிட்ட உட்பிரிவின்படி ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் தமக்குக் கொடுக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, ஆலோசனை சபையிலுள்ள சிறப்புற்றோங்கும் கவர்னரவர்கள் — சென்ன பட்டணம் ப்ரஸிடென்ஸியிலே ஹெல்த் ஆபீஸர்களால் நியமிக்கப் பட்டிருக்கிற ரேவுத் துறைகளை விட்டுப் போகும் சகல மரக்கலங்களும் நபர்களும் இதில் பின்னால் கண்டிருக்கும் ரெகுலேஷன்களுக்கு அங்காமி ஏற்பாடாக உட்பட்டிருக்க வேண்டுமென்று களிகூர்ந்து நிர்ணயிக்கிறார்கள். வெளியே போக நிச்சயித்திருக்கும் மரக்கலங்களைப் பார்வையிடுவதைக் குறித்து இப்போது அமுலிலிருப்பவைகளும், 1793-ம் ௵ நவம்பர் ீ 22௳ போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜட் 1-ம்

டங்கம், 1882—1383 வது பக்கங்களில் பிர சுரிக்கப் பட்டிருப்பவைகளுமான ரெகுலேஷன் கள். இந்த ரெகுலேஷன்களினுல் ரத்தாகும்...... .... ஆனுல் ஸிலோன் கவர்மென்டாரைச் சேர்ந்த மரக்கலங்கள் ஸிலோனுக்குக் குடி யேறும் ஆள்களை ஏற்றிக்கொண்டு சென்னபட் டணம் ப்ரஸிடென்ஸியிலுள்ள துறைமுகங்களை விட்டுப் போகுமானுல், அப்படிப்பட்ட சகல மரக்கலங்களின் விஷயத்திலும் வைத்திய பரிசோதனை அவசியமில்லை.

*　　　*　　　*

போர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட்
2-வது பாகத்தின் ஸப்ளிமென்ட்
மதராஸ்: செவ்வாய்க்கிழமை மாலை
1921-ம் ஹு (22-3-1921) மார்ச்மீ 22உ

இந்திய (டெரிடோரியல்) ஸ்தலப் படையை ஏற்படுத்துவதற்கும், ஐரோப்பீய ப்ரிடிஷ் குடி களல்லாத இதர நபர்களை அதில் தாக்கல் செய் வதற்காக நிபந்தனை ஏற்படுத்துவதற்குமான ஆக்ட்.

...... 14 (1) இந்தியாவில் மஹாராஜ சக்ர வர்த்தியவர்களுடைய சேனைகளின் கம்மாண் டர் — இன் — சீவ் என்னும் பிரதம சேனுபதி யானவர் இந்திய ஸ்தலப் படையின் ஒழுங்கான அமைப்புக்கும் அதில் வேலையில் அமர்ந்திருப் பவர்களுக்கும் சம்பந்தப்பட்ட சகல விவரங்

களுக்காகவும், தாக்கல் செய்யப்பட்ட நபர் களின் அலுவல்கள், ராணுவப் பயிற்சி, உடுப் புக்கள், முஸ்தீதுகள், வர்த்தனைகள், ரஜா ஆகிய இவைகளுக்காகவும் பொதுவாய் நிபந் தனை கண்டு, இந்த ஆக்டுக்கும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கும் பொருத்தமான ரெகுலேஷன்கள் செய்யலாம்.

* * *

போர்ட் ஸெய்ண்ட் ஜார்ஜ் கெஜெட்
IV – A – வது பாகத்தின் ஸப்ளிமெண்ட்
சென்னை, செவ்வாய்க்கிழமை மாலை
1951 – ம் வருஷம் ஆகஸ்டு மீ 28 உ

சென்னை ராஜ்யத்திலே சில நிலங்களுக்கு அபிவிருத்தி சகாயத் தொகைகள் அல்லது சேர்வுக் கட்டணங்கள் அல்லது இவ்விரண்டும் விதித்து வசூலிப்பதற்காக நிபந்தனை யேற் படுத்துவதற்கான மசோதா.

......5. 4-வது பிரிவின்படி செலுத்தப் படத்தக்க சகாயத் தொகைகளை நிச்சயிப்ப தற்கு முன், ஷை ஜில்லா கலெக்டர் அவற்றைச் செலுத்துவதற்குட்பட்டவர்களிடமிருந்து நிர்ண யிக்கப்படக் கூடிய விதமாக ஆட்சேபணைகளை யும் அபிப்பிராயக் குறிப்புக்களையும் வரவழைத்து அவர்களிடமிருந்து வரப்பெற்றுக் கொண்ட சகல ஆட்சேபணைகளையும் அபிப்பிராயக் குறிப் புக்களையும் பற்றி ஆலோசனை செய்ய வேண்டும்.

* * *

ஃபோர்ட் ஸெய்ன்ட் ஜார்ஜ் கெஜெட் 1ம் பாகம்–
பிரிவு 2-ன் அனுப்த அனுபந்தம்
சென்னை : புதன்கிழமை 1961-ம் ஞு ஜூலை 26உ
(ச்ராவண 4, 1883)

சென்னை மாநகராட்சி

.... ஷை அரசாங்க உத்திரவை யொட்டி, சென்னை நகரத்தின் 7ஆம் டிவிஷனில், டம்பிங் ஸ்டேஷன் தெருவில் 2 - எண் உள்ள கட்டிடம், பி. எச். ஆக்ட் 89-வது பிரிவின்படிக்கான குடியிருப்புப் பகுதிகளிலிருந்து விலக்கு செய்யப்பட்டுள்ளது என்றும், ஷை முருகன் வார்ப்படத் தொழிற்சாலையார் வேலை நேரங்கள் பற்றியும், குப்பைகளை அகற்றுவது பற்றியும், உலோக வார்ப்படத் தொழிலால் அண்டையில் வசிப்பவருக்கு இடைஞ்சல், வெறுப்பு தரக்கூடிய பேரிரைச்சல், அதிர்ச்சிகள் பற்றியும் சென்னை நகராண்மைக் கழகக் கமிஷனர் விதிக்கின்ற நிபந்தனைகளுக்கும் கட்டுப்பாடுகளுக்கும் உட்பட வேண்டும் என்றும் இதனுல் அறிவிக்கப்படுகிறது.

4

விளம்பரம், அழைப்பிதழ்

அணில் தொண்டு

அச்சுப் பொறிகள் மலிந்துவிட்ட இந்த நூற்றாண்டில் ஒவ்வொரு நாளும் வணிக விளம்பரங்களும் திருமண விளம்பரங்களும் நாடகம் படக்காட்சி விளம்பரங்களும் பல்வேறு வகை விளம்பரங்களும் கூட்ட அறிக்கைகளும் எண்ணிக்கையில் பெருகி வருகின்றன. இவற்றுள் பெரும்பாலானவற்றில் ஆங்கிலச் சொற்களும் பிற மொழிச் சொற்களும் மிகுந்து காணப்படுகின்றன. எழுத்துப் பிழைகள், சந்திப் பிழைகள், தவறான சொல்லாட்சி முதலியன இடம் பெற்றுள்ளன. ஆயினும், வானர வீரர் கட்டிய அணையில் அணிலுக்கும் பங்குண்டு என்பது போல, இந்த நூற்றாண்டு உரை நடை வளர்ச்சியில் இவற்றுக்கும் ஓரளவு பங்கு உண்டு என்பது உண்மையாகும். நேரச் சுருக்கம் கருதி சில எடுத்துக் காட்டுகள் மட்டும் இங்குத் தரப்பெறும்.

வங்கி விளம்பரம்

கடலின் பெருமை

அலைகடல், தன்னிடமுள்ள நீரை மேக மாக்கித் தென்றலின் உதவியால் அகிலத்துக்கு

மழையாகத் தருகிறது; நதிகளின் மூலம் திரும்ப வும் அந்நீரைப் பெற்றுப் பெருமகிழ்வெய்து கிறது.

இதைப்போல் நீங்களும் எவ்விதக் கஷ்ட நஷ்டமின்றி நாட்டிற்குப் பணிபுரியும் வாய்ப்பை அடையலாம்.

வீண் செலவைக் குறைப்பது;

சிறுகச் சிறுக ஒரு பாங்கியில் பணத்தைச் சேமித்து வைப்பது.

இப்படிச் சேமித்து வைக்கும் பணம் கடன் வடிவில் உழவர், உழைப்பாளர், வணிகர் முதலியவர்களுக்குப் பயன்பட்டு, கடைசியில் உங்களிடமே வந்து சேருகிறது, வட்டியுடன்!

ஸ்ரீ வெங்கடேஸ்வரா பேங்க் லிட்.,
செவ்வாய்ப்பேட்டை, சேலம்.

*

தேசபக்தர்களுக்கு நல்ல சமயம்
தமிழ் சுருக்கெழுத்துப் புத்தகம்
(தமிழ் ஷார்ட் ஹாண்டு)

இக்காலத்தில் ஷார்ட் ஹாண்டின் உப யோகத்தை அறியாதார் ஒருவருமில்லையென்று கூறலாம். கல்வியும் பத்திரிகைகளும் அதிகமாக அபிவிருத்தியடைவதற்குத் துணையாயிருப்பது ஷார்ட் ஹாண்டு புத்தகமாகும். ஷார்ட் ஹாண்டைக் கொண்டுதான் இவ்வுலக விவ காரங்கள் நடத்தப்படுகின்றதென்னலாம். உலகத்திலுள்ள எல்லாப் பாஷைகளிலும்

ஷார்ட் ஹாண்டு கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இங்கிலீஷ் ஷார்ட் ஹாண்டினால், இங்கிலீஷ் பாஷை மிகவும் அபிவிருத்தியடைந்திருக்கிறது. அரசியல் விஷயங்களிலும் இன்னும் பல துறைகளிலும் நம் தலைவர்கள் பிரசங்கம் செய்யும் போது அப்பிரசங்கத்தைத் தமிழ்ச் சுருக்கெழுத்தால் ஒரு வார்த்தை விடாமல் எழுதிக் கொள்ளலாம். கற்றுக் கொள்வதற்கு மிகவும் சுலபமானதாகும். இதில் பழகியவர்கள் பலர் பிரசங்கங்களை நிமிஷத்திற்கு 120 வார்த்தைகளாக எழுதி வருகிறார்கள். காலம் மாறி வருகிறது. இதைக் கற்றுக் கொள்ளுவோர் நல்ல வருவாய் பெறலாம். முந்துங்கள்! உடனே முந்துங்கள்!!

விலை ரூபா 4.0.0.

தபாற் கூலி வேறு

மானேஜர்,

'தேசபக்தன்'

இராயப்பேட்டை, சென்னை.

—தேசபக்தன் டிசம்பர், 12, 1919

அழைப்பு இதழ்கள்

திருமண அழைப்பிதழ்கள், சமய விவாதக் கூட்ட அழைப்பு இதழ்கள், பல திறப்பட்ட கழகங்களின் திறப்பு விழா அழைப்பிதழ்கள், கட்டடம்—கடை—வணிக நிலையங்கள் ஆகியவற்றின் திறப்பு விழா அழைப்பிதழ்கள், புதுமனை புகுதல் பற்றிய அழைப்பிதழ்கள், இறந்தவர் பொருட்டு நடைபெறும் நிகழ்ச்சிகளுக்குரிய அழைப்பிதழ்கள், பூப்பு நீராட்டு விழா

அழைப்பிதழ்கள், ஆண்டு விழா அழைப்பிதழ்கள், மாநாட்டு அழைப்பிதழ்கள், பலவகைச் சொற் பொழிவுகள் பற்றிய அழைப்பிதழ்கள், கோவில் விழா அழைப்பிதழ்கள் எனப் பலவகை அழைப்பிதழ்கள் இக் காலத்தில் பெருகி வருகின்றன. இவை அனைத்தும் உரைநடையில் எழுதப் பெறுவனவாகும். இவற்றுட் சில புலவர்களால் எழுதப் பெறுவன ஆதலால் பிழை யின்றிக் காணப்படுகின்றன. எஞ்சியவற்றுள் முன் சொன்னவாறு எழுத்துப் பிழைகள், இலக்கணப் பிழை கள், தவறான சொல்லாட்சிகள் முதலியன மலிந்து கிடக் கின்றன. ஆயினும், இவை திருத்தம் பெறும் நல்ல காலத்தை எதிர்பார்த்து இவற்றை வரவேற்க நாம் கடமைப்பட்டுள்ளோம். இவற்றுள் ஒவ்வொன்றுக்கும் ஓர் எடுத்துக்காட்டு தருவதாயினும், இடம் மிகும் என்றஞ்சி, இங்கு இரண்டு தரப் பெற்றுள்ளன.

சமய விவாதக் கூட்ட அறிக்கை

ஏகாங்கி சுவாமிகள் பாஷ்யம் அய்யங்கார்

நிகழும் 1921-ஆம் ஸ்ரீ பிப்ரவரிமீ 23உ புதன்கிழமை திருப்பாதிரிப் புலியூர் பெருமாள் சந்நிதியில் நடைபெற்ற "ஸமாச்ரயணம் சர் வாதிகாரம்" என்னும் விஷய உபந்யாசத்தில் திருவயிந்திரபுரம் ஸ்ரீமாந் பாஷ்யமையங்காரவர் கள் சொன்ன விஷயங்களைப்பற்றி 27 - 2 - 21 ஞாயிற்றுக்கிழமை பகல் 2 மணி தொடங்கி ஷை இடத்தில் பூர்வபக்ஷம் செய்யப்படும்.

இங்ஙனம்,

திருப்பாதிரிப் புலியூர், 24—2—1921

பு. வரதராஜுலு நாயுடு, அக்ராசனாதிபதி

ஸ்ரீவரலட்சுமி விலாசம் பிரஸ், நெல்லிக்குப்பம்

திரு. வி. க. நினைவு நாள்

தமிழ் வாழ்க

தொல்காப்பியர் கழகம், தஞ்சாவூர்

திரு. வி. க. நினைவுநாள் — மகளிர் அரங்கு

அன்புடையீர்,

திருவள்ளுவராண்டு 1996 மார்கழி 25-ஆம் நாள் (9 - 1 - 66) ஞாயிறு காலை, மாலை ஆகிய இரு வேளைகளிலும் தஞ்சை அரண்மனை இசை மன்றத்தில் திரு. வி. க. நினைவு நாள் — மகளிர் அரங்கு நிகழ்ச்சிகள் கோயம்புத்தூர், அவிநாசிலிங்கம் மனையியல்

கல்லூரி முதல்வர்

டாக்டர் இராசம்மாள் தேவதாசு அவர்கள்

எம். ஏ., எம். எஸ்ஸி., பிஎச். டி. (ஒகியோ)

தலைமையில் நிகழும்.

அதுபோது

திருமதி. செயலக்குமி வேதநாராயணன் அவர்கள்
(தஞ்சை மாவட்ட ஆட்சித்தலைவர் துணைவியார்)
கருத்தரங்கைத் துவக்கி வைப்பார்கள்.

காரைக்குடி, மீ.சு. உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர்

கவிஞர் முடியரசன் அவர்கள்
தலைமையில் கவியரங்கம்

மற்றும்

திரு.வி.க. படத்திறப்பு, நூல் கண்காட்சி, மனையியல் கருத்தரங்கு முதலியன நடைபெறும்.

தாங்கள் தங்கள் குடும்பத்தினர் (மகளிர்) நண்பர் சூழ நிகழ்ச்சிகளிற் கலந்து கொள்ளவும், எங்கள் முயற்சி கட்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவும் வேண்டு கின்றோம்.

இங்ஙனம்,

தஞ்சாவூர், தொல்காப்பியர் கழகத்தார்
3—1—66

சிறப்புக்குறிப்பு : எளிய தோற்றமும் இனிய தமிழ்ப் பண்பாடும் விளங்கும் வண்ணம் மகளிர் பெருமனவிற் கூட்டத்திற் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டு கின்றோம்.

5

கடிதங்கள்

மறைமலையடிகள் கடிதங்கள்

மேனாடுகளில் தந்தை மகனுக்கு எழுதிய கடிதங்கள், நண்பர் ஒருவருக்கொருவர் எழுதிய கடிதங்கள், அரசியல் தலைவர்கள் எழுதிய கடிதங்கள் போன்றவை சிறந்த இலக்கிய நூல்களாக மதிக்கப் பெறுகின்றன. ஆயின், நமது தமிழில் பழைய சீட்டுக்கவிகளைத் தவிர இலக்கியத் தன்மை வாய்ந்த கடிதங்கள் கிடைக்கவில்லை. இக்குறையை மறைமலை அடிகள் எழுதி வெளியிட்ட "கோகிலாம்பாள் கடிதங்கள்" என்னும் நூல் போக்குகின்றதென்னலாம். மேலும் இந்நூல், கதை அமைப்பாகவும் தொடர்ச்சியாகவும் அமைந்துள்ளது.

கோகிலாம்பாள் என்னும் நங்கை நல்லாள் தன் வரலாற்றைக் கடித வாயிலாகத் தன் காதலனுக்கு எழுதும் முறையில் இக்கடிதங்கள் அமைந்துள்ளன. இவை, படிப்பவர்க்கு நல்லறிவும், தமிழ் நடையில்

ஆர்வமும் உண்டாக்க வல்லவை. ஒரு கடிதத்தின் பகுதி ஒன்றினைக் கீழே காண்க:

கோகிலாம்பாள் கடிதங்கள்

"உமது கடிதத்தைப்படித்துப் பார்க்க என் மனம் துடிதுடித்தது. என் நினைவெல்லாம் உமது கடிதத்தின் மேற்குவிந்து நின்றது. நிலத்தில் புதையலாக வெட்டி எடுத்த ஒரு செப்புப் பானையை மறைவான ஓர் இடத்தில் கொண்டு போய் வைத்தவன் அப்பானையின் உள்ளேயிருப்பது இன்னதென்று அறிய யாருமில்லாத சமயத்தை நாடுவது போல நானும் உமது கடிதத்தின் உள்ளிருப்பது இன்னதென்று உணரப் பதை பதைத்தேன், தங்கை அப்பறம் போனதும், நான் படிக்கும் புத்தகங்களில் ஒன்றை எடுத்து அதனுள் உமது கடிதத்தைப் பிரித்து வைத்துப் பார்த்தேன், அதனைப் படிக்கும் போதே என் உடம்பெங்கும் அனன்றது; என் கண்கள் மயங்கின; என் உயிரும் உணர்வும் என் வசப் படாமற் போய் விட்டன."

(பக். 3)

* * *

'உமர்கயாம்' என்னும் நூலைத் தமிழில் மொழி பெயர்த்த திருவாளர் வி. எம். ஷம்ஷீடின் அவர்களுக்கு (316, Old Moor St, Colombo) முகவுரை தருவது பற்றி மறைமலையடிகளார் எழுதிய கடிதம் காண்போம்.

மறைமலையடிகள்
ஆசிரியர்—அறிவுக்கடல்

டி. எம். அச்சுக்கூடம்,
பல்லாவரம், 29-1-1936

அன்புள்ள ஐயா,

தாங்கள் 26-ஆம் நாளும் அதற்கு முன்னரும் எழுதிய கடிதங்கள் கிடைத்தன. ஓய்வின்மையால் உடனே கடிதம் எழுதாமை குறித்து வருந்துகிறேம்.

தங்கள் மொழி பெயர்ப்பு நடைதூய தமிழில் இல்லாதது கண்டு ஏமாற்றமடைந்தோம். முதல் பதிப்பு முதற் செய்யுளிலேயே மத்தி, நட்சத்திரம், நூபுரம் போன்ற வடசொற்களும், இரண்டாம் பதிப்பில் தூரம், சூரியன், ஆகாயம், உதித்தது, பிரகாசித்தது, நட்சத்திரம், கிரணம் போன்ற வடசொற்களும் மலிந்து கிடக்கின்றன.

எனவே, தங்களது இந்நூலுக்கு முகவுரை தரமுடியாமை குறித்து வருந்துகிறேம். மணிப் பிரவாள நடை நூலுக்கு ஆக்கம் அளிப்பது எம் குறிக்கோளுக்கு மாறுன செய்கை.

மேலும், மொழிபெயர்ப்பில் இலக்கண வழு மிகுந்துள்ளது; ஆற்றெழுக்கான மொழி பெயர்ப்புமன்று. கையெழுத்துப் படியைக் கொடுத்திருந்தீர்களாகுல், யாம் அதைத் தூய தமிழாக்கியிருப்போம். அச்சு நூலான பின்னர் யாம் ஒன்றும் செய்ய இயலாமைக்கு மன்னித்திடுக. எம்பாற் பிழை நோக்கிக் கொள்ளற்க.

தங்கள் சிறந்த நலனை விரும்பும்
உண்மையுள்ள
மறைமலையடிகள்

வேறு கடிதங்கள்

இந்த நூற்றுண்டின் முற்பகுதியில் சைவர்க்கும் வைணவர்க்கும் சமயச் சொற்போர்கள் நடைபெற்றன. அவற்றில் ஈடுபட்ட நல்லறிஞர்கள் ஒருவரையொருவர் தாக்கி எழுதிய கடிதங்கள் சிலவாகும். ஒரே சமயத்தைச் சேர்ந்த வைணவருள் பார்ப்பனர்—பார்ப்பனர் அல்லாதார் என்ற வேறுபாட்டின் அடிப்படையில் சில பூசல்கள் ஏற்பட்டன. பார்ப்பனர் அல்லாத வைணவர் சமய நூல்கள் எவ்வளவு படித்தவராக இருப்பினும், அவர் வைணவர்க்குச் சமாசிரயணம் செய்யலாகாது என்பது பார்ப்பனர் கருத்து. சமாசிரயணம் என்பது, ஆச்சாரியன் சங்கு சக்கர முத்திராதானம் செய்து, வைணவத்துவம் அளிக்கும் சடங்கு ஆகும்.

சிதம்பரத்தை அடுத்த புவனகிரி ஏகாங்கி சுவாமிகள் நாயடு மரபிற் பிறந்தவர்; தக்க பெரியவர்களிடம் சமாசிரயணம் பெற்றவர்; இல்லறத்திலிருந்து துறவு பூண்டவர். அப்பெரியார் தமிழகம் முழுமையும் சுற்றி வைணவச் சொற்பொழிவுகள் செய்தார்; பலர்க்குச் சமாசிரயணம் செய்தார்; வைணவப் பார்ப்பனர் இதனை வன்மையாகக் கண்டித்தனர். ஏகாங்கி சுவாமிகள் அவர்களுக்கு அஞ்சாது தமது சமயப் பணியைத் தொடர்ந்து ஆற்றி வந்தார். 1951-ஆம் ஆண்டு திருப்பாதிரிப் புலியூர்ப் பெருமாள் சந்நிதியில் நடைபெற்ற கூட்டத்திற்குத் திரு. வரதராசுலு நாயுடு என்னும் பெரியவர் தலைமை தாங்கினர். அப்பொழுது சொற்பொழிவாற்றிய புவனகிரி ஏகாங்கி சுவாமியவர்கள், சமாசிரயணம் என்பதில் சர்வாதிகாரம் இருத்தல் ஆகாது என்று சூத்திர மேற்கோள்களைக் காட்டி அரிய சொற்பொழிவாற்றினர். அப்போது அக் கூட்டத்திலிருந்த திருவகீந்திரபுரத்தைச்

சேர்ந்த கச்சிக்கடாம்பி பாஷ்யம் ராமானுஜாசாரியார் என்பவர் சில தடைகளை எழுப்பினார். உடனே அவைத் தலைவர் எழுந்து, '6-3-21-இல் நடைபெறும் தனிக் கூட்டத்தில் தடைவிடைகளை வைத்துக் கொள்ளலாம்' என்று தெரிவித்தார். ஆசாரியாரும் ஏகாங்கி சுவாமிகளும் அதற்கு உடன்பட்டனர். இது பற்றிய அழைப்பிதழும் அச்சிட்டு வெளிப்படுத்தப்பட்டது. அதனைக் கண்ட ஆச்சாரியார் அவர்கள் அறிக்கை ஒன்றை வெளியிட்டார். அதனைக் கீழே காண்க.

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

நிகழும் 1921 பிப்ரவரி மீ 23உ புதன் கிழமை திருப்பாதிரிப்புலியூர் பெருமாள் சந்நிதியில் நடைபெற்ற 'ஸமாச்ரயணம் ஸர்வாதிகாரம்' என்னும் விஷய உபந்யாசத்தில் ஸ்ரீமான் பாஷ்யமையங்காரவர்கள் சொன்ன விஷயங்களைப் பற்றி 6-3-21 ஞாயிற்றுக் கிழமை பகல் 2 மணி தொடங்கி ஷை இடத்தில் பூர்வபக்ஷம் செய்யப்படும் என்று கண்டிருக்கும் ஓர் நோட்டீஸ் எனக்குக் கிடைத்தது. மேற்கண்ட பிப்ரவரி 23உ உபந்நியாசத்தில் முதல் உபந்யாசகர்த்தாவான ஸ்ரீ புவனகிரி ஏகாங்கிகளே தனக்கு ஸம்ஸ்க்ருத பாண்டித்யமில்லை என்று சபையில் ஒப்புக் கொண்டிருப்பதாலும், சபாக்ராசனாதிபதியும் ஷை ஏகாங்கிகள் சிஷ்யராயிருப்பதாலும் ஷை உபந்யாச கண்டன கர்த்தாவான யான் கண்டனம் செய்யக் காலம் போதாமல் நிறுத்தினதுமன்றி ஸம்ஸ்க்ருத திராவிட உபய பாண்டித்யமுள்ள ஓர் பொதுமத்யஸ்தர் முன்

னிலையில் மறுசபையில் உபந்யசிப்பதாய் ஒப்புக் கொண்டிருப்பதாலும் தகுந்த பண்டிதரான மத்யஸ்தர் முன்னிலையில் எந்த நேரத்திலும் வாதிக்கத் தயாராயிருக்கிறேன்.

ஆகையால் ஷை உபந்யாச விஷயத்தை ஒரு தலைப் பக்ஷமாய் நோட்டிஸில் கண்டபடிக்கு நாளைய தினம் கூடப் போகிற சபையில் முடிவு செய்வது நியாயத்துக்கு விரோதமாகும். பதிலை எதிர்பார்க்கிறேன்.

இங்ஙனம்,
கச்சிக்கடாம்பி
5-3-21. பாஷ்யம் ராமாநுஜாசாரியார்
திருவஹிந்தபுரம்

இந்த அறிக்கையைக் கண்ட திரு. வரதராசலு நாயுடு அவர்கள், நடந்த நிகழ்ச்சிக்கு மாறுபடச் செய்தி திரித்துக் கூறியிருப்பதைக் கண்டு மனம் வருந்தினர்; ஆயினும், முன்பு குறிக்கப் பெற்ற 6-3-21-இல் கூட்டம் நடைபெறுவதாகத் திரு. ஆசாரியருக்கு அறிவித்து விட்டார். அவ்வறிவிப்புக் கிடைத்ததும் திரு. ஆசாரியார் கூட்டம் நடைபெறும் அன்று (6-3-21) திரு. நாயுடு அவர்களுக்குக் கீழ்க்காணும் கடிதம் ஒன்றை வரைந்தார்.

ஸ்ரீமுகம்

"ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடவர்கட்குத் தெரிவிப்பது யாதெனில், 6-3-21 ஆகிய உபந்யாச டயம் ஒப்புக் கொள்ளப் படவில்லை, பின்னை 23-2-21-இல் நடந்த உபந்யாச முடி

வில் நான் வெளியில் அலைந்து கொண்டிருப்ப தால், டயம் நான் தெரிவிக்கிறேன் என்று சொன்னது தவிர வேறில்லை. நேத்தியதினம் எங்கள் நோட்டிசின்படி இன்று நடத்துவது நியாயமல்ல, ஒரு தலையாய், தகுந்த மத்யஸ் தாளில்லாமல் நடத்தினால், நடந்ததாக பாவிக் கப்படமாட்டது.''

நேருவின் கடிதங்கள்

இந்திய முடிசூடாமன்னராய் விளங்கியவரும் 'இணையற்ற அரசியல் அறிஞர்' — 'உலக அமைதியை நாடுவோர்' என்று உலகத்தவரால் பாராட்டுப் பெற்ற வருமான பண்டித ஜவாகர்லால் நேரு அவர்கள், தம் மகளாரான இந்திரா (காந்தி) அம்மையாருக்கு எழுதிய கடிதங்கள் உலகப் புகழ் பெற்றவை. அவை உலக வர லாற்றையும், மனித இன வளர்ச்சியையும், இந்திய நாட்டின் பழம் பெருமையையும், உலகத்திற்கும் இந் நாட்டிற்கும் தேவைப்படும் நல்ல கருத்துக்களையும் கொண்டவை. அக்கடிதங்கள் பதினைந்து ஆண்டு களுக்கு முன்னே தமிழில் மொழி பெயர்க்கப் பெற்று நூல் உருப்பெற்றன. அவற்றை விரும்பிப் படித்து உலக அறிவைப் பெற்றவர் பலராவர். அவை இந்த நூற்றாண் டுத் தமிழ் உரைநடை வளர்ச்சியில் பங்கு கொண்டன என்னலாம்.

தென்றல்

கணவர் தொழில் பற்றி வேற்றூர்க்குச் சென்றார். அங்கு அவர் சிறிது காலம் தங்குதல் நேர்ந்தது. அப் பொழுது அவரது பிரிவால் வாட்ட முற்ற அவர் மனைவி

அவருக்குப் பல கடிதங்கள் எழுதியதாகப் பத்தாண்டு கட்கு முன்பு "தென்றல்" என்னும் வாரத்தாளில் சில கடிதங்கள் வெளிவந்தன. அவை சிறந்த இலக்கியக் கடிதங்களாகக் கருதத் தக்கவை. அவற்றுள் ஒன்றைக் கீழே காண்க. அம்மனைவி இக்கடிதத்தில் தொல்காப்பி யர் நூற்பாவை எடுத்துக்காட்டி, பிரிவு நிலை பற்றிச் சங்கப் புலவர்கள் பாடிய பாக்களின் பொருளை உணர்ந்து பாராட்டி எழுதியிருத்தல் படிக்கப் படிக்க இன்பம் தருவ தாகும்.

"

கணவர்க்குக் கடிதம்

அன்பரே, வணக்கம்.

சங்க இலக்கியத்தைப் பயின்ற தாங்கள்—காதலன் பிரிவால் காதலி வருந்தும் கட்டத்தை உணர்ந்த தாங்கள், எப்படி அத்தான், இவ்வளவு நாள் பிரிந்திருக்க மனம் வந்தது? இன்றிருக்கும் என்நிலை தாங்கள் அறிவீர்களா?

> "வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல்,
> ஆக்கம் செப்பல், நாணுவரை இறத்தல்,
> நோக்குவ எல்லாம் அவையே போறல்
> மறத்தல், மயக்கம், சாக்காடு என்றுஅச்
> சிறப்புடை மரபினவை......"

என்று ஒல்காப் புகழ்த் தொல்காப்பியர், புணர்ந்து பிரிந்த மாந்தர்தம் உள்ள நிலைமையை விளக்க வகுத்த இலக்கணத்திற்கு இவண் என் நிலைமை இலக்கியமாக இருக்கிறது. அன்பரே, முன்பு பண்டை இலக்கியத்தைப் பயின்ற காலை,

இவை போன்ற கவிதைகள், ஆசிரியன், சொல்லடுக்குகள் என்று எண்ணினேன்; ஆனால் நான் பட்ட அனுபவத்தினால் உண்மையை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று உணர்ந்து கொண்டேன்; பண்டைக் கவிஞர்கள் விஞ்ஞான மனம் கொண்டவர்கள்; உள்ளதை உள்ளபடியே தெள்ளிய நடையில் அள்ளித் தந்த வள்ளல்கள்; அப் பண்டைக் கவிஞர்கள் வாழ்க!

இப்படிக்கு,

கமலா

—தென்றல், 1 – 2 – 1956.

கீழ்வரும் கடிதங்கள் பெரும்புலவர் திரு. மு. இராகவையங்கார் அவர்களுடைய ஆராய்ச்சி நூல்களைப் பாராட்டி அவ்வப்போது புலவர் பெருமக்கள் எழுதிய கடிதங்களாகும். அவை அப் பெரியாரின் ஆராய்ச்சித் திறனையும் கடிதம் எழுதிய அறிஞர்களின் உரை நடையையும் நமக்குத் தெரிவிப்பவை. அவை பேராசிரியர் மு. இராகவையங்கார் நூலான "ஆராய்ச்சித் தொகுதி"யின் முற்பகுதியில் இணைக்கப் பெற்றுள்ளன.

" தேசிய செந்தமிழ்க் கவிஞர்

ஸ்ரீ. C. சுப்பிரமணிய பாரதியவர்கள்

"இந்தியா" ஆபீஸ், சென்னை. (18-10-1907)

அநேக நமஸ்காரம். ஒவ்வொரு காலத்துச் சோம்பர் மிகுதியாலும் ஒவ்வொரு காலத்தே முயற்சி மிகுதியாலும் தங்களைப் போன்ற

பெரியார்களுக்கு அடிக்கடி கடிதங்கள் எழுதிப் புனிதத் தன்மை பெறுவதற்கு அவகாசமில்லாத வனாய் இருக்கிறேன்.

சென்ற முறை வெளிவந்த "செந்தமிழ்"ப் பத்திரிகையிலே தாங்கள் எழுதியிருக்கும் "வீரத் தாய்மார்கள்" என்ற அற்புத உரையைக்கண்டு மகிழ்ச்சி பூத்து அம் மகிழ்ச்சியைத் தமக்கு அறி விக்கும் பொருட்டாக இக் கடிதம் எழுதலா னேன்.

தங்கள் பாண்டித்தியத்தை நான் புகழ வர வில்லை. அதனை உலகமறியும். தங்களுடைய பரிசுத்த நெஞ்சிலே எழுந்திருக்கும் ஸ்வதேச பக்தி என்ற புது நெருப்புக்குத்தான் நான் வணக்கம் செய்கிறேன்.

'காலசக்கரம் சுழல்கிறது' என்று அவ் வுபந்நியாசத்தின் இறுதியிலே குறிப்பிட்டிருக்கி றீர்கள். ஆம்! காலசக்கரம் சுழலவே செய் கின்றது. அச் சுழற்சியிலே சிறுமைச் சேற்றில் ஆழ்ந்து கிடந்த நீசபாரதம் போய் மஹா பாரதம் பிறக்கும் தறுவாய் வந்துவிட்டது.

தாழ்நிலை என்ற இருளிலே மூழ்கிக் கிடக் கும் பாரதவாசிகளுக்கு மஹாபாரதம் காட்டத் தோன்றியிருக்கும் சோதிகளிலே தமது நெஞ்சிற் பிறந்திருக்கும் நெருப்பு ஒன்றாகும்; அதற்கு வணக்கம் செய்கிறேன். அது வளர்க."

*　　*　　*

மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்
ஸ்ரீ மு. ரா. கந்தசாமிக் கவிராயர் அவர்கள்
மதுரை 'விவேகபானு பத்திராதிபர் (5-8-1912)

"அன்பார்ந்த ஐயா! வணக்கம். தாங்கள் 'தொல்காப்பியப் பரிசு' பெற்ற விஷயத்தில் எனக்கு மகிழ்ச்சி புதிதாகத் தோன்றவில்லை. தங்கட்கே கிடைக்கும் என்பதை முன்னரே அறிவேன். தாங்கள் எழுதியிருப்பதாக அறிந்தவுடன் பரிசுத் தொகையைத் தங்கட்கு அனுப்பி விடாது, இதுகாறும் ஆராய்ச்சி செய்தது சரியாகத் தோன்றவில்லை. நிச்சயமானவற்றில் இங்ஙனமே தோன்றுவது உலகியல் யென்பதைச் சீதாபிராட்டியின் திருமணச் சமயத்தில்,

"வள்ளல் மனத்தை மகிழ்ந்தன னென்றால்
கொள்ளென முன்பு கொடுப்பதை யல்லால்
வெள்ள மனைத்தவன் வில்லை யெடுத்தோர்
பிள்ளைமு னிட்டது பேதைமை யென்பார்"

எனக் கூறுமாற்றாற் காண்க. உண்மைப் புலமைக்கு எக்காலத்தும் யாண்டும் மதிப் புண்டென்பதற்கு ஐயமில்லை."

* * *

ஸ்ரீ ந. மு வேங்கடசாமி நாட்டார் அவர்கள்
தமிழ்ப்பண்டிதர், S. P. G. காலேஜ், திருச்சி (22-7-1915)

"மதிநுட்பம் நூலோடுடைய பெருந்தகையீர்! யான் தங்கள்பால் அறிவித்துக் கொள்வ

தோன்றுண்டு. தாங்கள் எழுதியுள்ள வேளிர் வரலாற்றினை மாணுக்கர்களுக்குப் பாடம் நடத்திய காலத்தில் அதன் முடிந்த கருத்துக்கள் என்னறிவிற்கு மாருகத் தோன்றினமையின், அதனையாராய்ந்து ஓரமயம் ஒரு வியாசமாக எழுத நேர்ந்தது. சமீப காலத்தில் அதுவும் ஓர் சிறு புத்தக வடிவில் அச்சிடப் பெற்றது. இன்று தங்கட்கு ஓர் பிரதி அனுப்பியுள்ளேன். எனக்குத் தோன்றியவைகளை உள்ளவாறு வெளிப்படுத்த வேண்டுமென்னும் கருத்தானன்றி வேறு எக் காரணத்தானும் அது அது எழுதப்படவில்லை. யான் எழுதியது பிறர்க்கெல்லாம் ஒப்ப முடிவதாம் என்றும் நினைக்கின்றேனில்லை. தங்கள் கொள்கைகளை மறுத்தெழுதிய காரணத்தால் யான் தங்கள் ஆராய்ச்சித் திறத்தையும் தாங்கள் தமிழுலருக்குச் செய்யும் பெரு நன்றிகளையும் அறியாதவனென்ருவது, தங்கள் பால் பெருமதிப்பு வைத்திராதவனென்ருவது தாங்கள் எண்ணி விடாதிருக்க வேண்டுமெனப் பெரிதும் வேண்டுகிறேன். தாங்களும் தங்களைப் போன்றவர்களும் பரீக்ஷை செய்து சன்மானிக்கப் பெற்ற மாணவர்களில் ஒருவனுகிய நான், தங்கள் வியாசத்தை ஆராய்ந்தெழுதியது தவருயிருப்பினும், தங்கட்கு உவப்பாயிருக்குமென்பது என் கருத்து. தங்களுடைய அன்பும் ஆசீர்வாதமும் என்றும் விரும்புகின்றேன்.''

* * *

ராவ் பஹதூர்
கே. எஸ். ஸ்ரீநிவாச பிள்ளையவர்கள்
தஞ்சாவூர் (11-7-1922)

''மகாராஜ ராஜஸ்ரீ மு. இராகவையங்கார் சுவாமிகள் அவர்களுக்கு ஸ்ரீநிவாசன் அநேக கோடி நமஸ்காரம்.

''க்ஷேமம். தாங்கள் அன்புடன் அனுப்பிய கடிதமும் புத்தகமும் வரப் பெற்று மகிழ்வடைந்தேன். மண்டல புருடர் காலத்தை ஆராய்ச்சி செய்து தாங்கள் எழுதியிருக்கும் பத்திரிகை வியக்கத் தக்கதே. நான் எழுதிய புத்தகத்தில் ஸ்ரீமான் குப்புசாமி சாஸ்திரிகளோடு ஒத்து கி. பி. 10-ஆம் நூற்றுண்டினரென்று எழுதியிருக்கிறேன். தங்களுடைய சிறந்த ஆராய்ச்சிக்குப் பின்னர் என் கொள்கை புனராலோசனைக்குரியதே. 'தமிழ் வரலாறு' பிற்பகுதியின் முற்பாகம் தங்களுடைய பார்வைக்கு இற்றைத் தினம் அனுப்பியிருக்கிறேன். அது முழுவதையும் தாங்கள் படித்துத் தங்களுடைய அபிப்பிராயத்தை எழுதப் பிரார்த்திக்கிறேன். நான் எழுதியிருப்ப தொன்றையும் முடிவுரை என்று சொல்வதற்கில்லை; சரித்திர ஆராய்ச்சி மேற்செல்லச் செல்ல மாற்ற வேண்டியவைகளும் கூட்ட வேண்டியவைகளும் பல இருக்கலாம். Frame Work ஒன்றை ஏற்படுத்துவது எனது நோக்கம்.

''தமிழ் ஆராய்ச்சி செய்து தமிழில் புத்தக ரூபமாய் வெளியிட்டிருப்பவர்களில் முக்கிய

மானவர்கள் தாங்களே. ஏனையோர்க்கு தாங்கள் மார்க்கதர்சி என்று சொல்வதே பொருத்தமுடைத்தாம்.

''பொருளதிகாரத்தை இன்னதென்றறியாதார் பலருளர். தாங்கள் எழுதியிருக்கும் பொருளதிகாரவாராய்ச்சி பலருக்கும் மிகப் பயனளிப்பதாம். நான் அதை ஊன்றி வாசிப்பேன்.''

* * *

ஸ்ரீ டி. கே. சிதம்பரநாத முதலியார் அவர்கள் B.A., B.L. வக்கீல், திருநெல்வேலி (22-4-1936)

''அன்பார்ந்த ஐயா! நேற்று மதுரையில் நண்பர் T. C. ஸ்ரீநிவாசய்யங்கார் அவர்களை வீட்டில் சந்தித்துப் பேசிக் கொண்டிருந்தேன். பல வருஷங்களாக நான் எதிர்பார்த்துக் கொண்டு வந்த பெருந்தொகைப் பிரதி ஒன்றை அவர்கள் எனக்கு உதவினார்கள்......தாங்கள் எவ்வளவோ சிரமப்பட்டு அவைகளைத் திரட்டித் தமிழுலகுக்கு உதவியிருக்கிறீர்கள். தமிழ் பயின்றவர்கள் அதில் வருஷம் வருஷமாக உழைத்துக் கொண்டேயிருக்கலாம். அவ்வளவு அரியமணிகள் ஆங்காங்குக் கிடைக்கின்றன. அனுபந்தப் பகுதிகள் செவ்வையாய்ச் செய்து அமைக்கப்பட்டிருக்கின்றன. முக்கியமாக விசேடக் குறிப்பும் பொருட் குறிப்பகராதியும் எவ்வளவோ பயன்படத்தக்கன...தாங்கள் தமிழுக்குச் செய்துள்ள இந்தத் தொண்டுக்கு என் மனப் பூர்வமான நன்றி.

* * *

6

தமிழ்ப்பாட நூல்கள்

பேராசிரியர் நமசிவாயர்

கிறித்தவ இலக்கியக் கழகம் (C L. S.), சி. குமாரசாமி நாயுடு அன்ட் சன்ஸ் பதிப்பகம் போன்ற பள்ளிப் புத்தக நிறுவனங்கள் சில இந்த நூற்ருண்டின் முற்பகுதியில் பள்ளிப் பாட நூல்களை வெளியிட்டன. காலஞ்சென்ற பேராசிரியர் கா. ரா. நமசிவாய முதலியார் தமிழ்ப் பாட நூல்கள் பலவற்றையும், தொடக்கநிலை வகுப்புகட்குரிய கணக்கு நூல், நிலநூல், வரலாற்று நூல் முதலியவற்றை யும் எழுதினுர். கிறித்தவ இலக்கியக் கழகத்தாரும் பல துறைப் பாட நூல்களைத் தக்க ஆசிரியர்களைக் கொண்டு எழுதுவித்தனர்.

வெளியீட்டில் போட்டி

மெட்ரிகுலேஷன் தேர்வுக்குப் பதில் பள்ளியிறுதித் தேர்வுக்கு எல்லாப் பாடங்களையும் தமிழில் கற்பிக்க லாம் என்ற திட்டம் வந்த பின்பு நூல் வெளியீட்டகங்கள் பெருகின; நூலாசிரியரும் பலராகப் பெருகினர். இதனுல் ஒரே பாடத் தொடர்பாகப் பலர் எழுதிய பாட நூல்கள்

பல வெளிப்பட்டன. தத்தம் நூல்கள் விலைப்பட வேண்டும் என்ற அடிப்படையில் ஒவ்வொருவரும் நல்லாசிரியரைக் கொண்டு தக்க நூல்களை வெளிப்படுத்த முனைந்தனர்.

செந்தமிழ் வாசகம்

மறைமலையடிகளின் முதல் மாணவரும், சென்னைப் பச்சையப்பன் கல்லூரித் தமிழ் விரிவுரையாளருமான மணி-திருநாவுக்கரசு முதலியார் 'செந்தமிழ் வாசகம்' என்ற பெயரில் பாடநூல்களையும் 'புலவர் கதை' என்ற பெயரில் இரண்டு பகுதிகளையும் வரைந்தார். இவ்வாறு புலவர் பெருமக்கள் பலர் தமிழ்ப்பாடநூல்களையும் துணைப் பாடநூல்களையும் இலக்கண நூல்களையும் தமிழ் உரைநடையில் எழுதலாயினர்.

நாடக நூல்கள்

கல்லூரி வகுப்புகளிலும் பாட நூல்களும் துணைப் பாட நூல்களும் ஆண்டுதோறும் வைக்கப் பெற்றமையால், கல்லூரி வகுப்புகட்குரிய பாடநூல்கள் பல உயர்நடையில் தோன்றிப் பெருகின. ஆங்கில மொழிப் பாடத் திட்டத்தில் ஷேக்ஸ்ப்பியர் நாடகங்கள் வைத்தல் போலத் தமிழிலும் மனோன்மணீயம், கீசகன், ரூபாவதி, மான விஜயம், மண்ணியல் சிறுதேர், இராசேந்திரன் போன்ற நூல்களும், சம்பந்த முதலியார் எழுதிய நாடக நூல்களும் பாடநூல்களாக வைக்கப் பெற்றன.

இங்ஙனம் கல்வித் துறையில் தமிழ் தக்க இடம் பெற்றமையால், பல துறைப் பாட நூல்களும் தமிழில் எழுதப் பெற்றன.

இங்குப் பழைய பாடநூல்களின் தமிழ் உரை நடையை அறிய எடுத்துக்காட்டு ஒன்றினைக் காண்போம்.

புலவர் கதை—இரண்டாம் பாகம்—1932
மணி. திருநாவுக்கரசு முதலியார்

"கல்வி அழகே அழகு. இவ்வழகு இல்லையாயின், எத்தகை வனப்பும் பயன்படாது. அது மண்ணாற் செய்த பாவைக்குச் சுதை தீற்றி நிற மூட்டியது போல விளங்குமேயன்றிப் பொருளாக அறிஞரால் கருதப்படாது. கல்வி இல்லாத மாந்தர் கூறுஞ் சொல்லும், நுட்பமுடையதாயினும், ஆன்றோராற் கொள்ளப்படமாட்டாது. கற்றுவல்ல புலவர் சொல்லிலே நறுமணம் வீசும். அவர் மனம் திருத்தப் பட்ட செம்புலம் போலச் சிறந்து திகழும், அவர் உள்ளம் விரிந்து பரந்து நிற்கும், அவர் அறிவு நுணுகி விரியும். அவர் நடை பிறருக்கு மகிழ்ச்சியை விளைவித்தலோடு தமக்கும் ஓர் அணியாய்த் துலங்கும்."
(பக்கம் 1)

இங்ஙனம் இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் எழுதப் பெற்ற பாடநூல்களுள் தமிழ்ப் பாடநூல்களில் மட்டும் நல்ல தமிழ் நடையும் பிற பாடத் தமிழ் நூல்களில் பிற மொழிச் சொற்கள் மிகுந்த நடையும் காணப்படுகின்றன. அப்பொழுது கலைச் சொற்கள் தமிழாக்கம் பெறவில்லை. அவை தமிழாக்கம் பெற்ற பின்பு தோன்றிய நூல்களில் பிறமொழிச் சொற்கள் ஓரளவு குறைந்தன.

ஏறத்தாழ 1940-ஆம் ஆண்டிற்குச் சிறிது முன்பு தாய்மொழியை வளர்க்க வேண்டும் என்னும் எண்ணம் தமிழ் அறிஞர்க்கும் பொதுமக்கட்கும் உண்டாயிற்று. அதன் பயனாக மக்கள் பழந்தமிழ்ப் பெயர்களைத் தங்கள் பிள்ளைகட்கு இடலாயினர்; சிலர் தங்கள் பெயர்களையே தமிழ்ப் பெயர்களாக மாற்றிக் கொண்டனர்; நல்ல தமிழ் நூல்களைப் படித்துச் சொற்பொழிவுகள் செய்யலாயினர்.

தமிழ் நாட்டில் உண்டான இவ் விழிப்புணர்ச்சி நல்ல தமிழில் எதனையும் எழுதுதல் வேண்டும், பேசுதல் வேண்டும் என்னும் எண்ணத்தையும் முயற்சியையும் வளர்த்தது. அவ்வளர்ச்சி பள்ளிப் பாடநூல்களிலும் காணப் பெறுவதாயிற்று. இன்றைய தமிழ்ப் பாட நூல்களில் உரைநடை பெரும்பாலும் நல்ல நடையில் அமைந்துள்ளதைக் காணலாம். இந்த முன்னேற்றம் எதிர்காலப் பாட நூல்களில் சிறப்புறும் என்றும் நம்பலாம்.

7

கட்டுரைகள்

இதழ்களின் தொண்டு

முன்பு கூறியதுபோல இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் சில நாளிதழ்களும் திங்கள் இதழ்களும் தமிழ் மக்களுக்குப் பலதுறைப்பட்ட செய்திகளை உணர்த்தி வந்தன. நாளிதழ்களில் கட்டுரைகள் அருகியே வெளிவருதல் இயல்பு. திங்கள் இதழ்களில் பல துறைக் கட்டுரைகளே மிகுதியாய் வருதல் நாம் அனை வரும் அறிந்த உண்மையாகும்.

அக்காலத்தில் ஞானபோதினி, மாதர் மனோரஞ்சினி, அறிவு விளக்கம், சைவ போதினி, ஞானசாகரம், விவேகபானு, திருநாவுக்கரசு, விவசாய தீபிகை, தமிழகம், நல்லாசிரியன், தமிழ் மாது, ஆரோக்கிய வழி, இந்துபால போதினி (யாழ்ப்பாணம்), ஜனோபி மானி, விவேக போதினி, கர்ம யோகி, செந்தமிழ்ச் செல்வம், தமிழ், தமிழன், தொழிற் கல்வி, திராவிட பாகவதன், வைத்திய கலாநிதி, ஜனோபகாரி, கல்வி, தமிழர் நேசன், தமிழ் மகவு, தமிழ்ச்சபை தீபிகை, ஆதி

திராவிடர், இந்தியத் தாய் முதலிய எண்ணிறந்த திங்களிதழ்கள் வெளிப்போந்தன. இவை பல சமய உண்மைகளையும் பல கலைகளையும் பற்றிய கட்டுரைகளைத் தாங்கியவை.

ஆய்வுத் துறையில் இதழ்கள்

மதுரைத் தமிழ்ச் சங்கத்தார் 1908-இல் தொடங்கிய செந்தமிழ், திரு. வி. க. அவர்கள் நடத்திய நவசக்தி, சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார் 1923-இல் தொடங்கிய செந்தமிழ்ச் செல்வி, கரந்தைத் தமிழ்ச் சங்கத்தார் 1925-இல் தோற்றுவித்த தமிழ்ப் பொழில், சென்னை வழக்கறிஞர் திரு. டி. என். சேஷாசலம் ஐயர் தொடங்கிய கலா நிலையம், சென்னைச் சட்ட இதழ் அச் சகத்தார் 1934-இல் தொடங்கிய கலைமகள் என்னும் இதழ்கள் தமிழ் ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளிவரத் துணைபுரிந்தவை ஆகும். சிறந்த தமிழ் அறிஞர்கள் இவ்விதழ்களில் பலதுறைக் கட்டுரைகளை எழுதி மக்க ளுக்குப் பலதுறை அறிவை ஊட்டினர்.

சிவஞான முனிவர் போன்ற முன்னோரும் பிற்காலப் புலவரும் எழுதிய சில இலக்கிய இலக்கணக் கருத்துக் களை மறுத்து எழுதப்பெற்ற கட்டுரைகள் சில, சேரர் கோநகர், மேலைக் கடற்கரையில் இருந்ததா அல்லது கொங்குநாட்டுக் கருவூரா என்பது பற்றிய விவாதக் கட்டுரைகள் பல; சங்ககாலச் சேரர் மக்கள் தாயத்தினரா மருமக்கள் தாயத்தினரா என்பது பற்றிய விவாதக் கட்டுரைகள் பல, தொல்காப்பியம் வடமொழி இலக்கண நூல்களைத் தழுவியதா இல்லையா என்பது பற்றிய விவாதக் கட்டுரைகள் பல, சங்க நூல்களில் குறிக்கப் பெற்றுள்ள வேளிர் என்பார் வடநாட்டிலிருந்து வந்தவரா

தமிழகத்தினரா என்பது பற்றி எழுந்த விவாதக்கட்டுரைகள் பல, இத் திங்கள் இதழ்களில் இடம் பெற்றன.

பேராசிரியர் அனவரதம் விநாயகம்பிள்ளை, வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், மு, சி. பூரணலிங்கம் பிள்ளை, பண்டிதை அசலாம்பிகை அம்மையார் முதலிய சிறந்த புலவர்கள் **ஞானபோதினியில்** பல கட்டுரைகள் வரைந்தனர். கவியரசர் பாரதியார் சுதேசமித்திரன், இந்தியா, கர்மயோகி முதலியவற்றில் வரைந்த கட்டுரைகள் பலவாகும். அவை ஒரு நூல் வடிவில் தொகுக்கப் பெற்றுள்ளன. திருவனந்தபுரம் இசைப் பெரும்புலவர் இலக்குமணப் பிள்ளை, பெரிய புராண விரிவுரையாசிரியர் சி. கே. சுப்பிரமணிய முதலியார், இலக்கண விளக்கப் பரம்பரை சோமசுந்தர தேசிகர், பண்டிதர் உலகநாதப் பிள்ளை, கரந்தைக் கவியரசு ஆர். வேங்டாசலம் பிள்ளை, மறைமலையடிகள், அவர் மகளார் நீலாம்பிகை அம்மையார், க. ப. சந்தோஷம், மொழியியல் அறிஞர் மாகறல் கார்த்திகேய முதலியார், தமிழ்ப் பெரும்புலவர் திரு. அ. மு. சரவண முதலியார், பேராசிரியர் தி. த. கனகசுந்தரம் பிள்ளை, பெரும்புலவர் அ. வரதநஞ்சையப் பிள்ளை, சாத்தூர் வழக்கறிஞர் டி. எஸ். கந்தசாமி முதலியார், அறிவியல் துறைப் பேராசிரியை திருவாட்டி ஈ. த. இராஜேஸ்வரி அம்மையார், இலங்கை விபுலாநந்த அடிகள், பொறியியல் அறிஞர் பா. வே. மாணிக்க நாயக்கர், நாவலர் டாக்டர் சோமசுந்தர பாரதியார், கால் நடை மருத்துவ உயர் அலுவலர் வெ. ப. சுப்பிரமணிய முதலியார், பண்டிதமணி மு. கதிரேசச் செட்டியார், திரு. டி. கே. சிதம்பரநாத முதலியார், ஆங்கிலக் கட்டுரைப் பொருளைத் தழுவி வரைவதில் வல்லவரான காழி, சிவ. கண்ணுசாமிப் பிள்ளை, வரலாற்றுக் கட்டுரை

கள் வரைவதில் வல்லுநரான திரு. எம். எஸ். சுப்பிரமணிய ஐயர், அறிவியல் பேராசிரியரான த. கு. நவநீதக்கிருஷ்ணன், கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை, திருப்பதி பல்கலைக் கழக ஆராய்ச்சியாளர் டி. பி. பழநியப்பப் பிள்ளை, கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞர் கா. ர. கோவிந்தராச முதலியார், சொல்லின் செல்வர் டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை, தமிழ் முனிவர் திரு. வி. கலியாண சுந்தரனார், பேராசிரியர் முத்து சிவன், புதுமைப் பித்தன், ஆராய்ச்சி அறிஞர் பாஸ்கரத் தொண்டைமான் போன்றவர் எழுதியுள்ள கட்டுரைகள் இந்த நூற்றுண்டின் உரையை நன்கு வளர்த்தன என்று துணிந்து கூறலாம்.

கலித்தொகைச் செய்யுட்கள் போன்ற தமிழ் நூற் செய்யுட் பொருளை விளக்கி வரையப் பெற்ற கட்டுரைகளும் உண்டு. இக்கட்டுரைகளை எழுதுதல் பலராலும் இயல்வதன்று. அறிவு நுட்பமும் எழுத்தாற்றலும் மிக்க சிலரால்தான் இஃது இயல்வது.

இப்பெருமக்களின் கட்டுரைகளிலிருந்து ஒரு சிறு பகுதி விழுக்காடு காட்டத் தொடங்கினும் அவை மிகப் பெரிய நூலாக விரிவடையும் ஆதலால், திரு. வி. க., கவியரசர் பாரதியார் போன்ற ஒரு சிலர் கட்டுரைப் பகுதிகள் மட்டும் இங்குத் தரப் பெறும். அப்பகுதிகள் அவரவர் தமிழ் உரைநடையை நன்கு காட்ட வல்லவை.

பாரதியார் கட்டுரைகள்

"மிகப் பழைய தமிழ் பாஷையும் மிகவும் புராதனமான மலையாள பாஷையும் ஒரே வஸ்து தான். பிற்காலத்திலும் சேரநாடு தமிழகத்தில் ஒரு பகுதியாகவே கணக்கிடப்பட்டு வந்தது. சேரரை வரும் தமிழரசரே; தமிழ்நாட்டு வேந்த

ருள்ளே சேர்த்தெண்ணப்பட்டு வந்தனர். பாஷையையொப்பவே நாகரிக விஷயத்திலும் மிகப் பழைய மலையாள நாகரீகமும் தமிழ் நாகரீகமும் ஒரே வஸ்துதான்.

பிற்காலத்தில் மலைக்கோட்டைக்கு உட்பட்ட மலையாள நாடு பழைய தமிழ் நாகரிகத்தை இயன்றவரை சிதையாமல் காப்பாற்றிக் கொண்டு வந்தது. மலையடிக்குக் கிழக்கே மைதானத்தின்மீது வளர்ச்சி பெற்ற தமிழ் நாகரிகமோ வெனில், தெலுங்கு முதலிய வட நாட்டுப் பயிற்சிகளின் ஊடாட்டத்தால் நாளுக்கு நாள் அதிக மாறுதல் பெற்று உறிந்து தேசத்தின் பொது நாகரிகத்தை அனுசரித்து வருவதாயிற்று.

—தமிழ்நாட்டு நாகரிகம், பக். 241—242.

கரந்தைக் கவியரசர்

“முன்னூல்களிற் பிறமொழிச் சொற்கள் சில பல கலந்திருத்தல் இனி நாம் தமிழ் மொழியினைப் பாதுகாத்துக் கொள்ளற்குத் தடையாகாது. மிகப் பழங்காலத்தினராகிய சங்க காலத்தினர் ஒரே வழி வேற்றுமொழிச் சொற்கள் ஒன்றிரண்டு கலந்திருக்கின்றனர் என்பது உண்மையே. அக் கலப்புமின்றி அவர்கள் நூல்கள் இயற்றியிருப்பது அரிதன்று. பின்னுள்ளோரோ, ஒரு வரம்புமின்றி நூற்றுக் கணக்கு ஆயிரக்கணக்கிற் பிறமொழிச் சொற்களை வேண்டி நின்றனர். இதனாலன்றே, இப்பின்

ஞோர் காலத்திலேயே நூற்றுக்கணக்காய தனித் தமிழ்ச் சொற்கள் இறந்து படத் தலைப்பட்டன. இதனைத் தொல்காப்பியத்திற் குறித்த பல சொற்களை வழக்கு வீழ்ந்தன என்றெழுதும் உரையாசிரியர்கள் உரைகளால் உணரலாகும். அந்தோ இற்றை ஞான்றோ ஆயிரக்கணக்காய மொழிகள் இறந்து பட்டன; இறந்துபடு கின்றன...தமிழ்ச் சொற்கள் இருக்கவும், அவற்றை வேண்டாது பிற சொற்களைக் கையாளின், நாளடைவில் அவை இறத்தற் கென்ன தடையுளது?"

—தமிழ்ப்பொழில், தொகுதி 2, பக். 325.

திரு. வி. கலியாணசுந்தரனார்

"தேசபக்தன்" தோன்றிய பின்னரே தமிழ் நாட்டில் தொழிலாளர் இயக்கந் தோன்றிற்று. தேசபக்தன் இரண்டாம் ஆண்டில் தொழி லாளர் இயக்கம் சிறிது வலுத்து நின்றது. தொழிலாளர்க்கெனப் பிரதிநிதிகளும் மேல் நாடு சென்றார்கள். உலகமெல்லாந் தொழி லாளர் இயக்கம் முறுகி வளர்ந்து வருகிறது. விரைவில் உலக முழுவதும் தொழிலாளர் வசம் நடைபெறும் குறிகள் தோன்றியிருக்கின்றன. தொழிலாளர் இயக்க வளர்ச்சிக்கெனத் தேச பக்தன் வாரத்துக்கொரு முறை அநுபந்தத் தோடு வெளி வருவதை நேயர்கள் அறி வார்கள்.

''தேசபக்தன்'' இரண்டாம் வயதில் பல கஷ்டங்களைச் சந்தித்தும், அவைகளை ஒருவாறு கடந்து தன் மூன்றும் வயதை யடைந்து விட்டனன்; இம்மூன்றும் வயதில் ஆண்டவன் அருளை முன்னிட்டுத் தேசபக்தர்கள் உதவியினால், தனது அதிதீவிர தேசத் தொண்டு செய்து வருவன்.''

—தேசபக்தன் 8-12-1919

காழி சிவ. கண்ணுசாமி

''மற்றொரு பகுதியோ ஒரு பரந்த கடல்! கணக்கற்ற சிறுசிறு தீவுகள் அதனிடைப் பொலிந்தன. பழங்களும் பூக்களும் நிரம்பிய வாய்க் காணப்பெற்ற அத்தீவுகளினிடையே மின்னிமிளிரும் ஆயிரங்குடாக்கள் அழகு செய்து விளங்கின. அங்குள்ள மக்கள் மிகச் சிறந்த நல்லுடை தரித்து, நறுமலர்க்கன்னி சூடி, மரமடர்ந்த பொழில்களூடே யுலாவியும், நீரூற்றுகளின் மருங்கில் விரும்பியமர்ந்தும், நான் மலர்கள்மீது படுத்தும் பொழுதுபோக்கக் கண்டேன். பாடும் பறவைகளின் ஒலியும் வீழும் அருவிகளின் ஓசையும்,மக்கள் குரலொலி யும், இசைக் கருவிகளின் இன்னொலியும் ஒன்றுடனொன்று மயங்கி விரவிப், புதியதோர் இன்பப் பேரொலியைக் கிளப்பின. களிதுளும்பும் இக்காட்சியைக் கண்டு நான் பெருமகிழ்ச்சி யுற்றேன். நேரே அங்குப் பறந்து சென்று பார்த்துக் களிக்க, எனக்குக் கழுகைப் போன்று இறக்கைகள் வாய்க்காவோ என்று ஏங்கி

னேன். அவை மரணத்திற்குப் பின் தன்மக்கள் வந்துறையும் தேவமாளிகைகளாம். அவை அவரவர் செய்த நற்செய்கையின் தரத்திற்கு ஏற்ப அவரவர்க்குப் பகுத்தளிக்கப் பெறும். தம்பால் உறைவோருடைய இன்ப நுகர்ச்சிக்கும் அறிவின் முதிர்ச்சிக்கும் ஏற்றவாறு பல திறப்பட்ட இன்ப வளங்கள் அவற்றின் கண் மலிந்து காணப்பெறும். உள்ளுறைவோர் ஒவ்வொருவரின் தகுதிக்கேற்ற இன்பத்துறக்கம் என்றுதான் அவை ஒவ்வொன்றையுங் கூறல் வேண்டும். "ஓ, மிர்சா! இவ்வின்பஉறையுள்கள் எப்பாடுபட்டேனும் எய்துதற்குரியன வல்லவோ? இப்பெற்றித்தான ஒன்றைப் பெறுவதற்கு வாய்ப்புகள் பல அளிக்கும் உலக வாழ்வு துன்ப வாழ்வாகவா உனக்குத் தோன்றுகிறது? இத்தகைய இன்ப வாழ்க்கைக்கண் உய்க்கும் சாக்காடும் அஞ்சிக் கடியற்படுவ தொன்றோ? எனவே, மனிதப் பிறவிக்கென இத்தகைய அழிவற்ற இன்ப நிலையொன்று ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் போது, அப்பிறவி வீண் படைப்பென்று நீ கருதுதல் சால்பாமோ? என்று மலைமுனி தெளிவுறுத்திக் கூறியது."

—செந்தமிழ்ச் செல்வி, 1941—'42.

4 நவநீத கிருட்டிணன்

"கட்புலன், தொலை நோக்காடியினுதவி பெற்றுச் சில பொருள்களைக் கொண்டது, அதன் மேற் செல்லப், பொறியும் பொறியின் பாற்பட்ட

எவையும் பயனற்றவையாயின. 1845-ஆம் ஆண்டில் கேம்ப்ரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் மாணவராயிருந்த ஆடம்ஸ் என்ற இளைஞர் இவற்றைப் பற்றி ஆழ்ந்து சிந்தனை செய்து யுரேனஸுக்கும் அப்பால், அதுகாறும் கண்டு பிடிக்கப் படாத மற்றொரு கோள் இருக்க வேண்டுமென்றும், அக்கோளிற்கும், யுரேன ஸுக்கு யிடையுள்ள தொலைவு காலத்திற்கேற்ற வாறு மாறுபடுவதால், அவற்றினிடையுள்ள கவர்ச்சியான வலிமையில் வேறுபாடுகள் தோன்றுமென்றும், அதனால் யுரெனஸ் பரிதி யைச் சுற்றி வரும் காலத்தில் வேறுபாடுகள் தோன்றுமென்றும் எடுத்துரைக்கும் கருத்தை வெளியிட்டார். மேலும், ஆடம்ஸ் மிகக் கடின மான எண்ணியல் முறைகளைக்கொண்டு கணக் கிட்டு, அவ்வாறான கோள் வான வெளியில் எவ்விடத்தில் இருக்க வேண்டும் என்றும் எடுத்துக் காட்டினார். வான நூலறிஞர், மிகத் திறன் வாய்ந்த தொலை நோக்காடிகளைக் கொண்டு, ஆடம்ஸ் காட்டிய இடத்தைக் கூர்ந்து நோக்கினர். புதிய கோளொன்று அவர் முன்னுரைத்த இடத்திற்குச் சரியாய் ஒளிர் வதைக் கண்டனர். இங்ஙனம், நம் உலகை விட நூற்றிருபது மடங்கு பருமனுடைய நெப்ட்யூன் என்ற புதியகோள் கண்டு பிடிக்கப் பட்டது விஞ்ஞான முறைக்கொரு பெரும் வெற்றியெனக் கூறல் மிகையாமோ?"

—செந்தமிழ்ச் செல்வி, 1941 – 42

ஈ. த. இராஜேசுவரி அம்மையார்

"அண்ட சராசரங்கள் முற்றும் தாயும் சேயுமாய் விளங்குவதைப் பற்பல கலைகள் மூலமாகக் காண்கிறோம். அறிவியல் நூல் ஒவ்வொரு தேசத்திலும் ஒவ்வொரு மதத்திலுமுள்ள முன்னோர்களின் அரும்பொருள்களான வைதீகத் தன்மையாய் விளங்கிய பிதிரார்ஜ்ஜி தங்களைப் பல்வேறு பாழ்படுத்தியிருப்பினும். அவற்றையெல்லாம் ஒருங்கு சேர்த்து நூதன அறிவுடன் சம்பந்தப்படுத்த அதுவே புதிய கட்டிடமாய் எல்லாவற்றிற்கும் பிராணுதாரமான ஒருவகை தேக யந்திரமாய் விளங்கும். அதனால் பயனற்ற துரும்புகள் யாவும் தமக்குத் தக்க தலங்களில் நிற்க, யாவும் கிரமமாய்க் கூட்டப்பட்டு, ஒவ்வொன்றும் பயனாய், இன்பமயமாய், இயற்கை முடிவில் நிற்கும் என்பதும், அவை இத்தகையனவென்று எண்ணிக் கூறுவது மனோவாக்குக்கு அதீதப்படினும், யாதொரு தோஷமில்லாமல் நிரந்தரமாய் அமலமாய், மிகப் பெரியவாய் நிற்பது அற்புதமென்பதும், இக்காலத்திய அறிவியல் காட்டும் தோற்றங்களாம்."

—செந்தமிழ்ச் செல்வி, 1932

பா. வே. மாணிக்க நாயக்கர்

"பெருமை தெரிக்கும் பெருமாட்டி என்பது ஆங்கிலச் சொல்லான 'லேடி' என்பதன் பொருள். லேடி என்ற சொல் ஆங்கிலோ

சாக்ஸன் மொழியைச் சேர்ந்தது. அச்சொற்கு அம்மொழியில் நேர்பொருள் "ரொட்டிமா பிசைபவள்" என்பதாம். அதன்படி லேடி என்பதன் ஆண்பாற் பெயராகிய "லார்ட்" என்ற ஆங்கிலோ சாக்ஸன் சொல், "ரொட்டிமாக் காப்பவன்" என்று பொருள்படும். ரொட்டி மாவைத் தன் கருத்துக் கியைந்தவாறு தட்டிக் கொட்டி வைப்பதுபோல், தன் கணவனையும் தன் கருத்துக் கியைந்தவாறு ஆட்டி வைக்கிருள் என்ற பொருள் "லேடி" என்ற சொற்குப் பின்னர் ஏற்பட்டதாகும். இவ் வுண்மையை நாம் ஆங்கிலேயர்தம் வாழ்க்கை வரலாற்று நூல்களிற் காண்டலரிதாகும். ஆனல் மொழி வரலாருே சிறிதும் ஒளிமறைவின்றி உள்ளதை உள்ளவாறே விளக்கி விடுகின்றது. இஃதிவ் வாருக, தென்னுட்டு மொழிகளில் மகளிரைக் குறிக்க வழங்கும் சில சொற்களை இவ் வழி ஆராயலாம். அவ்வாராய்ச்சியில் தென்னுட்டுத் திராவிட மக்கள் தம் மகளிரை எத்தகைய உயர் நிலையில் வைத்திருந்தார்களென்பது தெள்ளிதிற் புலப்படும்.

மனைவி என்ற சொல் 'மனை அல்லது வீட்டுக்குத் தலைவி' என்ற பொருளைப் பயப்பதாகும். "இல்லாடு" என்று தெலுங்கில் வழங்கும் சொல்லும் அதே பொருளது. 'கண்ணுட்டி' என்ற மற்ருேர் சொல் கண்ணணைய அருமையும் பெருமையும் உடையவள் என்பதையும், துணைவி என்ற வேருெரு சொல் இவ் வாழ்க்கைச் சகடத்தை எம் மருங்கும் ஒற்றி உடனீர்க்கும் உதவி புரிபவள் என்பதையும் குறிக்கின்றன.

இச் சொற்களும் இவைபோன்ற ஏனைய பிற சொற்களும் திராவிடருடைய நாகரிகத்தில் மகளிர் எத்தகைய மேனிலையில் வைத்துக் கொண்டாடப்பட்டு வந்தார்கள் என்பதை நன்கு தெரிவிக்க வில்லையோ?''

—செந்தமிழ்ச் செல்வி, 1932

புதுமைப்பித்தன்

''புதுமைப்பித்தன் கட்டுரைகள்'' என்னும் நூலில் சிறுகதை, உணர்ச்சி வேகமும் நடை நயமும், இலக்கியத்தின் இரகசியம், பாரதிதாசன், இலக்கியத்தின் உட்பிரிவுகள் என்னும் தலைப்புகளைக் கொண்ட கட்டுரைகள் ஆசிரியரது மனப் போக்கினையும் ஆழ்ந்த பல நூலறிவையும் நன்கு உணர்த்துகின்றன. இவர் சிறுகதை, பெருங்கதை என்னும் இரண்டையும் மிகத் தெளிவாக உணர்த்தியுள்ளார் (பக். 24); கவிதையின் பிறப்பினை நயம்பெற எடுத்துக் காட்டியுள்ளார். (பக்.63)

1. ''பாரதியார் இன்று நமக்கு வைத்து விட்டுப் போன சொத்துக்கள் பல. இவற்றில் முக்கியமானவற்றைக் குறிப்பிட வேண்டின் ஞானரதம், குயில் பாட்டு, பாஞ்சாலி சபதம், கனகசுப்புரத்தினம் என்ற பாரதிதாஸன் என்று சொல்ல வேண்டும்.

பாரதிதாஸனைப் பழகி அனுபவிக்க வேண்டுமெனில் ஸ்ரீ கனக சுப்புரத்தினத்தின் கருத்துக்களைக் கண்டு பயப்படுவது விவேகமல்ல. பாரதிதாஸன் கட்டி வைத்துள்ள கவி

தைக் கோயிலிலே எத்தனையோ பிரகாரங்கள் உண்டு. எத்தனையோ ஆயிரக்கால் மண்டபங்கள் உண்டு. அவற்றில் நடுநாயகமாக விளங்குவது என நான் கருதுவது, 'புரட்சிக் கவி' என்ற அவரது பாட்டு.''

—பக். 122-23)

2. இந்தப் பகுதியில் அமைந்துள்ள நடையுடன் கீழ்வரும் நடையை ஒப்பிட்டுப் பாருங்கள்; நடை வேறுபடுதலை நன்கு காணலாம் :

''சாதாரணமாக எல்லோரும் பீச்சான் கரைக்குப் போகிற நேரத்தில்தான், நான் ஒரு டோஸ் வெற்றிலை போட்டுக்கொண்ட தெம்பில் குடும்பத்து நிதி மந்திரி சமர்ப்பிக்கும் பட்ஜெட் திட்டத்தைப் பரிசீலனை செய்வேன். சப்ளிமெண்டரி மானியம் கோரப்படும் என்று தெரிந்திருந்தால், கத்தரிக்காய் இனத்தில் ஏற்பட்டிருக்கும் அநேக செலவின்மீது ஒரு கண்டெனத் தீர்மானம் கொண்டுவந்து தீவிரமாகப் போராடுவேன். எங்கள் குடும்ப சர்க்கார் ஓர் அபூர்வமான இரட்டை ஆட்சி. ஆதிபத்திய உரிமை எந்த இலாகாவில் இருக்கிறது என்று நிர்ணயிப்பது சாத்தியமற்ற காரியம். ஆகையால் சர்க்கார் பெஞ்சுகளுக்குள்ளாகவே வாதப்பிரதிவாதங்கள் நடைபெறும். பொக்கிஷ அதிகாரி ஒருவர். செலவு இனத்தைக் கவனிக்கும் நிதி மந்திரி ஒருவர். பொக்கிஷ அதிகாரிகளுக்கு ஒரு ஓட்டு. நிதி மந்திரிக்கு இரண்டு வோட்டு. இரண்டாவது வோட்டுக்குக் 'கண்ணீர்' என்று

பெயர். இதனால்தான் வெற்றி யாருக்கு என்பதை நான் உங்களுக்கு வியாக்கியானம் செய்ய வில்லை."

—(பக். 143–144)

தென்றல்

மதுவுண்ட மயக்கம். வண்டுகள் சுருண்டு விழுந்து கிடந்தன. இன்பப் போதையிலே இறுமாந்து கிடந்தன. சோலையின் பாதையில் கருநாவற் பழங்களென விழுந்து கிடந்தன. சோலையின் வழியே ஒரு நங்கை அங்கு வந்தாள். சாலையில் நடந்து வரும்போது காலில் ஏதோ தட்டுப்படவே குனிந்தாள்; நாவற்பழமென்று அதனைக் கையால் எடுத்தாள்.

வண்டு, மயங்கிக் கண்களைத் திறந்தது. அழகியின் முகத்தை நோக்கியது. மங்கையின் மலர்முகம் வானத்து 'முழுநிலா'வாகத் தோன்றியது. தான் இருக்குமிடத்தை — அவள் கையை 'தாமரை மல'ரெனக் கருதியது. கைத் 'தாமரை'யில் விரல் 'இதழ்கள்' சூழ, தான் இருப்பதாக உணரவில்லை. உண்மையிலேயே 'கமல' மலர் எனக் கருதியது வண்டு. மேலே வானத்து முழுநிலா... இருக்கும் இடமோ தாமரை மலர். முழுமதி வந்தால் தாமரை மலர் குவியும் என்பது அதற்குத் தெரியாத ஒன்றா? வண்டு அச்சத்தால் பறந்தது! நங்கைக்கோ ஐயம்! பறந்து சென்றது வண்டா! பழமா?

என அவள் வாய் முணுமுணுத்தது! இப் புது மையை இதுவரை காணுதவள், திகைப்பின் மேலீட்டால் நின்ருள்!

இதோ பாடல் :

"தேனுகர் வண்டு மதுதனை யுண்டு தியங்கியே
கிடந்ததைக் கண்டு
தானதைச் சம்புவின் கனியென்று தடங்கையா
லெடுத்துமுன் பார்க்க
வானுறு மதியம் வந்ததென்றெண்ணி மலர்க்கரம்
குவியுமென்றஞ்சிப்
போனது வண்டோ பறந்தது பழந்தான் புதுமையோ
யிதுவெனப் புகன்ருள்"

—விவேக சிந்தாமணி

முடிவுரை

இருபதாம் நூற்ருண்டின் தொடக்க ஆண்டு மதுரைத் தமிழ்ச் சங்கத் திறப்புடன் தமிழை வளர்க்கப் பிறந்தது என்பதும், கல்லூரிகளில் தமிழை அகற்றச் செய்த முயற்சி தோல்வியுற்றது என்பதும், பள்ளிகளில் படிப்படியாக பலவகைப் பாடங்களும் தமிழிற் கற்பிக்கப் பெற்றமையால் பலதுறைப் பாடநூல்களும் தமிழ் உரை நடையில் எழுதப் பெற்றன என்பதும், நாளிதழ்கள், கிழமை இதழ்கள், திங்கள் இதழ்கள் ஆகியவை மிகப் பல தோன்றித் தமிழ் உரைநடையில் பலகலைச் செய்திகளை மக்கட்கு ஊட்டின—இன்றும் ஊட்டுகின்றன என்பதும், அரசின் செய்தி இதழ் அரசாங்கத் தொடர்பான பலவகை விளம்பரங்களையும் சட்டங்களையும் சட்டத்

திருத்தங்களையும் தமிழ் உரைநடையில் தாங்கிக் கிழமை தோறும் வெளிவருகிறது என்பதும், பலவகை வணிகர், கழகத்தார் முதலியோர் விளம்பரங்களையும் அறிக்கைகளையும் அழைப்பிதழ்களையும் தமிழ் உரைநடையில் வெளியிடுகின்றனர் என்பதும், திருமண அழைப்புகள் தமிழ் உரைநடையில் வெளி வருகின்றன என்பதும், கடிதங்கள், கட்டுரைகள் வாயிலாகத் தமிழ் உரைநடை வளர்ந்து வருகிறது என்பதும் இதுகாறும் கூறப்பெற்ற செய்திகளைக் கொண்டு அறியப் பெறும்.

சிறுகதைகள், பெருங்கதைகள், நூல் முகவுரைகள், பலதுறை நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் என்பவை தமிழ் உரைநடையை எங்ஙனம் வளர்த்தன என்பதை அடுத்த சொற்பொழிவிற் காண்போம்.

இருபதாம் நூற்றாண்டில்
தமிழ் உரைநடை வளர்ச்சி

மூன்றும் நாள் சொற்பொழிவு
26 - 2 - 1966

1

நூல்களின் முகவுரைகள்

டாக்டர் சாமிநாதையர்

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் சங்க நூல்களுள் பலவற்றையும் பெருங்கதை முதலிய நூல்களையும், தூது, சிலேடை வெண்பா முதலிய சிறு நூல்களையும் பதிப்பித்தனர். அப்பெரியார் ஒவ்வொரு நூலின் முகவுரையிலும் அந்நூலைக் கண்டுபிடிக்க மேற்கொண்ட முயற்சி, அந்நூலின் பனை ஏடுகள் இருந்த நிலைமை, அவற்றை ஆராய்ந்து பதிப்பித்த அருமை, அந்நூலில் உள்ள குறிப்பிடத் தக்க செய்திகள் முதலியவை பற்றிப் பல பக்கங்களில் உரைநடையில் எழுதியுள்ளனர். புறநானூறு, குறுந்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை, புறப்பொருள் வெண்பாமாலை, சிந்தாமணி ஆகிய பெருநூல்களில் அவர்கள் எழுதியுள்ள கதைச்சுருக்கமும் பிற செய்திகளும் அந் நூல்களைப் படிப்போர்க்குப் பெருந்துணையாகும். அம் முகவுரைப் பகுதிகள் எளிய நடையில் பொருள் விளங்கும் முறையில் எழுதப்பட்டுள்ளன. அவற்றை

மட்டும் கருத்தூன்றிப் படிக்கும் ஒருவர் நல்ல தமிழ் நடையில் எழுதும் திறமை பெறுவர்.

இவ்வாறே பல அரிய நூல்களைப் பதிப்பித்த பெரியவர்கள் எழுதியுள்ள நூல் முகவுரைகள் இந்த நூற்றாண்டு உரைநடை வளர்ச்சிக்குத் துணைபுரிந்தன என்னலாம்.

ஈழநாட்டவரின் தொண்டு

ஈழ நாட்டு அ. முத்துத்தம்பிப் பிள்ளையவர்கள் 1902-இல் 'அபிதான கோசம்' என்னும் அரியநூலை வெளியிட்டார். யாழ்ப்பாணத்துச் சுன்னாகம் அ. குமார சாமிப் புலவர் அவர்கள் (1850—1922) 1903-இல் தண்டியலங்காரத்தையும் அடுத்து நம்பியகப் பொருளை யும், யாப்பருங்கலக் காரிகையையும் புத்துரையுடன் வெளியிட்டார். இந்நூல்களின் முகவுரைகள் அந் நூல்களைப் பற்றிய விவரங்களையும் பதிப்பாசிரியர் மேற் கொண்ட முயற்சியையும் நல்ல உரைநடையில் இயம்புகின்றன. இப்புலவர் சிசுபால சரிதம், தமிழ்ப் புலவர் சரித்திரம் என்னும் உரைநடை நூல்களையும் எழுதியவர்.

அகராதி வளர்ச்சி

சென்னைக் கிறித்தவக் கல்லூரியில் தமிழ்ப் புலவரா யிருந்த ஈக்காடு இரத்தினவேல் முதலியார் என்பவர் 'சிறப்புப் பெயர் அகராதி' என்னும் அரியநூலை 1908-இல் எழுதி வெளியிட்டார். அடுத்த ஆண்டில் சென்னை டி. கோபால நாயகர் என்பவர் 'தமிழ்ப் பெயரகராதி' என்னும் நூலை வெளியிட்டார். அந்

நூலில் ஆங்காங்குச் சில ஓவியங்களும் இடம் பெற்றுள்ளன. பெரும் புலவர் செய்குத் தம்பிப் பாவலர் 1912-இல் சீருப் புராணத்திற்குப் பதவுரையும் பொழிப்புரையும் எழுதினார்.

திருக்குறள் விரிவுரை

பெரும்புலவர் கோ. வடிவேலுச் செட்டியார் அவர்கள் 1919-இல் திருக்குறளுக்கு விளக்கவுரை வரைந்தார். அவர் அந்நூலில் திருவள்ளுவர் வரலாற்றையும் திருக்குறளின் சிறப்பையும் நன்கு எழுதியுள்ளார். சென்னை—கிருஷ்ணாம் பேட்டை—குப்புசாமி முதலியார் என்ற பெரும்புலவர், திருக்குறள் விளக்கம் மூன்று பாகங்கள் எழுதி வெளியிட்டார்; ஒவ்வொரு குறளின் கருத்தும், அக்குறளை விளக்கும் கதையும் அவரால் தரப்பட்டன. அவரது தமிழ்நடை எளிமையும் இனிமையும் வாய்ந்தது.

சங்க நூல்கள்

பேராசிரியர் இ.வை. அனந்தராம அய்யர் அவர்கள் கலித்தொகை என்னும் சங்க நூலை 1926-இல் பதிப்பித்தார். அவரது நூல் முகவுரை, அவர் மேற்கொண்ட முயற்சியையும் நூலின் பெருமையையும் நன்கு உணர்த்துகின்றது. நாவலர் பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார் அவர்கள் திருவிளையாடற் புராணம்—மூன்று காண்டங்களுக்கும் பதவுரையும் விளக்கவுரையும் எழுதினார். அவரும் கரந்தைக் கவியரசர் ரா. வேங்கடாசலம் பிள்ளையவர்களும் சேர்ந்து அகநானூற்றுக்கு உரையும் விளக்கமும் வரைந்தனர்.

சிதம்பரனாரின் தொண்டு

'கப்பலோட்டிய தமிழர்' என்று பெயர் பெற்ற திரு. வ. உ. சிதம்பரம் பிள்ளையவர்கள் பல ஆங்கில நூல்களைத் தழுவி 'வலிமைக்கு மார்க்கம்' போன்ற பல நூல்களைத் தமிழ் உரைநடையில் எழுதினார். அவர் தொல்காப்பியம்—இளம்பூரணர் உரையைப் பதிப்பித்தார். அவர் எழுதிய முகவுரையும் நல்ல தமிழ் நடையில் அமைந்துள்ளது.

கதிரைமலைப் பள்ளு

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செ. இராசநாயகம் என்ற அறிஞர் 'யாழ்ப்பாணச் சரித்திரம்' என்னும் வரலாற்று நூலை 1933-இல் எழுதினார். இலங்கைப் புலவர் வ. குமாரசுவாமி என்பவர் 1935-இல் 'கதிரை மலைப்பள்ளு' என்னும் நூலைப் பதிப்பித்தார். அவர் தம் முகவுரையில் 'பள்ளு' எனும் நூலின் சிறப்பை இனிய செந்தமிழ் நடையில் இயம்பியுள்ளார்.

சைவசித்தாந்த மகாசமாஜம்

சென்னை சைவ சித்தாந்த மகாசமாஜத்துக்கு உயிர் நாடியாய் விளங்கிய வழக்கறிஞர் திரு. ம. பால சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பெரிய புராணத்தையும் முதல் ஏழு திருமுறைகளையும் அடக்க விலைப் பதிப்புகளாக வெளியிட்டார். அப்பெரியார் ஒவ்வொரு நூலின் முற்பகுதியிலும் அரிய ஆராய்ச்சிக் குறிப்புகளை எழுதியுள்ளார். யாழ்ப்பாணத்துப் பெரும்புலவர் சி. கணேச ஐயர் அவர்கள் தொல்காப்பியம்—எழுத்ததிகாரத்தை உரை விளக்கக் குறிப்புக்களுடன் வெளிப்

படுத்தினார். அவரது தமிழ்நடை உயர்ந்தது; மிடுக்குடையது. சென்னைப் பச்சையப்பன் உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியராய் விளங்கிய ஆ. வி. கன்னைய நாயுடு அவர்கள் கலிங்கத்துப்பரணிக்கு உரை எழுதினார்.

செய்தி இதழ்கள்

யாழ்ப்பாணத்து மொழி ஆராய்ச்சிப் பேரறிஞர் தவத்திரு. ஞானப்பிரகாச அடிகளார் (1875—1947) பல்லாண்டுகள் உழைத்துச் 'சொற்பிறப்பு—ஒப்பியல் தமிழ் அகராதி' என்னும் அரிய நூலை வெளிப்படுத்தினார். ஆங்கிலம் முதலிய பழைய மொழிகளில் உருமாறிக் கிடக்கும் தமிழ்ச் சொற்களைக் கண்டறிந்த பெருமை அவருக்கு உரியது. அவர் 'லோகோபகாரி', 'சத்திய நேசன்', 'ஈழகேசரி' என்ற செய்தி இதழ்களில் ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினார்; (1) தமிழின் பூர்வ சரித்திரமும் சமயமும்; (2) யாழ்ப்பாண சரித்திர ஆராய்ச்சி, (3) தமிழ் அமைப்புற்ற வரலாறு, (4) தருக்கம், (5) கிறித்துவநாதர் சரித்திர ஆராய்ச்சி (6) கத்தோலிக்க திருச்சபையும் அதன் போதகங்களும், (7) தேவ ஆராதனைமுறை, (8) ஆண்டவர் சரித்திரம் என்னும் உரைநூல்களை வரைந்தார்.[1]

இராமாயணம், பெரியபுராணம்

இராமாயணத்திற்குப் பதவுரையும் விளக்கவுரையும் வரைந்து தமிழ்த் தொண்டு செய்தவர்கள் திரு. வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார், திரு. செ. கிருஷ்ண

1. கலைக்களஞ்சியம், தொகுதி :, பக். 290.

மாச்சாரியார் என்னும் பெரியார்களாவர். அவர்கள் உரைநடையும் படித்து உணரற்பாலது.

கோவை — சிவக்கவிமணி சி. கே. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் பெரிய புராணத்திற்கு மிகச் சிறந்த முறையில் பொழிப்புரையும் விளக்கவுரையும் எழுதி யிருத்தல் பாராட்டத் தகும். அவரது முகவுரை மிக்க பயனுடையது.

மேலே கூறப்பெற்ற நூல்களின் முகவுரைகள் அவற்றை எழுதிய ஆசிரியர்தம் புலமையையும் அரிய உழைப்பையும் விளக்குவதுடன், நாம் அறியத்தகும் அக் கால நிகழ்ச்சிகள் பலவற்றையும் அறிவிப்பனவாக உள் ளன. மேலும் அவை அவ்வவ் ஆசிரியர் உரைநடைக்கு ஏற்ற சான்றாகவும் அமைந்துள்ளன.

குமாரசுவாமிப் புலவர்

சுன்னாகம் அ. குமாரசுவாமிப் புலவர் அவர்கள் தண்டியலங்காரத்திற்கு எழுதியுள்ள முகவுரையின் ஒரு பகுதியைக் கீழே காண்க :

"இதனை உள்ளக்கிளர்ச்சியோடும் விரைவின் முடிக்கும் பொருட்டும் நல்லுரையனை மகிழ் வித்துத் திரவியோபகாரமுந் தக்கவாறு செய்த பெருமையாளருடைய பெருநன்றி மறக்கப் படுவ தன்று; அந் நன்றியாளரும் என்றும் பண்பு பாராட்டப்படுதற்கரியர்.

"நயனொடு நன்றி புரிந்த பயனுடையார்
பண்புபா ராட்டு முலகு".

செந்தமிழ்ப் பரிபாலநம் பூண்டு தண்டமிழின் மேலாந் தரமாயுள்ள திருக்குறளுரை, திருக்கோவையாருரை முதலிய செந்தமிழ் நூலுரைகள் வெளிப்படுதற்குக் காரணராய் விளங்கிய தந்தையார் போலச் செந்தமிழ் நூலுரைகளுக்குத் தாமும் உபகரித்து வரும் பெருமையுடையார் எவரோ, அவரே அந்நன்றியாளராவர். அவர்தாம் யாவரெனின்; பாலவனத்தம் ஜமீந்தார் என்றும், மதுரைத் தமிழ்ச் சங்கத் தலைவர் என்றும், செந்தமிழ்க் கலாவிநோதர் என்றும், செந்தமிழ்ப் பரிபாலகர் என்றும், பிரபு என்றுஞ் சொல்லப்படும் ஸ்ரீமான் பாண்டித்துரைத் தேவர் என்போம். மூவேந்தரும் போய், முச்சங்கமும் போய், பாவேந்தரும் குறைந்து, பழைய நூலுரைகளும் மறைந்து, படிப்பாருமின்றி, கேட்பாருமின்றித் தமிழ்க் கல்வி மழுங்கி வரும் இக் காலத்திலே, மதுரை மாநகரிலே வித்துவ சங்கங் கூட்டியும் அருந்தமிழ் நூல்களை ஈட்டியும், படித்து வல்லராவர்க்குப் பரிசில் கொடுத்தும், "செந்தமிழ்" என்னும் வாசிக மாசிக பத்திரிகையை வெளிப்பட விடுத்தும், பிரபுவர்கள் பலவாறுகச் செய்துவரும் தமது செந்தமிழ் பரிபாலனச் செயல்களுள் இதனையும் ஒன்றுக மதிப்பார்கள் என்பது நமது கருத்து."

—தண்டியலங்காரம், முதற்பதிப்பு, 1903

இப் பகுதியிலுள்ள அரிய செய்தியால் பாண்டித் துரைத் தேவரின் தமிழ்ப்பற்றும் வள்ளல்தன்மையும் நாம் அறிதல் முடிகிறது. நாம் இவ்வரிய செய்தியை வேறு எந்த நூலிலிருந்து பெறுதல் கூடும்?

2

சமய நூல்கள்

சமயங்களின் தொண்டு

இந்த நூற்றாண்டில் சைவம், வைணவம், சமணம், கிறித்தவம், இசுலாம் ஆகிய சமயங்கள் பெரும்பாலும் நல்ல முறையில் ஒன்றுடன் ஒன்று இயங்கி வந்தன என்னலாம். ஆயினும் சிற்சில இடங்களில் சமய வாதங்கள் நிகழ்ந்தன என்பது அவரவர் வெளியிட்ட அறிக்கைகளாலும் கூட்ட அழைப்பிதழ்களாலும் அவர்கள் வரலாற்று நூல்களாலும் தெரிகின்றது. இந்நிகழ்ச்சிகள் ஒருபுறமிருக்க, அவரவர் தத்தம் சமயத்தைப் பற்றி நூல்கள் வரைந்தனர் என்பதும், பழைய சமய நூல்களை அச்சிட்டனர் என்பதும் அந்நூல்களால் அறியப் பெறுகின்றன.

சைவம்

யாழ்ப்பாணத்துப் பெரும்புலவர் **நா. கதிரைவேற்பிள்ளையவர்கள்** 1902-இல் 'சைவபூஷண சந்திரிகை' என்னும் நூலை எழுதினர், அதே ஆண்டில் அஷ்டாவ

தானம் **பூவை—கலியாண சுந்தர முதலியார்** அவர்கள் 'சித்தாந்த வசன பூஷணம்' என்னும் நூலை வரைந்தார். புத்தர் முதலிய பல சமயத்தாரும் கேள்விகள் கேட்பது போலவும் சைவர் அவற்றிற்கு விடையிறுப்பது போலவும் அந்நூல் எழுதப் பெற்றுள்ளது.

மறைமலையடிகளின் சைவ சமய ஆசிரியராகிய அறிஞர் **சோமசுந்தர நாயகர்** என்ற பெரியார் வைணவரோடு பல வாதுகள் நிகழ்த்தியவர்; தமிழகமெங்கும் சைவசமயச் சொற்பொழிவுகள் ஆற்றிப் புகழ்பெற்றவர். அவர் 1909-இல் 'பிரஹ்மவித்யா விகற்ப நிரசம்' என்னும் நூலை எழுதினர். அவர் காலத்தில் எழுந்த சமயவாத அறிக்கைகள் பலவாகும்.

அதே ஆண்டில் **ஸ்ரீ சங்கரபூஜ்ய பகவத்பாத ஆச்சாரிய சுவாமிகள்**, **'ஸ்ரீ வேதாந்த சித்தாந்தசார சங்கிரகம்'** என்னும் நூலை எழுதினர்.

தமிழறிஞரும் வழக்கறிஞருமாகிய **கா. சுப்பிரமணிய பிள்ளை** அவர்கள் 'திருஞான சம்பந்தர்,' 'மாணிக்க வாசகப் பெருமான்,' 'சுந்தரமூர்த்தி சுவாமிகள்,' 'அப்பர் சுவாமிகள்,' 'சேக்கிழார் சுவாமிகள்' 'குமரகுருபர அடிகள்,' 'தாயுமானசுவாமிகள்,' 'பட்டினத்தடிகள்' 'சிவஞான சுவாமிகள்,' 'மெய்கண்டாரும் சிவஞான போதமும்,' 'தமிழர் மதம்' என்னும் வரலாற்று நூல்களை எழுதினர். இவையனைத்தும் சமய நூல்கள். அப்பெரியார் இவற்றோடு 'உலகப் பெருமக்கள்' முதலிய சில உரைநடை நூல்களையும், 'தமிழ் இலக்கிய வரலாறு' என்னும் நூலையும் இயற்றினர். அவரது தமிழுரை செந்தமிழ்ச் சொற்களால் இயன்றது.

வைணவம்

குடந்தை **வி. கே. இராமாநுஜதாசன்** என்ற பெரியார் திருவாய்மொழியையும் அதற்கு மணிப்பிரவாள நடையில் எழுதப்பெற்ற ஆறுயிரப்படி உரையையும் இருபத்து நாலாயிரப்படி உரையையும் நன்கு படித்தவர்; தமிழ் மக்கள் மேலே கூறப்பெற்ற மூலத்தையும் உரைகளின் சிறப்பையும் நன்குணரும் பொருட்டு, எளிய தமிழ் நடையில் திருவாய்மொழிக்கு உரை வழங்கியுள்ளார். இவரது முதல் முயற்சி பாராட்டத் தகுந்தது.

புதுவை — **இராமநுச நாவலர்** என்ற வைணவப் பெரியார் 'வைராக்கிய சூரியோதயம்' என்னும் உரை நடை நூலை எழுதினர்.

புவனகிரி—**அழகிய மணவாள இராமாநுச ஏகாங்கி சுவாமிகள்** (கி. பி. 1860-1927) வடமொழி அறிவும் தமிழ்ப் புலமையும் நிரம்பப் பெற்றவர்; வைணவ சமய நூல்களைப் பழுதறப் படித்த பெரியார்; சமய வாதம் புரிவதில் வல்லவர். ஒரு முறை சைவர்க்கும் இவர்க்கும் சமய வாதம் நிகழ்ந்தது. இவர் சைவர் கேள்விகட்கு ஏற்ற விடையளித்தார். அவ்வினு விடைகள் 'வினு விடைச் சாட்டை' என்னும் உரை நடை நூலாக வெளி வந்தது.

1905-ஆம் ஆண்டில் பாம்பன்—குமரகுருதாச சுவாமிகள் என்ற சைவப் பெரியார் "நாலாயிரப் பிரபந்த விசாரம்" என்ற நூலை எழுதி 'விஷ்ணுவே சிவனது சக்தி' என்ற கருத்தை அந்நூலில் வெளியிட்டார். ஏகாங்கி சுவாமிகள் 1908-இல் இந்நூலுக்கு மறுப்புரையாக, "நாலாயிரப் பிரபந்த விசார ஆபாச

தர்ப்பணம்'' என்னும் ஓர் உரைநடை நூலை எழுதி வெளியிட்டனர்.

பிராம்மணன்தான் ஆச்சாரியனாக வேண்டும். பிராம்மணர் அல்லாதாராகிய இவர் ஆச்சாரியார் ஆதல் கூடாது என்று கூறி வைணவப் பிராம்மணர் கிளர்ச்சி செய்தனர். அவருள் முதன்மை வாய்ந்தவர் திருவகீந்திபுரம்—கச்சிக் கடாம்பி பாஷ்யம் ராமாநுஜாசாரியார் என்பவராவர். இது பற்றி நடைபெற்ற மாநாட்டில் ஏகாங்கி சுவாமிகள் வெற்றி பெற்றார் என்பது அவர் வரலாற்றால் அறியப் பெறும்.

ஏகாங்கி சுவாமிகள் எழுதிய உரைநடை நூல்கள் (1) திருமுட்ட புராணம், (2) திருச்சத்திர கூடமானியம், (3) திராவிட வேத வைபவப் பிரகாசிகை, (4) அர்த்த பஞ்சக சாராம்ருதம், (5) ஸ்ரீவைஷ்ணவ தீபிகை என்பன.

சமணம்

வீடூர் கு. அப்பாசாமி சாத்திரியார் என்ற சமண சமய அறிஞர் 1923-இல் மேருமந்திர புராணத்திற்கு உரை எழுதினார்; அந்நூலின் முற்பகுதியில் மேருமந்திரப் புராணத்தின் கதைச் சுருக்கத்தை எழுதியுள்ளார்.

இம் மேருமந்திரப் புராணத்தை வெளியிட்டவர் குடந்தை அரசினர் கல்லூரி முதல்வர் திரு. அ. சக்கரவர்த்தி நயினார் என்பவர். அவர் நீலகேசி என்னும் சமணப் பெருநூலை வெளியிட்டவர்; சமண சமயத் தொடர்பான வேறு சில நூல்களையும் வெளியிட்ட

பெரியார். அவர் மேருமந்திரப் புராணத்தின் முற்பகுதியில் 55 பக்கங்கள் தமிழ் உரைநடையில் சமண சமயத்தைப் பற்றி எழுதியுள்ளார். புகழ்மிக்க இவ்வாசிரியரது உரைநடை நன்முறையில் அமைந்துள்ளது.

கிறித்தவம்

திருச்சிராப்பள்ளியைச் சேர்ந்த ஜி. பா. திரிங்கால் சுவாமிகள் என்ற பாதிரியார் புதிய ஏற்பாட்டை இலத்தீன் மொழியிலிருந்து தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டார். சென்ன பட்டணத்து சத்திய வேத சங்கம் 'பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும்' என்னும் வேத நூலை 1914-இல் வெளியிட்டது. இவ்விரு நூல்களுக்கும் சிற்சில இடங்களில் சொல் வேறுபாடுகள் காணப்படுகின்றன. இந்திய இலங்கை வேதாகம சங்கம் என்பது 1914-இல் 'பரிசுத்த வேதாகமம்' என்னும் சமயநூலை வெளியிட்டது. அதே சங்கம் 1950-இல் பழைய ஏற்பாட்டை வெளியிட்டது. தூத்துக்குடியிலுள்ள தமிழ் இலக்கியக் கழகம் சத்திய வேத ஆகமம்—பழைய ஏற்பாடு என்னும் நூலை 1960-இல் வெளியிட்டது. அக்கழகம் இந்நூல் வெளியீட்டு நோக்கத்தைப் பற்றிக் கீழ் வருமாறு குறிப்பிட்டுள்ளது.

> "வேதாகமம் முழுவதையும் ஒரே புத்தகமாகவும், குறைந்த விலையிலும் பெற்றுப் பயன் பெறும் வாய்ப்பு இதுவரையில் தமிழ்க் கத்தோலிக்கருக்கு இல்லாமல் இருந்தது. எனவே, அத்தகையதொரு புதிய பதிப்பு

இன்றியமையாததாயிற்று. இக்குறையை நீக்கத் தமிழ் இலக்கியக் கழகம் முன் வந்து, யாவருக்கும் எளிதிற் கிடைக்கும் வண்ணம் இப்புதிய பதிப்பை வெளியிட்டுள்ளது.

"இப்பதிப்பில், மற்றைய பதிப்புக்களைப் போலன்றி வேதாகம வசனங்கள் கருத்துக்குப் பொருந்தப் பத்தி பத்தியாக அமைக்கப்பட்டிருப்பதோடு ஒவ்வோர் அதிகாரத்தின் இறுதியிலும் ஒப்பு நோக்கும் வசன எண்களும் தேவையான விளக்கமும் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும், ஒவ்வொரு ஆகமத்தின் முகவுரையும், ஒவ்வொரு அதிகாரத்தின் தலைப்பும் சுருக்கமாகத் தரப்பட்டுள்ளன."

தூத்துக்குடி தமிழ் இலக்கியக் கழகம் வேதாகமத்தை இயலும் வரையில் எளிய தமிழ் நடையில் கொண்டு வரும் முயற்சியில் இப்பொழுது ஈடுபட்டுள்ளது; சென்ற ஆண்டில் (1965) மத்தேயு எழுதிய சுவிசேஷத்தை நல்ல முறையில்வெளியிட்டுள்ளனர்.

கும்பகோணத்திலிருந்த திரு. எல்வின் என்ற பாதிரியார் 'புதிய ஏற்பாட்டின் திருச் சரித்திரங்கள்' என்னும் நூலை 1909-இல் எழுதினார். அது தரங்கம்பாடி மிஷன் அச்சகத்தில் அச்சிடப் பெற்றது.

இசுலாம்

நாகூர் குலாம் காதிர் நாவலர் என்பவர் தமிழ்ப் புலமை நிரம்பியவர். அவர் நாகை—நாராயணசுவாமிப் பிள்ளை என்பவரிடம் தமிழ்ப் புலமை பெற்றவர். அப் பிள்ளையவர்களிடமே நாகை. வேதாசலம் பிள்ளை என்ற மறைமலையடிகளும் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பயின்றார், நாவலர் அவர்கள் கி.பி. 1900-ஆம் ஆண்டில் 'ஆரிபு நாயக வசனம்' என்னும் நூலை எழுதினார். மௌலானா அப்துர் ரஹ்மான் சாகிபு என்ற அறிஞர் 'கீமியா—யல்—ஆதத்து' என்னும் உரை நடை நூலை 1904-இல் இயற்றினார். காதிரசனா மரக் காயர் என்ற பெரியார் கிறித்தவ சமயத்தைக் கண்டித்து 1912-இல் ஒரு நூலை எழுதினார். அதே ஆண்டில் சதாவதானி செய்குத் தம்பிப் பாவலர் என்ற பெரும் புலவர் சீறாப் புராணத்திற்குப் பொழிப்புரை இயற்றினார். இவர் மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் பாண்டித்துரைத் தேவரால் சிறப்பிக்கப் பெற்றவர். நயினார் முகம்மது பாவலர் என்பவர், மின்னா நூருத்தீன் புலவர் எழுதிய 'பொன்னரி மாலை'யை 1919-இல் உரைப் போக்கில் எழுதினார்.

ஜனாப் அ. கா. அப்துல் அமீது பாகவீ என்ற பெரியார் திருக்குர் ஆனை 1950-இல் தமிழில் மொழி பெயர்த்தார். அதன் ஒரு பகுதியைக் கீழே காண்க:

"அல்லாஹ் (நேருக்கு நேராகப்) பேசுவதற்குரிய தகுதி மனிதரில் ஒருவருக்குமில்லை. எனினும், வஹியின் மூலமாகவோ அல்லது திரைக்கப்பாலிருந்தோ அல்லது மலக்குகளை அனுப்பி வைத்து வஹியின் மூலமாகவோ தனக்கு விருப்பமான கட்டளையை (மனிதனுக்கு) அறிவிக்கின்றான். (ஏனென்றால்) நிச்சயமாக அவன் மிக்க மேலானவனும் ஞானமுடையானுமாவான்."

(வஹி—தெய்வ அறிவிப்பு. மலக்கு—தேவ தூதர்)

3

நாடக நூல்கள்

நாடக ஆராய்ச்சி

இந்த நூற்றுண்டின் தொடக்கத்தில் நாடகத்தைப் பற்றி ஆராய்ந்த பெருமை பேரசிரியர் **வி. கோ. சூரிய நாராயண சாத்திரியாருக்கே** உரியது. அவர் தமது 'தமிழ் மொழி வரலாறு' என்னும் நூலில் நாடகத் தமிழின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றிச் சங்க காலம் முதல் தம் காலம் வரையிலும் ஆராய்ந்து எழுதினுர். பின்பு நாடகத் தமிழின் இலக்கணம் நிறைவாகக் கிடைக்கப் பெருமையால் 1901-இல் அதற்கோர் இலக்கணம் இயற்றினுர். அந்நூலின் பெயர் 'நாடக இயல்' என்பது. அப்பெரியார் 1902-இல் 'மான விஜயம்' என்னும் நாடக நூலை இயற்றினுர். ரூபாவதி, கலாவதி என்பனவும் அவரியற்றிய நாடக நூல்களாகும். அவர் தாம் இயற்றிய நாடகங்களில் தாமே வேடம் தாங்கி நடித்தார் என்பதும் குறிக்கத்தகும்.

மறைமலையடிகள் வடமொழியில் காளிதாசர் செய்த சாகுந்தல நாடகத்தை 1907-இல் தமிழில் மொழி

பெயர்த்தார்; இடையிடையே தாமே பாடல்களைப் பாடிச் சேர்த்தார்; 'சாகுந்தல நாடக ஆராய்ச்சி' என்னும் ஆராய்ச்சி நூலையும் வரைந்தார்.

சங்கரதாஸ் சுவாமிகள்

தூத்துக்குடி **சங்கரதாஸ் சுவாமிகள்** 'தமிழ் நாடகத் தலைமையாசிரியர்' என்று பெயர் பெற்றவர். இன்று சிறந்த நாடகக் கலைஞராக விளங்கும் ஔவை டி. கே. சண்முகம், டி. கே. பகவதி, எம். ஆர். இராதா முதலி யோர் அவ்வாசிரியரிடமே நாடகக் கலையைப் பயின்றனர் எனின், அவ்வாசிரியர் பெருமானது சிறப்பினை என் னென்பது! அவர் நாடகங்கள் எழுதுவதிலும் பாக்கள் புனைவதிலும் நடிப்புக்கலை கற்பிப்பதிலும் தலைசிறந்து விளங்கினர். அவர் எழுதிய நாடக நூல்கள் பலவாகும். அவற்றுள் 'அபிமன்யு சுந்தரி' என்பது ஒன்று. அதன் உரைநடை, பாத்திரத்திற்கு ஏற்ப மென்மையும் வன்மை யும் கலந்து எழுதப் பெற்றது. அவரது உரைநடை ஆற்றலைக் காண அந்நூல் ஒன்றே சாலும்.

பவானந்தம் பிள்ளை

காவல்துறை உயர் அலுவலராயிருந்த **பவானந்தம் பிள்ளையவர்கள்** பெரும் பொருட்செலவில் தமிழ் நூல் களைப் பதிப்பித்த பெருமையுடையவர். அப்பெரியாரு டைய கல்விக் கழகத்தில் தொல்காப்பியப் பொருளதிகார உரை, யாப்பருங்கல விருத்தியுரை, இறையனாரகப் பொருளுரை, வீரசோழியம் முதலிய இலக்கண நூல்கள் தக்க தமிழ்ப் பெரியார்களால் முதன் முதல் பதிப்பிக்கப்

பெற்றன. தாய்மொழி வளர்ச்சியில் பெரிதும் ஈடுபாடு கொண்ட பிள்ளையவர்கள் தம் ஓய்வு நேரங்களில் நாடக நூல்கள் இரண்டினை எழுதினர். அவற்றுள் ஒன்று 'சீதா கல்யாணம்' என்பது, மற்றொன்று 'சகுந்தலை' என்பது.

கரந்தைக் கவியரசு **ரா. வேங்கடாசலம் பிள்ளை** அவர்கள் தமிழ்ப் பெரும் புலவராவர். அவர் சில ஆராய்ச்சிக் கட்டுரைகளையும், புகழேந்தி நாடகம், சிலப்பதிகார நாடகம், மணிமேகலை நாடகம் என்னும் நாடக நூல்களையும் எழுதினர். அவை கரந்தைத் தமிழ்ச் சங்க மாணவர்களால் நடிக்கப் பெற்றன.

பாரதிதாசன்

பாரதிதாசன் அவர்கள் கவியரசர் பாரதியாரின் மாணவர்; காலத்திற்கு ஏற்ற சீர்திருத்தக் கருத்துக்களை அஞ்சாமல் எடுத்துக் கூறுவதில் சிறந்தவர். அவருடைய கவிதைகள் நாடறிந்தவை. அவர் திரைப்படக் கதைகளையும் அவற்றுக்கு ஏற்ற உரைநடையையும் எழுதுவதில் வல்லவர். அவர் இயற்றிய நான்கு சிறு நாடகங்கள் 'பாரதிதாசன் நாடகங்கள்' என்னும் தலைப்பில் வெளி வந்துள்ளன. 'கற்கண்டு' என்னும் முதல் நாடகமே இத்தொகுப்பில் பெரியது; கொச்சைத் தமிழில் ஆனது; ஆயினும், நகைச்சுவை மிக்கது. நான்காம் நாடகம் செய்யுள் நடையில் இயன்றது. இரண்டாம் மூன்றும் நாடகங்கள் சிறிது உயர்தரமான பேச்சு நடையில் அமைந்துள்ளன. 'பிசிராந்தையார்' என்பதும் பாவேந்தரின் நாடக நூலாகும்.

கலாநிலையம்

'கலா நிலையம்' கிழமை இதழ். 1931-இல் அதன் ஆசிரியரான திரு. டி. என் சேஷாசலம் ஐயர் அவர்கள் ரிச்சர்ட் பிரின்ஸ்லே ஷெரிடன் எழுதிய 'பிசாரோ' என்னும் நாடகத்தைத் தமிழில் வரைந்தார்; திரு. டி. என். சுந்தரேசன் என்பவர் 'நவராத்திரி' என்னும் நாடகத்தை அதே கலா நிலைய இதழ்களில் எழுதினார். ஆசிரியர் சேஷாசலம் ஐயர் அதே இதழில் 1933-இல் செகப்பிரியரின் காற்றும் மழையும் (Tempest) என்னும் நாடகத்தைத் தமிழாக்கினார்; 1935-இல் 'ஒதெல்லோ' (Othello) என்னும் நாடகத்தை மொழி பெயர்த்தார்.

பம்மல் சம்பந்த முதலியார்

பம்மல் சம்பந்த முதலியார் வழக்கறிஞராகவும், நீதிபதியாகவும் பணியாற்றியவர்; நாடகங்களில் நடித்துப் பெயர் பெற்றவர். தாம் எழுதிய நாடகங்களில் தாமே நடித்த புகழும் அவருக்கு உண்டு. அவர் 85 நூல்களை எழுதியுள்ளார். அவற்றுள் நாற்பதுக்கு மேற்பட்டவை நாடகங்கள்; எஞ்சியவை பல பொருள் பற்றிய நூல்கள்.

அப்பெரியார் இந்த நூற்றுண்டு நாடக உலகில் சங்கரதாச அடிகளைப் போலவே பெரும் புகழ் பெற்றவர். அவரது நாடக நூல் உரைநடைக்குக் "'கொடையாளி கர்ணன்'' என்னும் நாடக நூலிலிருந்து ஓர் எடுத்துக் காட்டினை இங்குக் காணலாம். இப் பகுதி, பாரத நூலில் அவருக்கு இருந்த புலமையையும்,

அவரது எழுத்து வன்மையையும் தெளிவாக எடுத்துக் காட்டவல்லது.

காண்டீபன் கணைக்கு இலக்காகிக் கர்ணன் ஆவி சோர்ந்த பின்பு, கண்ணன் காண்டீபனை நோக்கிக் கீழ்வருமாறு கூறினன்.

''ஸ்ரீகிருஷ்ணன்: ''அர்ஜுனு! உன் சபதத்தை நிறைவேற்றிய துண்மைதான். ஆயினும் கர்ணனைக் கொன்றது நீ மாத்திரம் என்று கர்வப்பட்டு விடாதே. அவனைக் கொன்றவர்கள் யார் யார் என்று சொல்லுகிறேன், கேட்பாயாக! கர்ணன் தேரின் கீழ்சிக்கிக் கன்று ஒன்று இறந்த பொழுது அவனைச் சபித்த அந்தணன் ஒன்று, 'படுகளத்தில் பாணங்களை விடும் ஞானம் குன்றிப் போமாக' என்று சபித்த பரசுராமன் ஒன்று, அவனுடன் பிறந்த அபேத்யமான கவச குண்டலங்களைத் தானமாக வாங்கிய ஆயிரக் கண்ணன் ஒன்று, நாகாஸ்திரத்தை மறுமுறை உன்மீது விடலாகாதென்று கர்ணனிடம் வரம் வாங்கிய தேவி ஒன்று, சாரதியாவும் உற்சாகப் படுத்தாமல் அவன் சவுரியத்தை எப்பொழுதும் இழித்துப் பேசிய சல்லியன் ஒன்று, அவனது தலையைக் காத்த தர்மத்தைத் தானமாக வாங்கிய நான் ஒன்று, நீ ஒன்று; ஆகவே நாம் ஏழு பெயர்

சேர்ந்து இந்த மகாவீரனை முடித்திருக்கிறோம். ஆகவே நீயே செய்ததாக அகங்காரம் கொள்ளாதே! வா போவோம்—தர்மராஜனிடம், நீ உன் சபதத்தை முடித்ததைக் கூறுவோம்.''

(கொடையாளி கர்ணன், பக் 44, 45)

4

இலக்கிய நூல்களும் ஆராய்ச்சி நூல்களும்

தமிழ்மொழி வரலாறு

சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த பேராசிரியர் **வி. கோ. சூரிய நாராயண சாஸ்திரியாரும்** அவர்தம் இயற்றமிழ் மாணவர்களும் இயற்றிய உரை நூல்கள் பலவாகும். சாஸ்திரியார் தமிழ் மொழியின் சிறப்பியல்புகளை விளக்கித் **தமிழ் மொழி வரலாறு** என்னும் அரிய ஆராய்ச்சி நூலை எழுதினார். அந்நூல் இன்றளவும் சிறப்புத் தமிழ் மாணவர்க்கும் ஆராய்ச்சியாளர்க்கும் பயன்பட்டு வருகின்றது. 'வடமொழி, இலத்தின், கிரீக்கு முதலியன போல தமிழ் மொழியும், 'உயர்தனிச் செம்மொழி'. ஆமாறு சிறிது காட்டுவோம்' என்று தொடங்கி அவர் தமிழின் சிறப்பை விளக்கியிருத்தலும் தமிழின் மூவகைப் பாகுபாட்டையும் அவற்றின் வளர்ச்சியையும் விளக்கியிருத்தலையும் இந்நூலில் படித்து மகிழலாம்.

ஆராய்ச்சியில் நடுவுநிலை உள்ளம் வாய்ந்த அப்பெரியார் 33 வயதிற்குள் காலமானார் என்பது பெரிதும் வருந்தற்குரியது.

பரிதிமாற் கலைஞரின் மாணவர்கள்

சாஸ்திரியாரின் இயற்றமிழ் மாணவருள் முதல்வரான **ந. பலராம அய்யர்** அவர்கள் 'தசரதன் தவறு', 'வல்ல பரிணயம்', 'மத்த விலாசம் பிரகசனம்' என்னும் நாடக நூல்களை உரைநடையில் எழுதினார்; சூளாமணி வசனம், சிலப்பதிகாரக் கதை, ஆத்திச்சூடி, நீதிக் கதைகள், தசகுமார சரித்திரம் முதலிய நூல்களை இயற்றினார்; சாஸ்திரியார் செய்த நாடக இயலுக்கு இவர் எழுதியுள்ள உரை பாராட்டற்பாலது.

பிரணதார்த்திகர சிவனார் என்ற மாணவர் அநுமான் சிங்கின் சரித்திரம், களவு திறவுகோல் என்னும் துப்பறியும் பெருங்கதைகளையும், வியாச மஞ்சரி என்னும் உரை நடை நூலையும், தமயந்தி நாடகம் என்னும் நாடக நூலையும் இயற்றினார். அவர் சிலப்பதிகார ஆராய்ச்சி என்னும் தலைப்பில் 'ஞானபோதினி' என்னும் திங்கள் இதழில் எழுதிய கட்டுரைகள் இந்த இருபதாம் நூற்றாண்டு தொடக்கத்தில் வெளியான முதல் இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எனலாம்.

சருக்கை, இராமசாமி ஐயங்கார் என்ற மாணவர், செகப்பிரியர் இயற்றியுள்ள 'வெரோனா நகரத்துப் பெருமக்கள் இருவர்' என்னும் நாடகத்தைத் தழுவிச் 'சுகுவச் சுகேசர் அல்லது நட்பும் காதலும்' என்னும் ஐந்து அங்க நாடகத்தை எழுதினார்; கமலினி, உஷாபரிணயம்,

கட்டுரைத் தொகுதி முதலிய நூல்களையும் எழுதினர்; புஷ்ப பான விலாசம் என்னும் உவகைச் சுவை மிகுந்த நூலை வடமொழியினின்றும் தமிழாக்கினர்; இந்துமதி அல்லது கற்பரசி என்னும் ஆறங்க நாடகம் ஒன்றையும் எழுதினர்; காளிதாசர் இயற்றிய 'விக்ரமோவசி' என்னும் வடமொழி நாடகத்தைத் தமிழ்ப் படுத்தினர்.

பிறிதொரு மாணவரான **சுப்பிரமணிய ஆசாரி** வான இயல் பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பலவற்றை ஞானபோதினியில் எழுதி வந்தார், ஔவையாரைப் பற்றி அரிய ஆராய்ச்சி நூல் ஒன்றை வரைந்தார்; வியா பார நீதி என்னும் நூலையும், பழிக்குப் பழி என்னும் நாடகத்தையும் எழுதினர்.

செய்யூர் முத்தைய முதலியார் என்ற பெருநிலக்கிழார் சாஸ்திரியார் மாணவர்களில் ஒருவர். அவர் பெசன்ட் அம்மையார் இயற்றிய 'ஸ்ரீ ராம சந்திரா' என்னும் ஆங்கில நூலைத் தழுவி 'இராமாயண சாரம்' என்னும் தலைப்பில் பல கட்டுரைகளை 'ஞானபோதினி' வாயிலாக வெளியிட்டார். வேறொரு மாணவரான **கு. ரா. சீநிவாச ஐயங்கார்** என்பவர், 'வித்தியாரண்ய நகரம்' என்னும் நூலையும், 'ப்ரிதுலை அல்லது நன்றி அறியா மகன்' என்னும் நாடக நூலையும் எழுதினர்; டி. ஏ. சீநிவாச அய்யங்கார் என்பவருடன் சேர்ந்து 'மிருச்ச கடிகை' என்னும் நாடகத்தை மொழி பெயர்த்தார்.

சருக்கை சுந்தராச்சாரியார் என்பவர் ஆராய்ச்சி முறையில் இலக்கியத்தைப் படித்தவர்; ஆங்கிலத்தில் சாமுவேல் ஸ்மைல்ஸ் என்பவர் எழுதிய தற்பயிற்சி, வாழ்க்கைப் பயன் முதலிய கட்டுரைகளை ஆங்கிலத்தி

லிருந்து மொழி பெயர்த்தார்; 'உலோபி மகன்', 'இவ் விரிவும் முடியுமா?' முதலிய கதை நூல்களையும் எழுதினார். **சருக்கை வரதாச்சாரியார்** என்ற மாணவர் 'உள இயல்' பற்றிய அரிய கட்டுரைகளை எழுதி 'ஞான போதினி'யில் வெளியிட்டார்; 'ஜோதி மாலை' என்னும் சிறந்த நாடக நூலை இயற்றினார்.

மற்றொரு மாணவரான **ஐக்கராசு, பி. வியாசதேவய்ய பந்துலு** என்ற ஆந்திரப் பிராமணர் 'தமிழ் பயின்று' என்னும் ஆங்கில நூலைப் 'பள்ளியறைப் பிரசங்கங்கள்' என்னும் தலைப்பில் தமிழாக்கி 'ஞான போதினி'யில் வெளியிட்டார்.

இங்ஙனம் சென்ற நூற்றாண்டின் இறுதியிலும் இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலும் வாழ்ந்த சூரிய நாராயண சாஸ்திரியாரும் அவர்தம் இயற்றமிழ் மாணவர்களும் பல அரிய நூல்களையும் கட்டுரைகளையும் எழுதித் தமிழ் உரை நடைக்குச் சிறந்த தொண்டு செய்தனர்.

வளம் சேர்த்த நூல்கள்

மைசூர் அரண்மனை மருத்துவர் **மஞ்-ஜகந்நாத நாயடு** என்பவர் 1906-இல் 'மருத்துவ நூல்' ஒன்றை இயற்றினார். **சாமுவேல் அம்மாள்** என்பவர் 1909-இல் 'இல்லற இன்ப இரகசியம்' என்னும் உரை எழுதினார். அதே ஆண்டில் **கெ. எல். முத்துசாமி அய்யர்** என்பவர் சென்னை மாகாணக் கிராம முனிசீபு முதலியோர்க்குப் பயன்படுமாறு உள்ள 'தமிழ் ரெவின்யூ சட்ட தீபிகை' என்னும் நூலை எழுதினார். திரு. **அ. வேங்கடேச சாரியார்** என்ற அறிஞர் வடமொழி வியாச பாரதத்தைத் தமிழில் 1912-இல் மொழி பெயர்த்தார். யாழ்ப்பாணம் **த. கயிலாசம் பிள்ளை** என்பவர் 1918-இல் 'ஆறுமுக

நாவலர் சரித்திரம்' என்னும் நூலை வரைந்தார். மதுரை அமெரிக்கன் கல்லூரிப் பேராசிரியர் **அ. கார்மேகக் கோனார்** அவர்கள் 'நல்லிசைப் புலவர்கள்' என்னும் அரிய செந்தமிழ் நூலை வெளிப்படுத்தினார். பச்சையப்பன் கல்லூரிப் பொருளாதார பேராசிரியர் **திரு. அ. முத்தையா** அவர்கள் கூட்டுறவு பற்றி அரிய தமிழ் நூல் ஒன்றை எழுதினார். சுதேசமித்திரன் உரிமையாளராய் விளங்கிய **திரு. சி. ஆர். சீனிவாசன்** அவர்கள் 'தராசு', 'அக்கப்போர்' என்னும்இரு நூல்களை எழுதினார். அவர் அவற்றைப் பேச்சு மொழியில் நகைச்சுவை ததும்ப எழுதியுள்ளார்.

தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

தமிழறிஞர் **தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்** அவர்கள் தென்னாட்டுக் கோயில்களை ஆராய்ந்து கட்டடக் கலை, சிற்பக்கலை, வார்ப்புக்கலை, ஓவியக்கலை என்னும் பல பொருள் பற்றி அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் எழுதி வந்தார். அவை 'தமிழ்க் கோவில்கள் என்னும் தலைப்பில் வெளிவந்தன. அவருடைய கட்டுரைகள் நாட்டில் உள்ள திருக் கோயில்கள் மீது பொது மக்களுக்கு நல்ல மதிப்பு உண்டாகச் செய்தன. கலைத்துறையில் அவரது தொண்டு என்றும் நின்று விளங்கும்.

ஐயரின் நூல்கள்

டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் மணிமேகலை கதைச் சுருக்கம், உதயணன் கதைச் சுருக்கம் எனும்ன் நூல்களை முதலில் வெளியிட்டார். அவர் தம் வாழ் நாளில் கண்ட அரிய நிகழ்ச்சிகளையும், பிறர் சொல்லக்

கேட்ட நிகழ்ச்சிகளையும் பல நூல்களாக எழுதினர்; அவை:- 'நான் கண்டதும் கேட்டதும்,' 'பழையதும் புதியதும்,' 'நல்லுரைக் கோவை' (நான்கு பாகங்கள்) முதலியன. அவை மிக எளிய நடையில் எழுதப்பட்டன; படிக்கப் படிக்க இன்பம் ஊட்டுவன. அப்பெரியார், தாம் நன்கு அறிந்த இசைப்புலவர் மூவர் வரலாறுகளைச் சுவை மிகும்படி எழுதினர். அவை—'கோபால கிருஷ்ண பாரதியார்,' 'கனம் கிருஷ்ணய்யர்' என்போர் வரலாறுகளாகும். 'சங்க காலத் தமிழும் பிற்காலத் தமிழும்' என்பது அய்யரவர்கள் சென்னைப் பல்கலைக் கழகத்தில் ஆற்றிய சொற்பொழிவுகளாகும். அவை ஒரு நூலாக வெளிவந்தன. அந்நூல் அய்யர் அவர்களின் ஆராய்ச்சித் திறனுக்கு சிறந்த எடுத்துக் காட்டாகும். அப்பெரும் புலவர், தம்மைத் தமிழறிஞராக்கிய திரிசிரபுரம் மகா வித்துவான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்களைப் பற்றிய வரலாற்றை மிக விரிந்த அளவில் எழுதி வெளியிட்டார்; பெரும் புலவர் தியாகராசச் செட்டியார் வரலாற்றையும் ஒரு நூலாக வெளியிட்டார்; இறுதியில் தமது வரலாற்றையும் பல கட்டுரைகளாகக் கலைமகளில் எழுதி வந்தார்.

இங்ஙனம் ஐயரவர்கள் பழம் பெரும் நூல்களைப் பதிப்பித்துத் தமிழகத்திற்கு உதவியதோடு இல்லாமல், பலவகை உரை நடை நூல்களையும் எழுதி வெளியிட்டமை பாராட்டற்பாலது.

ரா. இராகவையங்கார்

சேது நாட்டு அரசவைப் பெரும்புலவராய் விளங்கிய **ரா. இராகவையங்கார்** அவர்கள் செந்தமிழ் என்னும் இதழில் பல ஆராய்ச்சிக் கட்டுரைகளை எழுதினர்; சங்க

காலப் பெண் மணிகளின் வரலாறுகளை 'நல்லிசைப் புலமை மெல்லியலார்' என்னும் நூலாக வெளிப்படுத்தினர்; 'சேது நாடும் தமிழும்' என்பது அரிய ஆராய்ச்சி நூல். அந்நூல், சேதுபதிகளுக்கும் தமிழுக்கும் உள்ள தொடர்பையும் அவர்கள் தமிழை எங்ஙனம் வளர்த்தனர் என்பதையும் நன்கு விளக்குகின்றது. அப் பெரியார் எழுதிய மற்றோர் அரிய ஆராய்ச்சி நூல் 'வஞ்சிமா நகரம்' என்பது. 'சேரர் கோ நகர் கொங்கு நாட்டுக் கருரே' என்ற கொள்கையில் அவ்வாராய்ச்சி நூல் எழுதப்பெற்றுள்ளது. அந்த அறிஞர் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராய் இருந்தபொழுது எழுதிய ஆராய்ச்சி நூல் 'தமிழ் வரலாறு' என்பது. அது மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல். 'தொல்காப்பியம் இன்றுள்ள சங்க நூல்களுக்கெல்லாம் பல நூற்றாண்டுகள் முற்பட்டது—தொல்காப்பியர்க்கு முன்பு மிகப் பல செய்யுள் நூல்களும் உரைநடை நூல்களும் இருந்தன—தமிழ் காலத்தால் பழமையும் இலக்கியத்தால் பெருமையும் பெற்ற மொழி' என்பன போன்ற அரிய கருத்துக்களை அப்பெரியார் தம் நுண்மாண் நுழை புலம் கொண்டு ஆராய்ந்து அந்நூலில் வெளியிட்டுள்ளார். அவர், தம் அரிய நூல்களால் தமிழ் உரை நடையை வளர்த்ததோடு, ஆராய்ச்சித் துறையையும் நன்கு வளர்த்தார் என்று கூறுதல் பொருத்தமாகும்.

மு. இராகவையங்கார்

ரா. இராகவையங்காரின் அம்மான் சேயான இராவ்சாகிபு மு. **இராகவையங்கார்** அவர்கள் 'செந்தமிழ்' ஆசிரியராக இருந்து அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளை வரைந்தார்; 'வேளிர் வரலாறு', 'தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி', 'சேரன் செங்குட்டுவன்', 'ஆழ்

வார்கள் காலநிலை', 'சாசனத் தமிழ்க் கவி சரிதம்', 'செந்தமிழ் வளர்த்த தேவர்கள்', 'வினைத்திரிபு விளக்கம்', 'கட்டுரை மணிகள்' ஆகிய ஆராய்ச்சி நூல்களை எழுதிப் புகழ் பெற்றார். அவர் பல ஆண்டுகளில் எழுதி வந்த கட்டுரைகள் 'ஆராய்ச்சி தொகுதி' என்னும் பெயருடன் வெளிவந்தன. இங்ஙனம் அப் பெரியார் தமிழ் உரை நடைக்குச் செய்த தொண்டு பாராட்டத் தகுந்தது.

நாராயண அய்யங்கார்

'செந்தமிழ்' என்ற இதழின் ஆசிரியராய்ப் பல்லாண்டுகள் இருந்து தொண்டு செய்த திரு. **நாராயண அய்யங்கார்** அவர்கள் அத்திங்கள் இதழில் எழுதிய கட்டுரைகள் பலவாகும். வடமொழியில் இராமாயணம் செய்த வால்மீகி முனிவர் தமிழ்ப் புலவராக இருக்கலாம் என்பதற்குப் பல காரணங்களைக் காட்டினார். அநுமன் அசோக வனத்தில் சீதையிடம் தமிழில் பேசினான் என்பதற்குரிய காரணங்களை விளக்கி அப்பெரியார் எழுதிய தொடர் கட்டுரை அவரது வடமொழிப் புலமையையும் தமிழ்ப் புலமையையும் நன்கு வெளிப்படுத்துவனவாகும். அப்பெரியார் ஆராய்ச்சித் துறையில் சிறந்தவரென்று கூறலாம்.

வே. வேங்கடராசலு ரெட்டியார்

சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளராக இருந்த பன்மொழிப் புலவர் வித்துவான் **வே. வேங்கடராசலு ரெட்டியார்** அவர்கள் தமிழ் உரை நடைக்குத் தொண்டுசெய்த பெரியாராவர். அவர் பரணர், கபிலர் என்னும் இரண்டு அரிய ஆராய்ச்சி நூல்களை

எழுதியுள்ளார்; 'இலக்கணக் கட்டுரைகள்', 'திராவிட மொழிகள்' என்னும் மொழியாராய்ச்சி நூல்களையும் வரைந்துள்ளார்; 'மேருமந்தரர்' போன்ற சில துணைப் பாட நூல்களையும் இயற்றியுள்ளார். அவரது நடை இனிமையும் எளிமையும் வாய்ந்தது.

தஞ்சை தந்த தமிழறிஞர்கள்

தஞ்சை வழக்கறிஞர் **திரு கே. எஸ். சீநிவாசப் பிள்ளையவர்கள்** சிறந்த ஆராய்ச்சி அறிஞர். அவர் 1922-இல் **தமிழ் வரலாறு** என்னும் அரிய ஆராய்ச்சி நூலை வெளியிட்டார்.

பண்டித **ந. மு. வேங்கடசாமி நாட்டார்** அவர்கள் அகநானூறு, மணிமேகலை, திருவிளையாடற் புராணம் முதலிய பல நூல்களுக்கு உரையும் விளக்கமும் எழுதிப் புகழ் பெற்றவர். அப்பெரியார் கள்ளர் சரித்திரம், வேளிர் வரலாற்று ஆராய்ச்சி, சோழர் சரித்திரம், நக்கீரர், கபிலர், கட்டுரைத் திரட்டு இரண்டு பகுதிகள் ஆகிய நூல்களை எழுதித் தமிழ் உரை நடைக்குத் தொண்டு செய்தார்.

கல்வெட்டு ஆராய்ச்சி அறிஞரான திருப்புறம்பியம் **வி. சதாசிவ பண்டாரத்தார்** அவர்கள் முதற் குலோத்துங்கன், சோழர் வரலாறு, கல்வெட்டுகளால் அறியப் பெறும் உண்மைகள், இலக்கிய ஆராய்ச்சியும் கல்வெட்டுகளும் என்னும் புகழ் மிக்க ஆராய்ச்சி நூல்களை எழுதிப் பொலிவு பெற்றவராவர்

எஸ். வையாபுரிப் பிள்ளை

பேராசிரியர் **எஸ் வையாபுரிப் பிள்ளை** அவர்கள் ஆராய்ச்சி உலகில் பெயர் பெற்றவர். அவர் எழுதிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல. அவை—'இலக்கியச் சிந்தனைகள்', 'தமிழின் மறுமலர்ச்சி', 'இலக்கிய தீபம்', 'தமிழ்ச் சுடர் மணிகள்', 'கம்பன் காவியம்', 'இலக்கணச் சிந்தனைகள்', 'சொற்களின் சரிதம்', 'சொற்கலை விருந்து' முதலியன. இவை அவரது ஆராய்ச்சித் திறனைக் குன்றின் மீதிட்ட விளக்கெனை ஒளிரச் செய்பவை. அவர் எழுதியுள்ள 'தமிழ் உரைநடை' 'தமிழின் மறுமலர்ச்சி', 'தமிழில் சொல் வளர்ச்சி,' 'பாரதியுகம்', 'அகராதிக்கலை', முதலிய கட்டுரைகள் பல அரிய செய்திகளைக் கூறுவன. தமிழுக்கு உழைத்த சி. வை. தாமோதரம் பிள்ளை முதலிய பெரியார்களைப் பற்றி 'தமிழ்ச் சுடர் மணிகள்' என்னும் நூலில் அவர் எழுதியுள்ளவை படித்து அறியத்தகும் அரிய செய்திகளாகும். இப்பெரியார் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகள் தமிழ்ச் சொல்லாராய்ச்சியில் சிறந்து விளங்கினர்; தம் இறுதி வரையில் நூலும் கையுமாக இருந்த பெருந்தமிழறிஞர். அவரது ஆராய்ச்சியில் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். ஆயினும் அவை அவரது ஆழ்ந்த அகன்ற புலமையையும் ஆராய்ச்சித் திறனையும் குறைப்பனவாகா.

சோமசுந்தர பாரதியார்

நாவலர் டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார் அவர்கள் கவியரசர் பாரதியாரின் பிள்ளைப் பருவத் தோழர். அவர் சிறந்த வழக்கறிஞர்; வாதத் திறமையில்

பெயர் பெற்றவர். அவர் வழக்கறிஞர் கண் கொண்டே தமிழ் நூல்களைப் பயின்றார். அவர் எழுதிய நூல்களில் 'தயரதன் குறையும் கைகேயி நிறையும்' என்பது ஒன்று. அவரது வாதத் திறமைக்கு அது சிறந்த எடுத்துக் காட்டாகும். அவர் திருவள்ளுவரைப் பற்றி எழுதியுள்ள ஆராய்ச்சி நூல் உருவில் சிறியதாயினும் பொருளில் பெரியது. 'சேரர் தலைநகரம் கொங்கு நாட்டுக் கருவூர் அன்று' என்று அவர் எழுதிய ஆராய்ச்சி நூல் அவரது ஆராய்ச்சித் திறனை விளக்க வல்லது. 'சேரர் பேரூர்' என்பது அந்நூலின் பெயர். சங்க காலச் சேரர் மருமக்கள் தாய முறையினரே என்பதை நிலைநாட்ட அவர் செய்த ஆராய்ச்சி மிக்க பயனுடையது. தொல்காப்பியப் பொருளதிகாரத் திற்குத் தொல்காப்பியர் காலத்தை உளங்கொண்டு, சங்க இலக்கியத்தின் அடிப்படையில் அவர் வரைந் துள்ள உரை மிக்க பயன் தருவது. அவர் அவ்வப் போது எழுதி வந்த பல கட்டுரைகள் இன்று நூல் வடிவில் வெளி வந்துள்ளன. அவரது நடை சில கட்டுரைகளில் எளிமையாக இருக்கும்; சிலவற்றில் கடினமாக இருக்கும். ஆயினும் இந்த நூற்றாண்டின் தமிழ் உரை நடைக்கு அவர் நூல்களும் குறிப்பிடத்தகும் அளவில் தொண்டு செய்துள்ளன. அவர் மிகச் சிறந்த ஆராய்ச்சி அறிஞர் என்பதற்கு அவர் வரைந்த நூல்களே ஏற்ற சான்றாகும்.

சாமி சிதம்பரனார்

சிதம்பர உடையார் என்ற இயற் பெயரைக் கொண்ட சாமி சிதம்பரனார் கரந்தைத் தமிழ்ச் சங்கத்தில் கரந்தைக் கவியரசு ரா. வேங்கடாசலம் பிள்ளையவர் களின் மாணவர். அவர் தமது இறுதிக் காலத்தில் பல

உரைநடை நூல்களை எழுதிப் புகழ் பெற்ருர். அவர் எழுதியவை—'திருக்குறள் பொருள் விளக்கம்', 'கம்பன் கண்ட தமிழகம்', 'தொல்காப்பியத் தமிழர்', 'பத்துப் பாட்டும் பண்டைத் தமிழரும்', 'எட்டுத் தொகையும் தமிழர் பண்பாடும்' 'பதினெண் கீழ்க்கணக்கும் தமிழர் வாழ்வும்', 'சிலப்பதிகாரத் தமிழகம்', 'மணிமேகலை காட்டும் மனித வாழ்வு', 'இலக்கியச் சோலை', 'வடலூரார் வாய்மொழி', 'பழந்தமிழர் அரசியல்' என்பன. இவை அவரது தமிழ்ப் புலமையையும் ஆராய்ச்சி அறிவையும் நன்கு புலப்படுத்துவன. பழந் தமிழ் நூல்களைப் படித்துச் செய்திகளை உணர இயலாத மக்கள் இந்நூல்களைப் படித்து மிக்க பயன் பெறுவர். இவை ஆராய்ச்சியாளர்க்கும் துணை செய்வன. அவரது உரைநடை இனிமையும் எளிமையும் வாய்ந்தது.

மறைமலையடிகள்

தமிழ், வடமொழி, ஆங்கிலம் ஆகிய மும்மொழி களிலும் புலமை பெற்று அறிவியல், சமயம், இலக்கியம், வரலாறு, நாடகம், சீர்திருத்தம், கட்டுரை, கடிதம், பெருங்கதை என்னும் பல துறைகளில் உரைநடை நூல்களை எழுதிய பெரியார் **மறைமலையடிகள்** ஆவர். நாகை வேதாசலம் பிள்ளை என்ற மறைமலையடிகள் வி. கோ. சூரியநாராயண சாத்திரியாருடன் 1898—முதல் கிறித் தவக் கல்லூரியில் தமிழாசிரியராகப் பணியாற்றலானுர்; 1911-இல் அப்பணியிலிருந்து விலகி நூல்கள் எழுதும் பணியில் ஈடுபட்டார். 'ஞானசாகரம்' என்னும் திங்கள் இதழை நடத்திஞர்.

இப்பெரியார், தம் தொடக்க நூல்களில் பிறமொழிச் சொற்களைக் கலந்து எழுதினார்; பின்பு அவற்றைப் பெரும்பாலும் அகற்றி 1916 முதல் தூய தமிழ் நடையில் நூல்கள் எழுதலானார்; 'தனித்தமிழ் இலக்கியத் தந்தை' என்று பெயர் பெற்றார்.

இவர் ஆங்கிலத்தில் உள்ள அறிவியல் நூல்களை ஆழமாகப் படித்து 'மக்கள் நூறாண்டு உயிர் வாழ்வது எப்படி?' 'மரணத்தின் பின் மனிதன் நிலை', 'யோக நித்திரை அல்லது அறிதுயில்,' 'தொலைவில் உணர்தல்' 'மனிதவசியம்' என்னும் நூல்களை இயற்றினார். சங்க நூலான பத்துப்பாட்டில் இடம் பெற்றுள்ள பட்டினப்பாலை, முல்லைப்பாட்டு என்னும் இரண்டையும் பற்றி ஆராய்ச்சி நிகழ்த்தி இரண்டு நூல்களை வெளியிட்டுள்ளார். இவரது இலக்கிய ஆராய்ச்சித் திறனை அறிய இவ்விரு நூல்களும் ஏற்ற சான்றாகும்; 'மிர்சா கண்ட காட்சி' என்னும் ஆங்கில நூலைத் தழுவி சிந்தனைக் கட்டுரைகள் என்னும் வருணனை மிகுந்த கட்டுரைகளை வரைந்தார்.

'இளைஞர்க்கான இன்றமிழ்', 'சிறுவர்க்கான செந்தமிழ்' என்னும் இரு நூல்களும் சிறுசிறு செந்தமிழ் வாக்கியங்களைக் கொண்ட கட்டுரைகளைப் பெற்றவை. இவை தமிழின் சுவையையும் பலதுறை அறிவையும் ஊட்டும் இனிய நூல்களாகும். 'முற்கால—பிற்காலத் தமிழ் புலவோர்' என்னும் நூல் முற்காலப் புலவர் புலமையையும் இயல்புகளையும் பிற்கால புலவர் புலமையையும் இயல்புகளையும் ஆராய்ந்து தெரிவிப்பது. மக்களுக்குப் பொருந்தும் உணவு இது, பொருந்தா உணவு இது என்பதை விளக்கி ஒரு நூலும் அடிகளால் எழுதப் பெற்றது.

ஆங்கிலப் பெருங்கதை ஒன்றைத் தழுவி **'குமுதவல்லி அல்லது நாக நாட்டரசி'** என்னும் பெருங் கதை ஒன்றும் அடிகளால் எழுதப் பெற்றது. **'கோகிலாம்பாள் கடிதங்கள்'** என்பது ஒரு பெண் தன் வரலாற்றைக் கடிதங்கள் வாயிலாக விளக்கும் முறை யில் அமைந்த நூலாகும்.

காளிதாசர் எழுதிய சாகுந்தலம் என்னும் நாடக நூலின் மொழி பெயர்ப்பே அடிகள் எழுதிய 'சாகுந்தல நாடகம்' என்பது. அடிகளார் மூல நூல்களைத் தழுவிக் காட்சிகளையும் உரையாடல்களையும் அமைத்து, தாமே செய்யுட்களைப் பாடி இடையிடையே சேர்த் துள்ளார். அப்பெரியார் சாகுந்தல நாடகம் பற்றிய ஆராய்ச்சி நூல் ஒன்றையும் இலக்கிய ஆராய்ச்சி முறையைப் பின்பற்றி அழகுற எழுதியுள்ளார்.

அடிகள் சைவ சமயத்தில் ஆழ்ந்த பற்றுடையவர்; தமிழிலக்கிய நூல்களையும் சைவ சமய நூல்களையும் சைவ சமயம் பற்றிப் பிறர் எழுதியுள்ள நூல்களையும் பல்லாண்டுகள் உழைத்துப் படித்தவர்; அவற்றின் பயனாக—'பழந்தமிழ்க் கொள்கையே சைவ சமயம்', 'கடவுள் நிலைக்கு மாறான கொள்கைகள் சைவம் ஆகா', 'தமிழர் மதம்', 'சைவ சித்தாந்த ஞானபோதம்', 'சிவஞான போத ஆராய்ச்சி', 'திருவாசக விரிவுரை' என்னும் சிறந்த நூல்களை எழுதினார். சைவ சமயம் நாட்டில் உள்ளவரையில் இந்த அரிய ஆராய்ச்சி நூல்கள் நிலை பெற்றிருக்கும் என்பதில் ஐயமில்லை.

அடிகளார் பல ஆண்டுகள் உழைத்து எழுதிய வரலாற்று ஆராய்ச்சி நூலே **'மாணிக்க வாசகர் வரலாறும்**

காலமும்' என்பது. இதனில் ஆசிரியரின் வரலாற்று ஆராய்ச்சியும், தமிழிலக்கியப் புலமையும், சமய நூல் புலமையும் ஒருங்கே காணப்பெறும். 'வேளாளர் நாகரிகம்', 'பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும்', 'சோமசுந்தர நாயகர் வரலாறு' என்பவையும் வரலாற்று நூல்களாகும்.

அடிகளார் இப் பலதுறை நூல்களால் தமிழ் இலக்கிய உலகிலும் சமய உலகிலும் வரலாற்று உலகிலும் சிறுவர் இலக்கிய உலகிலும் நிலைத்த இடத்தைச் சிறக்கப் பெற்றுள்ளார்.

சுருங்கக் கூறின், அடிகளார் இந்த நூற்றாண்டைச் சேர்ந்த செந்தமிழ் இலக்கிய உரைநடை உலகின் ஞாயிறாக ஒளிர்கின்றார் என்று கூறலாம். அடிகளாரின் உரைநடைக்கு வகைக்கு ஒவ்வொரு சான்றினை இங்குக் காண்போம் :

> ''பகல் உணவு எடுப்பதற்கென்று கொடுக்கப்படும் ஒரு மணி நேர ஒழிவு நேரத்திற், சிறுவர்கள் உணவு கொண்டபின், தம் தோழர்களுடன் இனிதாக விளையாடல் வேண்டும். ஒருவரை யொருவர் பகைத்தலுந் திட்டுதலும் அடித்தலுங் கூடா. கெட்ட நடவடிக்கையுள்ள பிள்ளைகளுடன் நேசங் கொள்ளுதலும் ஆகாது, பகைத்தலும் ஆகாது. அவர்களுடன் நேசங் கொண்டால் அவர்களுடைய தீய இயற்கை உமக்கும் படிந்துவிடும்; அவர்களுக்கு வருந் துன்பம் உம்மையுஞ் சாரும். அவர்களைப் பகைத்தாலோ அவர்கள் உம்மைப் பழிப்பர்,

ஏசுவர், அடிப்பர், பிறரை ஏவியும் உமக்குத் தீங்கு செய்வர். ஆதலால் அவ்விரு வகையிலும் அவர்களுடன் தொடர்பு கொள்ளாமல், அவரைக் காண நேரும்போதெல்லாம் இனிமையாகச் சில சொற்களைப் பேசிவிட்டுப் போய் விடுக.''

—**சிறுவர்க்கான செந்தமிழ், பக்கம் 18**

மூவகைத் துயில்

''இனி, ஒருவர்க்கோ அல்லது பலர்க்கோ இங்ஙனம் வருவிக்கப்படும் அறிதுயிலானது மூவகைப்பட்ட நிலைகளை உடையதாகின்றது. அவை நினைவுத் துயிலும், நினைவற்ற துயிலும், நடைத்துயிலும் என மூன்று வகைப்படும்.

மேற் சொல்லிய நினைவுத் துயிலினும் ஆழ்ந்து செல்லும் துயிலில் உயிருக்கு நினைவு சிறிதும் நிகழாமையால் அதற்குப் பின் உண்டாம் இது நினைவற்ற துயில் எனப் பெயர் பெற்றது. இத்துயிலின் கண் இருப்போர்க்குச் சுற்றியுள்ள பொருள்களின் உணர்ச்சி சிறிதும் இராது; புறத்தே தோன்றும் ஓசை எவ்வளவு பெரியதாய் எவ்வளவு கொடுமையானதாய் இருப்பினும் அதை அவர் சிறிதுங் கேளார். துயிற்றுவோருடைய சொற்களையுங் குரலொலியையுந் தவிர வேறொன்றனையும் அவர் உணரார். விழிகள் சுழலால் அமைதியுற்றிருக்கும்.''

—**யோகநித்திரை அல்லது அறிதுயில் பக்கம், 135—136**

"உலக இயற்கையிற் கண் முதலான புலன்களுக்கு விளங்கித் தோன்றும் அழகை யெல்லாந் தன்னகத்தே நெருங்கப் பொதிந்து வைத்துப் பின் அவற்றை நம் அறிவினிடத்தே புலப்படும் வண்ணந் தோற்றுவித்துப் பொருள் நிகழ்ச்சியொடு மாறுபடுதல் இல்லா இனிய ஓசையுடன் இசைந்து நடைபெறும் இயல்பினை உடையதுதான் பாட்டென்று அறிதல் வேண்டும். இன்னும் எங்கெங்கு நம் அறிவைத் தம் வயப்படுத்துகின்ற பேரழகும் பேரொளியும் பெருந்தன்மையும் விளங்கித் தோன்றுகின்றனவோ அங்கெல்லாம் பாட்டு உண்டென்றே அறிதல் வேண்டும். இதனை விளக்கிக் காட்டுமிடத்துப் பேரழகாற் சிறந்த ஓர் அரசி, தான் மேற்போர்த்திருந்த நீலப்பட்டு ஆடையினைச் சிறிதுசிறிதாக நீக்கிப் பின் அதனைச் சுருட்டிக் கீழே எறிந்துவிட்டுத் துயில் ஒழிந்த, ஒளி விளங்குதன் நளிமுகங்காட்டி எழுந்ததை யொப்ப, இருட்கூட்டஞ் சுருண்டு மடங்கி அலை கடலிற்சென்று அடங்கி விடுமாறு இளைய ஞாயிறு உருக்கித் திரட்டிய பசும் பொற்றிரளைப் போலத் தளதளவெனக் கீழ்த்திசையில் தோன்றவும், அத்திசையின் பரப்பெல்லாம் பொன் உரைத்த கற்போற் பொலிந்து திகழும், பசுமை-பொன்மை-நீலம் சிவப்பு-வெண்மை முதலான நிறவேறுபாடுள்ள பொன் வெள்ளிகள் உருகி ஓடுகின்ற நிலம்போல் வான் இடமெல்லாம் பல வண்ணமாய் விரிந்து விளங்கவும் கரிய முகில் களெல்லாஞ் செக்கரக்கு வழித்த அகன்ற

திரைச் சீலைகள் போலவும் வெளிய முகில்களெல்லாம் பொற்பட்டுத் துகில் போலவும் ஆங்காங்குச் சொல்லற்கரிய பேரொளியொடு திகழவும் உலக மங்கை நகைத்தாற் போலப் புதுமையுற்றுத் தோன்றும் விடியற்கால அழகெல்லாம் பாட்டென்றே அறிதல் வேண்டும். ஆ! இங்ஙனந் தோன்றும் அவ்விடியற் கால அழகினைக் கண்டு வியந்த வண்ணமாய் மீன் வலையொடு கடற்கரையில் நிற்குஞ் செம்படவனைக் காட்டிலுஞ் சிறந்த புலவன் யார்?"

நீலாம்பிகை அம்மையார்

மறைமலையடிகளின் மகளாரான **திருவரங்க நீலாம்பிகையம்மையார்** அவர்கள் தம் தந்தையாரைப் போலவே 'சீரிய செந்தமிழ் நடை'யில் பல கட்டுரைகளையும் நூல்களையும் எழுதியுள்ளார். அவ்வம்மையார் தந்தையாரிடமே தமிழ் பயின்று தமிழாசிரியர் பணி செய்தவர். 'தனித் தமிழ்க் கட்டுரைகள்', 'முப்பெண்மணிகள் வரலாறு', 'பிளாரன்ஸ் நைட்டிங்கேல்', 'ஜோன் ஆப் ஆர்க்', 'பட்டினத்தார் பாராட்டிய மூவர்', 'வடசொல் தமிழ் அகரவரிசை', 'ஆராய்ந்தெடுத்த அறுநூறு பழமொழிகளும் அவற்றிற்கேற்ப ஆங்கிலப் பழமொழிகளும்', 'தமிழ் மொழியும் தமிழ் நாடும் முன்னேறுவதெப்படி,' 'எலிசபெத் பிரை பெருமாட்டி', 'மேனாட்டுப் பெண்மணிகள்' என்பன அவர் எழுதிய உரை நூல்கள்.

விபுலானந்த அடிகள்

ஈழ நாட்டுத் தமிழ்த் துறவியாகிய விபுலானந்த அடிகள் எழுதிய தமிழ்க் கட்டுரைகள் மிகப் பல;

கர்மயோகம், ஞானயோகம், விவேகானந்த ஞான தீபம், நம்மவர் நாட்டு ஞான வாழ்க்கை, விவேகானந்த சம்பாஷணை என்பவை அவர் எழுதிய மொழி பெயர்ப்பு நூல்களாகும். நடராஜ வடிவம் என்பது, சிவபெருமான் அம்மையப்பராக அருள் புரியும் திறத்தினைக் கூறும் உரைநூல். மதங்கசூளாமணி என்பது நாடக அமைதி கூறும் சிறுநூல். இது செகப்பிரியர் வகுத்த நாடகங்களைத் தமிழ் மொழி வடமொழி நாடகங்களோடு தொடர்புபடுத்திக் கூறுவது. **'யாழ் நூல்'** என்பது வியத்தகு ஆராய்ச்சி நூல். சங்க கால யாழ்களின் இலக்கணத்தை வரையறுத்துக் கூறும் இந்நூல், சங்க நூல்களையும் அடியார்க்கு நல்லார் உரையையும் அடிப்படையாகக் கொண்டது. இந்நூல்கள் அனைத்தும் அடிகளாரின் உரைத் தொண்டினை நமக்கு அறிவிப்பனவாகும்.[1]

கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை

நாஞ்சில் நாட்டுப் பெரும் புலவரான கவிமணி அவர்கள் பல கவிதை நூல்களை இயற்றியவர். அவர் மேடையில் பேசியனவும் கட்டுரைகளாக எழுதியனவும் சாஸன ஆராய்ச்சிக் கட்டுரைகளுமாக 22 தலைப்புக் களில் 'கவிமணியின் உரைமணிகள்' என்னும் நூல் 1953-இல் வெளியாகியுள்ளது. பேராசிரியர் வையா புரிப் பிள்ளையவர்கள் அவ்வுரை மணிகளைப் பாராட்டி முன்னுரை அளித்துள்ளார். கவிமணியின் தமிழ் உரைநடையும் மிக்க எளிமையும் இனிமையும் வாய்ந்தது.

1. கலைக்களஞ்சியம் தொகுதி 9, பக். 330.

திரு. வி. கலியாணசுந்தரனார்

திரு. வி. கலியாணசுந்தரனார் யாழ்ப்பாணம் கதிரைவேல் பிள்ளையவர்களின் மாணவர்; இலக்கண இலக்கிய புலமையும் ஆங்கில அறிவும் மிக்கவர். அவர் கல்லூரிப் பேராசிரியராகவும், 'தேசபக்தன்', 'நவசக்தி' என்னும் இதழ்களின் ஆசிரியராகவும், தொழிலாளர் தலைவராகவும், சைவ சமயப் பேரறிஞராகவும் விளங்கிப் புகழ் பெற்றவர். அவர் இனிய எளிய செந்தமிழ் நடையில் பேசவும் எழுதவும் வல்லவர் என்பதை நாடு நன்கறியும். அவர் பேசும்போது வெள்ளம் பெருக்கெடுத்து வருவது போல தூய செந்தமிழ்ச் சொற்கள் அவர் வாயிலிருந்து தொடர்ந்து வந்து கொண்டிருக்கும்.

அப்பெரியார் **கட்டுரை, அரசியல் சமயம், சமுதாயம்** முதலிய பல தலைப்புக்களில் நூல்களை எழுதியுள்ளார். தமிழ்ச்சோலை அல்லது கட்டுரை திரட்டு என்னும் தலைப்பில் இரண்டு நூல்கள் வெளியாகியுள்ளன. 'இந்தியாவும் விடுதலையும்,' 'பொருளும் அருளும்' என்னும் இரு நூல்களும் அரசியலைப் பற்றியவை. 'உள்ளொளி,' 'வாழ்க்கை ஒளி,' 'நாயன்மார் வரலாறு,' இருமையும் ஒருமையும்,' 'தமிழ் நூல்களில் பௌத்தம்,' 'சைவத்தின் சமரசம்,' 'சைவத் திறவு,' 'இராமலிங்கர் திருவுள்ளம்,' 'முருகன் அல்லது அழகு,' 'தமிழ்நாடும் நம்மாழ்வாரும்,' 'இமயமலை தியானம்', 'கட்டுள் காட்சியும் தாயுமானவரும்' என்பவை சமயம் பற்றிய நூல்கள். மனித வாழ்க்கையும் காந்தியடிகளும்,' 'பெண்ணின் பெருமை,' 'சீர்திருத்தம் அல்லது இளமைவிருந்து,' 'என் கடன் பணி செய்து கிடப்பதே,' 'தமிழ்ச் செல்வம் அல்லது தலைமைப் பொழிவு,' 'முடியா காதலா—சீர்திருத்தமா?' என்பவை சமுதாயம் பற்றிய நூல்கள்.

இப்பெரியார் அரசியல் பற்றிய கட்டுரைகளில் தமிழ் இலக்கியச் செய்திகளையும் சொற்களையும் நுழைத்துப் பொதுமக்களுக்குத் தமிழிலக்கிய அறிவைப் புகட்டியுள்ள திறம் வியந்து பாராட்டத் தக்கது. அரசையும் மக்களையும் கணவன் மனைவியாக உருவகப்படுத்தி, அவ்விருவர்க்கும் உண்டாகும் பிணக்குக்கு 'ஊடல்' என்று பெயர் தந்து, இவர் எழுதிச் செல்லும் திறம் படித்து இன்புறத்தகும். இவர் நடை சிறுவாக்கியங்களைக் கொண்டது; இனிய— எளிய சொற்களால அமைந்தது; படித்துப் படித்து இன்புறத் தகுவது. இவரது உரைநடைக்குச் சில எடுத்துக் காட்டுக்களைக் கீழே காண்க. அவை படிப்பவர் உள்ளங்களைக் கொள்ளை கொள்வனவாகும்.

திலகர் பெருமான்

"கல்வியாலாய பயன் நாட்டுக்கு உழைத்தல் என்று திலகர் பெருமான் கருதி, நாட்டுக்குரிய தொண்டாற்றப் புகுந்தார். அப்பெருமான், நாட்டை எவ்வெவ் வழியில் தட்டி எழுப்பினுர் என்பதை விரிக்கிற் பெருகும். தற்கால நாகரிகத்துக்கு இன்றியமையாத மேல்நாட்டுக் கல்வியோடு நமது கீழ்நாட்டுக் கல்வியையும் திலகர் பெருமான் பயின்றுர். பாலகங்காதரர், பத்திரிகை வாயிலாகவும், பிரசார வாயிலாகவும் நாட்டுற்குப் புத்துயிரளித்தார். இவ்வளவில் அவர் நில்லாது மூன்றுமுறை சிறையும் புகுந்தார். இச் சிறை வாசத்தோடு அவர் சில அரிய நூல்களையும் யாத்தார். திலகர் பெருமான் கல்விப் பெருக்கால், பிரசாரத்தால், சிறைவாசத்

தால், நூற்களால் நாட்டுக்கு நல்லுணர்வு தந்தார் என்று சுருங்கச் சொல்லலாம். அவ்வொருவர் தியாகம் இப்பொழுது நாட்டின் கண்ணை எவ்வெவ் வழியில் திறந்திருக்கிறது என்பதை விளக்க வேண்டுவதில்லை. திலகர் பெருமான் அறிவுங் குணமுஞ் செயலும் எல்லாவற்றிற்குங் காரணமாக நின்றன."

—தமிழ்ச் சோலை, இரண்டாம் பகுதி, பக்கம் 59

முதலாளி—தொழிலாளி

முதலாளி—தொழிலாளி வாதம் என்று ஒழியுமோ அன்றுதான் உலகத்தில் அமைதி நிலவும். இவ்வுண்மை கண்ட மேல்நாட்டுத் தொழிலாளிகள், கிளர்ச்சி செய்து தொழிற்சாலைகளைத் தங்கள் வசப்படுத்தவும், தேச ஆட்சியைத் தங்கள் வசப்படுத்தவும் முயன்று வருகிறார்கள். சில இடங்களில் அவர்கள் தங்கள் முயற்சியில் வெற்றியும் பெற்றிருக்கிறார்கள். தொழிலாளர் வழி அரசாட்சி நடைபெறுமளவிற் உலகத்தில் அமைதி நிலவுதல் அருமை. முதலாளிகள் வழியே இப்பொழுது பெரிதும் ஆட்சிமுறை நடைபெற்று வருதலால், தொழிலாளர்கள் பல கஷ்டங்களை அனுபவித்து வருகிறார்கள்.

—தமிழ்ச்சோலை, முதல் பகுதி, பக்கம். 169

ஊடல்

"தலைவி ஊடல் கொண்டிருப்பதை உணருந் தலைவன் தன்பாலுள்ள குற்றமுணர்ந்து, அத

ளின்றுந் திருந்தி, தன் மனைவியை இன்பச் சொல்லாலும், அன்புச் செயலாலும் பணிந்துங் குறையிரந்தும் அவள் ஊடலை ஒழிக்க முயல்வன்.

"தலைவன் தலைவி உதாரணத்தை அரசிய லுக்கும் எடுத்தாளலாம். எவ்வித ஆட்சி முறை யிலும் ஆள்வோர் — ஆளப்படுவோர் என்ற இருவகுப்பு உண்டு. சிறப்பாகக் குடிக்கோ ளுட்சியில் இம்முறை தலைசிறந்து விளங்கும். கோனுங்குடியும் அன்பென்னும் பாசத்தால் கட்டப்படல் வேண்டும். அன்பு வழி ஆட்சி முறை நடைபெறுங்கால் கோனுக்கும் குடிக்கும் எவ்வித மாறுபாடும் நிகழாது. கோன் அடாத செயல்களை ஆற்றுங்கால், குடிகள் **ஊடல் கொள் வது இயல்பு.** இதனால் கோனிடத்துக் குடிகள் கொண்டுள்ள அன்பு அழிவதில்லை. குடிகளின் மனப்பாங்கைக் கோன் உணர்ந்து, அவர்கள் வழியே திருந்தி ஊடலைப் போக்குவன்."

— **தமிழ்ச்சோலை, இரண்டாம் பகுதி, பக்கம். 54**

எனது இலங்கைச் செலவு

வருணனை

"வழிநெடுகப் பசுமை உமிழும் மலைகளின் செறிவும், சூழலும், நிரையும், அணியும் உள் ளத்தைக் கவர்கின்றன. முகிற்குழாங்கள் **கொண்டல் கொண்டலாக** அசைந்தும் ஆடியும் ஓடியும் மலை முகடுகளிற் சூழ்ந்து தவழ்ந்து பாகைபோல் பொலியுங் காட்சியும் — அம் மலை

களின் உடல் புலனாகாதவாறு பசும்பட்டுப் போர்த் தாலெனப் பொழில்கள் அமைந்துள்ள அழகும் — புலன்களை ஒன்றச் செய்கின்றன. மலையுச்சியினின்றும் தரைவரை நிரை நிரையாகச் சரிந்தும் செறிந்தும் நிற்கும் தெங்கின் பெருக்கும், அவ்வாறே தெங்கை விட்டுப் பிரியாது அணித்தே புடை சூழ்ந்து நிற்கும் கமுகின் உயர்வும், அவைகளுடன் நீக்கமின்றி வாழ்க்கைத் துணையெனச் சுற்றிச் சுற்றிப் பின்னிக் கிடக்கும் கான் பரந்த செடி கொடிகளின் ஈட்டமும், வானுலகேறப் பச்சைப் படாம் விரிந்த படிக ளெனத் திகழ்கின்றனவோ என்றும் ஐயுறலாம். புகைவண்டி, அப் பசுமை நிலத்தில், பறந் தோடுவதை நோக்குழி, அது, பச்சை மரகத மலையைக் கிழித்தோடும் அம்பெனத் தோன் றிற்று. பசுமைக் காட்சியில்லாத இடமும் உண்டோ? கண்ணுக்கும் மனதுக்கும் இனிமை யூட்டும் பசுமையின் பெற்றியை என்னென் றுரைப்பேன்!"

—தமிழ்ச்சோலை, முதல் பகுதி,
பக்கம். 61

டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை

பேராசிரியர் சேதுப்பிள்ளை அவர்கள் திரு. வி. க. அவர்களைப் போலவே, எளிய செந்தமிழ் நடையில் பேசவும் எழுதவும் வல்லவர் என்பதை நாடு நன்கறியும். அவர் பாரதியார் பாராட்டிய திருக்குறள், சிலப்பதி காரம், கம்பராமாயணம் ஆகிய மூன்று நூல்களிலும் பெரும் புலமை பெற்றுத் திகழ்ந்தார்; அம்மூன்றைப் பற்றியே பேசியும் எழுதியும் வந்தார். அப்பெரியா

ருடைய உரை நூல்களைக் கட்டுரை நூல்கள், வாழ்க்கை வரலாற்று நூல்கள், ஆராய்ச்சி நூல்கள் என மூன்று வகையாகப் பிரிக்கலாம்.

வீரமாநகர், வேலும் வில்லும், தமிழ் விருந்து, திருக் காவலூர்க் கோவில், தமிழர் வீரம், தமிழின்பம், கடற் கரையிலே, வழி வழி வள்ளுவர், வேலின் வெற்றி, அலையும் கலையும், ஆற்றங்கரையினிலே என்பவை கட்டுரை நூல்கள்; தமிழ் நாட்டு நவமணிகள், கால்டு வெல் ஐயர் சரிதம், கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர் என்பவை வாழ்க்கை வரலாற்று நூல்கள்; திருவள்ளுவர் நூல் நயம், சிலப்பதிகார நூல் நயம், தமிழகம்—ஊரும் பேரும் என்பவை ஆராய்ச்சி நூல்களாகும்.

இப் பேராசிரியரது செந்தமிழ் உரையில் எதுகை, மோனை இன்பத்தைக் காணலாம். கங்கை வேடனும், காளத்தி வேடனும், ஒரு சடையும் திரிசடையும், வேலும் வில்லும் என்னும் தலைப்புக்களைக் காண்க. அவருடைய உரை நடை எளிமையும் இனிமையும் தெளிவும் திண்மை யும் உடையது. அவர் இனிய எளிய தமிழ் நடையைக் கேட்கவே ஆயிரக் கணக்கில் மக்கள் கூடுவது வழக்கம். "அருமையான தமிழ்ச் சொல் ஒன்று இருக்க ஆங்கி லத்தை எடுத்தாளுதல் அறிவீனம் அல்லவா? கரும்பு இருக்க இரும்பைக் கடிப்பார் உண்டோ?" என்று அப் பெரியார் 'அலையும் கலையும்' என்னும் நூலில் (பக். 32) எழுதியிருத்தல், அவரது தமிழ் நடைக் கொள்கைக்கு ஏற்றச் சான்றாகும். பிள்ளையவர்கள் கட்டுரைகள் சில நகைச்சுவை நிரம்பியவை. 'கடற்கரையிலே' என்னும் பெயர் கொண்ட கட்டுரை நூல் அவரது கற்பனைத் திற னுக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும். இனிய, எளிய செஞ்சொற்களால் அமைந்த தமிழ் நடையில் எழுத

விரும்புவோர் திரு. வி. க. அவர்களின் நூல்களையும் டாக்டர் பிள்ளையவர்களின் நூல்களையும் விரும்பிப் படிப்பதை அறிஞர் அறிவர். சுருங்கக் கூறின், பிள்ளையவர்களின் உரைநடை நூல்கள் அனைத்தும் இந்த நூற்றாண்டின் இலக்கியச் செறிவுள்ள உரைநடை வளர்ச்சிக்குப் பெருந்தொண்டுபுரிந்தன என்று கூறுதல் மிகையாது.

டாக்டர் அவர்களின் உரைநடைச் சிறப்பை அறிய ஓர் எடுத்துக் காட்டினைக் கீழே காண்போம்:

"அக் காலத்தில் தமிழ் நாடானது தரை வழியாகவும் நீர் வழியாகவும் பல அயல் நாடுகளோடு வாணிகம் செய்து வந்ததென்பது சரித்திர உண்மையாகும். புலவர் பாடும் புகழமைந்த புகார் நகரத்தில்,

"கலத்திலும் காலிலும் தருவளர் ஈட்டக்
குலத்திற் குன்றாக் கொழுங்குடிச் செல்வர்"

வாழ்ந்து வந்தார்கள் என்று சிலப்பதிகாரம் கூறுவதால், மரக்கலத்தால் கடல் கடந்து வாணிகம் செய்யும் வழக்கம் அக் காலத்திலேயே தமிழ் நாட்டில் நிலைபெற்றிருந்ததென்பது நன்கு உணரப்படும். இத்தகைய கடல் வாணிகம் சிறந்து நடந்த தன்மையாலேயே புகார் நகரத்தை "பரதர் மலிந்த பயங்கெழு மாநகர்" என்று ஆசிரியர் சிறப்பித்துக் கூறியுள்ளார். அக் காலத்தில் ஐரோப்பிய நாட்டில் சீரும் சிறப்பும் பொருந்தி வாழ்ந்த யவனர் என்னும் கிரேக்கர்கள், வாணிகத்தின் பொருட்டுத் தம் நாட்டைவிட்டுத் தமிழ் நாட்டில் குடி

யேறி வாழ்ந்தார்கள். அவர்கள் தமிழ் நாட்டாருடன் நீரொடு நீர் சேர்ந்தாற்போல வேற்றுமையின்றிக் கலந்து தாம் மேற்கொண்ட வாணிகத்தை நடத்தி வந்தார்கள். இதனை ஆசிரியர்,

"கலந்தரு திருவில் புலம்பெயர் மாக்கள்
கலந்திருந் துறையும் இலங்குநீர் வரைப்பும்"

என்று கூறிப் போந்தார்."

—சிலப்பதிகார நூல் நயம், பக்கம். 99

இலக்கிய நூல்களும் ஆராய்ச்சி நூல்களும் என்னும் தலைப்பில் தமிழ்மொழி வரலாறு, பரிதிமாற் கலைஞரின் தமிழ்த்தொண்டு, அவர்தம் மாணவர்களாகிய ந. பலராம அய்யர், பிரணதார்த்திகர சிவனார், சருக்கை இராமசாமி ஐயங்கார், சுப்பிரமணிய ஆசாரி, செய்யூர் முத்தைய முதலியார், கு. ரா. சீநிவாச ஐயங்கார், சருக்கை சுந்தராச்சாரியார், சருக்கை வரதாச்சாரியார், ஜக்கராசு பி. வியாசதேவய்ய பந்துலு ஆகியோர் தமிழ் உரை நடை வளர்ச்சிக்குச் செய்த தொண்டு, பேராசிரிய அ. கார்மேகக் கோனார், பேராசிரியர் அ. முத்தையா, சுதேசமித்திரன் ஆசிரியர் சி. ஆர். சீநிவாசன் ஆகியோர் எழுதிய நூல்கள் பற்றிய விவரங்கள், கலையுணர்வும் பக்தியுணர்வும் கொள்ளும் வகையில் எழுதப்பட்ட தமிழறிஞர் தொ. மு. பாஸ்கரத் தொண்டைமானின் நூல்கள் பற்றிய குறிப்பு, டாக்டர் உ. வே. சாமிநாதையரின் இணையற்ற தமிழ்த்தொண்டு, ரா. இராகவையங்கார், மு. இராகவையங்கார், 'செந்தமிழ்' என்னும் இதழின் ஆசிரியராய் விளங்கிப் பல அரிய ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தோற்றத்திற்குக் காரணமான நாராயண

அய்யங்கார், பன்மொழிப்புலவர் வே. வேங்கடராசலு ரெட்டியார் ஆகியோரின் ஆராய்ச்சி நூல்கள், இலக்கண நூல்கள், துணைப்பாட நூல்கள் பற்றிய செய்திகள், தஞ்சை வழக்கறிஞர் கே. எஸ். சீனிவாசப்பிள்ளை, பண்டித ந. மு. வேங்கடசாமி நாட்டார், தி. வி. சதாசிவ பண்டாரத்தார் ஆகியோரின் வரலாற்று நூல்கள், உரை நூல்கள், ஆராய்ச்சி நூல்களை பற்றிய குறிப்புகள், சென்னைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத்தலைவராக விளங்கி அகராதிக் கலையின் தந்தையெனப் புகழ் கொண்ட அறிஞர் எஸ். வையாபுரிப் பிள்ளை, டாக்டர் ச. சோமசுந்தர பாரதியார், சாமி சிதம்பரனார், தனித் தமிழியக்கத் தந்தை மறைமலையடிகளார், தேசபக்தியும் தெய்வ பக்தியும் கொண்டு இணையற்ற இலக்கியத் தொண்டாற்றிய தமிழ் முனிவர் திரு. வி. கலியாண சுந்தரனார், மறைமலையடிகளார் மகளார் திருவாட்டி நீலாம்பிகையார், ஈழநாட்டுத் தமிழ்த்துறவி விபுலானந்த அடிகள், கவிமணி தேசிக விநாயகம் பிள்ளை, சொல்லின் செல்வர் ரா. பி. சேதுப்பிள்ளை ஆகியோரின் தமிழ்த் தொண்டு பற்றிய சான்றுகளுடன் கூடிய விவரங்கள் முதலானவற்றை ஓரளவு அறிந்துகொண்ட நிறைவுடன், இருபதாம் நூற்றாண்டின் தமிழ் உரைநடை வளர்ச்சிக்கு சிறுகதை நூல்கள் எவ்வாறு துணையாயமைந்தன என்பதைக் காண்போம்.

௬

சிறுகதைகள்

இலக்கியச் சிறுகதைகள்

''பொருளொடு புணராப் பொய்ம்மொழி யானும்
பொருளொடு புணர்ந்த நகைமொழி யானும்''

என்னும் தொல்காப்பிய நூற்பா வரிகள் அவர் காலத்திலும் அவர்க்கு முன்பும் தமிழ் உரையிலிருந்த கதை நூல்களைக் குறிப்பன என்பது முன்பே குறிக்கப் பெற்றது. இதனைக் கூறும் தொல்காப்பியம் நமக்குக் கிடைத்ததே தவிர, அதனில் குறிக்கப் பெற்ற பழைய நூல்களுள் ஒன்றேனும் கிடைக்கவில்லை. தொல்காப்பியத்திற்குப் பின்பு எழுந்த கலித்தொகைச் செய்யுட்களுள் பல, சிறுகதை நிகழ்ச்சிகளைக் கொண்டவையாகும். அகநானூறு, குறுந்தொகை என்னும் அகப்பொருள் செய்யுட்களிலும் சிறுகதைக்குரிய உயிர் நாடியான குறிப்புகள் மலிந்து கிடக்கின்றன. ஆயினும், அவை கதை வடிவத்தில் உரைப் போக்கில் இல்லை.

நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரத்தில், கவுந்தியடிகள் மாதரிக்குக் கூறிய அடைக்கலச் சிறப்புப்

பற்றிய வணிக மாதின் கதை செய்யுளில் அமைந்த சிறுகதை. மதுராபதி தெய்வம் கண்ணகிக்குக் கூறிய பொற்கைப் பாண்டியன் கதையும் சிறுகதையே யாகும். இங்ஙனமே மணிமேகலை என்னும் காவியத்தில் கூறப் பட்டுள்ள சுதமதியின் வரலாறு, ஆபுத்திரன் வரலாறு ஆகியவற்றில் சிறுகதை நிகழ்ச்சிகள் அடங்கியுள்ளன. இவற்றை விரித்து உரைநடையில் எழுதினால் அவை இலக்கிய நயமுள்ள சிறுகதைகளாக உருவெடுக்கும். இவ்வாறே கொங்குவேள் பாடிய பெருங்கதையிலும் சீவக சிந்தாமணியிலும் பல சிறுகதைகள் செருகப் பெற்றுள்ளன. ஆயினும், இவை அனைத்தும் செய்யுள் வடிவில் அமைந்துள்ளன.

முதல் சிறுகதை

நாம் முதன் முதலாகத் தமிழில் காணும் சிறுகதைகள் பதினெட்டாம் நூற்றாண்டில் வீரமா முனிவர் எழுதிய பரமார்த்த குரு கதைகள் என்பவையே யாகும். தாண்டவராய முதலியார் எழுதிய பஞ்ச தந்திரக் கதைகள், வீராசாமிச் செட்டியார் எழுதிய விநோதரச மஞ்சரியில் காணப்படும் பல கதைகள் பத்தொன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. ஆங்கிலம் முதலிய பிறமொழிகளிலிருந்து பல கதைகள் தமிழில் எழுதப் பெற்றன.

இதழ்களில் சிறுகதைகள்

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் நாளிதழ் களும், கிழமை திங்கள் இதழ்களும் பெருகத் தொடங்கிய பொழுது, மேனாட்டுச் சிறுகதை களைப் பின்பற்றி நம்மவர் தமிழில் சிறுகதைகளை எழுதலாயினர். பண்டித நடேச சாஸ்திரியார்

(1859-1906) ஈசாப் கதைகள், தக்காணத்து பூர்வ கதைகள், தக்காணத்து மத்திய காலக் கதைகள் என்று மூன்று கதை நூல்களை எழுதினார். இந்த நூற்றாண்டில் பேராசிரியர் செல்வகேசவராய முதலியார் எழுதிய அபிநய கதைகள் காலத்தால் முற்பட்டவை என்றும், அறிஞர் வ. வே. சு. அய்யர் அவர்கள் பாலபாரதியில் எழுதிய கதைகள் சிறு கதைகளுக்கு உயிரும் ஒளியும் கொடுத்தன என்றும், புதுமைப் பித்தன் எழுதியுள்ளார்.[1]

கவியரசர் பாரதியாரும், இராமாநுசலு நாயுடு என்பவரும் சிறுகதைகள் எழுதினர். 1930 க்குப் பின்பு கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள், எஸ். வீ. வி., கொணஷ்டை ஆகியோர் நகைச்சுவை பொருந்திய சிறுகதைகளை வரைந்து பெயர் பெற்றனர். திரு வாளர்கள் பிச்சமூர்த்தி, கு.ப.ரா., பி. எஸ். இராமையா, சிதம்பரம் சுப்பிரமணியன், புதுமைப் பித்தன் ஆகியோரும் சுவை மிகுந்த சிறுகதைகளை எழுதலாயினர். 'மௌனி' என்பவர் எழுதியுள்ள 'நட்சத்திரக் குழந்தைகள்', 'சிவ சைவம்', 'எங்கிருந்தோ வந்தான்' போன்ற கதைகள் உயர்ந்தவை. கலைமகள், குமுதம் என்னும் இதழ்களில் வரும் கதைகளும் பொருட்சிறப்புடையவை. வை. மு. கோதைநாயகி அம்மையாரும் சிறுகதைகளை எழுதியுள்ளார், அவை மூன்று வைரங்கள், கதம்ப மாலை, பட்சமாலிகா, சுடர் விளக்கு, பெண் தர்மம் என்னும் ஐந்து நூல்களாக வெளிவந்துள்ளன.

வாழ்க்கை நிகழ்ச்சிகளுள் ஒன்றை மட்டும் எடுத்து, அதற்கு முதல் — இடை — கடை என்னும் மூன்று உறுப்புகளை அமைத்து, விளங்க வரைவது சிறுகதை

---

1. புதுமைப் பித்தன் கட்டுரைகள், பக். 31-32

அல்லது குறுங்கதை என்னலாம்; சிறுகதை சில பக்கங்களிலும் முடிவு பெறலாம்; பல பக்கங்களிலும் முடிவு பெறலாம். பக்கங்களைக் கொண்டு அது பெயர் பெறவில்லை. வாழ்க்கையின் சிக்கல்களையும் சிறுமை பெருமைகளையும் மக்களின் மனநிலைகளையும் விளக்கும் தொடர் கதை, பெருங்கதை அல்லது நெடுங்கதை என்னலாம். சுருங்கக் கூறின், பெருங்கதை வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டும் நிலைக்கண்ணாடி என்னலாம்.

இம் முகவுரையை உளங்கொண்டு, சிறு கதைகள் இந்த நூற்றாண்டில் எந்த அளவு தமிழ் உரைநடையை வளர்த்தன என்பதனைக் காண்போம்.

வ. வே. சு. ஐயர்

இவர் திருச்சிராப்பள்ளி நகரத்தில் வரகனேரி என்னும் பகுதியைச் சேர்ந்தவர்; வழக்கறிஞர் பட்டம் பெற்றவர்; பாரிஸ்டர் பட்டம் பெற இங்கிலாந்து சென்றவர்; நாட்டுப்பற்று மிகுந்தவர். இவர் திருக்குறளுக்கு ஆங்கில மொழி பெயர்ப்பைத் தந்துள்ளார்; 'தேசபக்தன்' என்ற செய்தித்தாளின் ஆசிரியராய் விளங்கினார்; 'பால பாரதி' என்னும் செய்தித்தாளின் ஆசிரியராயும் இருந்தார். திருநெல்வேலி மாவட்டத்தில் சேரன் மாதேவிக்கு அருகில் பொருநை ஆற்றங்கரையில் 'குருகுலம்' ஒன்றை நடத்தி வந்தார். இப்பெரியார் பால பாரதி என்ற திங்களிதழில் கம்பராமாயண ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல எழுதினார்; நெப்போலியன், சந்திரகுப்தர், புக்கர்வாஷிங்டன் முதலியோர் வரலாறுகளை எழுதினார். அமெரிக்க அறிஞர் எமர்சன் எழுதிய 'தன்னம்பிக்கை' என்னும் நூலைத் தமிழ் உரைநடையில் மொழி பெயர்த்தார்; இவற்றோடு 'மங்கையர்க்கரசியின்

காதல்' முதலிய கதைகளை எழுதினர். அவை தமிழ் நாட்டுச் சிறுகதைகள் என்னும் பெயருடன் வெளியாயின.

இவருடைய சிறுகதைகளுள் பல, மேனாட்டுக் கதைகளைத் தழுவியவை. இவர் கதைகளுள் 'மங்கையர்க்கரசியின் காதல்', லைலிமஜனூன்', 'அனார்கலி' என்பன உள்ளத்து உணர்ச்சிகளைத் தொடுகின்றன. இவரது தமிழ் நடை பேச்சு நடையன்று; இலக்கண வரம்பு கொண்டது; எளிமையானது; இடையிடையே பிற மொழிகளைக் கொண்டது. அவை தமிழின் இன்னிசைப் போக்கினை இடையிடையே தடுக்கின்றன என்னலாம். ஆயினும், பூதங்கள் ஒன்றை ஒன்று எதிர்த்துப் போர் புரிவதுபோல் (பக். 2), கறங்குபோல (3), ஊதையிற் பட்ட பூளைப்பூ என்ன (3), புயற்காற்று வருவதுபோல (3), ஆவேசம் வந்தவள்போல (4), நாகத்தைக் கண்ட பறவைபோல் (5), பெண்புலி போல் (6) என்பன போன்ற உவமைகளும், பளீர் பளீர் போன்ற அடுக்குத் தொடர்களும், சிங்கத்தைப் பார்த்த கண்ணால் செந்நாயைப் பார்ப்பேனோ (3) போன்ற உருவகங்களும் ஆங்காங்கு அமைந்து நடைக்கு அழகைத் தருகின்றன.

க. ப சந்தோஷம்

வேலூர், ஊரிஸ் உயர்நிலைப் பள்ளித் தலைமையாசிரியராய்ப் பணியாற்றிய திரு. க. ப. சந்தோஷம் என்பவர் தமிழ் இலக்கண இலக்கியங்களை நன்கு பயின்றவர். செந்தமிழ்ச் செல்வியில் பல பொருள் பற்றிக் கட்டுரைகள் எழுதிப் பெயர் பெற்றவர். அவர் கலித்தொகைச் செய்யுட்களில் உள்ள நிகழ்ச்சிகளைச் சிறு கதைகளாக எழுதினர்;

அவற்றை அச்சிடுவதற்கு முன்பு காலமானார். 'கலித்தொகையில் ஒரு கதை' என்னுந்தலைப்பில் அவர் எழுதிய சிறு கதைகளுள் ஒன்று செந்தமிழ்ச் செல்வி ஆறும் சிலம்பில் (பக். 397—402) வெளிவந்தது. அக்கதை சீரிய செந்தமிழ் நடையில் எழுதப் பெற்றுள்ளது மணப் பெண்ணின் மனநிலையை ஆசிரியர் விளக்கியுள்ள திறம் பாராட்டற்பாலது. அப்பகுதியினைக் கீழே காண்போம்.

"இதன்பின் சில ஆண்டுகள் சென்றன. மேல் நாம் கண்ட மகளிர், மண்ணாற் செய்த பாவைக்குப் பூவைச் சூடிப் பெண்ணாய்ப் பாவித்து விளையாடிய காலம் போயிற்று; ஆண் பிள்ளைகளுடன் அவர்கள் கைகோத்துத் திரிந்து அலைந்தநாள் நீங்கிற்று. தெருமுழுதுங் கேட்கும் படி ஏங்கியழுததும், அடங்காது சிரித்ததும் பழைய நாட் பாடமாயின. கண்ட பண்டம் வேண்டுமென்று கேட்டதும் துள்ளிக் குதித்து எள்ளி நகையாடியதும் இளமையிற் கேட்ட கதைகளைப்போற் கழிந்தன. அறியா இளமை நீங்கி, மணப் பருவமடையும் பெண்ணின் நிலை எவ்வளவு உருக்கம் நிறைந்தது.

"ஒருவேளை அவள் அறியாதவிடத்தில் பழக்கமில்லாத ஒரு மகனுக்கு வாழ்க்கைப் பட்டு அவனோடு வதிய நேரலாமென்ற கருத்தைப் புகட்டுஞ் சொற்கள் அன்னையின் வாயினின்று அடிக்கடி பிறக்கின்றன. தாய் தந்தையரையும் தமையன் தம்பிமாரையும் பிரிந்து வேறிடஞ் செல்ல வேண்டுமே யென்ற எண்ணம், உலகத் தன்மை யிதுவென்றறியாத அவள் இள மனத்தை எவ்வாறு வருத்துமோ.

யாரறிவர்? தன்னை மணந்து கொள்ளப் போகிறவன் எத்தன்மையனாயிருப்பானோ? தனது அறியாமைக்கிரங்கித் துணைவனாய் நின்று தேற்றுவானோ? அல்லது சீறி விழுந்து சுடுமொழி பகர்ந்து வருத்துவானோ? கடுங் காற்று வீசிப் பெருமழை பொழிந்து மின்னல் மின்னி இடியிடிக்கும் நள்ளிரவில் சுகமாயுறை வதற்கேற்ற வசதிகள் நிறைந்த வெளிச்சமுள்ள நல்ல வீட்டை விட்டுக் காரிருளிற் செல்லு மொரு மகளை யொத்தவளாயன்றோ மணமாகப் போகும் பெண்ணிருக்கின்றாள்?''

கு. பா. ராஜகோபாலன்

இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர்; கட்டுரைகளும் கதைகளும் எழுதியவர்; பங்கிம் சந்திரருடைய நவீனங்கள் சிலவற்றை மொழி பெயர்த்தவர்; திறனாய்வுக் கட்டுரைகளும் வரைந்தவர்; 'கிராம ஊழியன்' இதழுக்கு ஆசிரியராய்ச் சில மாதங்கள் பணியாற்றியவர். காஞ்சனமாலை, கனகாம்பரம், புனர்ஜென்மம், டால்ஸ்டாய் கதைகள் முதலியவற்றை எழுதினார். தேவி செய்துராயி, துர்க்கேச நந்தினி, இரட்டை மனிதன்—என்பன இவருடைய மொழி பெயர்ப்பு நூல்கள். உள்ளத்தில் எழுந்து அலைமோதும் பலவகை உணர்ச்சிகளை நுட்பமாக எடுத்துக் காட்டுவதில் இவர் வல்லவர்.[1] இவரது நடை பேச்சு நடையில் அமைந்தது.

இவர் உரைநடையில், நிர்மலம், காலட்சேபம், ஜலம், அநுசரணை, மனுஷன் போன்ற வடமொழிச் சொற்களும், தரமாட்டா, ஏதுக்கு, கீழே போட்டா,

1. கலைக் களஞ்சியம், தொகுதி 8, பக் 712.

பேசிக்கிண்டேன், வீடுன்னு, புருஷா போன்ற கொச்சைச் சொற்களும், அசல், முன்சீப், ஜவுளி, தாசில், கிஸ்தி, வசூல் போன்ற பிறமொழிச் சொற்களும் கலந்துள்ளன.

இவரது சிறுகதை நடைக்கு **“மூன்றுதலைமுறை”** என்னும் சிறுகதையின் ஒரு பகுதியைக் கீழே காண்க.

சீட்டாட்டக்காரர் பேச்சுகள்

“ஓய், ஆட்டத்தைக் கவனித்து ஆடு வீரா, தெருவிலே போரவாளெ எல்லாம் பார்த்துண்டு...”

“காமாக்ஷி ஐயரா, போரது? மனுஷன் தான் எப்படிப் போய் விட்டார்?”

“எப்பேர்ப்பட்ட குடும்பம்—ஊர் சிரிக்கப் போச்சே! இவா அப்பா, இதே ஜில்லாவில் பல்லக்கு போட்டுண்டு தாசில் பண்ணினாராம். ரெண்டு கையாலே சம்பாதிச்சாராம்.”

“எல்லாத்தையும் தஞ்சாவூர் மோகனும் பாள் காலிலே கொண்டு போய்ச் கொட்டினாராம்.”

“சாகிறபோது, பிணத்தை எடுக்க வழியில்லே. அந்தம்மா அப்பளாம் இட்டு, வடாம் எழுதி, புள்ளெகளெ முன்னுக்குக் கொண்டு வந்தார்.”

—கதைக்கொடி, மலர் 1, பக். 48.

புதுமைப்பித்தன்

விருத்தாசலம் என்னும் இயற்பெயருடைய புதுமைப்பித்தன், திருநெல்வேலி மாவட்டத்தினர்; பி. ஏ. பட்டம் பெற்றவர்; தினமணி செய்தித்தாள் உதவியாசிரியராய்ப் பல ஆண்டுகள் பணியாற்றினர்; மணிக்கொடி என்னும் இதழிலும் பிறவற்றிலும் சிறுகதைகளையும் எழுதினர். புதுமைப்பித்தன் கதைகள், காஞ்சனை, புதுமைப்பித்தன் கட்டுரைகள், ஆண்மை, மணியோசை முதலிய பல நூல்கள் இவருடையவை. இவர் ஏழைப் பங்காளர்; சமுதாய மூடப்பழக்க வழங்கங்களைக் கண்டிப்பவர்; தமக்குப் பட்டவற்றை அஞ்சாமல் கூறும் இயல்புடையவர். இவருடைய கதைகளும் கட்டுரைகளும் படிப்பவரை எண்ணச் செய்யும் ஆற்றலுடையவை. புதுமைப்பித்தன் சிறுகதைகள் இரண்டு பங்கங்கள் முதல் பல பக்கங்கள் வரையில் செல்பவை; நகைச்சுவை திரம்பியவை; மக்கள் பேச்சு நடையையும் மிகுதியான வடமொழிச் சொற்களையும் ஓரளவு ஆங்கிலச் சொற்களையும் கொண்டவை.

(1) ''குடிச்சுப்பிட்டு வந்தியாலே — இம்பிட்டுஞ் சேகபிட்டுப் போனுனே அவனுரு?''—போன்ற பேச்சு நடையையும் காணலாம்.

(2) இவருடைய கதைகளில் திருநெல்வேலி மாவட்டத்துக்கே சிறப்பாக உரிய சொற்களையும் தொடர்களையும் காணலாம். அடுக்களைத் தாலி (திருட்டுத் தாலி), மிளவொட்டி (மிளகுப் பெட்டி), துட்டு (நான்கு பைகள்). விடியுன்னை. (விடியுமுன்), உடை மரம் (கருவேல மரம்), தேரம் (நேரம்), செல்லும் (நேரம் செல்லும்),

(3) இவர் கதைகளில் உவமைகள் அருகியே கையாளப்பட்டுள்ளன.

“மனத்தை வெளியில் பறக்க விட்டான் நாடோடி. அது, கூடு திரும்பும் பட்சிபோலப் பழைய நினைவுக் குப்பைகளில் விழுந்தது,” என்னும் உவமை அவற்றுள் ஒன்று.

(4) “இன்று முருகேசனுக்குக் குஷி, அவனும் அவன் குதிரையும் தண்ணி போட்டுவிட்டு ரேஸ் விட்டடார்கள். வண்டி ‘டோக்கர்’ அடித்தது,” இஃது இவரது நடைக்கோர் சான்று.

(5) இவருடைய சிறுகதைகளில் பல சிறந்த உண்மைகள் காணப்படுகின்றன. அவற்றுள் இரண்டனைக் கீழே காண்க:

(அ) “பெரியமீன் சின்னமீனைத் தின்னலாம்; ஆனால் சின்னமீன் அதற்கும் சின்ன மீனைத் தின்றால், பெரியமீன், ‘குற்றம் செய்கின்றாய்’ என்று தண்டிக்க வருகிறது. இதுதான் சமூகம்.”

(ஆ) “உணர்ச்சி, தேவனையும் மிருகமாக்கி விடுகிறது.”

கல்கியின் சிறுகதைகள்

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் இராயப்பேட்டை முனிவரான திரு. வி. கலியாணசுந்தரனார் நடத்திய

"'நவசக்தி'' என்னும் கிழமை இதழில் உதவி ஆசிரியராய் இருந்து பண்பட்டவர்; பெருங்கதை என்னும் தலைப்பில் இவரைப் பற்றி விரிவாக பேசப் பெறும். இவர் பல சிறுகதைகள் எழுதியுள்ளார். அவை கூறும் நிகழ்ச்சிகள் உள்ளத்தைத் தம்பால் ஈர்க்கத் தக்கவை. இவரது நடையில் உள்ள வடசொற்களும் பிறமொழிச் சொற்களும் மற்றவர் எழுதிய சிறுகதை நூல்களிலும் பெருங்கதை நூல்களிலும் இருத்தலைவிட அளவிற் குறைந்தவை என்பது குறிப்பிடத்தகும். 'திடீர், திடீர்; 'யார் யாரோ' 'மந்தை மந்தையாக' என்பன போன்ற அடுக்குத் தொடர்கள் ஆங்காங்கு இருந்து, இவரது நடைக்கு இனிமை தருகின்றன.

இவரது சிறுகதை நடைக்கு ஓர் எடுத்துக் காட்டைக் காண்போம் :

> ''ஒரு சமயம் நான் பாபநாசத்துக்குச் சென்றிருந்தேன். எதற்காகப் போனேன் என்று கேட்டால் நீங்கள் ஒரு வேளை சிரிப்பீர்கள்; சிலர் அனுதாபப்படுவீர்கள். பி. ஏ. பரிட்சைக்கு மூன்று தடவை போய் மூன்று தடவையும் தவறி விட்டேன். இதனால் வாழ்க்கை கசந்து போயிருந்தது. ஒரு மாதிரி பிராணத் தியாகம் செய்து விடலாம் என்ற முடிவுக்கே வந்து விட்டேன். திடீர் திடீர் என்று நமக்குத் தெரிந்தவர்கள் யார் யாரோ இறந்து போய்விட்டதாகக் கேள்விப் படுகிறோம். ஆனால், நாம் அவர்களைப் பின்பற்றலாம் என்றால், அதற்கு வழி வகை தெரிவ

இல்லை. யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன். பாபநாசத்தில் கல்யாணி தீர்த்தம் என்பதாக ஓர் இடம் இருக்கிறதென்றும் அதிலேதான் ஆசிரியர் வ. வே. சு. ஐயர் விழுந்து உயிரை இழந்தார் என்றும் கேள்விப்பட்டிருந்தேன். அந்தப் பெரியாரைப் பின்பற்றலாம் என்று எண்ணிக் கொண்டுதான் பாபநாசம் போனேன்.''

6

பெருங்கதைகள்

பண்டித ச. ம. நடேச சாஸ்திரியார்

இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர்; பல அலுவல்கள் பார்த்து ஓய்வு பெற்றவர்; சிறந்த வடமொழிப் புலவர். இவர் ஆங்கிலத்திலும் வடமொழியிலும் தமிழிலும் பல நூல்கள் எழுதியுள்ளார். வால்மீகி இராமாயணம், தீனதயாளு, திக்கற்ற இரு குழந்தைகள், தக்காணத்து மத்திய காலகதைகள், மாமி கொலுவிருக்கை, மதிகெட்ட மனைவி, தூக்குத் தூக்கி, ஈசாப் கதைகள் என்பன இவர் எழுதிய தமிழ் நூல்கள். இவற்றுள் தீனதயாளு, திக்கற்ற இரு குழந்தைகள் என்னும் இரண்டும் பெருங்கதைகளாகும்.[1] இவற்றுள் தீனதயாளு என்பதுவே இவரது முதல் பெருங்கதை. இது 1902-இல் வெளியானது.

தீனதயாளு

தீனதயாளு என்பது, இருபதாம் நூற்றாண்டில் எழுதப் பெற்ற முதல் பெருங்கதையாகும். இதன்கண்

---

1. கலைக்களஞ்சியம், தொகுதி 6, பக். 286.

பதினைந்து உட்பகுதிகள் உள்ளன. (பக். 149) இந்நூல் பிராமணர் குடும்ப வரலாற்றுச் செய்திகளைக் கொண்டது. இதன் நடை வடமொழிச் சொற்களை மிகுதியாக வுடையது; ஆங்கிலம், இந்துஸ்தானி முதலிய பிற மொழிச் சொற்களையும் ஓரளவு பெற்றுள்ளது. இதன் முதல் மூன்று பகுதிகள் 18பக்கங்களைக் கொண்டுள்ளது. அவற்றில் ஏறத்தாழ 150 வடமொழிச் சொற்கள் உள்ளன; கச்சேரி, ராஜா, சர்க்கார், ரஸ்தா, ஆபீசு போன்ற பிறமொழிச் சொற்களும் உள; 'பரீக்ஷை கொடுத்து விட்டான்' (பக். 6) போன்ற வழுவுடைய சொல்லாட்சிகளும் உண்டு.

நூல் முழுமையும் இறைமணம் கமழ்கின்றது. இலக்கணப் பிழைகள் இந்நூலில் மிகுதியாக இல்லை. கொச்சை வழக்கும் இல்லை. 'என்னவோ', 'அன்றியும்' என்பன போன்ற நல்ல இலக்கண வழக்குச் சொற்களே பெய்யப் பட்டுள்ளன. கருத்து அன்று (8) அவர் தம் முடைய மகன் (15) என்பன ஆசிரியருடைய இலக்கண அறிவிற்கு ஏற்ற சான்றுகள் ஆகும்.

சில இடங்களில் பத்திகள் 2 பக்கங்களிலும் 1-1½ பக்கங்களிலும் அமைந்துள்ளமை கருத்தை உணரத் தடை செய்கின்றது (8-12).

பிறமொழிச் சொற்கள் மிகுதியாக இருத்தலால் நடை இனிமை கெடுகின்றது; நடையில் மேடு பள்ளங்கள் உண்டாகி, ஒரே முறையான ஓட்டம் தடை படுகின்றது. ஆயினும், நாய்போல் உழைத்து (6), முகம் கடுவன் பூனைபோல ஆகிறது (5) போன்ற உவமைகளும், பரபரப்பு (2), வெடவெட (13), கிடுகிடு (15) போன்ற இரட்டைக் கிளவிகளும், இடுஇடு (1),

சொட்டுச் சொட்டு (13) போன்ற அடுக்குத் தொடர்களும், நற்குண நற்செயல்கள் (8), புத்தகமும் கையுமாய் (9) எள் என்பதற்கு முன் எண்ணெய் என்னும் எண்ணமாயிருப்பான் (9) போன்ற நல்ல தொடர்களும் ஆங்காங்கு நிலவி நடையை ஓரளவு சிறப்பிக்கின்றன. சுருங்கக் கூறின், இந்நூல் இலக்கண வரம்பு பிழைபடாத முறையில் பேச்சு வழக்குச் சொற்களைக் கொண்டே எழுதப்பட்டுள்ளது என்னலாம்.

மறைமலையடிகள்

மறைமலையடிகள் 1911-இல் குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்னும் பெருங்கதையை எழுதி வெளியிட்டார். அது இலக்கியச் செறிவுடைய நடை கொண்டது. ஆசிரியர் அதன் முன்னுரையில், ''தமிழ்மொழி மிக நுண்ணியக் கருத்துக்களையும் எளிதில் சொல்லத்தக்க சொற்களையும் கொண்டது. அங்ஙனமிருந்தும் தமிழ்ப் பெருங்கதைகளை எழுதியுள்ளவர் வடமொழிச் சொற்களையும் பிறமொழிச் சொற்களையும் சொற்றொடர்களையும் கலந்து எழுதி தமிழ் நடையைக் கெடுத்து விட்டனர். தமிழ்ச் சொற்களைத் தேர்ந்தெடுத்துப் பொருத்தமான இடங்களில் அமைப்பதற்கு ஆழ்ந்த தமிழ் இலக்கிய அறிவு தேவையாகும். இத்தகைய தமிழ்ப் புலமையை இப் பெருங் கதைகளில் காண முடியவில்லை; ஆங்கிலப் பெருங்கதைகளைத் தமிழில் எழுதியவரும், ஆங்கில நாவல்களில் உள்ள பொருட்சுவையையும், சொற் சுவையையும் தமிழில் உணர்த்த முடியவில்லை.'' என்று வருந்தி எழுதியுள்ளார். அடிகளாரது பெருங்கதையில் அமைந்துள்ள உரைநடைக்கு ஓர் எடுத்துக் காட்டினை இங்குக் காண்போம்.

"வளைந்து வளைந்து ஓடும் எண்ணிறந்த கான்யாறுகளாலுந் தெளிந்த அருவியோட்டங்களாலும் நீர் ஊட்டப்படும் பூக்கள் நிறைந்த வெளி நிலங்களும், இனிப்பான பழங்களும் நிறைந்த தோப்புகளால் மூடப்பட்ட மேட்டு நிலங்களும் காட்சிக்கு இனிய பசும்புல் செழிப்பாய் வளர்ந்திருக்கும் பள்ளத்தாக்கான நிலங்களும், படைகள் செல்லுவதற்கு இசையாமல் இடர் பயப்பனவாயிருந்தாலும் அமைதியாக வழி நடைப் பயணம் போகின்றவர்களுக்குப் பெருமகிழ்ச்சி தருகின்ற மலைகளின் இடையிலுள்ள இடுக்கு வழிகளும், வானில் மீன்கள் விளங்குதல் போலப் பல்லாயிரம் பூக்களால் அழகுறுத்தப் பட்டிருக்கும் மென்புல் வளர்ந்து உயர்ந்த பொற்றைகளும், பஞ்சு சணல் முதலியன மண்டி வளர்ந்து காற்றுல் அலையுங் கொல்லைகளும் ஆங்காங்குக் காணப்படுகின்றன."

—குமுதவல்லி, பக் 1

இங்ஙனம் பல வரிகளைக் கொண்ட நீண்ட வாக்கியங்கள் சில இந்நூலில் அமைந்துள்ளன. ஆயினும் சிறுசிறு வாக்கியங்கள் மிகப் பல இந்நூற் பொருளைத் தொடர்ந்து அறிய உதவுகின்றன. கீழ்வரும் சிறு வாக்கியங்களைக் காண்க ;

"அதற்கு நீலலோசனன், 'ஆயினும், இந்தக் குடிசையில் நாம் சிறிது நேரமாவது தங்க வேண்டும். அதனுல் நம்முடைய குதிரைகளைத் தீனியூட்டி இளைப்பாற்றுவிக்கலாம்; ஏனெனில், அத்தகைய தீனியில்லாமல் நம் குதிரைகள் இந் நாள் முழுதும் அடைந்த

உழைப்பின் மிகுதியால் இன்னும் இரண்டு நாழிகை வழிகூடப் போவதற்கு ஏலாதனவா யிருக்கின்றன' என்று மறுமொழிந்தான்.''

ஆரணி குப்புசாமி முதலியார்

திருவாளர் ஆரணி குப்புசாமி முதலியாரவர்கள் ஆங்கிலத்தில் ரெயினல்ட்ஸ் என்ற நாவலாசிரியரும் பிறரும் எழுதிய ஆங்கில நாவல்களுக்குத் தமிழாக்கம் கொடுத்துப் பெயர் பெற்றவர். தேவசுந்தரி, கன்னியின் முத்தம், அரசூர் இலட்சுமணன் முதலிய நாற்பத்தாறு பெருங்கதைகளைப் பல்லாயிரக் கணக்கான பக்கங்களில் எழுதி முடித்தவர். அவர் எழுதிய நூல்களுள் ஒன்றான அரசூர் இலட்சுமணன் என்னும் நூலினை ஒரு எடுத்துக் காட்டாகக் கொண்டு ஆராய்வோம்.

இவ்வாசிரியர் தேவையான இடங்களில் கதைப் பாத்திரங்களையொட்டி விளக்கம் தருவது வழக்கம். கல்வி கற்றவன் செய்யும் தீமைகளை விளக்கி இக் காலக் கல்வியைக் கண்டிக்கும் திறனும் படிப்பினை ஊட்டும் திறனும் பாராட்டற்குரியது. இவர் தக்க இடங்களில் உவமைகளைக் கொண்டும் மேற்கோள் களைக் கொண்டும் தாம் கூறும் சில பகுதிகளை விளக்கி யிருத்தல் நன்முறையில் அமைந்துள்ளது. இப்பெருங் கதையில் அதிகாரிகளை மரியாதையின்றிக் குறிக்கும் இடங்கள் சிலவுண்டு. இவர் நடையில் வடமொழிச் சொற்கள் மிகுதியாகும். இலக்கணப் பிழைகளும் பலவாகும். அரங்கநாதன் என்பதற்கு இரங்கநாதன் எனவும் பன்மை எழுவாய்க்கு ஒருமை வினைமுற்றும் போன்ற இலக்கணப் பிழைகள் பலவாகும்.

இவர் விளக்கம் தரும் பகுதிகளுட் சிலவும் உவமைகள் சிலவும் பிறவும் கீழே காணலாம்.

"நேயர்களே! இச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயம் கூற விரும்புகிறேம். இத்தகைய அபூர்வ சாமார்த்தியமுடைய கள்வர்களைப் பற்றி நமது கதையில் வரைவது, அவர்களுடைய செய்கைகளைச் சிறப்பித்துக் கூறவாவது, அவர்கள் நடத்தைகளைச் சிலாகித்துக் கூறவாவது என்று இதை வாசிப்போர் எண்ணலாகாது. நமது நோக்கம் அதற்கு முழுவதும் மாறுனதே.

"இந்த அரசூர் இலஷ்மணன் என்பவன் கல்வி கற்றவன்; சாத்திரங்களைக் கற்றவன், ஒரு பத்திரிகைக்குப் பத்திரிகையாசிரியனுக விருப்பவன். இத்தகைய கல்வியுடையவன் எங்கேனும் கள்ளத் தொழிலில் பிரவேசித்து இவ்வகைப்பட்ட அக்கிரமங்களைச் செய்யலாமோ என்று சாதாரணமாக எவருமே வியப்படையலாகும். அது சுபாவமே.

"ஆனுல் கல்விப் பொருளும் செல்வப் பொருளும் ஒருவருடைய இயற்கைக் குணங்களை உறுதிப்படுத்தி விர்த்தி செய்யும் குணமுடையவைகளே யன்றி, துர்க்குணங்களை மாற்றி நல்லவை யாக்கா. இந்த உண்மை நமது அரசூர் இலஷ்மணனுடைய நடத்தையாலேயே நன்கு ருசுவாகிறது. கல்வியறிவில்லாதவன் தரித்திரம் காரணமாகவோ, வேறு எதற்

காகவோ, களவு முதலிய குற்றங்களைச் செய்கிறான். அவனுக்குத் தந்திர சாமார்த்தியம் அவ்வளவாகத் தெரியாது. ஆகையால் குற்றவாளிகளைக் கண்டு பிடிக்கும் போலீஸாருக்கு அத்தகைய குற்றவாளிகளைக் கண்டுபிடிப்பது கஷ்டமல்ல.

"ஆனால் கல்வியறிவுடையவரும், சாத்திர ஆராய்ச்சியுடையவரும் இத்தகைய துர்க்காரியங்களில் பிரவேசிக்கும்போது முன் யோசனையோடு வேலை செய்ய ஆரம்பிக்கிறார்கள். போலீஸார் தங்களைப் பிடித்துத் தண்டிப்பதற்குப் பூரணமான அத்தாட்சிகள், அதாவது ருசுக்கள் வேண்டுவது அவசியம். கல்வியறிவில்லாத குற்றவாளிகள் அந்த யோசனை தெரியாமல் தற்சமயம் தன் காரியம் நிறைவேறி விட்டால் போதும் என்று குற்றங்களைச் செய்து விடுகிறார்கள்.

"ஆனால் கல்வியறிவு பொருந்தி வெளிக்கு நாணயமாக உடையணிந்து கொண்டு பெரிய மனிதர் கூட்டத்தில் தாமும் ஒருவராய் நடமாடும் இப் பெரிய மனி: க் கள்ளரோ, தாங்கள் ஒரு குற்றத்தை—களவோ, மோசமோ, கொலையோ செய்யும் போதே—இக்குற்றத்தைப் பற்றிய ருசுக்கள் வெளிக்குப் புலப்படா வண்ணம் சாமர்த்தியமாய் வேலை செய்கிறார்கள். அதாவது, தாங்கள் பின்னால் விட்டுப் போக வேண்டிய ருசுக்களை முன் ஜாக்கிரதையோடு அழித்து விட்டுப் போய் விடுகிறார்கள்.

"ஆகையால் குற்றவாளிகளில் இத்தகை யோரே, குற்றங்களைக் கண்டு பிடிக்கவேண்டிய துப்பறியும் போலீசாருக்குச் சொல்லொணுக் கஷ்டத்தையளிப்பவர்கள்.

"இச் சாதாரண பாஷைக் கல்வியொருவ னுடைய நடத்தையை யொருபோதும் சீர்படுத் தாதென்றும், நமது ஆன்மார்த்த விஷயங்களை யும் மதாசார ஒழுக்கங்களையும் கற்பிக்கும் நமது புராதனத் தாய்நாட்டுக் கல்வியே, ஒருவன் இகம்—பரம் இரண்டிலும் நன்மையைப் பெறும் படிச் செய்யும் என்றும் நமது நாட்டிலுள்ள பெற்றோர்களுணர்ந்து, தம் மக்களை அவ்வழியிற் பயிற்சி செய்தாலன்றி நமது தாய் நாடு ஒரு போதும் சீர் பெருது. நம்நாட்டுத் தரித்திரம் ஒழியாது."

— அரசூர் இலட்சுமணன், (பக். 79-81).

டி. என். சேஷாசலம் ஐயர்

கலாநிலையம் என்னும் இலக்கியக் கிழமை இதழின் ஆசிரியரான திரு. டி. என். சேஷாசலம் அய்யர் அவர் கள் அவ்விதழில் தொடர்ந்து எழுதிய பெருங்கதையே "காந்திமதி" என்பது. எளிய சாலியன் மகளான காந்திமதி உயர்ந்த பண்புகளைக் கொண்டு விளங்கிய தாகக் கதை கூறுகிறது. ஆசிரியர் அவருக்கே இயல்பாக உரிய நடையில் இக்கதையை வரைந்துள்ளார். இந் நூலில் சந்தி பிரிக்கப் பெருத சொற்ருெடர்கள் மிகுதி யாகும். நடை நன்கு அமைந்திருப்பினும் இச் சொற் ருெடர்கள் படிப்பதற்கு இடையூறு விளைவிக்கின்றன. ஆங்காங்கு உவமைகளும் உயர்ந்த கருத்துக்களும் இந்

நூலை அணி செய்கின்றன. இவரது நடைக்கு ஒரு எடுத் துக்காட்டினைக் கீழே காண்க.

"கட்டழகி காந்திமதி காந்தார நாட்டில் இரத்தினபுரியில் புரசைமா நகரின் கண் வசித்திருந்த கருணாகரர் என்னுமோர் சாலி யனின் மகள், அரசகுமாரரும் பிரபு புத்திரர் களும் அவ்வீதியாய்ச் செல்லுங்கால் தாம் அமர்ந்த வாகனங்களை, இச்சாலியன் மனைக் கெதிரில் சற்று மெல்ல நடத்தி, முன்னும் பின்னும் ஊர்ந்தே யுகைப்பது வழக்கம்.

"பிரதானிகளும் பிரபுக்களும் காதலொடு கருதும் கண் விடு தூதிற்குக் காந்திமதி முகங் கொடாதிருந்த நிலை அவள் தந்தைக்குக் கள வற்ற உவகையளித்தது. "பெண்ணே, காந்தி, அவர்களெல்லாம் போகட்டும். பலகாரப் பட்டவர்த்தன யானைமீதும் பால் நிறப் புரவி மீதும் பையப்பைய நடக்கு மொய்யாரப் பிரபுக்களு மலங்காரப் பூமான்களும் போகட் டும். அன்னார் வகுப்பிற் பிறந்த வரல்லர் நாம். நம் முறவு வேண்டுவ தேனோ? பழமொழி ஊர்க்குருவிக்கு முயர் பருந்திற்கும் பொருந்துமோதான். என் தந்தை தரி யோட்டித் தேடிய பொருளை யானும் மெய் வருந்திப் பெருக்கியுள்ளேன். இந்நகர்க்குப் பகை நேர்ந்த காலத்தும் வில்லும் வேலு மேந்திச் சென்று போர் முனை பொருது ஈட்டிய பொருளைப் போற்றியு முள்ளோம். பிறப்பின் பெருமையா லெம்மிலு முயர்ந்தோ னென மதிக்கும் மருகனெவனும் நமதருகில் நாட

வேண்டா. கோமகனென்றும் மேன் மக னென்றும் நீ நசை கொண்டு வீணெண்ணம் வளர்க்காதே. அன்னவருண்மைப் பத்தினி யாதற் கொத்த சமநிலை யுனக்கில்லை. கருத் திற்கிசையும் பரத்தையோ நீ யல்லள்," என்று இன்ன பலவும் நம் மாதரசிக்குக் கருணைகரர் அவ்வப்போது எடுத்துரைத்து வருவாராயினர். வார்த்தையை ஏற்பவரிடத்தில் மிகை படக் கூறுதல் மாந்தரியல்பு."

—காந்திமதி என்னும் காந்தார நாட்டுக் காட்டழகி, பக்—10

குடந்தை சாமி என்பவரால் எழுதப் பெற்ற கருங்குயில் குன்றத்துக் கொலை என்னும் பெருங் கதை மூன்று பகுதிகளை உடையது. அந்நூலின் கதை ஓட்டமும் தமிழ் நடையும் நன்முறையில் அமைந்துள்ளன.

வடுவூர் கே. துரைசாமி ஐயங்கார்

இவர் பி. ஏ. பட்டம் பெற்றவர்; உலகியல் அறிவு சிறக்கப் பெற்றவர். இப் பெரியார் நாற்பத்தேழு பெருங்கதைகளை எழுதிப் புகழ் பெற்றவர். சிலருடைய பெருங்கதைகள் அவர் காலச் சமுதாய நிகழ்ச்சிகளைப் பெருமளவு படம் பிடித்துக் காட்டுவன எனலாம். இவர் எத்தகைய நிகழ்ச்சியையும் அஞ்சாமல் கூறும் இயல் புடையவர். இவருடைய கதைகள் முதலிலிருந்து இறுதி வரையில் விடாமல் படிக்க வேண்டும் என்னும் ஆர் வத்தை ஊட்டுபவை. சுருங்கக் கூறின், சமுதாயப் பெருங்கதைகளை வரைவதில் இவர் அக் காலத்தில்

சிறந்து விளங்கினர் என்னலாம். இவர் நூல்கள் விறுப்பு வாய்ந்தவை. படிக்கப் படிக்கச் சுவை தருபவை.

வை. மு. கோதைநாயகி அம்மையார்

இவ்வம்மையார் 1925 முதல் 1948 வரையிலும் எண்பத்தாறு நூல்களை வெளியிட்டவர். அவற்றுள் ஐந்து சிறுகதை நூல்கள்; எஞ்சியவை பெருங்கதை நூல்கள். இவற்றுள் பல குடும்ப நிகழ்ச்சிகளைப் பார்த்து எழுதப் பெற்றவை என்று அம்மையாரே பல நூல்களின் முகவுரையில் எழுதியுள்ளார். இவர் ஆங்காங்குத் தந்துள்ள உவமைகள், இரட்டைக் கிளவிகள், அடுக்குத் தொடர்கள், வருணனைப் பகுதிகள், நகைச்சுவைக் கூற்றுக்கள் இவரது தமிழ் நடையை அழகு செய்கின்றன. நல்ல ஒழுக்கம், இறைப்பற்று ஆகிய இரண்டையும் வற்புறுத்துவதே இவ்வம்மையாரது சிறந்த குறிக்கோள். அந்த குறிக்கோளுக்கு நமது வணக்கம் உரியதாகும்.

இவருடைய நூல்களில் வரும் வருணனை, பெண் வருணனை, நகைச்சுவை ஆகியவற்றிற்கு ஒவ்வோர் எடுத்துக்காட்டு கீழே தரப்பட்டுள்ளது. அவற்றைப் படித்து மகிழலாம்.

வருணனை

சாருலோசனு என்ற நாவலில் கதாநாயகி ஜெயமணி நாயகனுன சாருஹாசனை கண்டு, ''தன் காற்சிலம்பொலி 'கலீர் கலீர்' என்று, ஒலிக்க ஆடும் மயிலின் அற்புதத் தோற்றம்

போல'' நடந்து வந்த வேடிக்கையும் விளை யாட்டும் அறிவும் பிரேமையும் கலந்த முறை யில் அவனிடம்,

''ஏதேது! இன்று பெருத்த மழை வரும்! வானத்தில் இடி இடிப்பது போல சப்தமும் கேட்கின்றது! மின்னலும் மின்னுகின்றது! மழை நிச்சயமாக வந்துவிடும்''

என்று கூறிக்கொண்டே அவன் எதிரில் வந்து பதுமைபோல் நின்றாள்.''

நகைச்சுவை

''முன்பு அந்தணர் மூன்று காலமும் தவறாமல் ஆற்றில்முழுகி நீராடியதற்கு பதிலாக, இப்போது காப்பி பாத்திர நதியில் முக்காலமும் தவறாமல் விழுந்து முழுகுகிறார்கள் என்பது எவ்வளவு பொருத்தமாக இருக்கிறது பார்த் தீரா!''

—வைதேகி, பக் 183

பெண் வருணனை

''முல்லையரும்பு போன்ற இவருடைய பல் வரிசையும், சிவப்பு ரோஜாவைப் போன்ற அதர மும்,வெள்ளை ரோஜாவைப்போன்ற கன்னமும், தாமரையிதழை நிகர்த்த நாவும், சண்பக புஷ் பத்தின் மணம் கமழும் சுவாசமும், தேன் போன்ற வசனமும் சேர்ந்த படிவமானது. அக்

கோட்டைக்குள் அமைந்த ஒரு புஷ்பத் தோட்டத்தைப் போல் தெரிகிறது.''

—ராதாமணி, பக். 28-29

வ. ராமசாமி (வ. ரா.)

பெருங்கதைகள் எழுதுவதில் வ. ரா. என்றழைக்கப் பட்ட வ. ராமசாமி அவர்களும் குறிப்பிடத்தக்கவர் ஆவர். இவர் சீர்திருத்த நோக்கம் மிக்கவர்; காலத்திற்கு ஏற்றவாறு புதியன புகுதலை வரவேற்பவர்; தமக்குப் பட்டவற்றை எழுதுவதில் அஞ்சாமை மிக்கவர். இவர் படைப்புக்களில் 'கோதைத்தீவு' என்றும் பெருங்கதையும் ஒன்றுகும். அந்நூல் பதினெட்டு உட்பிரிவுகளைக் கொண்டது; 120 பக்கங்களை உடையது.

ஆசிரியர் இந்நூலில், கணபதிராயன் என்றும் ஒரு பாத்திரத்தைப் படைத்து, அவன் வாய்மொழியாகத் தம் கருத்துக்களை ஆராய்ச்சி முறையிலும் கதை கூறும் முறையிலும் அமைத்துப் படிப்பவர் கருத்துகளை கிளறி விடும் தன்மை பாராட்டற்குரியது. புறவைக்காத்த சிபி யின் செயல், கானகத்தில் காதலியைக் காரிருளில் கை விட்டுப் பிரிந்து சென்ற நளனது செயல், கணவனைத் திருத்தத் தவறிப் பாண்டியனை இறக்குமாறு செய்த கண்ணகியின் செயல் ஆகியவை கணபதிராயனுல் நன்கு ஆராயப் பெற்றுக் கண்டிக்கப்படுகின்றன. கணபதி ராயன் பெண் இனத்துக்குப் பரிந்து பேசும் பேச்சுக்களும் அவன் படம் பிடித்துக் காட்டும் நாரிபுர நிகழ்ச்சிகளும் சுவை பயக்கத் தக்கவை. ''கைம்பெண்—பெண்பாற் சொல். இதுபோல மனைவியை இழந்தவனைக் குறிக்கும் ஆண்பாற் சொல் தமிழில் உண்டா?'' என்று கணபதி

ரூன் கேட்பது நம்மை விழிக்கச் செய்யும். தமிழ்ச் சமுதாயத்தில் பெண்களுக்கு நல்வாழ்வு அளித்தல் வேண்டும் என்னும் உயர்ந்த குறிக்கோளுடன் இந்நூல் எழுதப்பட்டது என்பது பொருத்தமாகும்.

ஆசிரியர் ஆங்காங்கு நல்ல கருத்துக்களை வழங்கியுள்ளார்.

''எவ்வளவு முக்கியமான வேலை இருந்தாலும், இரவில் தூக்கம் கெடாமல் பார்த்துக் கொள்வது புத்திசாலித்தனம்'' (பக். 44) என்னும் உயர்ந்த கருத்து அவற்றுள் ஒன்றாகும்.

ஆசிரியரது நடை விறுவிறுப்பு வாய்ந்து. ஆயினும் அந்நடையில் சகஜம், சுவாரஸியம், சிருஷ்டி, புஷ்டி, அனவரதம், லோகாப வாதம், அனுஷ்டானம், க்ஷீனம், மார்க்கம். பிராந்தியம் போன்ற மிகுதியான வடசொற்களும்- ரொம்ப (2), போடணும் (8), சொல்லணும் (8), வம்பளப்பு (11), அதன் பேரில் (10), தூங்கிப் போய் விட்டேன் (26), கொஞ்சம் குஷிதான் (27), துக்கடாக்கள் (27) போன்ற கொச்சை மொழிகளும் நடையின் நலத்திற்கு உதவி புரியவில்லை. ஆயினும் ஆசிரியர், கோடை இடி இடித்ததைப் போல (3), அத்தி பூத்தது போல (5), பகீரதன் கங்கை கொணர்ந்ததைப் போல (11), பள்ளிக் கூட வாத்தியார் பாடம் போதிப்பதைப் போல (26), காலம் சென்ற திவான் சேஷய்ய சாஸ்திரிகள் புதுக்கோட்டை நகரத்தின் வீதிகளை ஒழுங்காக அமைத்திருப்பது போல (58), போன்ற உவமைகளை ஆங்காங்கு ஆண்டிருத்தல் நடைக்கு அழகைத் தருகிறது. கொட்டிக் கொட்டி (8) சொல்ல சொல்ல (21) வெறிக்க வெறிக்க

(37) போன்ற அடுக்குத் தொடர்களும், கலகலத்து, பரபரப்போடு, படபட என்னும் இரட்டைக் கிளவி களும் நடை அழகை மிகுவிக்கின்றன.

ஆசிரியர் நடைக்கு ஓர் எடுத்துக் காட்டினைக் காண்போம்:

''ராவண சம்ஹாரம் ஆகுமுன்னமேயே, ராமன் விபீஷணனுக்கு 'இந்தா! லங்கா பட்டணம்' என்று தானம் கொடுக்க வேண்டிய தன் சூக்ஷ்மம் என்ன? ராமன், மகா சாமார்த் திய சாலியான ராஜ தந்திரி என்பதை நான் ஒப்புக் கொள்ளுகிறேன். ராமபக்தி மேலீட் டால், விபீஷணன் சரண் புகுந்திருந்தால், விபீஷணன் மகுடத்தை ஏற்றுக் கொண்டிருக்க மாட்டான். பரதனுடைய பக்தியை விபீஷண னிடம் நாம் காண முடியவில்லை. அண்ணனு டைய மகுடத்தைத் தம்பி கூச்சமில்லாமல் வாங்கிக் கொண்டானே என்று லோகாபவாதம் ஏற்படுமே என்பதற்குக்கூட விபீஷணன் பயப்படாமல் காரியம் செய்ததைப் பார்த்தால், அவன் மறுக் கலப்பில்லாத பக்தன் என்று திட்டமாகச் சொல்ல முடியாது.''

—**கோதைத்** *தீவு*, **பக். 23-24.**

பேராசிரியர் கல்கி

கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (1899-1954) தொடக்கத்தில் இராயப்பேட்டைத் தமிழ் முனிவ ராகிய **திரு. வி. கலியாண சுந்தரனார்** நடத்தி வந்த ''நவ சக்தி''யில் உதவி ஆசிரியராகப் பணியாற்றினார். தமிழ் முனிவரின் தமிழ்ப் பற்றும் பண்பாடும் இளைஞரான

கிருஷ்ண மூர்த்தி அவர்களின் உள்ளத்தில் பதிந்தன. இயல்பாகவே நுண்ணறிவு மிகப் பெற்ற கிருஷ்ணமூர்த்தி அவர்கள், முனிவரோடு பழகி, எளிய — இனிய தமிழில் உயிரோட்டமுள்ள நடையை எழுதுவதில் வல்லவரானுர்.

'கர்ஞடகம்'

ஆனந்த விகடனிலும் பின்பு கல்கியிலும் அவர் ஆசிரியராய் இருந்தார். அப்பொழுது பொருளாதாரச் சிக்கல்களையும் அரசியல் சிக்கல்களையும் குறைந்த கல்வியறிவுடையவர்களும் புரிந்து கொள்ளும் தெளிவான — எளிய முறையில் எழுதிப் புகழ் பெற்ருர். அவருடைய தலைப்புக் கட்டுரைகளைப் படிக்கவே மக்கள் அவ்விதழ்களை வாங்கினர் என்று கூறலாம். இசையரங்கு, நாடகங்கள் போன்ற கலை நிகழ்ச்சிகளைக் கலைத்திறனுய்வு கண்கொண்டு "கர்ஞடகம்" என்ற தலைப்பில் அவர் எழுதிய கட்டுரைகளால், இசை நிகழ்ச்சிகளும் நாடக நிகழ்ச்சிகளும் பொது மக்கள் உள்ளங்களை ஈர்த்தன. அவர்கள் அக் கலைச் செய்திகளில் அறிவு பெற்றனர். கலை நிகழ்ச்சிகளும் நன்கு நடைபெறலாயின. கலைக் கழகங்கள் பற்றியும் குறிப்பிட்ட கோயில்கள் பற்றியும் வேறு பல அறச் செயல்கள் பற்றியும் அவர் எழுதிய கட்டுரைகள், அவ்வறச் செயல்களை முட்டின்றி முடிவுறச் செய்தன. அதற்கோர் சான்று காணலாம்.

பாலாற்றங்கரையின் பகற்கனவு

வாலாசாபாது என்னும் ஊரில் பாலாற்றங் கரையில் 'இந்துமத பாடசாலை' என்னும் தொடக்க நடுநிலைப் பள்ளி ஐம்பது ஆண்டுகளாக நடைபெற்று வருகிறது. அதனை இயக்கும் பெரியார் **வா. தி. மாசிலாமணி முதலியார்**

என்பவர். கல்கி அவர்கள் அப்பள்ளியைச் சென்று பார்வையிட்டார்; அப் பள்ளிக்குக் கட்டடங்கள் தேவை — பொருளுதவி தேவை என்பதை உணர்ந்தார்; 'ஒன்றும் இயலாதவரின் உயர்பெருஞ் சாதனை', 'பாலாற்றங்கரையின் பகற்கனவு', 'கனவு நனவாகியது' என்னும் மூன்று தலைப்புக்களில் கட்டுரைகள் வரைந்தார். அக் கட்டுரைகளைப் படித்த செல்வர்கள் அப் பள்ளிக்குப் பணம் உதவினர். கட்டடங்கள் பெருகின. இங்ஙனம் அவர்தம் எழுதுகோல் முனையால் — எழுத்து வன்மையால் வளர்த்த கலைக்கூடங்கள் பலவாகும்.

மணி மண்டபங்கள்

திரு. வி. கலியாண சுந்தரனார்க்கு அவர் வாழ்ந்த இராயப்பேட்டையில் மணிமண்டபம் கண்ட பெருமையும் கல்கி அவர்களையே சாரும்.

பாரதிக்கு மணிமண்டபம் எடுப்பித்த பெருமை அவரது எழுதுகோல் திறனைச் சார்ந்தது. இன்று பாரதி விழா நாடெங்கும் நடைபெற அடிப்படை இட்டவரே கல்கி என்று கூறுதல் மிகையாகாது. பாரதியார் நூல்களை அரசாங்கமே பதிப்பிக்க வேண்டும் என்று எழுதியவர் அவர். அவரது பெருமுயற்சியாற்றான் அரசாங்கம் அப்பொறுப்பினை ஏற்றது.

தமிழிசை இயக்கம் தோன்றியபொழுது அதற்குப் பலத்த எதிர்ப்பு ஏற்பட்டது. கல்கி அவர்களின் எழுதுகோல் அவ் வெதிர்ப்புக்களுக்கு ஏற்ற விடைகளை அளித்தது. அவ்வியக்கம் இன்றியமையாதது என்று மக்களை உணரச் செய்தது. இங்ஙனம் தமிழ் இசை இயக்க வெற்றிக்கு அவரது தமிழ் உரை பெருந்துணையாய் அமைந்தது என்னலாம்.

வரலாற்றுப் பெருங்கதைகள்

தமிழ் மக்களிடம் நாட்டுப்பற்று நிலைத்துப் பயன் அளிக்க வேண்டுமாயின், அம்மக்கள் தமிழ் வரலாறு, நாகரிகம், பண்பாடு, தமிழ்க்கலைகள் ஆகியவை பற்றிய அறிவைப் பெறுதல் இன்றியமையாதது என்பது அவரது அழுத்தமான எண்ணம். பொதுமக்களுக்கு இவற்றில் பற்றை உண்டாக்கவே அவர் மேலே கூறியபடி கலைத் திறனாய்வுக் கட்டுரைகளை வரைந்தார்; பல்லவர் வரலாற்றையும் சோழர் வரலாற்றையும் அடிப்படையாக வைத்துச் 'சிவகாமியின் சபதம்', 'பொன்னியின் செல்வன்' முதலிய வரலாற்றுப் பெருங்கதைகளை வரைந்தார். அப் பெருங்கதையில் ப்ல்லவர் சோழர் பெயர்களும், அரசியல் அலுவலர் பெயர்களும், அக்கால மக்களின் பழக்கவழக்கங்களும் நன்கு விளங்கும்படி நிகழ்ச்சிகளைத் திறம்பட எண்ணித் தம் முயற்சியில் பெருவெற்றி பெற்றார். படிப்பவர்க்குச் சிறிதும் களைப்பு உண்டாகாத முறையில் நிகழ்ச்சிகளுக்கு உயிரூட்டிச் சென்றமையால்தான் "பொன்னியின் செல்வன்" என்ற பெருங்கதை பல நூறு பக்கங்களையுடையதாயினும், படிக்கப் படிக்க இனிக்கின்றது. வரலாற்றுப் பெருங்கதை எழுதுவது எளிதன்று; அக்கதைக்கேற்ற பாத்திரங்களைப் படைப்பதும் எளிதன்று. ஆசிரியர், பொன்னியின் செல்வன் வாழ்ந்த 10, 11ஆம் நூற்றாண்டுகளில் தம் உணர்ச்சிகளையும் கொண்டு நிறுத்தி, நிகழ்ச்சிகளை அமைத்துள்ள முறை, சோழர் வரலாறு படித்தவர்களால்தான் நன்கு உணர்ந்து பாராட்ட முடியும். ஆசிரியர், வரலாற்று நூல்களை எழுதியிருப்பவரைக் கலந்து இப்பெரு நூலை எழுதியிருத்தல் பாராட்டத்தகும்.

பல்லவர் வரலாற்றையும் சோழர் வரலாற்றையும், அக்காலப் பலதுறைக் கலைகளையும் பெருங்கதைகள்

வாயிலாகப் பொதுமக்களுக்கு முதன் முதல் உணர்த்திய பெருமை கல்கி அவர்களையே சாரும்.

பலதுறை நூல்கள்

ஆசிரியர் கல்கி அவர்கள் காந்தியடிகள் வரலாற்றை மொழி பெயர்த்துச் "சத்திய சோதனை" என்னும் பெயரில் வெளியிட்டார்: "மாந்தருக்குள் ஒரு தெய்வம்" என்னும் பெயரில் காந்தியடிகள் வரலாற்றை எழுதினார். அங்ஙனமே கவிஞர் தாகூர் வரலாற்றையும் வரைந்தார்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் தோன்றிய பொழுது அதன் தேவையைக் குறித்துப் பல கட்டுரைகள் வரைந்தார். அதனால் அக்கழகத்துக்கு நாட்டில் நல்ல விளம்பரம் உண்டாயிற்று. செல்வர் பொருளுதவி புரிந்தனர். அதன் வளர்ச்சிக்காகவே கல்கி அவர்கள் இலங்கை சென்றார்; சில நாட்கள் அங்குத் தங்கினார். அவரது கூர்த்த அறிவு இலங்கையைப் பற்றிப் பல விவரங்களை அறிந்தது. அவர் சென்னை மீண்டதும் தமது இலங்கைச் செலவைப் பற்றி நூல் ஒன்று எழுதினார்.

அவர் எந்த ஊருக்குச் சென்றாலும் அவ்வூரின் பெயர், அப் பெயருக்குரிய காரணம் ஆகியவற்றைக் கேட்டு அறிவதில் ஆர்வமுடையவர். அவ்வார்வத்தின் பயனாய் வெளிப்பட்டதே **'பொய்மான் கரடு'** என்பது. அவர் நாட்டுப்பற்றில் நனி சிறந்தவர்; ஒரு முறை மூன்று மாதக் கடுங்காவல் பெற்றார். சிறையில் தலைவர் பலருடன் நெருங்கிப் பழகினார். அக் குறுகிய காலத்துள் அங்கு நடைபெற்ற நிகழ்ச்சிகளை எல்லாம் **மூன்று மாதக் கடுங் காவல்** என்னும் பெயர் கொண்ட நூல் வடிவில் வெளியிட்டார்.

கல்கி அவர்கள் கலப்பு மணம், கைம்பெண் மணம், மதுவிலக்கு போன்ற சமூக சீர்திருத்தக் கருத்துக்களில் மிக்க நாட்டம் உடையவர்; ஆதலால் அவற்றைத் தம் சிறுகதைகள், பெருங்கதைகள், கட்டுரைகள் வாயிலாக நாட்டில் பரப்பினார். அவர் கட்சி வேறுபாடற்ற பரந்த மனப்பான்மை உடையவர்; தகுதியுடையாரைப் பாராட்டுவதில் மகிழ்ச்சி கொள்பவர். அறிஞர் அண்ணா அவர்கள் எழுதிய 'ஓரிரவு' நாடகத்தைப் பார்த்து மகிழ்ந்து, அண்ணா அவர்களைத் **'தமிழ்நாடு பெர்னார்ட்ஷா'** என்று உளமாரப் பாராட்டினார்.

தான் பிறந்த குடும்பம், இனம் முதலிய சூழல்களை அடிப்படையாகக் கொள்ளாது இலக்கியத்தைப் படைக்க முடியாது என்ற நிலையையும் நினைப்பையும் மாற்றித் தமிழ்ச் சொல்லுக்கும் கற்பனைக்கும் புதுமையும் பொதுமையும் பெருமையும் தேடித் தந்த பெருமை கல்கி அவர்களுக்கே உரியது. அது போலவே, தாம் திரு. வி. க. முதலான சான்றோரிடம் பெற்ற தமிழ்ப் புலமையின் பலனாகப் புதுமைத் தமிழைக் கொச்சை—வட்டார—சாதி வழக்கிலிருந்து விலக்கி, இலக்கிய விழுப்ப நிலைக்கு உயர்த்திய சிறப்பும் அவரது எழுதுகோலுக்கு உரியது.

கல்கி அவர்கள் தமிழின் வளத்தையும் ஆற்றலையும் வலிமையையும் திரு. வி. க. அவர்களிடம் கற்றார்; அவற்றைத் தம் நூல்கள் வாயிலாகவும் கட்டுரைகள் வாயிலாகவும் பொதுமக்களிடம் எளியமுறையில் பரப்பிப் பெயரும் புகழும் பெற்றார்.

கல்கியின் நூல்கள்

'கல்கி' அவர்கள் எழுதியுள்ள நூல்களை (1) கட்டுரை நூல்கள், (2) சிறுகதை நூல்கள், (3) பெருங்

கதை நூல்கள் எனப் பெருமளவில் மூன்றாகப் பிரிக்க லாம்.

கட்டுரை நூல்கள்

கட்டுரை நூல்கள் (1) பிரயாணக் கட்டுரைகள், (2) சிறை வாழ்க்கை அநுபவக் கட்டுரைகள், (3) கல்வி, பாடநூல்கள் பற்றிய கட்டுரைகள், (4) பெரு மக்கள் பற்றிய கட்டுரைகள், (5) அரசியல் கட்டுரை கள், (6) விழாக்கள், பொதுக்கூட்டங்கள் போன்றவை பற்றிய கட்டுரைகள், (7) படக்காட்சி மதிப்புரைக் கட்டுரைகள், (8) இசை முதலிய கலைகளைப் பற்றிய மதிப்புக் கட்டுரைகள் எனப் பலவகைப்படும்.

(1) இவர் எழுதியுள்ள **பிரயாணக் கட்டுரைகளுள்,** 'நம் தந்தையர் செய்த விந்தைகள்' என்பது ஒன்று. அஃது அஜந்தா, எல்லோரா, தஞ்சை, மாமல்லபுரம் ஆகியவற்றில் உள்ள கண்ணையும், கருத்தையும் ஒருங்கே ஈர்க்கும் இறவாத புகழுடைய சிற்பங்களைப் பற்றியது.

'இலங்கைப் பிரயாணம்', 'இலங்கையில் ஒரு வாரம்', 'தெய்வ தரிசனம்' என்னும் கட்டுரை நூல்கள் அவரது இலங்கைச் செலவை விரித்துப் பேசுவன.

தாகூர் தரிசனம் என்னும் நூல் சாந்தி நிகேதனம் முதலிய வடநாட்டு நல்லிடங்களைப் பற்றிப் பேசும் கட்டுரைகளின் தொகுப்பாகும்.

(2) கல்கி அவர்கள் நாட்டுப்பணியில் ஈடுபட்டு சிறை சென்று மூன்று திங்கள் சிறையில் தலைவர் பல ருடன் வாழ்ந்த அனுபவங்களைக் கூறும் கட்டுரைத் தொகுப்பே **'மூன்று மாதக் கடுங்காவல்'** என்னும் பெயர் கொண்ட நூலாகும்.

(3) கல்வி பற்றியும் பாட நூல்கள் பற்றியும் அவர் கருத்துக்களைச் சுவையுறக் கூறும் கட்டுரைத் தொகுப்பே **'திருமகளும் கலைமகளும்'** என்பது.

(4) இவர் பெருமக்கள் பற்றி எழுதிய கட்டுரை நூல்கள் மூன்று. அவற்றுள் ஒன்று, **'யார் இந்த மனிதர்கள்?** என்னும் பெயர் கொண்டது; மற்றொன்று **'மகாத்மாவும் மகாகவியும்'** என்பது. இது காந்தியடிகளையும் தாகூரையும் பற்றியது. மூன்றாம் நூல் **'பாரதி பிறந்தார்'** என்பது இதனில் பாரதியார், கம்பர், சத்தியமூர்த்தி போன்றோர் சிறப்பியல்புகள் பேசப் பெற்றுள்ளன.

(5) இந்த அறிஞர் வரைந்த அரசியல் பற்றிய கட்டுரைகளைக் கொண்ட நூல் **குமரியும் குன்றமும்'** என்னும் பெயர் கொண்டது.

(6) **'கண்கொள்ளாக் காட்சி'** என்னும் பெயர் கொண்ட தொகுப்பில் விழாக்கள், பொதுக் கூட்டங்கள் போன்றவை பற்றிய கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

(7) **'கலைச் செல்வம'** என்னும் பெயர் கொண்ட தொகுப்பு நூலில் திரைப்பட மதிப்புரைக் கட்டுரைகள் அடங்கியுள்ளன.

(8) **'தரம் குறையுமா?,' 'இசை விருந்து'** என்னும் பெயர்களில் வந்துள்ள இரு தொகுப்பு நூல்களிலும் இசை முதலிய பல கலைகளைப் பற்றிய மதிப்புரைக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன.

வாழ்க்கை வரலாற்று நூல்கள்

1. **'நாட்டுக்கொரு புலவர்'** என்பது சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியாரது வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவது.

2. **'மாந்தருக்குள் ஒரு தெய்வம்'** என்னும் நூல் காந்தியடிகளின் வரலாற்றைக் கூறுவது.

3. காந்தியடிகள் எழுதிய 'சுயசரிதை' என்பதன் மொழி பெயர்ப்பே **'சத்திய சோதனை'** என்பது. கல்கியவர்கள் மொழி பெயர்ப்பதிலும் வல்லுநர் என்பதற்கு இந்நூல் ஏற்ற சான்றாகும்.

சிறுகதைகள்

கல்கியவர்கள் எழுதியுள்ள சிறுகதைகளும் பலவாகும். அவை பல தலைப்புக்களைக் கொண்ட நூல்களாக வெளிவந்துள்ளன. ஒவ்வொரு நூலிலும் பல கதைகள் அடங்கியுள்ளன. அச்சிறு கதைத் தொகுப்பு நூல்களின் பெயர்களை மட்டும் காண்க.

1. கணையாழியின் கனவு, 2. ஏட்டிக்குப் போட்டி, 3. சாரதையின் தந்திரம், 4. மாடத்தேவன் சுனை, 5. ஒற்றை ரோஜா, 6. ஜமீன்தார் மகன், 7. புன்னைவனத்துப் புலி, 8. பாங்கர் விநாயகராவ். (இதனில் உள்ள கதைகள் மதுவிலக்குப் பிரசாரத்துக்காக எழுதப் பெற்றவை. இவை இராஜாஜி அவர்கள் நடத்திய 'விமோசனம்' என்ற இதழில் வெளியானவை), 9. அமர வாழ்வு, 10. வீணை பவானி. 11. நாடகக்காரி.

பெருங்கதைகள்

இந்த அறிஞர் எழுதியுள்ள பெருங்கதைகளும் பல. அவை அரசியல், சமூகம், வரலாறு எனப் பலவகைப்படும்.

1. தியாக பூமி அலையோசை என்னும் இரண்டும் **அரசியல் பெருங்கதைகள்.**

2. கள்வனின் காதலி, சோலைமலை இளவரசி, பொய்மான் கரடு, மகுடபதி, அமரதாரா என்பவை **சமூகப் பெருங்கதைகள்**

அமரதாராவை முடிக்காமலே ஆசிரியர் காலமானார். ஆயின், அவருடைய ஆருயிர் மகளார் திருவாட்டி ஆனந்தி அம்மையார் அந்நூலை முடித்தார் என்பது இங்குக் குறிக்கத்தகும். புலிக்குப் பிறந்தது பூனையாகா தன்றோ?

3. பார்த்திபன் கனவு, சிவகாமியின் சபதம், பொன்னியின் செல்வன் (ஐந்து பகுதிகள்) ஆகியவை **வரலாற்றுப் பெருங்கதைகள்**

அபலையின் கண்ணீர், தேவகியின் கணவன், மோகினித் தீவு என்னும் மூன்றும்—'சிறிய பெருந்தகையார்' என்று பெரியபுராணம் கூறுவதுபோல, **சிறிய பெருங்கதைகள்** என்னலாம்.

இதுகாறும் கூறப் பெற்றவை அச்சாகி வெளி வந்தவை. இவையன்றி நூல் உருவில் வாராமல் கல்கி, ஆனந்த விகடன் முதலிய பல இதழ்களில் வெளியாகியுள்ள கட்டுரைகள் பலவாகும். அவை பயிர்த் தொழில், அரசியல், சமூகம், பொருளாதாரம் முதலிய பல துறைகளைப் பற்றியவை. அவை நூலுருவில் வரும் நன்னாளை ஆவலோடு எதிர்பார்ப்போம்.

அறிஞர் கல்கி எழுதிய நூல்களுள் இந்திய அரசின் ஐயாயிரம் வெண் பொற்காசுகளைப் பரிசாகப் பெற்றது 'அலை ஓசை' என்னும் நூலாகும். **கள்வனின் காதலி, தியாகபூமி, பொய்மான் கரடு, பார்த்திபன் கனவு**

என்னும் நான்கு நூல்களும் **திரையில் படமாக்கப் பெற்றன.**

இவரது வரலாற்று அறிவுக்கும் பாத்திரப் படைப்பு ஆற்றலுக்கும் நிகழ்ச்சிகளைப் படைக்கும் திறத்திற்கும் உணர்ச்சிகளை எழுப்பும் வன்மைக்கும் 'பொன்னியின் செல்வன்' என்னும் பெருங்கதை ஏற்ற சான்றாகும். அப்பெருங்கதையில் சோழர் காலக் கல்வெட்டுகளில் காணப்படும் சோழர் பெயர்களும், அரச மாதேவியர் பெயர்களும், மலையமான், சம்புவராயர், பழுவேட்டரையர் போன்ற சிற்றரசர் பெயர்களும், சோழர் வரலாற்றுச் செய்திகளும், பேரூர்கள் சிற்றூர்கள் ஆகியவற்றின் பெயர்களும் தக்கவாறு இடம் பெற்றுள்ளன. பூங்குழலி போன்ற தூய தமிழ்ப் பெயர்கள் ஆசிரியரால் படைக்கப் பெற்றுள்ளமை அறிந்து இன்புறற்பாலது. ஆசிரியர் மேலே கூறப் பெற்ற கல்வெட்டுகளில் காணப்பெறும் மக்கட் பெயர்களையும் ஊர்ப் பெயர்களையும் இப்பெருங்கதையைப் படிக்கும் அனைவருக்கும் அறிமுகம் செய்திருத்தல், தமிழுக்குச் செய்திருக்கும் பெருந்தொண்டாகும். கதையை விரும்பிப் படிக்கும் பொது மக்கள் இப்பெயர்களோடும் அறிமுகம் பெறுகின்றனர்; இவை அவர்களால் பலமுறை கூறப் படுகின்றன. சோழர் வரலாறும் மக்களுக்கு அறிமுகமாகின்றது.

இந்நூலில் சொல்லும் பொருளும் பருந்தும் அதன் நிழலும் போல ஒத்து இயங்குகின்றன. ஆசிரியர் கதையோடு ஒன்றி எழுதியுள்ளமையால், நிகழ்ச்சிக்கு ஏற்பச் சொற்றொடர்கள் அமைந்துள்ளன. அவை உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் சொற்றொடர்களாக அமைந்திருத்தலோடு, படிப்பவர் உள்ளத்தையும்

தாடுவனவாக இருத்தல், பெரிதும் பாராட்டற்பாலது. சான்றாகக் கீழ்வரும் பகுதியைக் காண்க.

பொன்னியின் செல்வன்

"இவ்வாறு இரக்கம் ததும்பும் குரலில் கூறிய கரிகாலனைப் பார்த்து நந்தினி, "கோமகனே! அதற்குப் பரிகாரம் ஒன்றும் கிடையாது. இறந்தவர்கள் இறந்தவர்கள்தான்! இறந்தவர்களைப் பிழைக்கச் செய்யும் சக்தி இந்த உலகில் யாருக்கும் கிடையாது. கதைகளிலே காவியங்களிலே சொல்கிறார்கள். நாம் பார்த்ததில்லை என்றாள்.

"இறந்தவர்களைப் பிழைக்கச் செய்ய முடியாது. அது உண்மைதான்! ஆனால் உயிருக்கு உயிர் கொடுத்துப் பரிகாரம் தேடலாம் அல்லவா?......இதோ பார்! என்னிடம் இனியும் மறைக்க வேண்டாம். இங்கு நீ எதற்காக வந்தாய், என்னை எதற்காக வரச் சொன்னாய், என்னத்திற்காகப் பழுவேட்டரையரைத் தஞ்சைக்கு அனுப்பினாய் என்பதெல்லாம் எனக்குத் தெரியாது என்று எண்ணாதே! நீயும் நானும் சின்னஞ் சிறுவர்களாயிருந்த நாளிலிருந்து உன் மனத்தில் எழும் எண்ணங்களை அறியும் சக்தி எனக்கு உண்டு. எனக்கு ஆத்திரம் ஊட்டி நீசத்தனமான செயல் புரியும்படி செய்வதற்காகவே வீரபாண்டியனுடைய உயிருக்காக நீ மன்றாடுகிறாய். என் பக்கத்திலிருந்து என்னை வதைத்துக் கொண்டிருப்பதற்காகவே பெரிய பழுவேட்

டரையரை நீ மணந்து தஞ்சைக்கு வந்தாய். நான் காஞ்சியில் நிம்மதியுடன் இருப்பது உனக்குப் பொறுக்கவில்லை. அதனாலேயே இந்தக் கடம்பூர் அரண்மனைக்கு வரச் செய்தாய். வீர பாண்டியனுடைய வாளினால் என்னைக் கொன்று பழி முடிக்கும் நோக்கத்துடனேயே நீ இவ்விடத்திற்கு வந்திருக்கிறாய். அந்த உன்னுடைய நோக்கத்தைத் தடையின்றி நிறைவேற்றிக் கொள்! அதற்காகவே கந்தமாறனையும் அவன் தங்கையையும் அப்புறப் படுத்தினேன். இதோ! இந்த வாளைப் பெற்றுக் கொள்!" என்று கூறிக் கரிகாலன் வாளை நீட்டினான்.

"நந்தினி வாளை வாங்கிக் கொண்டாள். வாளைப் பிடித்த அவளுடைய கைகள் நடுங்கின. பின்னர் அவள் உடம்பெல்லாம் நடுங்கியது. கண்களில் கண்ணீர் ததும்பியது. இதயத்தைப் பிளக்கும் சோகக் குரலில் விம்மலும் தேம்பலும் கலந்து வந்தன."

(5ஆம் பாகம், பக். 292-93)

ஒரே ஆசிரியரது நடை, சொல்லக்கருதும் செய்திகளுக்கு ஏற்ப வேறுபடும் என்னும் உண்மையைக் கல்கி அவர்களின் இருவேறு நூல்களைக் கொண்டு அறியலாம். "பொன்னியின் செல்வன்" சோழர் வரலாற்றுப் பெருங்கதை; ஆதலால் அதன்கண் பெரும்பாலும் நல்ல தமிழ் நடை அமைந்துள்ளது. இப் பெருங்கதையை எழுதிய கல்கி அவர்களே, தமது சிறை வாழ்க்கையை விளக்கும் "மூன்று மாதம் கடுங்காவல்" என்னும் ஒரு நூலைத் தம்

படைப்புக்களின் இறுதியில் படைத்தனர். அரசியல் அலைகளால் உந்தப்பட்ட செய்திகளைக் கூறும் இந் நூலின் நடை, முன்னதினும் முற்றும் வேறுபட்டுள்ளது. எடுத்துக்காட்டாக ஒரு பத்தியைக் கீழே காண்க:

மூன்று மாதம் கடுங்காவல்

> "வழியிலிருந்த பிள்ளையார் கோவிலில் சிறிது நின்றோம். குருக்கள் தீபாராதனை செய்தார். "ஸ்வாமி, பகவானே! என்னை அதிகமாய்ச் சோதிக்கக் கூடாது. இன்று ராத்திரிச் சாப்பாடு சர்க்கார் செலவிலே நடக்க வேண்டும்" என்று வேண்டிக்கொண்டேன். சின்னகடைத் தெரு முனை போவதற்குள், ஆயிரக் கணக்கான ஜனங்கள் கூடிவிட்டார்கள். அவர்களுக்கு மத்தியில் வழி செய்துகொண்டு குறிப்பிட்ட இடம்போய்ச் சேர்வது மிகவும் பிரயாசையாகி விட்டது. இடத்துக்குப் போய்ச் சேர்ந்த பிறகுதான் என்ன? அவ்வளவு பேர் சேர்ந்து போடும் கூச்சலுக்கு மத்தியில் என் பேச்சு யார் காதில் விழப் போகிறது? இது என்னமாய்த் தான் முடியுமோ?" என்று கலங்கினேன். அப்போது நண்பர் ஸ்ரீ நாராயணசாமி நாயுடு என் ஒத்தாசைக்கு வந்தார். ஒரு உயரமான மேஜையை எங்கிருந்தோ கொண்டு வந்து போட்டார். அதன்மேல் ஏறி நிற்கச் சொன்னார்." (பக். 4-5)

முடிவுரை

இதுகாறும் பார்த்த செய்தி இதழ்களிலும் கட்டுரைகளிலும் கதைகளிலும் பலதுறை நூல்களிலும் எவ்

வாறே சிலவகை இலக்கணப் பிழைகள் இடம் பெற்றுள்ளன. இவற்றை இங்கு அறிவது நலம் பயக்கும்.

(1) ‘நாளை நாம் **கவனிக்க வேண்டிய** வேலைகள் சில உண்டு.’ இதனில் நாளை என்பது எதிர் காலத்தை உணர்த்துவது. ஆயின், வேண்டிய என்பது இறந்த காலத்தை உணர்த்துவது. இங்ஙனம் எழுதுதல் தவறு—கால வழுவாகும். ‘நாளை நாம் **கவனிக்க வேண்டும்** வேலைகள் சில உண்டு’—என்பதுவே பிழையற்ற வாக்கியம்.

(2) ‘நாம் முயற்சிக்க வேண்டும்’—இது ஒரு வாக்கியம். ‘முயல்’ என்பது பகுதி. ‘முயற்சி’ என்பது தொழிற் பெயர். ‘முயல்’ என்னும் பகுதியிலிருந்து ‘முயல்வான்’, ‘முயல்கிறான்’, ‘முயன்றான்’, ‘முயல வேண்டும்’ என்றே வருதல் இலக்கணம்; இம்மரபுக்கு மாறாக ‘முயற்சிக்க’, ‘முயற்சித்தான்’ என வருதல் தவறு.

(3) ‘அவர் **1919ல்** இறந்தார்’—இதனில் வரும் **1919** என்பதை எழுத்தால் எழுதிப் பார்ப்போம். ‘ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்பது’ என்று வரும். இத்துடன் லகரமெய் சேர்ப்பின், ‘ஆயிரத்துத் தொள்ளாயிரத்துப் பத்தொன்**பதுல்** என்று வருமே தவிரப் ‘பத்தொன்பதில்’ என்று வராது. அது வர வேண்டுமானால், எண்ணை அடுத்து இகரமும், லகர மெய்யும் சேர்த்தல் வேண்டும். இப்பிழை பெரும்பாலான நூல்களிலும், இதழ்களிலும் காணப் பெறுகின்றன. இங்ஙனமே **1919ம்** ஆண்டு என்று எழுது

தலும் தவறு; அஃது **1919ஆம்** ஆண்டு என்று எழுதுதலே முறையாம்.

(4) 'நமது பண்டிதர்கள் நல்லவர்கள்'—**அது** என்பது ஆறும் வேற்றுமை உருபு; ஒருமைக்கு மட்டுமே வருவது, ஆதலால் இதனைப் பலர் பாலுக்கோ, பிற பால்களுக்கோ, பயன்படுத்துதல் இலக்கண மரபுக்கு மாறுபட்டதாகும். '**நம்** பண்டிதர்கள்' என்றோ, '**நம்முடைய** பண்டிதர்கள் என்றோ எழுதுதல் முறையாகும்.

(5) 'குற்றவாளிகள் **தன்** குற்றம் உணர்வதில்லை' '**தன்**' என்பது ஒருமை; 'தம்' என்பது பன்மை. குற்றவாளி **தன்** குற்றத்தை உணர்வதில்லை என்றும், குற்றவாளிகள் **தம்** குற்றத்தை உணர்வதில்லை என்றும் எழுதுவதே முறை.

(6) 'நான் காதால் கேட்பது கேள்விகளா?'— இதனில் '**கேட்பது**' என்பது ஒருமை; '**கேள்விகள்**' என்பது பன்மை. ஆதலால், 'நான் காதால் **கேட்பவை கேள்விகளா?**' என்று இருத்தலே முறை.

(7) பூனை **வலது பக்கம்** சென்றது.
நாய் **இடது பக்கம்** சென்றது.

வலம், இடம் என்னும் சொற்கள் 'பக்கம்' என்னும் சொல்லோடு சேருகையில் **வலப்பக்கம், இடப்பக்கம்** என்றே வரும் என்பது இங்கு அறியத் தகும்.

(8) ரங்கநாதன் என்றாற்போல 'ர' கரத்தை முதலிலே தொடங்கும் வடமொழிச் சொல்லுக்கு முன்பு

'அ'கரம் சேர்த்து **அரங்கநாதன்** என்று வழங்கவேண்டும் என்பது விதி. **இரங்கநாதன்** என்று எழுதுதல் தவறு.

(9) திருநிறை செல்வன் என்பது வினைத்தொகை. இதனில் வரும் 'நிறை' என்பது காலம் கரந்த பெயரெச்சம். இதற்கும் இதனோடு சேரும் பெயருக்கும் இடையில் ஒற்று மிகுந்து வராது. **திருநிறைசெல்வன்** என்றே வரும். பெரும்பாலான திருமண அழைப்பிதழ்களில் **திருநிறைச் செல்வன்** என்று ஒற்று (ச்) மிகுந்திருத்தல் பிழையாகும்.

(10) **'ஓடினவன் அவன் அல்ல'**
'ஓடினவள் அவள் அல்ல'
'ஓடினவர் அவர் அல்ல'
'ஓடியது அது அல்ல'
'ஓடினவை அவை அல்ல'

இவ்வாறு இருதிணை ஐம்பால் பெயர்ச் சொற்களுக்கும் 'அல்ல' என்னும் ஒரே வினைமுற்று எழுதப்படுகிறது. தமிழ் மொழியில் வினைச் சொல்லே பாலையும் உணர்த்தும். 'ஓடினன்' என்னும் வினைச்சொல் ஓடுதலாகிய தொழிலை ஆண் மகன் செய்தான் என்பதை உணர்த்துகிறது. எழுவாய் எந்தப் பாலில் உள்ளதோ அந்தப் பாலிலேயே வினைமுற்று வருதல் வேண்டும். இதுதான் அறிவுக்குப் பொருத்தமானது. இலக்கண ஆசிரியர்களும் இதனைத்தான் கூறியுள்ளனர். எனவே,

'ஓடினவன் அவன் அல்லன்'—ஆண்பால்
'ஓடினவள் அவள் அல்லள்'—பெண்பால்
'ஓடினவர் அவர் அல்லர்'—பலர்பால்
'ஓடியது அது அன்று'—ஒன்றன்பால்
'ஓடினவை அவை அல்ல'—பலவின்பால்

இங்ஙனம் பலவின் பாலுக்கே உரிய 'அல்ல' என்னும் வினைமுற்றை ஏனைய பால்களுக்கும் உரிமை யாக்கி வழங்குதல் முறையன்று.

அறிஞர்களே, ஆங்கில உரையின் தோற்றமும் வளர்ச்சியும் பற்றி ஆங்கில அறிஞர் பலர் பல நூல்கள் வெளியிட்டுள்ளனர். அத்தகைய பெருமுயற்சி தமிழகத்தில் இல்லை. தமிழ் உரையைப் பற்றி முதல் முதல் ஆராய்ந்து 1904-இல் ஆங்கிலத்தில் சிறுநூல் ஒன்றை எழுதிய பெரியார் திரு. வ. சு. **செங்கல்வராயப் பிள்ளை** அவர்கள். பின்பு பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியராய் விளங்கிய **திருமணம்-செல்வகேசவராய முதலியார்** அவர்கள் 'தமிழில் வசன நடை' என்னும் சிறந்த ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை எழுதினர். அம் முயற்சிக்குப் பின்பு பேராசிரியர் **எஸ். வையாபுரிப் பிள்ளை** அவர்கள் 'வசன நடை' என்னும் தலைப்பில் அரிய ஆராய்ச்சிக் கட்டுரை ஒன்றை வெளியிட்டார். பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. **அ. மு. பரம சிவானந்தம்** அவர்கள் 'தமிழ் உரை நடை வரலாறு' என்னும் பெயரில் விரிவான நூல் ஒன்றை 1959-இல் எழுதினர். அப்பேராசிரியரே சென்ற ஆண்டு '19-ஆம் நூற்றாண்டில் தமிழ் உரை நடை வளர்ச்சி' என்னும் தலைப்பில் கல்கி நினைவு நிதிச் சொற்பொழிவுகள் மூன்று ஆற்றினர். அவை நூல் வடிவில் வெளி வந்து விட்டன. இப்பெருமக்கள் நால்வர்க்கும் நாம் நன்றி பாராட்டக் கடமைப்பட்டுள்ளோம். இவ்வாறு தமிழ் உரைநடை வளர்ச்சி பற்றிப் பல நூல்கள் வெளிவருதல் நல்லது.

இருபதாம் நூற்றுண்டுத் தமிழ் உரை நடை நூல்கள் கடல் போல் விரிந்துள்ளன. அவை பல துறைகளிலும்

நாள்தோறும் வளர்ந்து வருகின்றன. யான் கூறிய செய்திகள் அவற்றுள் மிகச்சிலவே. செய்தி இதழ்கள், கட்டுரைகள், சிறுகதைகள், பெருங்கதைகள், ஆராய்ச்சி நூல்கள், இலக்கிய நூல்கள், பல கலை நூல்கள், சமய நூல்கள், வாழ்க்கை வரலாறுகள், கடிதங்கள், அறிக்கைகள், அழைப்பிதழ்கள் முதலிய பல தலைப்புக்களில் இந் நூற்றாண்டின் தமிழ் உரைநடையைப் பலர் ஆராய்ந்து பார்த்தல் நலம் பயக்கும். அம் முயற்சிக்கு ஒரு தூண்டுகோலாக இச் சொற்பொழிவுகள் அமையுமாயின், எனது முயற்சி நன்முயற்சி என்னும் மன அமைதி பெறுவேன்.

மிக்க பொறுமையுடனும் அன்புடனும் இம்மூன்று நாள் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்கியருளிய தமிழ்ப் பேராசிரியர் டாக்டர் மு. வ. அவர்கட்கும், இந் நிகழ்ச்சியில் பங்குகொண்ட அறிஞர்களாகிய உங்களுக்கும், எனது உளமார்ந்த நன்றி உரியதாகுக. வணக்கம்.